# முன்னுரை

101வது அரசியல் சட்ட திருத்த சட்டம் 8 செப்டம்பர் 2016 முதல் அமலுக்கு வருவதன் மூலமும் சரக்கு மற்றும் சேவை வரி அமைப்பின் 15 செப்டம்பர் 2016 அறிவிப்பின் மூலமும் - சரக்கு மற்றும் சேவை வரி அமலுக்கு வரப் போகிறது. 01 ஏப்ரல் 2017 முதல் ஒரு மிகப் பெரிய மறைமுக வரி சீர்திருத்தமாகிய சரக்கு மற்றும் சேவை வரியை அறிமுகப்படுத்த அரசு முனைப்புடன் இருக்கிறது. மத்திய அரசாங்க மற்றும் மாநில அரசாங்க மறைமுக வரி அலுவலர்களுக்கு பயிற்சியளிப்பது சவால்களில் ஒரு பெரிய சவாலாக இருக்கப் போகிறது. மத்திய கலால் மற்றும் சுங்கத்துறை ஆயத்தின் கீழ் செயல்படும் மறைமுக வரிச் சட்டங்களைப் பற்றிய தகுதி வளர்ப்பு மற்றும் பயிற்சிக்கான உச்ச நிறுவனமான "தேசிய சுங்கம், கலால் மற்றும் போதைத்தடுப்பு பயிற்சி மையம் (NACEN) மத்திய மற்றும் மாநில அரசாங்க அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி அமலாக்கப்படும் போது அதனை செயல்படுத்தும் திறனைப் பெறுவதற்கு NACEN மத்திய மற்றும் மாநில அரசாங்க 60000 மறைமுக வரிவிதிப்பு அதிகாரிகளுக்கு பேரளவிலான தகுதி வளர்ப்புக்கான பயிற்சி நடத்துகிறது. நாடு முழுவதும் உள்ள செயலாக்க அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்க NACEN 2000 பயிறசியாளர்கள் கொண்ட ஒரு குழுவை ஏற்கெனவே ஏற்படுத்தி விட்டது. மிகக் குறைந்த கால அவகாசமே உள்ளதைக் கருத்தில் கொண்டு, NACEN வகுப்பறைப் பயிற்சி அல்லாது செயல்முறை பயிற்சி வகுப்புகள் மற்றும் மின்-படிப்புக் கருவிகள் போன்ற மேம்பட்ட தகவல் தொழில்நுட்ப சாதனங்களை உபயோகிக்கவும் அதிகப்படியாகப் படிப்பிப்பதை உறுதி செய்ய திட்டமிட்டு வருகிறது. இந்தத் தகுதி வளர்ப்புப் பயிற்சியின் ஒரு பகுதியாக, NACEN பயிற்சி நடத்தும்போது சேகரிக்கப்பட்ட உள்ளீடுகள் மற்றும் பரஸ்பர கருத்து பரிமாற்ற அமர்வுகள் அடிப்படையில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் தொகுப்பை (FAQ) அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் மாதிரி சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் மற்றும் அதன் முக்கிய வித்தியாசங்கள் குறித்து அறிந்து கொள்ள ஒரு பயிற்சி உபகரணமாகத் தயாரித்தது. அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களின் அதிகாரிகள் குழுவால் தயாரிக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. இந்த புத்தகத் தொகுப்பின் தயாரிப்பில் ஈடுபட்ட அனைத்து அதிகாரிகளையும், NACEN உடைய முயற்சிகளையும் நான் பாராட்டுகிறேன். 24 தலைப்புகளின் கீழ் 500க்கும் மேற்பட்ட கேள்விகள் உள்ள இந்த FAQ தொகுப்பு கண்டிப்பாக ஒரு எதிர்பார்க்கும் விளைவுகளை ஏற்படுத்தும் கருவியாக சரக்கு மற்றும் சேவை வரி குறித்து வரித்துறை அதிகாரிகளும், வர்த்தகர்களும் பொதுமக்களும் விஷய ஞானம் பெறும் விதத்தில் பரவச் செய்யும். இது மாதிரி சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தின்

அடிப்படையில் பொதுமக்களுக்காக வெளியிடப்பட்ட முதல் விவரம் ஆகும். FAQ குறித்த இப்போது வரையிலான திருத்தியமைக்கப்பட்ட விவரங்கள் குறித்து குறிப்பிட்ட விதி இயற்றப்பட்டு விதிமுறைகள் வகுக்கப்பட்ட பின்னர் NACEN வெளியிடும்.

நஜிப் ஷா
தலைவர், CBEC

**பொருளடக்கம்**


1 சரக்கு மற்றும் சேவை வரி (GST) – **ஒரு கண்ணோட்டம்**

2 வரையறை செய்தல் மற்றும் வரி விலக்கு

3 பதிவு

4 விநியோகம் என்பதன் பொருளும் வரம்பும்

5 விநியோக **நேரம்**

6 GSTல் மதிப்பீட்டு

7 GSTபடி வரி செலுத்துதல்

8 மின்-வர்த்தகம்

9 **கூலி தொழில்**

10 உள்ளீடு வரி வரவு வைத்தல்

11 GSTல் உள்ளீடு சேவை விநியோகஸ்தர் கருத்தாக்கம்

12 விவரப்பட்டி ஆய்வு மற்றும் உள்ளீட்டு வரி வரவு ஒப்பீடு

13 ஆய்வு மற்றும் தணிக்கை

14 திரும்பத் தருதல்

15 கோருதல்கள் மற்றும் மீட்பு

16 GSTல் மேல் முறையீடுகள், மறு ஆய்வுகள் மற்றும் மறு ஆய்வு செய்து திருத்தியமைத்தல்

17 முன்கூட்டிய வரி நிர்ணயம்

18 தீர்வாணயம்

19 ஆய்வு, சோதனை, கைபற்றுதல் மற்றும் கைது

20 குற்றங்கள் மற்றும் அபராதங்கள், வழக்குத் தொடருதல் மற்றும் குற்றத்தீர்வை

21 ஒருங்கிணைந்த GST சட்டத்தின் கண்ணோட்டம்

22 சரக்கு மற்றும் சேவை விநியோக இடம்

23 GSTன் முன் முனை வர்த்தக நெறிமுறை

24 இடைக்கால சட்டங்கள்

**தயாரித்தவர்கள்**

திரு. சமீர் பஜாஜ், கூடுதல் இயக்குநர், NACEN, மும்பையின் மேற்பார்வையின் கீழ் திரு. தீபக் மாதா, உதவி இயக்குநர், NACEN மும்பை மற்றும் சஞ்சீவ் நாயர், பரிசோதகர், CESTAT மும்பை

**பரிசீலித்தவர்கள்**

திருவாளர்கள் P.K. மொஹந்தி, ஆலோசகர், CBEC (பிரிவு 1)

விஷால் பிரதாப் சிங், DC(GST), GST கொள்கைப் பகுதி (பிரிவு 2)

Dr. P.D. வகேலா, CCT, குஜராத் (பிரிவு 3 & 7)

D.P. நாகேந்திர குமார், Pr. ADG, DGCEI, பெங்களூரு (பிரிவு 4 முதல் 6)

உபேந்திர குப்தா, ஆணையர், GST, CBEC (பிரிவு 8 முதல் 11)

ரிட்விக் பாண்டே, CCT, கர்நாடகா (பிரிவு 12)

அருண் குமார் மிஷ்ரா, இணை செயலாளர், CTD, பீஹார் (பிரிவு 13)

காலித் அன்வர், முதுநிலை JCT மேற்கு வங்காளம் (பிரிவு 14 & 24)

அஜய் ஜெயின், Pr. ஆணையர், ஆயத்துறை, அஹமதாபாத் (பிரிவு 15)

BB அகர்வால், Pr. ஆணையர், ஹைதராபாத் (பிரிவு 16)

ஷ்ஷாங்க் ப்ரியா, ADG, DG GST, CBEC (பிரிவு 17 முதல் 20)

G.D. லோஹானி, CCE, ஃபரிதாபாத் (பிரிவு 21 & 22)

பிரகாஷ் குமார், CEO, GSTN (பிரிவு 23)

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் குறித்த விமரிசனங்கள் மற்றும் அபிப்பிராயங்கள் dg.nacen-cbec@nic.in மின்னஞ்சலுக்கு அனுப்பவும்

மறுப்பு: இது ஜூன் 2016ல் பொதுப்பகுதியில் வெளியிடப்பட்ட வரைவு மாதிரி GST சட்டத்தின் அடிப்படையில் ஆதாரப் பயிற்சியாளர்களால் பரிசீலிக்கப்பட்டு NACEN மூலம் தொகுக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி குறித்த அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ஆகும். இந்த FAQ பயிற்சி மற்றும் செய்முறை பயன்பாட்டிற்கு மாத்திரமே. இந்த புத்தகத்தில் காணப்படும் தகவல் ஒரு பொதுவான மேலோட்ட நிலைப்பாடுடன் கூடிய உட்சரக்கு கொண்டது மாத்திரமே. இது சட்டபூர்வ ஆலோசனை அல்லது கருத்தைக் கூறும் உட்சரக்கு கொண்டது அல்ல. அதிகப்படியான விவரங்களுக்கு, மாதிரி GST சட்டத்தை மேற்கோளாகக் காணும்படி தருவித்துக் கொள்கிறோம்.

# 1. சரக்கு மற்றும் சேவைகள் வரி (GST) - ஒரு கண்ணோட்டம்

கே.1 சரக்கு மற்றும் சேவை வரி (GST) என்றால் என்ன?

ப.1 சரக்கு மற்றும் சேவை வரி என்பது உபயோகப்படுத்தப்படும் இலக்கு சார்ந்து விதிக்கப்படவுள்ள வரியாகும். உற்பத்தியில் தொடங்கி இறுதியாக நுகரப்படும் நிலை வரை உள்ள அனைத்து நிலையிலும் வரி விதிக்க உத்தேசிக்கப்பட்டு ஆரம்பம் முதல் ஒரு வர்த்தகத்தின் முந்தைய நிலைகள் வரை செலுத்தப்பட்ட வரிகள் அவ்வர்த்தகத்திற்கு வரவு வைக்கப்பட்டு ஒட்டுமொத்தமாக, மதிப்புக் கூட்டப்படுவதற்கு மாத்திரம் வரி விதிக்கப்படும் அந்த மொத்த வரிச்சுமை இறுதியில் உள்ள உபயோகிப்பாளரைச் சாரும்.

கே.2 உபயோகப்படுத்தப்படும் இலக்கு சார்ந்த வரி என்பதன் சரியான கருத்து என்ன?

ப.2 சரக்கு அல்லது சேவை மீதான வரி விதிப்பு அது உபயோகப்படுத்தப்படும் வரி ஆணையத்தின் அதிகார வரம்புக்கு வந்தடையுமாறு நிர்வகிக்கப்படவுள்ளது.

கே.3 தற்போது அமலில் உள்ள வரிகளில் எவை GSTன் கீழ் சேர்க்கப்பட திட்டமிடப்பட்டுள்ளன?

ப.3 கீழ்கண்ட வரிகள் மாற்றியமைக்கப்பட்டு GST வரியாக விதிக்கபடவுள்ளது

(i) தற்போது மைய அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும் வரிகள்:

a. மத்திய கலால் வரி

b. கலால் வரி (மருத்துவ மற்றும் ஒப்பனைத் தயாரிப்புக்கள்)

c. கூடுதல் கலால் வரி ( விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த சரக்குகள்)

d. கூடுதல் கலால் வரி (துணிகள் மற்றும் துணிச் சரக்குகள்)

e. சுங்கத்துறையின் கூடுதல் சுங்க வரி (பொதுவாக CVD என அறியப்படுவது)

f. சுங்கத்துறையின் சிறப்பு கூடுதல் சுங்க வரி (SAD)

g. சேவை வரி

h. சரக்குகள் மற்றும் சேவைகள் விநியோகம் சம்பந்தப்பட்ட்தாக இருந்தால் மத்திய மிகைவீத வரி மற்றும் உப வரி

(ii) GSTக்கு மாறும் மாநில வரிகள்:

a. மாநில மதிப்புக் கூட்டு வரி (VAT)

b. மத்திய விற்பனை வரி

c. கேளிக்கை வரி

d. நுழைவு வரி (அனைத்து படிவங்களும்)

e. பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கை வரி (உள்ளூர் அமைப்புகளால் தீர்வை விதிக்கப்பட்டிருப்பது தவிர)

f. விளம்பரங்களின் மேலான வரிகள்

g. வாங்குதல் வரி

h. லாட்டரிகள், பந்தயம் கட்டுதல் மற்றும் சூதாட்டம் மீதான வரிகள்

i. சரக்குகள் மற்றும் சேவைகள் விநியோகம் சம்பந்தப்பட்ட்தாக இருந்தால் மாநில மிகைவீத வரி மற்றும் உப வரி

GST அமைப்பு மைய அரசுக்கும், மாநில அரசுக்கும் செய்யும் சிபாரிசுகள் அடிப்படையில் மத்திய, மாநில மற்றும் உள்ளூர் வரிகள், உப வரிகள் மற்றும் மிகைவீத வரிகள் GSTக்குள் உள்ளடக்கப்படும்.

கே.4 மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரிகள் GSTன் கீழ் உள்ளடக்க என்ன கொள்கைகள் கடைபிடிக்கப் பட்டன?

ப.4 பல்விதமான மத்திய, மாநில மற்றும் உள்ளூர் தீர்வைகளை GSTன் கீழ் உள்ளடக்குவதற்கான சாத்தியக் கூறுகளை அடையாளம் காண பரிசீலனை செய்யப்பட்டது. அவ்வாறு பரிசீலிக்கப்படும்பொழுது, கீழ்கண்ட கொள்கைகள் கருத்தில் கொள்ளப்பட்டன:

(i) அவ்வாறு உள்ளடக்கப்படும் வரிகள் பிரதானமாக மறைமுக வரிகளின் அம்சம் கொண்ட சரக்கு மற்றும் சேவைகள் மீது விதிக்கப்படும் வரிகளாக இருக்க வேண்டும்.

(ii) உள்ளடக்கப்படும் வரிகள் இறக்குமதி/தயாரிப்பு/உற்பத்தி எனத் தொடங்கி சரக்குகள் அல்லது சேவை நுகர்தல் என்று முடியும் பரிவர்த்தனை சங்கிலியின் ஒரு பகுதியாக இருக்கும்.

(iii) மாநிலங்களுக்குள்ளும் மாநிலங்களிடையேயும் சுலபமான முறையில் வரி வரவு இருக்கும்படி இந்த உள்ளடக்கம் இருக்க வேண்டும். குறிப்பாக சரக்குகள் மற்றும் சேவைகள் விநியோகம் சம்பந்தப்படாத வரிகள், தீர்வைகள், கட்டணங்கள் GSTன் கீழ் உள்ளடக்கப்படக் கூடாது.

(iv) மத்திய மற்றும் மாநிலங்கள் இரண்டிற்கும் தனித்தனியே சமநிலையிலான வருமானம் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும்.

கே.5 GSTன் முக்கிய அம்சங்களுக்கு உட்படாததாக எந்தப் சரக்குகளை விலக்கி வைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?

ப.5 மக்கள் உபயோகிக்கும் மதுபானம், பெட்ரோலியம் பொருட்களான பெட்ரோலியம் க்ரூட், மோட்டார் ஸ்பிரிட் (பெட்ரோல்), உயர் வேக டீசல், இயற்கை வாயு மற்றும் விமானத்திற்கான டர்பைன் எரிசரக்கு மற்றும் மின்சாரம்

கே.6 GST அமலுக்கு வந்த பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகளின் மீதான வரி விதிப்பின் நிலை என்ன?

ப.6 மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு தற்போது இருந்துவரும் வரி விதிப்பு முறை (மதிப்பு கூட்டு வரி & மத்திய கலால்) தொடரும்.

கே.6A புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்களுக்கு GST செயல்பாட்டில் நிலை என்ன?

ப.6A புகையிலை மற்றும் புகையிலைப் சரக்குகள் GSTன் கீழ் வரும். கூடுதலாக, இந்த சரக்குகளின் மீது மத்திய கலால் வரி விதிக்கவும் மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.

கே.7 எந்த மாதிரியான GSTஐ அமலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

ப.7 அது பொது வரி அடிப்படையில் மத்திய மற்றும் மாநிலங்கள் ஒரு சேர விதிக்கும் இரட்டை GST விதிப்பு முறையாகும். மாநிலங்களுக்குள் சரக்குகள் விநியோகம் மற்றும்/அல்லது சேவைகளுக்கு மத்திய அரசாங்கத்தால் விதிக்கப்படும் GST மத்திய GST (CGST) என அழைக்கப்படும். மாநிலங்களால் விதிக்கப்படுவது மாநில GST (SGST) என அழைக்கப்படும். அதேபோல் ஒவ்வொரு மாநிலங்களுக்கிடையான சரக்குகள் விநியோகம் மற்றும் சேவைகளுக்குதான் வரி மத்திய அரசால் விதிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுவது ஒருங்கிணைந்த GST (IGST) ஆகும்.

கே.8 இரட்டை GST ஏன் தேவை?

ப.8 இந்தியா ஒரு கூட்டமைப்பு தேசமாகும். உரிய சட்ட வழிமுறைப்படி மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் வரிகள் விதிக்கவும் சேகரிக்கவும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இரு நிலை அரசாங்கங்களுக்கும் செயல்பட வெவ்வேறு விதமான பொறுப்புகள் அதிகாரப் பிரிவுகளின் மூலம் அரசியல் அமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆகையினால் அரசியல் சாசனத் தேவைப்படி நிதி சம்பந்தப்பட்ட தேவைக்கு இரட்டை GST தேவை.

கே.9 எந்த அதிகார அமைப்பு GSTஐ விதிக்கும் மற்றும் நிர்வகிக்கும்?

ப.9 CGST & IGST மத்திய அரசு விதிக்கும் மற்றும் நிர்வகிக்கும். சம்பந்தப்பட்ட மாநிலங்கள் SGSTஐ விதிக்கும் மற்றும் நிர்வகிக்கும்.

ப.10 GSTஐ ஏற்றுக் கொள்வதற்காக ஏன் சமீபத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது?

தற்போது, அரசியல் அமைப்பில் தெளிவாக மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான நிதி சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அதன்படி தம்மிலான சம்பந்தப்பட்ட அதிகார பூர்வமாககள் இடையே முழுவதுமாக ஒன்றுடன் ஒன்று பரஸ்பரம் மீறவில்லை. மத்திய அரசுக்கு சரக்குகள் தயாரிப்பின் மீது வரி விதிக்க அதிகாரம் உண்டு. (மக்கள் உபயோகிக்கும் மது பானம், அபின், போதை பொருள் முதலியன தவிர). மாநில அரசுக்கு விற்பனையாகும் பொருட்களுக்கு வரி விதிக்க அதிகாரம் உண்டு.

மாநிலங்கள் தம்மிலான விற்பனைகளில், மத்திய அரசுக்கு வரி விதிக்க அதிகாரம் உண்டு (மத்திய விற்பனை வரி). ஆனால், அந்த வரி சேகரிக்கப்பட்டு முழுவதுமாக மாநிலங்களே வைத்துக் கொள்கின்றன. சேவைகளுக்கு, மத்திய அரசுக்கு மாத்திரமே சேவை வரி விதிக்க அதிகாரம் உண்டு. மத்திய அரசு மற்றும் மாநிலங்கள் இரண்டுமே ஒருங்கிணைந்து வரி விதித்து சேகரிக்க அதிகாரம் வழங்குவதற்கு GSTஐ அமலாக்க அரசியல் சட்ட திருத்தங்கள் அவசியம். இந்த காரணத்திற்காக இந்திய அரசியல் சட்ட திருத்தம் (நூற்றோராவது திருத்தம்) சட்டம், 2016 மூலம் சமீபத்தில் திருத்தப்பட்டது. சட்ட ஷரத்து 246A மத்திய அரசையும் மாநிலங்களையும் வரி விதிக்கவும் GST சேகரிக்கவும் அதிகாரம் வழங்குகிறது.

கே.11 ஒரு குறிப்பிட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் மீது எவ்வாறு மத்திய GST (CGST) மற்றும் மாநில GST (SGST) ஒரே சமயத்தில் வரி விதிக்க இயலும்?

ப.11 விலக்களிக்கப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகள், GSTன் வரம்பிற்கு வெளியில் உள்ள மற்றும் வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குக் கீழ் உள்ளவைகளின் பரிமாற்றம் தவிர பிற சரக்குகள் மற்றும் சேவைகள் வினியோகத்தின் ஒவ்வொரு பரிமாற்றத்திலும் ஒருசேர மத்திய GST மற்றும் மாநில GST விதிக்கப்படும். மேலும், மாநிலம் சரக்குகளின் மதிப்புடன் மத்திய மதிப்பு கூட்டு வரி சேர்த்த பின்னர் விதிக்கும் மதிப்பு கூட்டு வரி போல் அல்லாது இரு வரி விதிப்பும் அதே விலை அல்லது மதிப்பின் அடிப்படையில் இருக்கும். நாட்டினுள் இருந்தால் CGSTக்கு வினியோகஸ்தரின் இடமும், சரக்கு வாங்குபவரின் இடமும் குறித்து எந்தப் பாகுபாடும் இல்லை. வினியோகஸ்தரும் வாங்குபவரும் ஒரே மாநிலத்தில் இருந்தால் SGST விதிக்கப்படும்.

உதாரணம் I: CGST 10%ம் SGST 10%ம் இருப்பதாக வைத்துக் கொண்டால், உத்தரப்பிரதேசத்தில் உள்ள மொத்த வியாபாரி 100 ரூபாய் விலையுள்ள ஸ்டீல் பார்களும் கம்பிகளும் அதே மாநிலத்தில் உள்ள ஒரு கட்டுமான நிறுவனத்திற்கு விற்கும்பொழுது CGST 10 ரூபாயும் SGST 10 ரூபாயும் சரக்குகளின் அடிப்படை விலையுடன் சேர்த்து அந்த வியாபாரி வாங்குவார். அவர் CGST பகுதிக்கு பெறப்பட்ட தொகையை மத்திய அரசாங்க கணக்கிலும் SGST பகுதிக்கு பெறப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்திற்கும் செலுத்த வேண்டும். இருந்த போதிலும், அவர் உள்ளபடி ரூபாய் 20 (ரூபாய் 10 + ரூபாய் 10) பணமாக செலுத்த வேண்டிய தேவையில்லை. இந்தப் பொறுப்பை அவர் வாங்கும்பொழுதே CGST அல்லது SGST செலுத்தியதன் மூலம் தீர்த்திருப்பார். (அதாவது, உள்ளீடுகள்). ஆனால் CGST செலுத்த அவர் வாங்கும்பொழுது செலுத்திய CGSTஐ உபயோகிக்க அனுமதி உண்டு. ஆனால் SGSTக்கு அவர் SGSTன் பற்றுவரவை மாத்திரம்

உபயோகிக்கலாம். அதாவது, பொதுவாக CGSTன் பற்றுவரவு SGSTக்கு செலுத்த உபயோகிக்க இயலாது. அதேபோல் SGSTன் பற்றுவரவை CGSTக்கு செலுத்த இயலாது.

உதாரணம் II: அதேபோல் மீண்டும் CGST 10% SGST 10% என்று வைத்துக் கொள்வோம். மும்பையில் உள்ள ஒரு விளம்பர நிறுவனம் மகாராஷ்டிரா மாநிலத்திலேயே உள்ள சோப் தயாரிக்கும் நிறுவனத்திற்கு விளம்பர சேவைகள் ரூபாய் 100க்கு வழங்குகிறது என வைத்துக் கொண்டால் அந்த விளம்பர நிறுவனம் சேவையின் அடிப்படை மதிப்பின்படி CGST ரூபாய் 10ம் SGST ரூபாய் 10ம் வசூலிக்கும். அவர் CGST பகுதிக்கு பெறப்பட்ட தொகையை மத்திய அரசாங்க கணக்கிலும் SGST பகுதிக்கு பெறப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்திற்கும் செலுத்த வேண்டும். இருந்த போதிலும், அவர் உள்ளபடி ரூபாய் 20 (ரூபாய் 10 + ரூபாய் 10) பணமாக செலுத்த வேண்டிய தேவையில்லை. இந்தப் பொறுப்பை அவர் வாங்கும்பொழுதே CGST அல்லது SGST செலுத்தியதன் மூலம் தீர்த்திருப்பார். (அதாவது, உள்ளீடுகளான எழுதுசரக்குகள், அலுவலகக் கருவிகள், ஒரு கலைஞரின் சேவைகள் முதலியன). ஆனால் CGST செலுத்த அவர் வாங்கும்பொழுது செலுத்திய CGSTஐ உபயோகிக்க அனுமதி உண்டு. ஆனால் SGSTக்கு அவர் SGSTன் பற்றுவரவை மாத்திரம் உபயோகிக்கலாம். அதாவது, பொதுவாக CGSTன் பற்றுவரவு SGSTக்கு செலுத்த உபயோகிக்க இயலாது. அதேபோல் SGSTன் பற்றுவரவை CGSTக்கு செலுத்த இயலாது.

கே.12 GST மூலமாக நாட்டிற்கு என்னென்ன ஆதாயங்கள் கிடைக்கும்?

ப.12 இந்தியாவில் GSTன் அமலாக்கம் மறைமுக வரி சீரமைப்பிற்கான ஒரு மிக முக்கிய நடவடிக்கை ஆகும். பல எண்ணிக்கையிலான மத்திய மாநில வரிகள் ஒரு வரியாக இணைப்பதன் மற்றும் முந்தைய நிலையிலான வரிகளை ஒன்று சேர்க்க அனுமதிப்பதன் மூலம், கெட்ட விளைவுகளான விரயங்களை தடுத்து ஒரு பொது தேசிய சந்தை உருவாக வழி வகுக்கும். உபயோகிப்பாளர்களுக்கு பெருமளவிலான இலாபம் மற்றும் இப்போதைய மதிப்பீட்டின்படி 25% முதல் 30% வரையில் சரக்குகளின் மீதான ஒட்டுமொத்த வரிச் சுமைக் குறைப்பு. உள்நாடு வெளிநாட்டு சந்தைகளில் நம்முடைய சரக்குகள் போட்டியிட GST அமலாக்கம் வழிவகுக்கும். இது உடனடியாக தீவிரமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் என ஆய்வு காட்டுகிறது. மத்திய மற்றும் மாநிலங்களுக்கு வரி அடிப்படையை விரிவுபடுத்துவதனாலும், வர்த்தகக் கொள்ளளவை அதிகரிப்பதானாலும் மேம்படுத்தப்பட்ட வரி அனுசரிப்பினாலும் வருமான ஆதாயம் அதிகரிக்கும். ஒட்டுமொதத்தில் இந்த வரி அதன் தெள்ளிய குணாதிசயத்தால் வரி நிர்வகிப்பது எளிதானது ஆகும்.

கே.13 IGST என்றால் என்ன?

ப.13 GST செயல்பாட்டின் கீழ், ஒரு ஒருங்கிணைந்த GST (IGST) விதிக்கப்பட்டு மாநிலங்களுக்கு இடையிலான சரக்குகள் மற்றும் சேவைகளுக்காக மத்திய அரசால் சேகரிக்கப்படுகிறது. அரசியல் சட்ட ஷரத்து 269Aன் கீழ் மாநிலங்கள் இடையிலான வணிகம் அல்லது வர்த்தகத்திற்காக விநியோகிப்பதன் மீது GST விதிக்கப்பட்டு இந்திய அரசாங்கத்தால் சேகரிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட வரி சரக்குகள் மற்றும் சேவைகள் சட்ட அமைப்பின் சிபாரிசுகளின்படி பாராளுமன்ற சட்ட்த்தில் கொடுக்கப்பட்டுள்ளபடி மத்திய மற்றும் மாநிலங்கள் இடையே பகிர்ந்து கொள்ளப்படும்.

கே.14 GST விதிக்க வரி விகிதங்களை யார் தீர்மானிப்பார்கள்?

ப.14 CGST மற்றும் SGST விதிப்பதற்கான விகிதங்கள் மத்திய அரசும் மாநிலங்களும் சேர்ந்து நிர்ணியிப்பார்கள். விகிதங்கள் GST அமைப்பின் சிபாரிசுகளின்படி அறிவிக்கப்படும்.

கே.15 GST அமைப்பின் பங்குபணி என்ன?

ப.15 அமைக்கப்படும் GST அமைப்பு மத்திய நிதி மந்திரி (அமைப்பின் தலைவராக இருப்பார்), ராஜ்ய மந்திரி (வருவாய்) மற்றும் மாநில நிதி/வரி நிர்ணய மந்திரிகள் முதலானோரைக் கொண்டு மத்திய மாநிலங்களுக்கு கீழ்கண்ட சிபாரிசுகள் செய்யும்.

(i) மத்திய, மாநில, உள்ளூர் அமைப்புகளால் விதிக்கப்படும் வரிகள், உபவரிகள், மிகைவீத வரிகளை GSTல் உள்ளடக்கம் செய்தல்.

(ii) சரக்குகள் மற்றும் சேவைகள் GSTன் கீழ் கொண்டுவருதல் அல்லது விலக்கு அளித்தல்

(iii) எந்த தேதி முதல் பெட்ரோலியம் க்ரூட், உயர் வேக டீசல், மோட்டார் ஸ்பிரிட் (பொதுவாக பெட்ரோல் என அறியப்படுவது), இயற்கை வாயு மற்றும் ஆகாயவிமான டர்பைன் எரிசரக்கு முதலியவற்றுக்கு GST விதிக்கப்படும்.

(iv) மாதிரி GST சட்டங்கள், தீர்வை கொள்கைகள், IGST பங்கீடு மற்றும் விநியோக இடம் நெறிப்படுத்துதல் குறித்த கொள்கைகள்

(v) வருடாந்தர சரக்குகள் மற்றும் சேவைகள் வர்த்தகம் எந்த வரம்புக்குக் கீழ் இருந்தால் GSTயிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

(vi) GST கீழ் வரி விகிதங்கள் - அடிப்படை வரி விகிதம் மற்றும் வரி விகிதவிரிப்பு.

(vii) இயற்கை சீற்றம் அல்லது பேரழிவு சமயத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு வரி வரவை அதிகரிக்க ஏதாவது விசேஷ விகிதம் அல்லது விகிதங்கள்

(viii) வடகிழக்கு மாநிலங்கள். ஜம்மு & காஷ்மீர், ஹிமாசல பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் முதலியவற்றுக்கு விசேஷ ஷரத்துக்கள் மற்றும்

(ix) அமைப்பு தீர்மானத்தின்படி GST சம்பந்தப்பட்ட வேறு ஏதாவது விஷயம்

கே.16 GST அமைப்பின் வழிகாட்டு கொள்கை என்ன?

ப.16 மத்திய மற்றும் மாநிலங்கள் அதேபோல் மாநிலங்களிடையே உள்ள GSTன் பல்விதமான அம்சங்களை ஒருங்கிணைப்பதை உறுதி செய்வதுதான் GST அமைப்பின் செயல்பாடு ஆகும். அரசியல் (நூற்றொன்றாம் திருத்த) சட்டம், 2016ல் GST அதனுடைய வெவ்வேறு செயல்பாடுகளில் ஈடுபடும்பொழுது GSTன் ஒருங்கிணைந்த அமைப்பின் அவசியப்படி வழி நடத்தப்படும் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு ஒருங்கிணைந்த தேசீய சந்தை அபிவிருத்தி செய்யப்படும்.

கே.17 GST அமைப்பால் எவ்வாறு தீர்மான்ங்கள் எடுக்கப்படும்?

ப.17 அரசியல் (நூற்றோராவது திருத்த) சட்டம், 2016ல் குறிப்பிட்டுள்ளபடி கலந்து கொண்டு வாக்களித்த உறுப்பினர்களில் ¾க்குக் குறையாத பெரும்பான்மையின் அடிப்படையில் GST அமைப்பின் ஒவ்வொரு தீர்ப்பும் கூட்டத்தில் எடுக்கப்படும். கூட்டத்தில் பதிவான வாக்குகளில் 1/3 வாக்குகள் மத்திய அரசாங்கத்தின் பகுதியாகவும் அனைத்து மாநில அரசாங்கங்களின் ஒட்டுமொத்த வாக்குகளில் பதிவான வாக்குகளின் 2/3 வாக்குகள் ஒரு பகுதியாகவும் இருக்கும். அதன் கூட்டங்களில் கலந்து கொண்ட GST அமைப்பின் மொத்த உறுப்பினர்களின் ½ பாகம் என்பது அதிகப்படியான நபர்கள் கலந்து கொண்டதாகக் கருத்தில் கொள்ளப்படும்.

கே.18 முன்வைக்கப்பட்ட GST செயல்பாட்டில் GST செலுத்த வேண்டியவர்கள் யார்?

ப.18 GST செயல்பாட்டின் கீழ் சரக்குகளின் விநியோகம் மற்றும்/அல்லது சேவைகள் மீது வரி செலுத்த வேண்டிய நபர் வரி செலுத்த வேண்டும். வரி செலுத்த வேண்டிய நபர் வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட தொகையைக் கடக்கிறாரோ அதாவது ரூபாய் 10 இலட்சம் (வடகிழக்கு மாநிலங்களுக்கு ரூபாய் 5 இலட்சம்), சில குறிப்பிட்ட அம்சங்களில் வரி செலுத்த வேண்டிய நபர் வரிவிலக்கு வரம்பைக் கடக்கா விட்டாலும் GST செலுத்த வேண்டும். CGST/SGST மாநிலங்களுக்குள்ளேயே நடக்கும் அனைத்து சரக்குகள் விநியோகத்திற்கும் மற்றும்/அல்லது சேவைகளுக்கும் செலுத்தப் படவேண்டும். IGST அனைத்து மாநிலங்களுக்கு இடையிலான சரக்குகள் விநியோகம் மற்றும்/அல்லது சேவைகளுக்கு செலுத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட சட்டங்களின் பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதப்படி CGST/SGST மற்றும் IGST செலுத்தப்பட வேண்டும்.

கே.19 GST செயல்பாட்டின்படி குறைந்த அளவிலான வரி செலுத்துபவர்களுக்கு என்ன ஆதாயங்கள் உள்ளன?

ப.19 ஒரு நிதி ஆண்டில வருடாந்தர ஒட்டுமொத்த விற்பனை (ரூபாய் 10 இலட்சம்) வரை உள்ள வரி செலுத்துபவர்கள் வரிவிலக்கு அளிக்கப்படுவார்கள். (ஒட்டுமொத்த விற்பனை என்பதில் அனைத்து வரி விதிப்புக்குரிய, வரி விதிப்விலைப்பட்டிலாத விநியோகங்களின்

ஒட்டுமொத்த மதிப்பும் அடங்கும். விநியோகங்கள் மற்றும் ஏற்றுமதிப் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளுக்கு விலக்கு அளிக்கப்படும் மற்றும் GSTல் வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும். ஒட்டுமொத்த விற்பனை அகில இந்திய அடிப்படையில் கணக்கிடப்படும். வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் சிக்கிமிற்கு விலக்கு (ரூபாய் 5 இலட்சம்). விலக்கு அளிக்கப்பட்ட அனைத்து வரி செலுத்துபவர்களும் உள்ளீட்டு வரி வரவு (ITC) ஆதாயங்களுடன் வரி செலுத்த தெரிவு செய்யலாம். வரி செலுத்துபவர்களில் மாநிலங்களிடையில் விநியோகங்கள் செய்பவர் அல்லது நேர்மாறான வரி விதிப்பு (reverse charge) அடிப்படையில் வரி செலுத்துபவருக்கு இந்த விலக்கு பெறத் தகுதி இல்லை.

கே.20 GST செயல்பாட்டின் கீழ் சரக்குகள் மற்றும் சேவைகள் எவ்வாறு வகைப்படுத்தப் படுகின்றன?

ப.20 GST செயல்பாட்டின்கீழ் வகைப்படுத்தப்பட்ட பொருட்களுக்கு HSN (இணைந்த முறை பெயர்ப் பட்டியல்) அடையாள எண் உபயோகிக்கப்படும். வருடாந்தர விற்பனை ரூபாய் 1.5 கோடிக்கு மேலும் ஆனால் ரூபாய் 5 கோடிக்குக் கீழும் உள்ள வரி செலுத்துபவர்கள் 2 இலக்க அடையாள எண் உபயோகிக்க வேண்டும். வருடாந்தர விற்பனை ரூபாய் 5 கோடி மற்றும் அதற்கு மேல் உள்ள வரி செலுத்துபவர்கள் 4 இலக்க அடையாள எண் உபயோகிக்க வேண்டும். வருடாந்தர விற்பனை 1.5 கோடிக்குக் கீழ் உள்ளவர்கள் அவர்களுடைய விலைப்பட்டியில் HSN அடையாள எண் எழுதத் தேவையில்லை. சேவைகள் கணக்கீடு அடையாள எண்ணின்படி (SAC) சேவைகள் வகைப்படுத்தப்படும்.

கே.21 GSTன் கீழ் இறக்குமதிகளுக்கு எவ்வாறு வரிவிதிக்கப்படும்?

ப.21 சரக்குகள் மற்றும் சேவைகள் இறக்குமதிகள் மாநிலங்களுக்கு இடையிலான விநியோகங்கள் எனக் கருதப்பட்டு நாட்டினுள் சரக்குகள் மற்றும் சேவைகள் இறக்குமதிக்கு IGST விதிக்கப்படும். வரி விதிப்பு இடக் கொள்கையைப் பின்பற்றும். இறக்குமதி செய்யப்படும் சரக்குகளும் சேவைகளும் மாநிலத்தில் உபயோகிக்கப்பட்டால் வரி வருமானம் SGST மூலம் வந்தடையும். சரக்குகள் மற்றும் சேவைகளின் இறக்குமதி முழுவதுமாக மற்றும் முற்றிலுமாக GSTக்கு செலுத்தப்படும்.

கே.22 GSTன் கீழ் ஏற்றுமதிகள் எவ்வாறு கருதப்படும்?

ப.22 ஏற்றுமதி செய்யப்படும் விநியோகங்களுக்கு GST வரி பூஜ்ய விகிதங்களாக்க் கருதப்படும். சரக்குகள் அல்லது சேவைகள் ஏற்றுமதிக்கு வரி செலுத்த வேண்டாம். இருந்த போதிலும் உள்ளீட்டு வரி வரவு உள்ளது. அது ஏற்றுமதியாளர்களுக்கு திரும்பத்தருவதற்காக இருக்கும்.

கே.23 GSTன் கீழ் தொகுப்பு வரி (composition scheme) வரம்பு என்ன?

ப.23 நிதி ஆண்டின் வருடாந்தர வருமானம் (ரூபாய் 50 இலட்சம் வரை) உள்ள குறைந்த வரி செலுத்துபவர்கள் தொகுப்பு வரி திட்ட வரம்பின் கீழ் விதிக்கப்படும் வரிக்கு தகுதி பெறுவார்கள். இந்த திட்டத்தின் கீழ் ITCந் ஆதாயமின்றி வரி செலுத்துபவர் அவருடைய வருமானத்திலிருந்து சதவீத அடிப்படையில் வரி செலுத்துவார். CGST மற்றும் SGSTக்கு அடிப்படை வட்டி விகிதம் 1%கு குறையாது. தொகுப்பு வரி திட்ட வரம்பின் கீழ் வரி செலுத்த விருப்பம் தெரிவித்தவர் அவருடைய வாடிக்கையாளர்களிடமிருந்து வரி வசூலிக்கக் கூடாது. மாநிலங்களுக்கு இடையில் விநியோகிப்பவர்கள் அல்லது நேர்மாறான வரி விதிப்பு அடிப்படையில் வரி செலுத்துபவர் தொகுப்பு வரி திட்ட்த்தின் கீழ் தகுதியானவர் இல்லை.

கே.24 தொகுப்பு வரி திட்டம் விருப்பப்படியானதா அல்லது கட்டாயமானதா?

ப.24 விருப்பப்படியானது

கே.25 GSTN என்பது என்ன? GST செயல்பாட்டில் அதன் பங்குபணி என்ன?

ப.25 GSTN என்பது சரக்குகள் மற்றும் சேவை வரி இயங்குநிலைகள் இணைப்பு (GSTN). ஒரு விசேஷ குறிக்கோள் சாதனம் என அழைக்கப்படும் GSTN என்பது GSTன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அமைக்கப்பட்டது. GSTஐ அமல்படுத்துவதற்கு GSTN ஒரு IT தொடர்புக்கு பங்களிக்கும். மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள், வரி செலுத்துபவர்கள் மற்றும் பிற பகுதியினர். GSTNன் செயல்பாட்டில் அடங்குவது

(i) பதிவு செய்ய உதவுதல்

(ii) மத்திய மற்றும் மாநில அதிகார பூர்வமாககளுக்கு விவரங்கள் அனுப்புதல்

(iii) IGSTஐ ஒருங்கிணைத்தல் மற்றும் பைசல் செய்தல்

(iv) வரி செலுத்தும் விவரங்களை வங்கி இணைப்புடன் சரிபார்த்தல்

(v) வரி செலுத்துபவரின் அறிக்கையின் தகவல் அடிப்படையில் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு பல்வேறு MIS அறிக்கைகளைத் தருதல்

(vi) வரி செலுத்துபவரின் மூலத்தின் ஆய்வைத் தருதல் மற்றும்

(vii) சரிபார்ப்பு செயல்பாட்டை வழி நடத்தி சரிபார்த்தல், பரிவ்ர்த்தனை, மற்றும் உள்ளீடு வரி பற்றுவரவு, திரும்பக் கோரல்

GSTN ஒரு பொதுவான GST முகப்பு மற்றும் பதிவு, பணம் செலுத்துதல், திரும்ப்ப் பெறுதல், MIS அறிக்கைகள் முதலிய விண்ணப்பங்களை வடிவமைக்கிறது. GSTN மேலும் பொது GST முகப்பை ஏற்கெனவே உள்ள வரி நிர்வாகத்துடன் ஒருங்கிணைக்கிறது. வரி செலுத்துபவர்களுக்கு IT முறைகள் மூலம் தொடர்பு ஏற்படுத்தித் தருகிறது. மேலும் GSTN 19 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு (மாதிரி மாநிலங்கள்) மறு ஆய்வு,

தணிக்கை, திரும்ப்பெறல், கோரிக்கை முதலிய பிரிவுகளை பின்னணியிலிருந்து கொண்டு மேம்படுத்துகிறது. CBEC மற்றும் மாதிரி I மாநிலங்கள் (15 மாநிலங்கள்) அவர்களே அவர்களுடைய GSTஐ பின்னணியிலி ருந்து கொண்டு மேம்படுத்துகிறது. பரிவர்த்தனை சரளமாக செயல்பட GSTன் முன் முறையும் பின் முறையும் பூர்த்தியாகி முன்கூட்டியே பரிசோதிக்கப்பட வேண்டும்.

கே.26 GST செயல்பாட்டின் கீழ் எவ்வாறு பிரச்னைகள் தீர்க்கப்படும்?

ப.26 சரக்குகள் மற்றும் சேவை வரி அமைப்பு ஒரு செயல்திட்டம் மூலம் எந்த பிரச்னைக்கும் முடிவெடுக்க அரசியல் (நூற்றொன்றாம் திருத்த) சட்டம், 2016 வழிவகுக்கிறது. அது (a) இந்திய அரசாங்கம் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் தம்மிலானது; அல்லது (b) இந்திய அரசாங்கம் மற்றும் ஒரு மாநிலம் அல்லது மாநிலங்கள் ஒரு பக்கமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் மறு பக்கமும்; அல்லது (c) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் இடையில் எழும் அமைப்பின் சிபாரிசுகளின் மேல் எழும் அல்லது செயலாக்கும்பொழுது எழுவது.

கே.27 GSTஐ அமலாக்க பிற சட்டபூர்வ தேவைகள் என்ன?

ப.27 GST விதித்தலுக்கு (மத்திய GST மசோதா, ஒருங்கிணைந்த GST மசோதா மற்றும் மாநில GST மசோதா) உரிய சட்டபூர்வ நடவடிக்கை மூலம் பாராளுமன்றத்தாலும் மாநில சட்டசபைகளினாலும் அனுமதிக்கப்பட்டு அரசியல் சட்டத்தில் அதிகாரம் பெற வேண்டும். அரசியல் சாசன திருத்தத்திற்கு 2/3 பெரும்பான்மை தேவை என்பது போல் அல்லாது GST மசோதாக்கள் சாதாரண பெரும்பான்மை மூலம் ஏற்றுக் கொள்ளப்படும். தெளிவாக, பாராளுமன்றத்தாலும் சம்பந்தப்பட்ட சட்டசபைகளாலும் GST சட்டம் இயற்றப்பட்ட பின்புதான் வரிவிதிப்பு தொடங்க இயலும்.

## 2. வரையறை செய்தல் மற்றும் வரி விலக்கு

கே.1 GST விதிக்க அதிகாரம் எங்கிருந்து கிடைத்தது?

ப.1 அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் (101ம் திருத்த) சட்டம், 2016, ஷரத்து 246A பாராளுமன்றத்திற்கும் மாநில சட்டசபைகளுக்கும் ஒன்றாக GST குறித்த சட்டங்கள் உருவாக்க அதிகாரங்கள் வழங்கியது. இருந்த போதிலும், ஷரத்து 246Aன் உட்கூறு 2 உடன் ஷரத்து 269Aன்படி மாநிலங்கள் இடையேயான வியாபாரம் அல்லது வர்த்தகம் தொடர்பான சட்டம் உருவாக்க பாராளுமன்றத்திற்குச் சிறப்பு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

கே.2 GSTன் கீழ் வரிவிதிப்பு நிகழ்வு என்றால் என்ன?

ப.2 சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் விநியோகம். மாநிலத்திற்குள் விநியோகங்களுக்கு CGST & SGST விதிக்கப்படும். மாநிலங்களுக்கிடையே விநியோகங்களுக்கு IGST விதிக்கப்படும். விதிக்கும் பிரிவு 7(1) CGST/SGST சட்டம் மற்றும் பிரிவு 4(1) IGST சட்டம்.

கே.3 நேர் மாறான வரி விதிப்பு வழிமுறை, சேவைகளுக்கு மாத்திரம்தான் பின்பற்றப்படுமா?

ப.3 இல்லை. சரக்குகள் மற்றும் சேவைகள் இரண்டுக்கும் நேர் மாறான வரி விதிப்பு வழிமுறை பின்பற்றப்படும்.

கே.4 பதிவு பெறாத வணிகர்கள் மூலம் சரக்குகள் வாங்கினால் என்ன சிக்கல்கள் வரும்?

ப.4 சரக்குகளைப் பெறுபவர் ITC பெற இயலாது. மேலும், தொகுப்பு வரி திட்டத்தின் கீழ் பதிவு செய்தவர் நேர் மாறான வரி விதிப்பு வழிமுறையின் கீழ் வரி கட்ட வேண்டும்.

கே.5 சரக்குகள் பரிவர்த்தனை, அதாவது உணவு விடுதி சேவைகளுக்கு தங்கக் கடிகாரம் வாங்கினால் அந்தப் பரிமாற்றம் இரண்டு வெவ்வேறு விநியோகங்களா அல்லது முக்கிய விநியோகஸ்தர் மாத்திரம் வரி செலுத்துவாரா?

ப.5 இல்லை. மேற்கூறிய விஷயத்தில் உபயோகிப்பாளரிடமிருந்து உணவு விடுதிக்கு விநியோகிக்கப்பட்டது ஒரு தனிப்பட்ட விநியோகம் ஆகாது, மேலும்

அத்தகைய விநியோகம் வர்த்தகம் சம்பந்தப்பட்டது அல்ல. அந்த பரிமாற்றம் உணவு விடுதிக்கு விநியோகித்ததாகக் கருதப்பட்டு அதற்காக கொடுக்கப்பட்ட கட்டணமாக கருதப்படும். அதலால் அத்தகைய பரிமாற்றம் உணவு விடுதி மூலம் வரிவிதிக்கக் கூடிய விநியோகம் ஆகும்.

கே.6 கட்டணம் இல்லாமல் விநியோகிக்கப்பட்டது GSTன் கீழான விநியோக வரம்பில் வருமா?

ப.6 ஆமாம். மாதிரி GST சட்டத்தின் பட்டியல் 1ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் மட்டும் வரும்.

கே.7 ஒரு பரிமாற்றத்தைச் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் விநியோகம் என்று யார் அறிவிக்கலாம்?

ப.7 GST அமைப்பின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கம் ஒரு பரிமாற்றத்தைச் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் விநியோகம் என்று அறிவிக்கலாம்.

கே.8 ஒரு வரி செலுத்தும் நபர் 3 நேரடி வர்த்தகத்தில் ஒரு வர்த்தகத்திற்கு மாத்திரம் தொகுப்பு வரி திட்டத்தின் (composition scheme) கீழ் தெரிவு செய்ய தகுதி உண்டா?

ப.8 இல்லை. அனைத்து நேரடி வர்த்தகமும்/பதிவுகளும் அந்த நபர் தனித்தனியே வைத்திருந்தால் அனைத்து வர்த்தகத்திற்கும் அதே PAN உள்ள அவருக்கு தொகுப்பு வரி திட்டம் தகுதி உண்டு.

கே.9 வரி செலுத்துபவர் மாநிலங்கள் இடையே விநியோகங்களை பாதித்தால் அவர் கொடுத்தல் திட்டத்தைத் தேர்ந்தெடுக்க இயலுமா?

ப.9 முடியாது. வரி செலுத்தும் நபர் மாநிலங்கள் இடையே விநியோகங்களை பாதிக்காதிருக்கும் நிபந்தனையைப் பூர்த்தி செய்தால்தான் தொகுப்பு வரி திட்டத்திற்குத் தகுதி பெறுவார்.

கே.10 தொகுப்பு வரி திட்டத்தின் கீழ் உள்ள வரி செலுத்தும் நபர் உள்ளீட்டு வரி பற்றுவரவுக்கு உரிமை கோர முடியுமா?

ப.10 முடியாது. தொகுப்பு வரி திட்டத்தின் கீழ் உள்ள வரி செலுத்தும் நபர் உள்ளீட்டு வரி பற்றுவரவுக்கு உரிமை கோரத் தகுதி இல்லை.

கே.11 ஒரு வாடிக்கையாளர் தொகுப்பு வரி திட்டத்தின் கீழ் வரி செலுத்தும் நபரிடமிருந்து வாங்கினால் உள்ளீட்டு வரி பற்றுவரவாக பாதுகாப்பு வரிக்கு உரிமைகோர முடியுமா?

ப.11 முடியாது. வாடிக்கையாளர் தொகுப்பு வரி திட்டத்தின் கீழ் வரி செலுத்தும் நபரிடமிருந்து வாங்கினால் உள்ளீட்டு வரி பற்றுவரவாக அவர் தொகுப்பு வரிக்கு உரிமைகோர முடியாது. ஏனென்றால் தொகுப்பு வரி திட்ட விநியோகஸ்தர் ஒரு வரி விலைப்பட்டி அளிக்க இயலாது,

கே.12 வாடிக்கையாளர்களிடம் தொகுப்பு வரி வரி வசூலிக்க முடியுமா?

ப.12 முடியாது. தொகுப்பு வரி திட்டத்தின் கீழான வரி செலுத்துபவர் வரி வசூலிப்பது முடக்கப்பட்டிருக்கிறது. அதன் சரக்கு தொகுப்பு வரி திட்ட்த்தின் கீழான விநியோகஸ்தர் ஒரு வரி விலைப்பட்டி அளிக்க இயலாது.

கே.13 தொகுப்பு வரி திட்டம் மூலம் வரி செலுத்த்த் தெரிவு செய்ய குறைந்த பட்ச விற்பனை என்ன?

ப.13 தொகுப்பு வரி திட்டத்திற்கு நிதி ஆண்டில் ஒட்டுமொத்த விற்பனை ரூபாய் 50 இலட்சமாக நிர்ணயிக்கபட்டுள்ளது.

கே.14 தொகுப்பு வரி திட்டத்திற்கு தகுதியைத் தீர்மானிக்க ஒட்டுமொத்த விற்பனையை எவ்வாறு கணக்கிட வேண்டும்?

ப.14 ஒட்டுமொத்த விற்பனையைக் கணக்கிடுவதற்கான வழிமுறை பிரிவு 2(6)ல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒட்டுமொத்த விற்பனை என்பது அனைத்து விநியோகங்களின் மதிப்பு (வரி விதிப்புக்கு உட்பட்ட மற்றும் வரி விதிப்புக்கு உட்படாத விநியோகங்கள் + வரி விலக்கு அளிக்கப்பட்ட விநியோகங்கள் + ஏற்றுமதிகள்). அதில் CGST சட்டம், SGST சட்டம் மற்றும் IGST சட்டம் முதலியவற்றின் கீழ் செலுத்தப்பட்ட வரிகள், உள்ளே வந்த விநியோகத்தின் மதிப்பு + அதே பான் உள்ள நபரின் நேர் மாறான வரி விதிப்புக்குள்ளான விநியோகங்களின் மதிப்பு ஆகியவை சேராது.

கே.15 வரி விதிப்புக்கு உட்பட்ட நபர் நிபந்தனையை மீறினால் என்னென்ன எதிர்விளைவுகளால் தண்டனைத்தீர்வை செலுத்த வேண்டும் மற்றும் தொகுப்பு வரி திட்டத்தின் கீழ் வரி செலுத்தும் தகுதி இல்லாதிருப்பார்.

ப.15 தொகுப்பு வரி திட்டத்தின் கீழ் வரி செலுத்தும் தகுதி இல்லாதிருக்கும் நபர் அத்தகைய வரி விதிப்புக்கு உட்பட்டிருந்தால் அந்த நபர் வரி, வட்டி அல்லாது தண்டனைத்தீர்வையாக வரித் தொகைக்கு சமமான தொகையை செலுத்த வேண்டும். (MGLன பிரிவு 8(3))

கே.16 தொகுப்பு வரி திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச வரி விகிதம் என்ன?

ப.16 1%

கே.17 சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளுக்கு வசூலிக்கப்படும் மொத்த வரிக்கும் நிபந்தனையின்றி விலக்கு அளிக்கப்பட்டால், வரி விதிப்புக்கு உட்பட்ட நபர் வரி செலுத்த வேண்டுமா?

ப.17 இல்லை. அப்படிப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகள் அளிக்கும் வரி விதிப்புக்கு உட்பட்ட நபர் அப்படிப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகளுக்கு வரி வசூலிக்கத் தேவையில்லை.

கே.18 வரி/தீர்வை தள்ளுபடி செய்தல் என்றால் என்ன?

ப.18 ஏதாவது இயற்கை காரணங்களால் சரக்குகள் நஷ்டமடைந்தாலோ சேதமடைந்தாலோ வரி செலுத்துபவர் வரி செலுத்தும் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுவார். சட்டம் மற்றும் விதிமுறைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் தள்ளுபடி கிடைக்கும்.

கே.19 GST சட்டத்தின் கீழ் தள்ளுபடி அனுமதிக்கப்படுமா?

ப.19 ஆமாம். சரக்குகள் விநியோகத்தின் மேலான வரி தள்ளுபடி மாதிரி GST பிரிவு 11ல் அனுமதிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கே.20 விநியோகத்திற்கு முன்பாக சரக்குகள் நஷ்டமடைந்தாலோ சேதமடைந்தாலோ தள்ளுபடி கிடைக்குமா?

ப.20 சட்டப்படி வரி செலுத்தப்பட வேண்டியிருந்தால் மட்டுமே வரி தள்ளுபடி பிரயோகிக்கப்படும். அதாவது வரி செலுத்த வேண்டிய நிகழ்வு ஏற்பட வேண்டும் மற்றும் வரி சட்டப்படி வரி செலுத்தப்பட வேண்டும். GST சட்டத்தின் கீழ், சரக்குகள் விநியோகிக்கப்பட்ட பின்னர் தான் தீர்வைக்கான தகுதி பெறும். விநியோகத்திற்கு முன்பே நஷ்டமடைந்தாலோ சேதமடைந்தாலோ வரி

செலுத்துவதற்காக வரி செலுத்த வேண்டிய நிகழ்வு நடக்கவில்லை. ஆகையினால், வரி தள்ளுபடிக்கான கேள்வியே எழாது.

கே.21 சரக்குகள் நஷ்டமோ சேதமோ அடையும் அனைத்து காரணங்களுக்கும் தள்ளுபடி அனுமதிக்கப்படுமா?

ப.21 இல்லை. முன்மொழியப்பட்ட பிரிவு 11ன் மேலெழுந்தவாரியான வாசிப்பின்படி விநியோகிக்கப்படும் சரக்கு இயற்கையின் காரணங்களால் அளவுகுறைபாடாக இருந்தால் மட்டுமே தள்ளுபடி அனுமதிக்கப்படும்.

கே.22 GSTன் தீர்வையிலிருந்து உரிய அரசாங்கம் விநியோகங்களுக்கு விலக்கு அளிக்க மாதிரி GST சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா?

ப.22 ஆமாம். மாதிரி GST சட்டம் பிரிவு 10ன் கீழ் GST அமைப்பின் சிபாரிசின் அடிப்படையில் மத்திய அல்லது மாநில அரசாங்கம் பொதுவாகவோ அல்லது நிபந்தனைகளின் பேரிலோ சரக்குகள் மீதான GSTன் தீர்வையிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

# 3. பதிவு

கே.1 GSTல் பதிவு செய்து கொள்வதால் என்ன ஆதாயம்?

ப.1 வர்த்தகத்திற்கு சரக்குகள் மற்றும் சேவை வரி (GST) செயல்பாட்டின் கீழ் பதிவு செய்து கொள்வது கீழ்கண்ட ஆதாயங்களை அளிக்கிறது.

* சரக்குகள் அல்லது சேவைகளை விநியோகிக்க சட்டபூர்வமாக அங்கீகரிக்கிறது

* உள்ளீட்டு சரக்குகள் அல்லது சேவைகளுக்கு செலுத்தப்படும் வரிகள் உரிய முறையில் கணக்கில் வைக்கப்பட்டு, அது சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது அவை இரண்டும் விநியோகிப்பதற்கான GSTயை செலுத்த அங்கீகரிக்கிறது

* அவர் சரக்கு வாங்கியவர்களிடமிருந்து சட்டபூர்வமாக GST வரி வசூலிக்க அங்கீகரிக்கிறது. சரக்குகள் அல்லது சேவைகள் விநியோகிக்கப்பட்டதற்காக செலுத்தப்பட்ட பற்றுவரவை வாங்குபவர்கள் அல்லது பெறுபவர்களுக்கு மாற்றிவிட அனுமதிக்கிறது.

கே.2 GST பதிவு இல்லாமல் ஒரு நபர் ITC உரிமை கோரி வரி வசூலிக்க முடியுமா?

ப.2 முடியாது. GST பதிவு இல்லாமல் ஒரு நபர் அவருடைய வாடிக்கையாளர்களிடமிருந்து GST வசூலிக்க முடியாது மற்றும் அவர் செலுத்திய GSTக்கு எந்த மாநில உள்ளீட்டு வரி வரவுக்கும் உரிமை கோர முடியாது.

கே.3 பதிவு செய்வது அமலாகும் தேதி என்ன?

ப.3 ஒரு நபர் பதிவு செய்யத் தகுதி பெற்ற பின்னர் அந்த தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக பதிவுக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும். பதிவு பெறுவதற்கான முறைப்படியான தேதி என்பது பதிவு செய்வதற்கான தகுதி பெற்ற தேதி ஆகும்.

பதிவு செய்யத் தகுதி பெற்று முப்பது நாட்களுக்குப் பின்னர் பதிவுக்கான விண்ணப்பம் சமர்ப்பித்தால் பதிவு பெறுவதற்கான முறைப்படியான தேதி பதிவு ஏற்றுக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படும்.

வரி செலுத்துவதிலிருந்து விலக்கு பெறும் வரம்பில் இருந்து கொண்டு தன்னிச்சையாக பதிவு செய்து கொண்டால் முறைப்படியான பதிவு தேதி என்பது பதிவுக்கான உத்திரவு பிறப்பித்த தேதி ஆகும்.

கே.4 மாதிரி GST சட்டத்தின் கீழ் பதிவுக்குத் தகுதியானவர்கள் யார்?

ப.4 எந்த ஒரு விநியோகஸ்தரும் எந்த ஒரு வர்த்தகத்தையும் இந்தியாவின் எந்த இடத்திலாவது செய்து கொண்டு குறிப்பிட்ட வரம்பிற்கு மேல் ஒட்டுமொத்த வர்த்தகம் செய்பவர் அவர் பதிவு செய்யும் தகுதி பெறுகிறார். இருந்தபோதிலும், MGLன் பட்டியல் IIIல் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் இந்த வரம்பு இல்லாவிட்டால் கூட பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒரு விவசாயி வரி செலுத்தப் படுபவராகக் கருதப்பட மாட்டார். ஆகையினால் அவர் பதிவு செய்யத் தேவையில்லை (பிரிவு 9(1))

கே.5 ஒட்டுமொத்த விற்றுமுதல் (Aggregate Turnover) என்றால் என்ன?

ப.5 மாதிரி சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் MGL பிரிவு 2(6)ன் படி, ஒட்டுமொத்த விற்றுமுதல் என்பது கீழ்கணட வர்த்தக மதிப்பு உள்ளடங்கியதாகும்.

(i) அனைத்து வரிவிதிக்கப்படும் மற்றும் வரிவிதிக்கப்படாத விநியோகங்கள்

(ii) வரிவிலக்கு அளிக்கப்பட்ட விநியோகங்கள் மற்றும்

(iii) அதே PAN உடனான நபரின் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் ஏற்றுமதி

அகில இந்திய அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்டவைகள் சேர்க்கப்படும். அதில் CGST சட்டம், SGST சட்டம் மற்றும் IGST சட்டத்தின் கீழ் வரிகள் விதிக்கப்பட்டவைகள் சேராது.

ஒட்டுமொத்த விற்றுமுதலில் நேர்மாறான வரிவிதிப்பு அடிப்படையில் வரிவிதிப்புக்கு உள்ளாகும் விநியோகங்களின் மதிப்புகள் மற்றும் உள்ளே வரும் விநியோகங்களின் மதிப்புகள் சேராது.

கே.6 எம்மாதிரியானவைகளுக்கு பதிவு கட்டாயம்?

ப.6 MGL பட்டியல் III பத்தி 5ன் படி, கீழ்கண்ட வகைகளைச் சேர்ந்தவர்கள் வர்த்தக வரம்பு எதுவாக இருந்தாலும் கட்டாயமாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

a) மாநிலங்கள் இடையில் வரி விதிப்புக்குட்பட்ட விநியோகம் செய்பவர்கள்

b) முறைமைக்குட்படாத வரி விதிக்கப்படுபவர்கள் (casual tax payers)

c) நேர்மாறான வரி (reverse charge) செலுத்துபவர்

d) உள்நாட்டில் வசிக்காத வரி செலுத்துபவர்

e) பிரிவு 37ன் கீழ் வரி பிடித்தம் செய்து செலுத்தும் நபர்கள்

f) ஒரு முகவராகவோ அல்லது வேறு விதத்திலோ பிற பதிவு பெற்ற வரிசெலுத்தும் நபர்களுக்காக சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் விநியோகிப்பவர்கள்

g) உள்ளீட்டு (input) சேவை விநியோகஸ்தர்

h) வியாபாரக் குறியீட்டுடன் சேவை செய்பவர் தவிர்த்து மின்னணு வர்த்தகம் இயக்குபவர் மூலமாக சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் வழங்கும் நபர்கள்

i) எல்லாவித மின்னணு வர்த்தகம் இயக்குபவர்கள்

j) அவருடைய முத்திரை பெயரில், அவருடைய வர்த்தக பெயரில் சேவைகள் விநியோகிக்கும் மொத்த வர்த்தகர் (aggregator)

k) அமைப்பின் சிபாரிசுகளின்படி மத்திய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கம் குறிப்பிட்ட பிற நபர்கள் அல்லது பிற வகையான நபர்கள்

கே.7 மாதிரி GST கணிசமான சட்டம் பதிவு செய்து கொள்ள கால வரையறை என்ன?

ப.7 எந்த நபரும் பதிவுக்கு தகுதி பெற்று 30 நாட்களுக்குள்ளாக, வரையறுக்கப்பட்ட விதத்தில் மற்றும் நிபந்தனைகள் அடிப்படையில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கே.8 ஒரே PAN எண்ணில் வெவ்வேறு மாநிலங்களில் ஒருவர் செயல்பட்டுக் கொண்டிருந்தால் அவர் ஒரு பதிவு மாத்திரம் வைத்துக் கொண்டு செயல்படலாமா?

ப.8 இல்லை. பதிவு பெறத் தகுதி உள்ள ஒவ்வொரு நபரும் அவருக்கு வர்த்தக செயல்பாடு உள்ள ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனியாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். மாதிரி GST சட்டம் பிரிவு 19 உப-பிரிவு (1)ல் உள்ள நிபந்தனைகளின்படி GST செலுத்த வேண்டும்

கே.9 ஒரு மாநிலத்தில் பல்முனை வர்த்தக பகுதிகள் ஒருவருக்கு இருந்தால் வெவ்வேறு பதிவுகள் செய்ய வேண்டுமா?

ப.9 ஆமாம். பிரிவு 19, உப-பிரிவு (2)ல் உள்ள நிபந்தனைகளின்படி ஒரு நபர் ஒரு மாநிலத்தில் பல்முனை வர்த்தக பகுதிகள் இருந்தால் ஒவ்வொரு வர்த்தக பகுதிக்கும் தனி பதிவு வரையறுக்கப்பட்ட விதிகளின்படி பெறலாம்.

கே.10 ஒருவர் வரி செலுத்தும் பொறுப்புக்கு உட்படாத போதிலும் தன்னிச்சையாக அவர் பதிவு செய்து கொள்ள ஒழுங்குமுறை உண்டா?

ப.10 ஆமாம். பிரிவு 19 உப-பிரிவு (3) பட்டியல் IIIல் உள்ள நிபந்தனைகளின்படி ஒரு நபர் பதிவு செய்து கொள்ளத் தேவையில்லாத போதும், அவர் தன்னிச்சையாகப் பதிவு செய்து கொண்டால், பதிவு செய்த வரி செலுத்தும் நபருக்கு உள்ளபடி இந்த சட்டத்தின் அனைத்து விதிகளும் அப்படிப்பட்ட நபருக்கும் பிரயோகிக்கப்படும்.

கே.11 பதிவு பெறுவதற்கு நிரந்தர கணக்கு எண் (PAN) கண்டிப்பாகத் தேவையா?

ப.11 ஆமாம். மாதிரி GST சட்டம் பிரிவு 19ன் கீழ் பதிவு பெறுவதற்கான தகுதி பெற வருமான வரி சட்டம், 1961 (1961ன் 43)ன் கீழ் கொடுக்கப்படும் நிரந்தர கணக்கு எண் (PAN) ஒவ்வொரு நபரிடமும் இருத்தல் அவசியம். இருந்த போதிலும் MGLன் பிரிவு 19 (4A)ன் படி PAN, இந்தியாவில் வசிக்காத வரி செலுத்தும் நபருக்கு தேவை இல்லை. றிப்பிடப்பட்டுள்ள வேறு பிற ஆவணத்தின் அடிப்படையில் பதிவு பெறலாம்.

கே.12 இந்த சட்டத்தின் கீழ், இலாகாவின் உரிய அதிகாரி தன்னிச்சையாக ஒரு நபரை பதிவு செய்வதற்கான செயலில் ஈடுபடலாமா?

ப.12 ஆமாம். பிரிவு 19 உப-பிரிவு (5)ன் கீழ், இந்த சட்டத்தின் படி பதிவு செய்ய வேண்டியவர் பதிவு செய்யாதிருந்தால், உரிய அதிகாரி MGLன் கீழ் பட்சாபாதமின்றி எந்த நடவடிக்கையும் எடுக்கலாம். அல்லது அப்போது அமலில் இருக்கும் பிற சட்ட்த்தின்படி குறிப்பிடப்பட்ட விதத்தில் அப்படிப்பட்ட நபரைப் பதிவு செய்யும் செயலில் ஈடுபடலாம்.

கே.13 உரிய அதிகாரி பதிவுக்கான விண்ணப்பத்தை நிராகரிக்கலாமா?

ப.13 ஆமாம். MGLன் உப-பிரிவு 7ன் கீழ், உரிய அதிகாரி தகுந்த பரிசீலனை செய்த பின்னர் பதிவு விண்ணப்பத்தை நிராகரிக்கலாம். இருந்தபோதிலும், பிரிவு 19 உப-பிரிவு 19ன் கீழ் அந்த நபருக்கு தனிப்பட்ட அடையாள எண்ணுக்காக தரப்பைக் கேட்டு அறிய உரிய சந்தர்ப்பம் வழங்கி முன் அறிவிப்பு கொடுக்காமல் உரிய அதிகாரி நிராகரிக்கக் கூடாது.

கே.14 எந்த ஒரு நபருக்கும் பதிவு கொடுப்பது நிரந்தரமானதா?

ப.14 ஆமாம். திரும்பக் கொடுக்கப்பட்டாலோ, ரத்து செய்யப்பட்டாலோ, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டாலோ அல்லது விலக்கப் பட்டாலோ அல்லாது ஒரு முறை அளிக்கப்பட்ட பதிவு சான்றிதழ் நிரந்தரமானது.

கே.15 MGLன் கீழ் ஐ.நா அமைப்புகள் பதிவு செய்து கொள்வது அவசியமா?

ப.15 அனைத்து ஐ.நா. அமைப்புகள் தூதரகம் அல்லது வெளிநாடுகளின் தூதரகம் அல்லது அதன் கீழ் அறிவிக்கப்பட்ட பிற வகை நபர்கள் GST வலை வாயில் மூலமான ஒரு தனிப்பட்ட அடையாள எண் (UIN) பெறவேண்டும். மேலே கூறப்பட்ட IDன் அமைப்பு அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியாக GSTIN அமைப்பு கொள்கையின்படி பரிந்துரைக்கப்படும் மற்றும் மத்திய மற்றும் மாநிலங்களுக்குப் பொதுவானதாக பரிந்துரைக்கப்படும். GST விதிமுறைகளின்படி அவர்கள் செலுத்திய வரிகளைத் திரும்பப் பெறவும் மற்றும் வேறு பிற காரணத்திற்கும் UIN தேவைப்படும்.

கே.16 வரி செலுத்தும் நபர் ஐ.நா. அமைப்புகளுக்கு விநியோகிக்கும் பொழுது அவருடைய பொறுப்பு என்ன?

ப.16 வரி செலுத்தும் விநியோகஸ்தர் இந்த அமைப்புகளுக்கு விநியோகிக்கும் பொழுது விலைப்பட்டியில் UIN குறிப்பிட வேண்டும். மற்றும் அப்படிப்பட்ட விநியோகங்களை மற்றொரு பதிவு பெற்ற நபருக்கு (B2B) விநியோகங்கள் செய்ததாகக் கருதி விலைப்பட்டியை விநியோகஸ்தர் வலைதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

கே.17 அரசாங்க அமைப்புகள் பதிவு செய்து கொள்வது அவசியமா?

ப.17 GST சரக்குகளை வெளி விநியோகங்கள் செய்யாத (அதனால் GST பதிவு பெறும் அவசியம் இல்லாத) ஆனால் வெளி மாநிலங்களில் இருந்து சரக்குகள்/சேவைகள் வாங்கும் அரசு அதிகார அமைப்புகளுக்கும்/பொதுத் துறை அமைப்புகளுக்கும் சம்பந்தப்பட்ட மாநில அதிகார அமைப்புகள் GST வலைவாயில் மூலம் ஒரு தனிப்பட்ட அடையாள எண் (ID) கொடுக்க வேண்டும்.

கே.18 முறைமைக்கு உட்படாத வரி செலுத்தும் நபர் யார்?

ப.18 MGL பிரிவு 2(21)ன் கீழ் முறைமைக்கு உட்படாத வரி செலுத்தும் நபர் குறித்து விளக்கப்பட்டிருக்கிறது. ஒரு நிரந்தரமான வர்த்தக இடம் இல்லாத வரி செலுத்தப்படும் பிராந்தியத்தில் அவ்வப்போது விற்பனை செய்யும் ஒரு நபர் ஆவார்.

கே.19 உள்நாட்டில் வசிக்காத வரி செலுத்தும் நபர் யார்?

ப.19 MGL பிரிவு 2(69)ன் படி இந்தியாவிற்கு வெளியில் வசிக்கும் இந்தியாவில் குறிப்பிட்ட வர்த்தக இடம் இல்லாமல் அவ்வப்போது இந்தியாவிற்கு வந்து நாட்டில் விற்பனை செய்யும் ஒருவர் உள்நாட்டில் வசிக்காத வரி செலுத்தும் நபர் ஆவார்.

கே.20 முறைமைக்கு உட்படாத வரி செலுத்தும் நபருக்கும் உள்நாட்டில் வசிக்காத வரி செலுத்தும் நபருக்கும் அளிக்கப்படும் பதிவு சான்றிதழின் செல்லத்தக்க காலம் எத்தனை?

ப.20 முறைமைக்கு உட்படாத வரி செலுத்தும் நபருக்கும் சாதாரணமாக வசிக்காத வரி செலுத்தும் நபருக்கும் அளிக்கப்படும் பதிவு சான்றிதழின் செல்லத்தக்க காலம் பதிவு செய்த தேதியிலிருந்து தொண்ணூறு நாட்கள் ஆகும். இருந்தபோதிலும், உரிய அதிகாரி குறிப்பிடப்பட்ட வரி செலுத்துபவரின் வேண்டுகோளுக்கு இணங்க மேலே குறிப்பிடப்பட்ட தொண்ணூறு நாட்களுக்குப் பிறகு மேலும் தொண்ணூறு நாட்களுக்கு மேல் அதிகரிக்காமல், செல்லத்தக்க காலத்தை நீட்டிக்கலாம்.

கே.21 இந்த விசேஷ வகையின் கீழ் பதிவு பெறும் முறைமைக்கு உட்படாத வரி செலுத்தும் நபரும் உள்நாட்டில் வசிக்காத வரி செலுத்தும் நபரும் வரி முன்கூட்டியே செலுத்த வேண்டுமா?

ப.21 ஆமாம். பதிவு பெற ஒரு சாதாரண வரி செலுத்தும் நபருக்கு முன்கூட்டியே பணம் செலுத்த வேண்டிய தேவையில்லை. முறைமைக்கு உட்படாத வரி செலுத்தும் நபர் அல்லது உள்நாட்டில் வசிக்காத வரி செலுத்தும் நபர் பிரிவு 19 உப-பிரிவு (1)ன் கீழ் பதிவு செய்ய விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பொழுது பதிவுக்காக்க் கோரப்படும் காலத்திற்கான கணக்கிடப்பட்ட சுமாரான வரிப் பொறுப்புக்குள்ள தொகைக்கு சமமான தொகையை அப்படிப்பட்ட நபர் செலுத்த

வேண்டும். பதிவு முதல் தொண்ணூறு நாட்களுக்கு மேலாக அதிகரிக்கப்பட்டால், தொண்ணூறு நாட்களுக்கு மேல் அதிகரிக்கப்படும் காலத்திற்கு கணக்கிடப்பட்ட சுமாரான வரிப் பொறுப்புக்குள்ள தொகைக்கு சமமான தொகையைசெலுத்த வேண்டும்.

கே.22 பதிவு சான்றிதழில் திருத்தங்கள் செய்வது அனுமதிக்கப்படுமா?

ப.22 ஆமாம். பிரிவு 20ன் கீழ், உரிய அதிகாரி அப்படிப்பட்ட தகவலை பதிவு செய்தவர் கொடுத்தாலோ அல்லது அவராகவே உறுதி செய்து கொண்டாலோ, அதன் அடிப்படையில் பதிவு விவரங்களில் திருத்தங்களை குறிப்பிடப்பட்ட அந்த காலத்திற்குள்ளாக ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம். குறிப்பிட்ட முக்கிய பகுதிகளிலான தகவலில் திருத்தங்கள் செய்ய உரிய அதிகாரியின் அனுமதி தேவை என்பதைக் குறித்துக் கொள்ள வேண்டும். பிற பகுதிகளில் பதிவு செய்தவர் தாமாகவே திருத்தங்கள் செய்து கொள்ளலாம்.

கே.23 பதிவு சான்றிதழ் ரத்து செய்வது அனுமதிக்கப்படுமா?

ப.23 ஆமாம். இந்த சட்டப்படி வழங்கப்பட்ட பதிவை MGL பிரிவு 21ல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக உரிய அதிகாரி ரத்து செய்யலாம். உரிய அதிகாரி அவருடைய சொந்தத் தீர்மானத்தின் கீழ் அல்லது பதிவு பெற்ற வரி செலுத்தும் நபரோ அல்லது அவர் இறந்து விட்டால் அவருடைய சந்ததியோ குறிப்பிடப்பட்ட விதத்தில் விண்ணப்பம் தாக்கல் செய்து குறிப்பிடப்பட்ட விதத்தில் மற்றும் குறிப்பிடப்பட்ட காலத்துள் பதிவை ரத்து செய்யலாம்.

கே.24 CGST சட்டப்படி பதிவு ரத்து செய்யப்பட்டால், அது SGST சட்ட்த்தின் கீழும் ரத்து செய்யப்பட்டதாக அர்த்தமா?

ப.24 ஆமாம். பிரிவு 21(6)ன் படி ஒரு சட்டத்தின் கீழ் (அதாவது CGST சட்டம்) பதிவு ரத்து செய்யப்பட்டால் மற்ற சட்டப்படியும் (அதாவது SGST சட்டம்) ரத்து செய்யப்பட்டதாகத் தான் அர்த்தம்.

கே.25 உரிய அதிகாரி அவரே சொந்தமாக பதிவு ரத்து செய்யலாமா?

ப.25 ஆமாம். MGL பிரிவு 21(2)ல் குறிப்பிட்டுள்ளபடி, உரிய அதிகாரி அவரே சொந்தமாக பதிவை ரத்து செய்யலாம். முறைமைக்கு உட்படாத வரி செலுத்தும் நபர் தொடர்ந்து ஆறு மாதங்களும் அல்லது தொகுப்பு வரி செலுத்தும் நபர் மூன்று

மாதங்களும் விவரம் தாக்கல் செய்யாதிருத்தல், பதிவு செய்து ஆறு மாதங்கள் வரை வர்த்தகம் தொடங்காதிருத்தல் ஆகிய சந்தர்ப்பங்கள் அதில் சேரும். இருந்தபோதிலும், பதிவு ரத்து செய்யும் முன்பாக, உரிய அதிகாரி நியாயமான நீதிக் கொள்கைகளைக் (principles of natural justice) கடைபிடிக்க வேண்டும்.

கே.26 வேண்டுமென்றே தவறான விவரங்களைக் கொடுத்தும், மோசடி செய்தும் அல்லது உண்மைகளை மறைத்தும் பதிவு செய்தால் என்ன ஆகும்?

ப.26 பிரிவு 21(3)ன் கீழ் உரிய அதிகாரியால் பதிவு தேதியிலிருந்தே பதிவு ரத்து செய்யப்படும்.

கே.27 MGLன் கீழான சேவைகளுக்கு மையப்படுத்தப்பட்ட பதிவு தெரிந்தெடுக்க முடியுமா?

ப.27 முடியாது.

கே.28 வரி செலுத்துபவருக்கு ஒரே மாநிலத்தில் பல்வேறு வர்த்தகங்கள் இருந்தால் மாநிலத்தில் ஒவ்வொரு வர்த்தப்பகுதியிற்கும் தனி பதிவு எடுக்க வேண்டுமா?

ப.28 முடியாது. ஆனால் MGL பிரிவு 19(2)ன் கீழ் அப்படிப்பட்ட தனி வர்த்தப்பகுதியிற்கும் தனியாக பதிவு செய்யத் தெரிந்தெடுக்கலாம்.

கே.29 ISD என்பவர் யார்?

ப.29 ISD என்பதன் பொருள் சரக்கு உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர். இது MGL பிரிவு 2(56)ன் கீழ் விளக்கப்பட்டுள்ளது. அடிப்படையில் இந்த அலுவலகம் உள்ளீட்டு சேவைகள் பெறுவதற்காக கொடுக்கப்படும் வரி விலைப்பட்டிககளைப் பெறவும் விநியோகஸ்தர் நிறுவனத்திற்கு முறைப்படி பற்றுவரவை விநியோகிக்கும்.

கே.30 ஏற்கெனவே உள்ள வரி செலுத்துபவர் பதிவு அல்லாது ISDக்கு தனியாகப் பதிவு செய்ய வேண்டுமா?

ப.30 ஆமாம். சாதாரண பதிவு அல்லாது வரி செலுத்துபவருக்கு ISD பதிவு என்பது வேறு ஒரு அலுவலகத்தில் செய்வதாகும்.

கே.31 ஒரு வரி செலுத்துபவர் பல்முனை ISDக்கள் வைத்திருக்கலாமா?

ப.31 ஆமாம். ஒரு வரி செலுத்துபவர் பல்வேறு அலுவலகங்களுக்கு ISD பதிவிற்கு விண்ணப்பிக்கலாம்.

கே.32 ஒரு வர்த்தகத்தை மாற்றும் பொழுது பதிவு குறித்த பொறுப்புகள் என்ன?

ப.32 MGLன் பட்டியல் IIIன் கீழ் மாற்றுபவர் அல்லது அதனை தொடர்ந்து நடத்துபவர் அந்த மாற்றல் அல்லது தொடர்ப்பாடு தேதியிலிருந்து புதிய பதிவு எடுக்க வேண்டும்.

கே.33 அனைத்து வரி செலுத்துபவர்கள்/விநியோகஸ்தர்கள் ஏற்கெனவே மத்திய கலால் வரி/சேவை வரி/மதிப்பு கூட்டு வரி சட்டங்களின் கீழ் பதிவு செய்திருந்தால் அவர்கள் மீண்டும் புதிய பதிவு பெற வேண்டுமா?

ப.33 வேண்டாம். அப்படிப்பட்ட அனைத்து வரி செலுத்துப்வர்கள்/விநியோகஸ்தர்கள் GSTN இயங்குநிலை இணைப்பிற்கு மாற்றப்படுவார்கள். அவர்களுக்கு GSTIN எண்ணும் கடவுச்சொல் அளிக்கப்படும். அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்வதற்கான அனைத்து அவசியமான ஆவணங்கள் மற்றும் தகவல்கள் சமர்ப்பிக்கக் தருவித்துக் கொள்ளப் படுவார்கள். கொடுக்கத் தவறினால் GSTIN எண் ரத்தாகும். எப்போதெல்லாம் சம்பந்தப்பட்ட மாநிலங்களில் வர்த்தகம் இருக்கிறதோ அப்போதெல்லாம் பொதுவான பதிவுள்ள சேவை வரி கட்டுபவர் பதிவிற்குப் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும்.

கே.34 பணி எடுத்து செய்பவர் கண்டிப்பாகப் பதிவு செய்து கொள்ள வேண்டுமா?

ப.34 இல்லை. MGLன் பிரிவு 43Aல் அவ்வாறு நிபந்தனை எதுவும் குறிப்பிடப்படவில்லை.

கே.35 பணி எடுத்து செய்பவர் (job worker) அவருடைய வர்த்தக இடத்திலிருந்து சரக்குகளை விநியோகிக்க அனுமதி உண்டா?

ப.35 ஆமாம். ஆனால் பணி எடுத்து செய்பவர் பதிவு செய்திருக்க வேண்டும் அல்லது முதன்மையானவர் பணி எடுத்து செய்பவரின் வர்த்தக இடம் அவருடைய கூடுதலான வர்த்தக இடம் என்று அறிவிக்க வேண்டும்.

கே.36 பதிவு சமயத்தில் வரி செலுத்துபவர் அவருடைய வியாபார இடம் குறித்து அறிவிக்க வேண்டுமா?

ப.36 ஆமாம். முறையே MGL பிரிவு 2(78) மற்றும் 2(75)ன் கீழ் முக்கிய வர்த்தக இடம் மற்றும் வர்த்தக இடம் குறித்து தனித்தனியாகத் தெரிவிக்க வேண்டும். வரி செலுத்துபவர் பதிவுப் படிவத்தில் முக்கிய வர்த்தக இடம் மற்றும் கூடுதல் வர்த்தக இடங்களின் விவரங்கள் அறிவிக்க வேண்டும்.

கே.37 மின்பொருள் (IT) வசதிகள் இல்லாத விநியோகஸ்தர்கள் அல்லது சிறிய விநியோகஸ்தர்களுக்கு வசதி செய்து தருவதற்கு ஏதாவது முறை இருக்கிறதா?

ப.37 IT வசதிகள் இல்லாத வரி செலுத்துபவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய கீழ்கண்ட வசதிகள் கிடைக்கும். வரி விவரம் தயாரிப்பாளர் (TRP): வரி செலுத்துபவர் அவருடைய பதிவு விண்ணப்பம்/விவரம் அவரே தயாரிக்கலாம் அல்லது TRPஐ உதவிக்கு அணுகலாம். வரி செலுத்துபவரால் அளிக்கப்படும் தகவல்களின் அடிப்படையில் TRP பதிவு ஆவணம்/விவரத்தை குறிப்பிடப்பட்ட விதத்தில் தயாரிப்பார். TRPயால் தயாரிக்கப்படும் படிவங்களில் உள்ள தகவல்கள் சரியாக இருப்பதற்கு வரி செலுத்துபவர்தான் சட்டபூர்வ பொறுப்பாவார். எந்த பிழை அல்லது தவறான தகவல்களுக்கு TRP பொறுப்பாக மாட்டார். உதவும் மையம் (FC) எண்ணியமயமாக்குவதற்குப் (digitization) பொறுப்பாகும் மற்றும்/அல்லது குறிப்புத தாட்களுடன் படிவங்கள், ஆவணங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் கையொப்பத்துடன் பதிவேற்றம் செய்யப்பட்டு வரி செலுத்துபவருக்கு வழங்குவதும் FCன் பொறுப்பாகும். தகவல்களை பொதுவான வலை வாயிலில் (portal) பதிவேற்றம் செய்த பின்னர் FCன் ID மற்றும் கடவுச்சொல்லை உபயோகித்து வரி செலுத்துபவருக்கு அவரிடம் வைத்துக் கொள்வதற்காக பெற்றுக் கொண்டதற்கான உறுதியின் அச்சுப்பிரதி எடுத்து FCன் கையொப்பமுடன் வழங்கப்படும். FC அங்கீகரிக்கப்பட்ட நபரால் கையொப்பமிடப்பட்ட அந்த குறிப்புத் தாளை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்யும்.

கே.38 GSTN பதிவிற்கு மின்னணு கையொப்ப வசதி உண்டா?

ப.38 வரி செலுத்துபவர் செல்லத்தக்க மின்னணு கையொப்பங்களை சமர்ப்பித்த விண்னபத்தில் உபயோகிக்க தெரிவு செய்யலாம். (விண்ணப்பதாரர் வேறு பிற அமலில் உள்ள சட்டப்படி DSC பெற வேண்டியிருந்தால் அதை உபயோகித்து பதிவு விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம். மின்னணு கையொப்பம் இல்லாதவருக்கு பதிவு குறித்த GST வழிமுறைகளில் மாற்று ஏற்பாடுகள் செய்து கொடுக்கலாம்.

கே.39 இணையதளத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணபத்தின்மேலான முடிவெடுக்க ஆகும் கால அவகாசம் எவ்வளவு?

ப.39 தகவலும் பதிவேற்றம் செய்த ஆவணங்களும் சரியாக இருந்தால், மாநில மற்றும் மத்திய அதிகார பூர்வமாக விண்ணபத்தை ஏற்றுக் கொண்டு சம்மதத்தை பொதுவான வலை வாயிலில் (portal) மூன்று வேலை நாட்களுக்குள்ளாகத் தெரிவிக்கும். அந்த வழி பதிவு சான்றிதழை தாமாகவே தயாரிக்கும். இரு வரி அதிகார பூர்வமாககளும் இந்த மூன்று பொது வேலை நாட்களுக்குள் குறைகளைத் தெரிவிக்காவிட்டால் MGL பிரிவு 19(9)ன் கீழ் பதிவு ஏற்றுக் கொண்டதாகக் கொள்ளலாம். அந்த வழி தானாகவே பதிவு சான்றிதழைத் தயாரித்து விடும்.

கே.40 இணையதளத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தில் ஏதாவது கேள்வி எழுப்பப்பட்டால் விண்னப்பதாரர் அதற்கு பதில் அனுப்ப எத்தனை கால அவகாசம் தேவை?

ப.40 பரிசீலனை சமயத்தில், எந்த ஒரு வரி அதிகாரியும் ஏதாவது கேள்வி எழுப்பினாலோ, சில பிழைகளைக் கண்டறிந்தாலோ, அது விண்ணப்பதாரருக்கும் மற்ற வரி அதிகாரிக்கும் GST பொதுவழி மூலம் மூன்று பொது வேலை நாட்களுக்குள்ளாக தெரிவிக்கப்படும். விண்ணப்பதாரர் கேள்விக்கு பதில்/பிழையைத் திருத்துதல் சம்பந்தப்பட்ட வரி அதிகாரி அளிக்கும் கால அவகாசத்திற்குள்ளாக கேள்விக்கு பதிலையோ, பிழையைத் திருத்தியோ கொடுக்க வேண்டும். (சாதாரணமாக இது ஏழு நாட்கள்). கூடுதல் ஆவணம் அல்லது விளக்கம் கிடைத்த பின்னர் ஏழு பொதுவான வேலை நாட்களுக்குள்ளாக சம்பந்தப்பட்ட வரி அதிகார அமைப்பு பதில் கொடுக்க வேண்டும்.

கே.41 பதிவு மறுப்புக்கான நெறி முறை என்ன?

ப.41 பதிவு மறுக்கப்பட்டால், விண்னப்பதாரர் அப்படிப்பட்ட மறுப்புக்கான காரணத்தை ஒரு சுய விளக்க ஆனை மூலம் தெரிவிப்பார். அதிகார அமைப்பின் தீர்ப்புக்கு எதிராக விண்ணப்பதாரர் மேல் முறையீடு செய்யலாம். MGL பிரிவு 19 உப-பிரிவு (10)ன் கீழ் பதிவு ஆவணம் ஒரு அதிகார அமைப்பால் (CGST சட்டம்/SGST சட்டம் கீழ்) ஏதாவது காரணத்தால் மறுக்கப்பட்டால் அந்த பதிவு மறுப்பு மற்ற வரி அதிகார அமைப்பாலும் (CGST சட்டம்/SGST சட்டம் கீழ்) மறுக்கப்பட்டதாக்க் கருதப்படும்.

கே.42 விண்ணப்பம் பைசல் குறித்து தகவல் பரிமாற்றம் இருக்குமா?

ப.42 GST பொது தீர்வு மூலம் அவருடைய பதிவு விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதா நிராகரிக்கப்பட்டதா என்பது குறித்து விண்ணப்பதாரருக்கு மின்ன்ஞ்சல் அல்லது SMS மூலம் தகவல் தெரிவிக்கப்படும். அந்த நிலையில் விண்ணப்பதாரருக்கு வரி அதிகார வரம்பு விவரங்கள் தெரிவிக்கப்படும்.

கே.43 GSTN தீர்வு மூலம் பதிவு சான்றிதழ் பதிவிறக்கம் செய்ய இயலுமா?

ப.43 பதிவு ஏற்றுக் கொள்ளப்பட்டால், விண்ணப்பதாரர் GSTIN பொது வலை வாயில் (portal) தீர்வு மூலம் பதிவு சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

# 4. விநியோகம் என்பதன் பொருளும் வரம்பும்

கே.1 GSTன் கீழ் வரி விதிப்பதற்கான நிகழ்வு என்ன?

ப.1 வர்த்தகத்தின் போக்கிலோ அல்லது பெருக்கத்திலோ, சரக்கு அல்லது சேவை பதிலீடு பெற்று விநியோகிக்கப்பட்டால் GSTன் கீழான வரி விதிப்பு நிகழ்வு ஏற்பட்டதாகக் கொள்ளப்படும். தற்போதுள்ள மறைமுக வரி சட்டங்களின் கீழான வரி விதிப்பதற்கான நிகழ்வுகளான உற்பத்தி, விற்பனை அல்லது சேவைகள் அளித்தல் முதலியன வரி விதிப்பிற்கான இந்த நிகழ்வில் உள்ளடக்கப்பட்டு 'விநியோகம்' என அறியப்படும்.

கே.2 'விநியோகம்' என்பதன் பொருள் என்ன?

ப.2 'விநியோகம்' என்னும் சொல்லுக்கான பொருள் மிகவும் விசாலமானது. அது வர்த்தகத்தின் கதியில், பதிலீடு பெற்று செய்யப்படும் அல்லது செய்ய ஒப்புக் கொள்ளப்படும் அனைத்தையும் உள்ளடக்கும் அனைத்து வித சரக்குகள் விநியோகம் மற்றும்/அல்லது சேவைகளான விற்பனை, மாற்றல், பண்டமாற்று, பரிவர்த்தனை, உரிமம், வாடகை, குத்தகை அல்லது பைசல் செய்தல் அல்லது ஒப்புகொள்ளுதல் ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கும். அதில் சேவை இறக்குமதியும் அடங்கும். விநியோக வரம்பிற்குள் பரிசீலிக்கப்படாமல் செய்யப்பட்ட குறிப்பிட்ட பரிவர்த்தனைகளையும் மாதிரி GST சட்டம் சேர்த்துள்ளது.

கே.3 வரிசெலுத்துவதற்கான விநியோகம் என்பது என்ன?

ப.3 'வரி செலுத்துவதற்கான விநியோகம் என்பது GST சட்டத்தின் கீழ் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளுக்கு சரக்குகள் மற்றும் சேவைகளுக்கான வரி விதிப்புக்குட்பட்டது ஆகும்.

கே.4 MGLன் கீழ் உள்ள விநியோகம் என்பதில் எந்தெந்த வரையறைகள் அடங்கியுள்ளன?

ப.4 ஒரு பரிவர்த்தனை விநியோகம் என கொல்லபட கீழ்கண்ட வரையறைகள் அதனுள் அடங்கியிருக்க வேண்டும். அதாவது.

(i) சரக்குகள் விநியோகம் மற்றும்/அல்லது சேவைகள்

(ii) பதிலீடு பெற்று செய்யப்படும் விநியோகம்

(iii) வர்த்தகத்தை முன்னெடுத்துச் செல்லும் போக்கில் செய்யப்படும் விநியோகம்

(iv) வரிவிதிப்பு பிராந்தியத்தில் செய்யப்படும் விநியோகம்

(v) விநியோகம் என்பது வரிவிதிப்புக்கு உட்பட்ட விநியோகம்

(vi) விநியோகம் என்பது வரிவிதிப்புக்கு உட்பட்ட நபரால் செய்யப்படுவது

கே.5 மேற்கூறிய நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றோ அதற்கு மேலோ பரிவர்த்தனையில் முற்றுப்பெறாவிட்டாலும் GSTன் கீழ் அது விநியோகமாகவே கருதப்படுமா?

ப.5 ஆமாம். குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் அதாவது சேவைகளின் இறக்குமதி (பிரிவு 3(1)(b)) அல்லது MGL பட்டியல்-Iல் குறிப்பிடப்பட்டுள்ள வெகுமதி பெறாமல் செய்யப்பட்ட விநியோகங்கள் கேள்வி எண் 4ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள பதிலில் குறிப்பிடப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் திருப்திப்படுத்தா பொருட்டில் கூட GST சட்டத்தின் கீழ் அவைகள் விநியோகம் என்றே கருதப்படும்.

கே.6 சரக்குகளின் இறக்குமதி பிரிவு 3ன் கீழ் பட்டவர்த்தமாக குறிப்பில் இல்லை. ஏன்?

ப.6 இறக்குமதி சரக்குகள் சுங்கத்துறை சட்டம், 1962ன் கீழ் தனியாக்க் கூறப்பட்டிருக்கிறது. அதன்படி அடிப்படைத் சுங்கத் தீர்வை உடன் கூடுதலாக IGSTன் கீழ் கூடுதல் சுங்கத் தீர்வை விதிக்கப்படும்.

கே.7 சுய விநியோகங்களும் GSTன் கீழ் வரி விதிப்புக்கு உட்படுமா?

ப.7 மாநிலங்கள் தம்மில் தாமே கையிருப்பு மாற்றுதல் போன்ற விநியோகித்தல் வரிவிதிப்புக்கு உட்படும். ஏனென்றால் வரிவிதிப்புக்கு உட்பட்ட நபர் பட்டியல் 1(5)ன் கீழ் மாநிலங்கள் வாரியான பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிலீடு பெறாவிட்டாலும் அப்படிப்பட்ட பரிவர்த்தனை வரி விதிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இருந்த போதிலும் மாநிலத்துக்குள் தாமே விநியோகித்தல் வரிவிதிப்புக்கு உட்பட்டதல்ல.

கே.8 சரக்குகள் விநியோகம் என்பதை நிர்ணயிக்க சரக்குகள் மீதான உரிமை மாற்றம் மற்றும்/அல்லது உடைமை தேவையா?

ப.8 சரக்குகளின் விநியோகம் என்று கருத உரிமை மாற்ற மற்றும் உடைமை மாற்ற பரிவர்த்தனை செய்யப்பட்டிருக்க வேண்டும். உரிமை மாற்றப்படாவிட்டால், பரிவர்த்தனை பட்டியல் II (1)ன் கீழ் சேவை விநியோகம் எனக் கருதப்படும். சில

சந்தர்ப்பங்களில், அங்கீகாரத்தின் அடிப்படையிலான விற்பனை அல்லது தவணை முறை வாங்குதல் ஏற்பாட்டில் உடைமை மாற்றப்பட்டு உரிமை பின்வரும் வேறு ஒரு தேதியில் மாற்றப்படலாம். அப்படிப்பட்ட பரிவர்த்தனைகளும் சரக்குகள் விநியோகம் என அழைக்கப்படும்.

கே.9 வர்த்தகத்தை முன்னெடுக்கும் போக்கில் செய்யப்படும் விநியோகம் என்பதன் பொருள் என்ன?

ப.9 MGLன் வர்த்தகத்தை முன்னெடுக்கும் போக்கில் செய்யப்படும் செயல்பாடு குறித்து விளக்கமோ பரிசோதனையோ கொடுக்கப்படவில்லை. இருந்தபோதிலும், ஒரு விநியோகம் வர்த்தகத்தை முன்னெடுக்கும் போக்கில் செய்யப்படுகிறதா என்பது குறித்து தீர்ப்புக்கு வர கீழ்கண்ட வர்த்தக பரிசோதனை சாதாரணமாக உபயோகிக்கப்படுகிறது.

1. இந்த செயல்பாடு அக்கறையுடன் தீவிரமாக மேற்கொள்ளப்படும் செயலாக தொடரப்படுகிறதா?

2. இந்த செயல்பாடு உசிதமான முறையில் அல்லது அங்கீகரிக்கத் தக்க தொடர்ப்பாடு முறையில் தொடரப்படுகிறதா?

3. இந்த செயல்பாடு ஆணித்தரமாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கொள்கைகளின் அடிப்படையில் ஒழுங்கான முறையில் செயல்படுத்தப்படுகிறதா?

3. இந்த செயல்பாடு வரிவிதிப்புக்கு உட்பட்ட விநியோகத்தின் கீழ் பரிசீலிக்க/இலாப எண்ணத்துடன் மேம்படுத்தப்படுகிறதா?

இந்த பரிசோதனை அவ்வப்போது பரிசீலனைக்கு உட்பட்டு செய்யப்படும் விநியோகங்கள் GSTன் கீழ் உட்படாதிருப்பதை உறுதி செய்கிறது.

கே.10 ஒரு தனி நபர் சொந்த உபயோகத்துக்காக ஒரு கார் வாங்கி ஒரு வருடத்திற்குப் பின்னர் ஒரு கார் வியாபாரியிடம் விற்று விடுகிறார். MGLன் அடிப்படையில் இந்த பரிவர்த்தனை விநியோகமா? விடைக்குக் காரணங்கள் கூறுங்கள்.

ப.10 இல்லை. ஏனென்றால் இந்த விநியோகம் அவரால் வர்த்தக அபிவிருத்தியின் போக்கில் விநியோகம் செய்யப்படவில்லை. மேலும், அது வர்த்தக

உபயோகத்திற்கு அல்லாததால் அப்படிப்பட்ட காரை வாங்கும்பொழுது அதற்கு உள்ளீட்டு வரி வரவு அனுமதி இல்லை.

கே.11 ஒரு குளிர் சாதன வர்த்தகர் அவருடைய வீட்டிற்கு சொந்த உபயோகத்திற்கு அவருடைய வர்த்தகத்தில் உள்ள கையிருப்பிலிருந்து ஒரு குளிர் சாதனக் கருவியை மாற்றம் செய்கிறார். இந்த பரிவர்த்தனை விநியோகமாகக் கருதப்படுமா?

ப.11 ஆமாம். பட்டியல்-I (1)ன்படி வர்த்தக உடைமைகள் பதிலீடு இல்லாமல் ஒரு தனியார் அல்லது வர்த்தகம் அல்லாத உபயோகத்தின் பொருட்டு கொடுக்கப்படுவது விநியோகமாக்க் கருதப்படும்.

கே.12 ஒரு மன்றமோ, கழகமோ, சங்கமோ அதனுடைய உறுப்பினர்களுக்கு சேவையோ அல்லது பொருட்களோ அளித்தால் அது வி நியோகமாகக் கருதப்படுமா இல்லையா?

ப.12 ஆமாம். ஒரு மன்றமோ, கழகமோ, சங்கமோ அல்லது அவ்வாறான எந்த ஒரு அமைப்போ அதன் உறுப்பினர்களுக்கு வசதிகள் அளித்தால் அது விநியோகமாகக் கருதப்படும். MGL பிரிவு 2(17)ல் 'வர்த்தகம்' என்பதன் கீழ் விளக்கமாக இது சேர்க்கப்பட்டுள்ளது.

கே.13 மாநிலங்களுக்கு இடையிலான விநியோகங்கள் மற்றும் மாநிலத்துக்குள்ளான விநியோகங்கள் எவை?

ப.13 IGST சட்டம் பிரிவு 3 & 3Aல் மாநிலங்களுக்கு இடையிலான விநியோகங்கள் மற்றும் மாநிலத்துக்குள்ளான விநியோகங்கள் முறையே குறிப்பாக விளக்கப்பட்டுள்ளன. விரிவாக, விநியோகஸ்தரின் மாநிலமும் விநியோக மாநிலமும் ஒன்றாக இருந்தால் அது மாநிலத்துக்குள்ளான விநியோகங்கள். அது வெவ்வேறு மாநிலங்களாக இருந்தால் அவை மாநிலங்களுக்கு இடையிலான விநியோகங்கள்.

கே.14 சரக்குகளின் உபயோகத்துக்கான உரிமை மாற்றம் 'சரக்கு' விநியோகமாக அல்லது 'சேவை' விநியோகமாக கருதப்படுமா? ஏன்?

ப.14 சரக்குகள் உபயோகத்துக்கான உரிமை மாற்றம் 'சரக்கு' சேவை விநியோகமாகக் கருதப்படும். ஏனென்றால் அப்படிப்பட்ட விநியோகங்களில்

உடைமை மாற்றம் இல்லை. அப்படிப்பட்ட பரிவர்த்தனைகள் MGLன் பட்டியல்-IIல் 'சேவை' விநியோகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கே.15 பணி ஒப்பந்தங்கள் மற்றும் உணவுவகை சேவைகள் சரக்குகள் விநியோகமாகக் கருதப்படுமா, சேவைகள் வி நியோகமாகக் கருதப்படுமா? ஏன்?

ப.15 MGLன் பட்டியல்-IIன்படி பணி ஒப்பந்தங்கள் மற்றும் உணவுவகை சேவைகள் சேவைகள் விநியோகம் என குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

கே.16 தவணை முறை அடிப்படையில் சரக்குகள் விநியோகிக்கப்பட்டால் அது சரக்குகள் விநியோகமா அல்லது சேவை விநியோகமா? ஏன்?

ப.16 தவணை முறை அடிப்படையில் சரக்குகள் விநியோகிக்கப்பட்டால் அது சரக்குகள் விநியோகம். ஏனென்றால் அத்தகைய பரிவர்த்தனையில் எப்படியாயினும் உரிமை மாற்றம். உடைமை மாற்றம் பின்னர் வேறு ஒரு தேதியில் நடக்கும்.

# 5. விநியோக நேரம்

கே.1 விநியோக நேரம் என்றால் என்ன?

ப.1 சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தும் பொறுப்பு எழும் நேரம் நிர்ணயிக்கப்படுவது விநியோக நேரம் ஆகும். அது விநியோகம் எப்பொழுது செய்யப்பட்டது என்பதையும் குறிக்கிறது. மாதிரி சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் தனி விநியோக நேரம் அளித்திருக்கிறது.

கே.2 சரக்குகள் விநியோகத்துக்கு GSTன் வரிவிதிப்பு எப்போது எழும்?

ப.2 மாதிரி சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் பிரிவு 12ல் சரக்குகள் விநியோக நேரம் குறித்து கொடுக்கப்பட்டுள்ளது. கீழ்கண்டவற்றில் எது முதன்முதலில் நிகழ்கிறதோ அது சரக்குகள் விநியோகம் செய்யப்பட்ட நேரமாகக் கருதப்படும்.

(i) விநியோகிக்கப்பட உள்ள சரக்குகள் அகற்ற கூடியதாக இருப்பின் அது எந்த தேதியில் விநியோகஸ்தரால் அங்கிருந்து அகற்றபடுகிறதோ அந்த தேதி அல்லது

(ii) விநியோகிப்பதற்கான சரக்குகள் அகற்றபட வேண்டிய தேவை இல்லாதிருப்பின், எந்த தேதியில் சரக்குகள் தயாராக இருந்தனவோ அந்த தேதி அல்லது

(iii) மேற்கூறிய இரு நிலைகளும் பொருந்தாவிட்டால் விநியோகத்திற்காக விநியோகஸ்தர் எந்த தேதியில் விலைப்பட்டி கொடுத்தாரோ அந்த தேதி அல்லது

(iv) சரக்கைப் பெறுபவர் அவருடைய கணக்கு புத்தகத்தில் சரக்குகள் வரவை எந்த தேதியில் காண்பித்தாரோ அந்த தேதி.

கே.3 சரக்குகள் தொடர்ந்து விநியோகிக்கப்படவேண்டியதாக இருப்பின், விநியோக நேரம் எது?

ப.3 சரக்குகளின் தொடர் விநியோகங்களின் விநியோக நேரம் என்பது

a) எங்கு தொடர் கணக்கு விவரங்கள் அல்லது தொடர் பணம் பெறுவது நிகழ்கிறதோ, அப்படிப்பட்ட தொடர் விவரங்கள்/தொடர் பணம் பெறுவது எந்த காலவரைக்கானதோ அந்த காலவரையின் முடிவு தேதி

b) மற்றும் எங்கு தொடர் கணக்கு விவரங்கள் அல்லது தொடர் பணம் பெறுவது நிகழவில்லையோ அங்கு விலைப்பட்டி கொடுக்கும் தேதி அல்லது பணம் பெறும் தேதி இதில் எது முன்பு நடக்கிறதோ அதுவே விநியோக நேரம் ஆகும்.

கே.4 ஒப்புதல் அடிப்படையில் விநியோகிக்கப்படும் பொருட்களுக்கு விநியோக நேரம் என்ன?

ப.4 ஒப்புதல் அடிப்படையிலான விநியோகமாக இருந்தால், விநியோக நேரம் என்பது அந்த விநியோகம் நடைபெறுமா என்பது தெரியும் சமயம் அல்லது விநியோக தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள்ளாக, இதில் எது முன்பு நடக்கிறதோ அதுவாகும்.

கே.5 MGLன் பிரிவு 12ன் உப-பிரிவு 2, 3, 5 அல்லது 6ன் கீழோ அல்லது பிரிவு 13ன் கீழோ விநியோக காலத்தை வரையறுக்க இயலாவிட்டால் எவ்வாறு விநியோக காலம் வரையறுக்கப்படும்?

ப.5 பிரிவு 12(7) மற்றும் 13(7)ன் இதர வகை (residual entry)யில் கூறியுள்ளபடி காலக்கெடுவில் அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டியிருந்தால் அப்படிப்பட்ட அறிக்கை தாக்கல் செய்யப்படவேண்டிய தேதி விநியோக நேரம் ஆகும். மற்றபடி அது CGST/SGST/IGST செலுத்தும் தேதி ஆகும்.

கே.6 சேவைகளின் விநியோகத்தின் போது எப்பொழுது GST கட்ட வேண்டும்?

ப.6 சரக்குகள் போல் அல்லாது, சேவைகளுக்கு குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் சேவைகள் விநியோகத்திற்கு விலைப்பட்டி அளிக்கப்பட்டதா அல்லது அந்த குறிப்பிட்ட கால அவகாசம் தாண்டிய பின்னரா என்பதைப் பொறுத்து விநியோக நேரம் நிர்ணயிக்கப்படும்.

கே.7 குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் விலைப்பட்டி அளிக்கப்படாவிட்டால் சேவைக்கான விநியோக நேரம் என்ன?

ப.7 கீழே குறிப்பிடப்பட்டவற்றில் எது முன்னர் நிகழ்கிறதோ அதுவே அப்படிப்பட்ட சமயங்களில் விநியோக காலம் ஆகும்.

(i) சேவை அளிப்பது பூர்த்தியான தேதி அல்லது

(ii) தொகை பெற்றுக் கொண்ட தேதி

கே.8 விலைப்பட்டி குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்கப்பட்டு விட்டால் சேவைக்கான விநியோக நேரம் என்ன?

ப.8 கீழே குறிப்பிடப்பட்டவற்றில் எது முன்னர் நிகழ்கிறதோ அதுதான் விநியோக நேரம் ஆகும்.

(i) விலைப்பட்டி கொடுக்கப்பட்ட தேதி

(ii) தொகை பெற்றுக் கொண்ட தேதி. எது முன்னர் நிகழ்கிறதோ அதுதான் வினியோக நேரம் ஆகும்.

கே.9 "தொகை பெற்றுக் கொண்ட தேதி" என்பதன் பொருள் என்ன?

ப.9 வினியோகஸ்தரின் கணக்கு புத்தகங்களில் வரவு வைக்கப்பட்ட தேதி அல்லது தொகை அவருடைய வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட தேதி இதில் எது முன்னர் நிகழ்கிறதோ அதுவே தொகையைப் பெற்றுக் கொண்ட தேதி என்பதன் பொருளாகும்.

கே.10 விலைப்பட்டி கொடுக்காத சேவைகளில், தொகை செலுத்திய தேதியோ அல்லது சேவை அளிப்பது பூர்த்தி செய்த தேதியோ உறுதிபடத் தெரியாத பட்சத்தில், வினியோக நேரம் என்ன?

ப.10 சேவையை பெறுபவர் அவருடைய கணக்கு புத்தகங்களில் சேவைகள் பெற்றுக் கொண்டது குறித்துப் பதிவு செய்து கொள்ளும் தேதியே வினியோக நேரம் ஆகும்.

கே.11 பகுதி தொகையை முன்பணமாகக் கொடுத்தாலோ, அல்லது கொடுக்கப்பட்ட விலைப்பட்டி பகுதி தொகைக்காக இருந்தால், வினியோக நேரம் முழு வினியோகத்தையும் காட்டுமா?

ப.11 இல்லை. விலைப்பட்டியில் காணப்படும் அல்லது முன்பணத்துக்குண்டான வினியோகத்தின் பகுதி மாத்திரமே கணக்கிடப்படும்.

கே.12 சேவை பெறுபவர் நேர்மாறான வரிவிதிப்பு (reverse charge) கீழ் வரி செலுத்துவதில் சேவை வினியோகத்திற்கான நேரம் என்ன?

ப.12 கீழே குறிப்பிடப்பட்டவற்றில் எது முன்னர் நிகழ்கிறதோ அது வினியோக நேரம் ஆகும்.

a) சேவைகள் பெற்றுக் கொண்ட தேதி

b) தொகை அளித்த தேதி

c) விலைப்பட்டி பெறப்பட்ட தேதி

d) வினியோகஸ்தரின் கணக்கு புத்தகங்களில் பற்றுவரவு வைக்கப்பட்ட தேதி

கே.13 தொடர் சேவைகள் விநியோகத்தின் விநியோக நேரம் என்ன?

ப.13 தொகை பெறுவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட தேதியை ஒப்பந்தத்தின் மூலம் உறுதி செய்ய முடிந்தால் அந்தத் தேதி விநியோக நேரம் ஆகும். உறுதி செய்ய இயலாவிட்டால், தொகை பெறும் தேதி அல்லது விலைப்பட்டி கொடுத்த தேதி அல்லது ஒப்பந்தப்படி கொடுக்க வேண்டிய தொகை, நிகழ்வின் முடிவுடன் தொடர்பு கொண்டிருந்தால் நிகழ்வின் முடிவு ஆகும்.

கே.14 18 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்துக்கு வரி 1.6.2017 முதல் அதிகப்படுத்தப்பட்டது என்று வைத்துக் கொள்வோம். சேவைகள் கொடுத்து விலைப்பட்டியும் ஏப்ரல் 2017ல் கொடுத்த் பின்னர், ஜூன் 2017ல் விகிதம் மாறிய பின்னர் தொகை கிடைத்தால் வரி விகிதம் எவ்வாறு கணக்கிடப்படும்?

ப.14 01.06.2017க்கு முன்பாக சேவைகள் அளிக்கப்பட்டதால் பழைய 18 சதவீதப்படி வரி கணக்கிடப்படும்.

## 6. GSTல் மதிப்பீடு

கே.1 GST வரி விதிக்க, விநியோக மதிப்பாக என்ன தொகையை கடைபிடிக்கப் வேண்டும்?

ப.1 வரி விதிக்கத் தக்க சரக்குகள் மற்றும் சேவைகளின் மதிப்பு சாதாரணமாக ‘பரிவர்த்தனை மதிப்பு’ ஆகும். அத்தகைய பரிவர்த்தனை விலையைத் தவிர வேறு எந்த பதிலினையும் பெறாத இரு தொடர்பற்ற சாராரிடையே நடக்கும் பரிவர்த்தனையில் உள்ளபடியே செலுத்தும் அல்லது செலுத்தத்தக்க விலை பரிவர்த்தனை மதிப்பு வளையத்தில் பல சேர்க்கைகளும் விலக்கல்களும் இருக்கும் என்று MGL விளக்குகிறது. உதாரணமாக, பரிவர்த்தனை மதிப்பபில் திரும்பப் பெறத்தக்க வைப்புத் தொகை, விலைப்பட்டி விநியோக சமயத்திலோ அதற்கு முன்போ வழங்கிய தள்ளுபடி அடங்காது.

கே.2 பரிவர்த்தனை மதிப்பு என்றால் என்ன?

ப.2 பரிவர்த்தனை மதிப்பு என்பது சரக்குகள் விநியோகம் மற்றும்/அல்லது சேவைகளுக்கு உள்ளபடி செலுத்தப்பட்ட அல்லது செலுத்தத் தக்க விலை. அது விநியோகஸ்தர் மற்றும் பெறுபவர் உள்ளபடியே செலுத்தப்படும் அல்லது செலுத்தப்படக் கூடிய விலை. தவிர வேறு தொடர்பற்றவர்களாக இருக்கும் பட்சத்தில் அவ்வாறு செலுத்தப்படும் விலையாகும். இதில் விநியோகிப்பவரின் பொறுப்பில் செலுத்தப்பட்டு விநியோகத்தைப் பெறுபவரால் ஏற்கப்படும் செலவுகளும் அடங்கும்.

கே.3 சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு CGST, SGST மற்றும் IGSTக்கு மதிப்பீட்டிற்கு தனித்தனி விதிகள் உள்ளனவா?

ப.3 இல்லை. அனைத்து மூன்று வரிகளுக்கும் பிரிவு 15 பொதுவானது மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கும் பொதுவானது.

கே.4 விநியோகத்தின் மதிப்பீட்டைத் தீர்மானிக்க ஒப்பந்த விலை போதுமானதா?

ப.4 ஒப்பந்த விலை என்பது மிகக் குறிப்பாக ‘பரிவர்த்தனை மதிப்பை’க் குறிக்கிறது என்பதால் வரியைக் கணக்கிடுவதற்கு அதையே அடிப்படையாகக் கொள்ளவேண்டும. என்றாலும், விற்பவருக்கும் வாங்குபவருக்கும் இடையே உள்ள உறவு மற்றும் விநியோகமாகக் கருதப்படும் விலையில்லா சில பரிவர்த்தனைகள்

ஆகிய காரணிகளால் விலையில் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அக்காரணிகளை கணக்கில் எடுத்துக் கொண்டு விலை நிர்ணயிக்கப்படும்.

கே.5 அனைத்து நேரங்களிலும் மதிப்பீடு விதிமுறைகள் குறிப்பிட வேண்டுமா?

ப.5 இல்லை. பிரிவு 15(4)ன் கீழ் பட்டியலிடப்பட்டவைகளுக்கு மாத்திரம் தான். அதாவது, விநியோகத்திற்கான செலுத்த வேண்டியது பதிலீடு பணமாக இல்லாதிருத்தல் அல்லது பரிவர்த்தனை ஒரு குழுக்குள் தொடர்புடையதாக இருந்தல் போன்றவை மாத்திரம் தான் பதிப்பீடு விதிமுறைகள் அமலாக்க படவேண்டிய நேரங்களாகும்.

கே.6 ஒரு பரிவர்த்தனை பிரிவு 15(4)ன் கீழ் வராவிட்டாலும் சில காரணங்களால் மதிப்பு பாதிக்கப்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

ப.6 பரிவர்த்தனை விலை வரி செலுத்துவரர்கான மதிப்பீடாக ஏற்றுக்கொள்ள அதை தக்க காரணங்களுக்காக ஈடு செய்ய பிரிவு 15(2) ஒரு பட்டுயலை அளிக்கிறது.

கே.7 பிரிவு 15(1)ன் கீழ் அறிவிக்கப்பட்ட பரிவர்த்தனை மதிப்பை ஏற்றுக் கொள்ளலாமா?

ப.7 ஆமாம். பிரிவு 15(2)ன்படி சரிசெய்யப்பட்டவற்றை பரிசோதித்த பின்னர் ஏற்றுக் கொள்ளலாம். மேலும், விநியோகஸ்தரும் பெறுபவரும் தொடர்புள்ளவர்களாக இருந்தாலும், அந்த்த் தொடர்பு மதிப்பை பாதிக்காமல் இருந்தால் பரிவர்த்தனை மதிப்பை ஏற்றுக் கொள்ளலாம். (வரைவு GST மதிப்பீடு விதிமுறைகளின் விதிமுறை 3(4).)

கே.8 பரிவர்த்தனை மதிப்பில், விநியோகத்திற்குப் பின்னான தள்ளுபடிகள் அல்லது ஊக்கத் தொகைகள் சேர்க்கப்படுமா?

ப.8 ஆமாம். ஒப்பந்தப்படி விநியோகத்திற்குப் பின்னால் தரப்படும் தள்ளுபடிகள் வி நியோகசமயத்திலோ அல்லது அதற்கு முன்போ அறிவிக்கப்பட்டு விலைப்பட்டுயுடன் தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும்.

கே.9 விநியோகத்திற்கு முன்பான தள்ளுபடிகள் வழங்கல் நேரத்தின்போதோ (அ) அதற்கு முன்போ அனுமதிக்கப்படுமா அல்லது விநியோக சமயத்தில் பரிவர்த்தனை மதிப்பில் சேர்க்கப்படுமா?

ப.9 இல்லை. பொதுவான வர்த்தக நடைமுறையில் அனுமதிக்கப்பட்டு விலைப்பட்டியில் பதிவு செய்யப்பட்டால் அனுமதிக்கப்படும்

கே.10 எப்போது மதிப்பீடு விதிகள் பொருந்தும்?

ப.10 மதிப்பீடு விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள தருணங்களில் பொருந்தும்

(i) பதிலீடு பண அடிப்படையில் இல்லாதிருந்தால்

(ii) குழுக்கள் தம்மில் தொடர்பு கொண்டிருந்தால் அல்லது குறிப்பிட்ட வகை விநியோகஸ்தரால் விநியோகிக்கப்பட்டால்

(iii) அறிவிக்கப்பட்ட பரிவர்த்தனை மதிப்பு நம்பத்தகாததாக இல்லாதிருந்தால்

கே.11 அறிவிக்கப்பட்ட பரிவர்த்தனை மதிப்பை சந்தேகிப்பதற்கான காரணங்கள் என்ன?

ப.11 வரைவு GST மதிப்பீடு விதிமுறைகள் விதிமுறை 7(b)ல் காரணங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவை

(i) ஒப்பு நோக்கத்தக்க விநியோகங்கள் குறிப்பிட்த்தக்க அளவு அதிக விலையில் இருப்பது

(ii) விநியோகங்களின் சந்தை மதிப்பை விட பரிவர்த்தனை குறிப்பிடத்தக்க வகையில் குறைவு அல்லது அதிகம்

(iii) விவரம், அளவு, தரம் மற்றும் தயாரிப்பு வருடம் முதலிய அளவைகள் குறித்த தவறான முன் அறிவிப்பு

இந்த பட்டியல் முற்று முழுதானது அல்ல; ஒரு வழிகாட்டியே.

கே.12 வரைவு GST மதிப்பீடு விதிமுறைகளின்படி மதிப்பை அறுதியிட என்னென்ன வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

ப.12 பரிவர்த்தனை மதிப்பைத் தீர்மானிக்க GST பரிமாற்ற விதிமுறைகளின் கீழ் மூன்று வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அதாவது ஒப்பிடும் வழிமுறை, கணக்கீடு முறை மற்றும் எஞ்சிய முறை ஆகியவை. அவைகள் வரிசையாகக் கடைபிடிக்கப்பட வேண்டும். தவிர ப்யூர் ஏஜண்ட் மற்றும் பண பரிமாற்றம்

செய்பவர்கள் செய்வது போல சில முக்கிய மறு ஆய்வு முறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் காப்பீட்டாளர், விமான பிரயாண முகவர் மற்றும் விநியோகஸ்தர் அல்லது லாட்டரி விற்பனை முகவர்களுக்கு குறிப்பிட்ட விதிமுறைகள் பின்னர் அறிவிக்கப்படலாம்.

கே.13 பரிவர்த்தனை மதிப்பைக் கூட்ட பிரிவு 15(2)ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளில் எவைகளை சேர்க்க வேண்டும்?

ப.13 பிரிவு 15(2)ல் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்கண்ட சேர்க்கைகளை பரிமாற்ற மதிப்பில் சேர்க்க வேண்டும்.

a) விநியோகஸ்தர் செலுத்தவேண்டிய பொறுப்பில் தொகையை, பெறுபவர் செலுத்தியிருந்தால் அந்தத் தொகை

b) பெறுபவர் சரக்குகளையோ சேவையையோ இலவசமாகவோ சலுகையிலோ கொடுத்தால் அதற்கான தொகை மதிப்பு

c) விநியோகத்தின் நிபந்தனைப்படி பெறுபவர் உரிமைபங்கு மற்றும் உரிமக் கட்டணங்களின் தொகை

d) வேறு பிற சட்டங்களின் மூலம் விதிக்கப்பட்ட வரிகள் (SGST/CGST அல்லது IGST அல்லாது)

e) தனியாக வசூலிக்கப்படும் விநியோகஸ்தருக்கு ஏற்பட்ட செலவுகள்

(f) விநியோகஸ்தரால் விநியோகத்தின் பெயரில் பெறப்பட்ட மானியம்

(g) விநியோகஸ்தரால திரும்பப் பெறுவதற்கு உரிமை கோருதல்

(h) முன்பே தெரிந்த தள்ளுபடிகள் நீங்கலாக விநியோகம் செய்யப்பட்ட பின்னர் விநியோகத்திற்கு அளித்த தள்ளுபடி (ஒரு சாதாரண வர்த்தக நடைமுறைப்படி தள்ளுபடி அனுமதித்து விலைப்படியில் காண்பிக்கப்பட்ட தள்ளுபடி தொகை சேர்க்கப்படாது)

# 7. GSTபடி வரி செலுத்துதல்

கே.1 GST செயல்பாட்டில் என்னென்ன வரிகள் செலுத்த வேண்டும்?

ப.1 GSTன் கீழ் மாநிலத்திற்குள் விநியோகம் செய்தால், செலுத்தப்பட வேண்டிய வரி மத்திய GST (CGST, மத்திய அரசாங்க கணக்கில் சேரும்) மற்றும் மாநில GST (SGST, சம்பந்தப்பட்ட மாநில அரசாங்க கணக்கில் சேரும்). மாநிலங்களிடையே விநியோகம் செய்தால், செலுத்த வேண்டிய வரி ஒருங்கிணைந்த GST (IGST). அதில் CGST மற்றும் SGST கூறுபாடுகள் இரண்டும் இருக்கும். அதனுடன் குறிப்பிட்ட வகையிலான பதிவு செய்யப்பட்ட நபர்கள் அரசாங்க கணக்கில் பதிலீடு மேல் பிடிக்கப்பட்ட வரி (TDS) மற்றும் பதிலீடு மேல் சேகரிக்கப்பட்ட வரி (TCS) செலுத்த வேண்டும். மேலும் அமலாகும் இடங்களில் வட்டி, அபராதம், கட்டணம் மற்றும் பிற தொகைகளும் செலுத்த வேண்டும்.

கே.2 யார் GST செலுத்தும் பொறுப்புடையவர்?

ப.2 பொதுவாக, சரக்குகள் அல்லது சேவைகள் விநியோகிப்பவர் GST செலுத்தும் பொறுப்புடையவர் ஆவார். இருந்தபோதிலும், குறிப்பிட்ட சமயங்களில் அதாவது இறக்குமதிகள் மற்றும் பிற குறிப்பிடப்பட்ட விநியோகங்களில் பெறுபவர் மேலும் நேர்மாறான வரிவிதிப்பு மூலம் வரிசெலுத்தும் பொறுப்பு உண்டு. மேலும் சில சமயங்களில், மூன்றாம் நபர் மீதும் பொறுப்பு வரும். (மின்-வர்த்தகம் நடத்துபவர் TCS செலுத்த வேண்டிய பொறுப்பில் இருக்கிறார் மற்றும் அரசு இலாகா TDS செலுத்தும் பொறுப்பில் இருக்கிறது)

கே.3 வரி செலுத்தும் நபர் எப்போது GST செலுத்த வேண்டும்?

ப.3 பிரிவு 12ல் விளக்கப்பட்டுள்ளது போல் சரக்குகள் விநியோக சமயத்தில் மற்றும் பிரிவு 13ல் விளக்கப்பட்டுள்ளது போல் சேவைகள் விநியோக சமயத்தில் செலுத்த வேண்டும். பொதுவாக கீழ் கண்டுள்ள மூன்று நிகழ்வுகளில் முன்பாக நடக்கும் நிகழ்வுகளை வைத்தே வரி எப்பொழுது செலுத்த வேண்டும் என்பது தீர்மானமாகும். செலுத்த வேண்டிய நேரம் என்பது தொகை பெறும்போது, விலைப்பட்டி கொடுக்கும்போது அல்லது விநியோகம் முடிவுக்கு வரும்போது ஆகிய மூன்று நிகழ்வுகளில் எது முன்னதோ அது. மேலே கூறப்பட்ட பிரிவுகள்

வெவ்வேறு சூழ்நிலைகளையும் அவற்றுக்கான வரி செலுத்த வேண்டிய நேரங்களையும் விளக்குகின்றன.

கே.4 GST செலுத்துதல் வழிமுறைகளில் முக்கிய அம்சங்கள் என்ன?

ப.4 உத்தேசிக்கப்பட்டுள்ள GST செயல்பாட்டில், செலுத்துதல் வழிமுறைகளில் கீழ்கண்ட அம்சங்கள் இருக்கும்.

* இணையதளத்திலிருந்து உருவாக்கம் செய்யப்பட்ட சலான் மூலம் GSTன் பொது வலைவாசல் (common portal) மூலம் தயாரிக்கப்பட்ட மின் தயாரிப்பு சலான் மூலம் எல்லாவிதத்திலும் பணம் செலுத்தலாம். ஆனால் கையால் தயாரிக்கப்பட்ட சலானுக்கு இடமில்லை.

* வரி செலுத்துபவருக்கு அசௌகரியம் இல்லாமல் எப்போதும், எங்கும் வரி செலுத்தும் வசதி அளித்தல்

* இணையதளம் மூலமாக செலுத்தும் வசதி

* மின் வடிவத்தில் முறைப்படி வரி வசூலிப்பு தகவல்

* அரசாங்க கணக்கில் விரைவான முறையில் வரி செலுத்துதல்

* காகிதம் இல்லா பரிமாற்றங்கள்

* விரைவில் கணக்கு பார்த்தல் மற்றும் தெரிவித்தல்

* அனைத்து செலுத்தும் விவரங்களும் மின் சரிபார்ப்பு

* வங்கிகளுக்கு சரளமான முறை

* மின் சலான்களின் விவரம் ஒரே கிடங்கில் அமையபெரல்

கே.5 வரி எவ்வாறு செலுத்தலாம்?

ப.5 கீழ்கண்ட முறைகளில் வரி செலுத்தலாம்

(i) பொது வலைவாசலில் பராமரிக்கப்படும் வரி செலுத்துபவரின் பதிவேட்டில் பற்றுவரவு குறிப்பிடுதல் - வரி மாத்திரமே செலுத்தலாம். வலைவாசல் பதிவேட்டில் வட்டி, அபராதம் மற்றும் கட்டணங்கள் பற்றுவரவு குறிப்பிட இயலாது. வரி செலுத்துபவர்கள் மூலப்பொருள்களில் செலுத்தும் உள்ளீட்டு வரியை வரவு வைத்துக் கொள்ளலாம். அதையே வெளியீட்டு வரி செலுத்த உபயோகித்துக் கொள்ளலாம். இருந்த போதிலும், மூலப்பொருள்களில் செலுத்தப்பட்ட CGST வரி வரவை SGST செலுத்த உபயோகிக்க இயலாது.

அதேபோல் SGST உள்ளீட்டு வரி வரவை CGST செலுத்த உபயோகிக்க இயலாது. IGSTன் வரவை IGST, CGST மற்றும் SGST என்ற வரிசையில் செலுத்த உபயோகிக்கலாம்.

(ii) பொது வலைவாசலில் வரி செலுத்துபவர் பணம் செலுத்தி பராமரிக்கும் ரொக்கப் பதிவேட்டில் பற்றுவரவு வைக்கலாம். பல்வேறு வகைகளில் பணத்தை பணப் பதிவேட்டில் செலுத்தலாம். அதாவது மின்-செலுத்துதல் (இணையதள வங்கிக் கணக்கு, கடன் அட்டை (கிரெடிட் கார்டு), பற்று அட்டை (டெபிட் கார்டு), உடனுக்குடன் முழுப் பைசல் (RTGS)/தேசீய மின் பண மாற்றம் (NEFT), GSTல் செலுத்துதலை ஏற்கும். மேலும் பணத்தை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் கிளைகளில் செலுத்தலாம்.

கே.6 விநியோகஸ்தர் எப்போது வரிகள் செலுத்த வேண்டும்?

ப.6 சாதாரண வரி செலுத்துபவர் மாதாந்தர அடிப்படையில் வரி செலுத்த வேண்டிய மாத்ததைத் தொடரும் அடுத்த மாதத்தின் இருபதாம் தேதிக்குள் செலுத்த வேண்டும். பணம் செலுத்துதல் முதலில் பணப் பதிவேட்டில் செலுத்த வேண்டும். வரி செலுத்துபவர் மாதாந்தர அறிக்கையைத் தாக்கல் செய்யும்போது பணம் செலுத்தும் பதிவேட்டில் பற்றுவரவு வைக்க வேண்டும். அந்த சம்பந்தப்பட்ட பற்றுவரவு எண்ணை அவருடைய விவரப்பட்டியில் காண்பிக்க வேண்டும். முன்பே குறிப்பிட்டபடி, கடன் பதிவேட்டிலிருந்தும் செலுத்துதல் பற்றுவரவு வைக்கலாம். மார்ச் மாத வரிகள் ஏப்ரல் 20க்குள் செலுத்த வேண்டும். தொகுப்பு வரி செலுத்துபவர் காலாண்டு அடிப்படையில் வரியை செலுத்த வேண்டும். செலுத்தும் நேரம் 0000 மணிமுதல் 2000 மணிவரை.

கே.7 வரி செலுத்த கால அவகாசத்தை அதிகரிக்கலாமா அல்லது மாதாந்தர தவணைகளில் செலுத்தலாமா?

ப.7 முடியாது. தானாகவே தன்னுடைய வரி அளவை நிர்ணயிக்கும் பட்சத்தில் இதற்கு அனுமதி இல்லை. பிற வகையினருக்கு MGL பிரிவு 55ன் கீழ் பொருப்புக்குறிய உரிய அதிகாரிக்கு கால அவகாசத்தை அதிகரிக்கவும் தவணை முறைகளில் செலுத்த அனுமதிக்கவும் அதிகாரம் உண்டு.

கே.8 வரி செலுத்தும் நபர் வரி விவரப்பட்டி தாக்கல் செய்து வரி செலுத்தாமல் இருந்தால் என்ன ஆகும்?

ப.8 அம்மாதிரியான சமயங்களில் அந்த வரி விவரப்பட்டி செல்லத்தக்கதாக கருதப்படாது. MGL பிரிவு 27(3)ன் கீழ் கொடுத்துள்ளபடி ஒரு வரி செலுத்துபவர் சமர்ப்பிக்கும் வரி விவரப்பட்டி அந்த குறிப்பிடப்பட்ட அறிக்கையின்படி வரி முழுவதுமாக செலுத்தப்படாவிட்டால் அது செல்லத்தக்க அறிக்கையாகக் கருதப்படாது. சரக்கு மற்றும் சேவை பெறுபவருக்கு உள்ளீட்டு வரி வரவு (ITC) அனுமதிக்க செல்லத்தக்க வரி விவரப்பட்டி மட்டுமே பயன்படும். அதாவது, விநியோகஸ்தர் தனி நபர் தானாகவே அறுதியிட்டு வரி செலுத்தி அவருடைய வரி விவரப்பட்டியை தாக்கல் செய்தும் பெறுபவர் வரி விவரப்பட்டி தாக்கல் செய்யாவிட்டால் பெறுபவரின் ITC உறுதி செய்யப்படாது. பிரிவு 28ன் கீழ், ஒரு வரி செலுத்துபவர் அவருடைய செல்லத்தக்க வரி விவரப்பட்டியை சமர்ப்பித்து வருவாய்க் கணக்கு அறுதியீட்டுபடி வரி பொறுப்பை நிறைவேற்றும் வரை அப்படிப்பட்ட பற்றுவரவை உபயோகிக்க அனுமதி இல்லை.

கே.9 வரி பாக்கியை செலுத்தும் தேதி என்று எந்த தேதி கருதப்படும் - காசோலை கொடுக்கும் தேதி அல்லது பணம் செலுத்தும் தேதி அல்லது அரசாங்க கணக்கில் தொகை பற்றுவரவு வைக்கும் தேதி?

ப.9 அரசாங்க கணக்கில் தொகை பற்றுவரவு வைக்கும் தேதி

கே.10 மின்-கணக்குப் புத்தகம் என்றால் என்ன?

ப.10 ஒவ்வொரு பதிவு பெற்ற வரி செலுத்துபவரின் ரொக்க வரவு மற்றும் உள்ளீட்டு வரி வரவு ஆகியவற்றின் அறிக்கை மின்-கணக்குப் புத்தகம் ஆகும். மேலும், ஒவ்வொரு வரி செலுத்துபவருக்கும் வரி பொருப்பைக்காட்டும் பதிவேடு இருக்கும். ஒரு வரி செலுத்துபவர் வலைவழியில் (GSTN) பதிவு செய்து கொண்டால், மின்-கணக்குப் புத்தகம் (பணம் & உள்ளீட்டு வரி வரவு) மற்றும் ஒரு வரி பொருப்பு பதிவேடு தாமாகவே திறக்கும் மற்றும் அது அவருடைய கணினி முகப்புபெட்டியில் (டாஷ்போர்டில்) எப்போதும் தெரியும்.

கே.11 வரிப் பொறுப்புப் பதிவேடு என்றால் என்ன?

ப.11 குறிப்பிட்ட மாதத்தில் ஒரு வரி செலுத்துபவரின் மொத்த வரிப் பொறுப்பைக் காட்டுவது வரிப் பொறுப்புப் பதிவேடு ஆகும்.

கே.12 ரொக்கக் கணக்குப் பேரேடு என்றால் என்ன?

ப.12 பணமாகச் செலுத்தப்பட்ட அனைத்தையும் மற்றும் வரி செலுத்துபவர் TDS/TCS செலுத்திய கணக்கைக் காண்பிப்பது பணக் கணக்குப் பேரேடு. உடனுக்குடனான கால அடிப்படையில் தகவல் காட்டப்படும். GSTன் பொருட்டு எந்த பணம் செலுத்துவதற்கும் இந்த ரொக்கக் கணக்குப் பேரேட்டை உபயோகிக்கலாம்.

கே.13 ITC பேரேடு என்றால் என்ன?

ப.13 ITC பேரேட்டில் மாதாந்தர வரி விவரப்பட்டியில் அறுதியீடு செய்யப்பட்ட உள்ளீட்டு வரி வரவு காட்டப்படும். இந்த பேரேட்டில் உள்ள வரவை வரி செலுத்த மாத்திரமே உபயோகிக்கலாம். பிற வட்டி, அபராதம், கட்டணங்கள் முதலிய தொகை செலுத்துவதற்கு அல்ல.

கே.14 GSTN மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளுக்கும் இடையிலான தொடர்பு என்ன?

ப.14 நேர இழப்பு இல்லாமல் செயல்படும் இருவழி பிணைப்பு உண்மையிலேயே GSTN மற்றும் வங்கியின் கோர் பேங்கிங் சர்வீஸ் மத்திய பகுதி வங்கித் தீர்வு (CBS) ஆகியவற்றுக்கு இடையில் தொடர்புகள் உள்ளன. CPIN தாமாகவே வங்கியுடன் மின் தொடர்பு மூலம் சரிபார்த்து பணம் பெற்றுக் கொண்டு வங்கி தாமாகவே சலான் அடையாள எண் (CIN) மூலம் பொது வலைவாசலுக்கு பணம் பெற்றுக் கொண்டதை உறுதி செய்யும். எந்த செயல்பாட்டிலும் கையால் வங்கி காசாளர் அல்லது பணம் கொடுப்பவர் அல்லது வரி செலுத்துபவர் உட்பட யாரும் கையால குறுக்கீடு செய்ய இயலாது.

கே.15 ஒரு வரி செலுத்துபவர் பல அமர்வுகளில் சலானைத் தயாரிக்கலாமா?

ப.15 ஆமாம். சலானின் ஒரு பகுதியை ஒரு வரி செலுத்துபவர் பூர்த்தி செய்யலாம். பின்னர் முழுவதுமாக பூர்த்தி செய்வதற்கு அதை தற்காலிகமாக

“பாதுகாப்பு” செய்யலாம். அப்படி “பாதுகாப்பு” செய்யப்பட்ட சலான் இறுதியாவதற்கு முன்னால் திருத்தியமைக்கலாம். வரி செலுத்துபவர் சலானைத் திருத்தியமைத்த பின்னர் வரிகளை செலுத்துவதற்கு அவர் சலானைத் தயாரிப்பார். செலுத்துபவர் அவருடைய ஆவணமாக வைத்திருக்க சலானை அச்சிடலாம்.

கே.16 இணையதளத்தில் தயாரிக்கப்பட்ட சலானைத் திருத்தியமைக்க இயலுமா?

ப.16 முடியாது. சலான் தயாரிப்பதற்காக GSTN மூலத்தில் நுழைந்த பின்னர், வரி செலுத்துபவர் அல்லது அவருடைய அங்கீகரிக்கப்பட்ட நபர் பணம் செலுத்தும் விவரங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். பாதி பூர்த்தி செய்யும் பொழுது பின்னர் திருத்தியமைக்க பாதுகாப்பு செய்யலாம். இருந்தபோதிலும் ஒரு முறை சலான் திருத்தியமைக்கப்பட்டு CPIN தயாரிக்கப்பட்டு விட்டால் அதில் வரி செலுத்துபவர் எந்த மாற்றங்களும் செய்ய இயலாது.

கே.17 சலானுக்கு செல்லத் தக்க காலம் உண்டா?

ப.17 ஆமாம். ஒரு சலான் அது தயாரிக்கப்பட்டு 15 நாட்கள் வரை செல்லுபடியாகும். அதன் பின்னர் அது கணினியிலிருந்து களையெடுப்பு செய்யபட்டுவிடும். இருந்த போதிலும், அவருடைய சௌகரியப்படி வரி செலுத்துபவர் வேறு சலான் தயாரிக்கலாம்.

கே.18 CPIN என்றால் என்ன?

ப.18 CPIN என்றால் சலான் தயாரிக்கப்படும்போது கொடுக்கப்படும் பொது வலைவழியின் அடையாள எண் (CPIN) ஆகும். சலானை அடையாளம் காணும் விதத்தில் அதற்கு 14 இலக்க தனிப்பட்ட எண் உண்டு. மேலே குறிப்பிட்டுள்ளபடி, CPIN 15 நாட்கள் வரை செல்லத்தக்கதாகும்.

கே.19 CIN என்றால் என்ன மற்றும் அதனின் சம்பந்தம் உள்ளது?

ப.19 CIN என்றால் சலான் அடையாள எண். அதில் 17 இலக்கங்கள் இருக்கும் அதாவது 14 இலக்க CPIN அத்துடன் 3 இலக்க வங்கி குறியீடு. CIN என்பது அப்படிப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் அல்லது RBI மூலம் உள்ளபடி பெறப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வங்கி/இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மூலம் தயாரிக்கப்பட்டு அவர்களிடம் உள்ள சம்பந்தப்பட்ட அரசாங்கக் கணக்குகளில் பற்றுவரவு வைக்கப்படுகிறது. பணம் பெறப்பட்டு உரிய அரசாங்க்க் கணக்கில்

செலுத்தப்பட்டது என்பதற்கான தகவல் ஆகும். CINஐ அங்கீகரிக்கப்பட்ட வங்கி வரி செலுத்துபவர் மற்றும் GSTN இருவருக்கும் தெரிவிக்கிறது.

கே.20 வரி செலுத்துபவருக்கு சென்ற மாத வரி பாக்கி இருந்தால், வரி செலுத்தும் முறைமை என்ன?

ப.20 வரி செலுத்துபவருக்கு இந்த மாத வரி விவரப்பட்டி அல்லது வரி பாக்கி இருந்தால் செலுத்தும் முறைமை குறித்து பிரிவு 35(8)ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சமயத்தில், கீழ்க்கண்ட முறையில் செலுத்த வேண்டும். முதலில் முநதைய மாத சுய வரி கணக்கீட்டு செய்த வரி அறுதியீடு மற்றும் வட்டி, அதன்பின்னர் தற்போதைய கால கணக்குபடி வரி அறுதியீடு மற்றும் வட்டி, அதன் பின்னர் வேறு செலுத்த வேண்டிய தொகை மற்றும் பிரிவு 51ன் கீழ் ஏதாவது உறுதிப்படுத்தப்பட்ட வரி ஆணைகள். இந்த முறைமை கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்.

கே.21 E-FPB என்றால் என்ன?

ப.21 E.FPB என்பது மின் மைய குறிப்பிட்ட கிளை (போக்கால் பாயினிட் பிரான்ச்). GSTக்கு எதிராக தொகை பெறும் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் கிளைகள் ஆகும். ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட வங்கியும் இந்தியா முழுமைக்கும் (பான் இந்திய) பரிமாற்றங்களுக்கு ஒரு கிளையைத்தான் அதன் E.FPB ஆக நியமிக்க வேண்டும். அனைத்து அரசாங்க கணக்குகளுக்கும் ஒவ்வொரு முக்கிய தலைப்பில் கணக்கு தொடங்க வேண்டும். மொத்தம் 38 கணக்குகள் (CGST, IGST ஒவ்வொன்றுக்கும் ஒன்று, ஒவ்வொரு மாநில/யூனியன் பிரதேச அரசாங்கத்தின் SGSTக்கும் ஒன்று தொடங்க வேண்டும்) அப்படிப்பட்ட E.FPBல் GSTக்கு எதிராக கிடைக்கும் தொகைகள் உரிய கணக்கில் E.FPB பற்றுவரவு வைக்க வேண்டும். NEFT/RTGS பரிமாற்றங்களுக்கு, RBI ஒரு E.FPB ஆக செயல்படும்.

கே.22 TDS என்றால் என்ன?

ப.22 TDS என்றால் பதிலீடு மேல் பிடிக்கப்பட்ட வரி (TDS). பிரிவு 37ன்படி, இந்த நிபந்தனை அரசாங்கம், அரசாங்கம் சார்ந்த அமைப்பு மற்றும் பிற அறிவிக்கப்பட்ட நிரந்தமற்ற அமைப்புகள் ரூபாய் 10 இலட்சத்திற்கும் அதிகமாக ஒப்பந்த அடிப்படையிலான தொகைகள் விநியோகஸ்தர்களுக்குக் கொடுப்பவர்கள்.

அப்படிப்பட்ட தொகை வழங்கும்போது, சம்பந்தப்பட்ட அரசாங்கம்/அதிகார அமைப்பு மொத்தமாக கொடுக்கப்படும் தொகையில் 1% கழித்துக் கொண்டு அதை உரிய GST கணக்கில் செலுத்துவார்கள்.

கே.23 வினியோகஸ்தரால் அப்படிப்பட்ட TDS எப்படிக் வரி விவரபட்டியல் கணக்கிடப்படும்?

ப.23 TDS ஆக பிடித்தம் செய்யப்பைட்ட தொகை வினியோகஸ்தரின் மின் ரொக்கக் கணக்கு பேரேட்டில் பிர்திபலிக்கப்படும். அந்த தொகையை அவர் தனது வரி, வட்டி, கட்டணம் ஆகியவற்றுக்கு உபயோகப்படுத்தலாம்.

கே.24 TDS பிடித்தம் செய்தவர் எவ்வாறு அந்த TDSஐ கணக்கில் காட்டுவார்?

ப.24 TDS பிடித்தம் செய்பவர் அப்படிப்பட்ட TDSஐ கீழ்கண்ட வழிகளில் கணக்கில் காட்டுவார்.

1. MGL 2 பட்டியல் III உடன் பிரிவு 19ன்படி அப்படிப்பட்ட பிடித்தம் செய்பவர்கள் கண்டிப்பாக பதிவு செய்திருக்க வேண்டும்.

2. அவர்கள் வசூலித்த அப்படிப்பட்ட TDSஐ வசூலித்த மாதத்தைத் தொடர்ந்து வரும் மாதத்தின் 10ம் தேதிக்குள் செலுத்தி GSTRல் தெரிவிக்க வேண்டும்.

3. விநியோகஸ்தர் மின் ரொக்க கணக்குப் பேரேட்டில் செலுத்தப்பட்ட TDS தொகையைக் பிரதிபலிக்க வேண்டும்.

4. அவர்கள் அப்படிப்பட்ட TDS குறித்து கழிக்கப்பட்டவருக்கு TDS கழித்ததற்கான சான்றிதழ் 5 நாட்களுக்குள்ளாக அளிக்க வேண்டும். இல்லாவிட்டால் அப்படிப்பட்ட கழித்தவர் ஒவ்வொரு நாளும் கட்டணமாக ரூபாய் 100/-, அதிக பட்சமாக ரூபாய் 5,000/- செலுத்த வேண்டும்.

கே.25 பதிலீடு மேல் வரி சேகரிப்பு (TCS) என்றால் என்ன?

ப.25 MGL பிரிவு 43Cன் கீழ் மின்-வர்த்தக நடத்துநர்களுக்கு மாத்திரம் தான் இந்த முறைமை அமலாகும். ஒவ்வொரு மின்-வர்த்தக நடத்துநர்களும் விநியோகஸ்தருக்கு செலுத்த வேண்டிய உள்ளபடியான தொகையை செலுத்த வேண்டிய சமயத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். (GST அமைப்பின் சிபாரிசின்படி பின்னர் அறிவிக்கப்படும். அவ்வாறு நிறுத்திவைக்கப்பட்ட தொகை மின்-வர்த்தக நடத்துநர்களால் உரிய GST கணக்கில்

வரும் மாதம் 10ம் தேதிக்குள்ளாக செலுத்த வேண்டும். TCS ஆக செலுத்தப்பட்ட தொகை விநியோகஸ்தரின் மின் ரொக்க கணக்குப் பேரேட்டில் பிரதிபலிக்கடும்.

கே.26 GST மூலத்தில் GSTக்கு செலுத்தும் தொகைக்கு கடன் அட்டை முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டுமா?

பதில் 26 ஆமாம். எந்த கடன் அட்டையிலிருந்து வரி செலுத்த எண்னமோ அதை GSTல் வரி செலுத்துபவர் முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும். வங்கிகள் மூலமாக GSTN கடன் அட்டை சேவை தருபவரிடமிருந்து உறுதி செய்து கொள்ள முயற்சிக்கலாம். அதனால் வர்த்தகம் சுலபமாகச் செய்ய எந்த பண வரம்பும் இன்றி கடன் அட்டை மூலம் பணம் பெறுதலை அனுமதிக்கலாம்.

## 8. மின்-வர்த்தகம்

கே.1 மின்-வர்த்தகம் என்றால் என்ன?

ப.1 MGLன் பிரிவு 43B(d)ல் விளக்கப்பட்டுள்ளபடி மின்-வர்த்தகம் என்பது சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளை விநியோகம் மற்றும்/அல்லது பெறுதல் அல்லது நிதி அல்லது தகவல்கள் பரிமாற்றம் பல்வேறு இயங்கு நிலைகளின் இணைப்பு மூலம், முக்கியமாக இணையதளம் அதாவது இணையதளம் சார்ந்த எந்த பிரயோகங்களையும், மின்னஞ்சல், உடனடி தகவல் அனுப்புதல், கடை கூடாரம், இணையதள சேவைகள், பொதுவான விவர தேடுதல் மற்றும் ஒருங்கிணைப்பு (UDDI), கோப்பு மாற்ற வழிமுறை (FTP), மின் தகவல் பரிமாற்றம் (EDI) மாத்திரம் அல்லாதவற்றில் பணம் செலுத்துதல் இணையதளம் மூலமாகவோ இல்லாமலோ, இறுதியில் சரக்குகள் மற்றும்/அல்லது சேவை நடத்துபவர் மூலமோ அல்லது வேறு முறையிலோ பட்டுவாடா செய்யப்படுதல் ஆகும்.

கே.2 மின்-வர்த்தகம் நட்த்துபவர் யார்?

ப.2 MGLன் பிரிவு 43B(e)ல் விளக்கப்பட்டுள்ளபடி மின்-வர்த்தகம் நட்த்துபவர் (Operator) ஒவ்வொரு நபரும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சொந்தமாக நடத்தி அல்லது நிர்வகித்து எந்த சரக்குகளும் மற்றும்/அல்லது சேவைகளும் ஒரு மின் நடைமேடை மூலம் நடக்கச் செய்வதில் ஈடுபட்டிருப்பவர். மற்றும் ஒரு நபர் எந்த தகவலோ அல்லது ஏதாவது பிற சேவையோ உடனடியாகத் தரவோ அல்லது சரக்குகள் மற்றும் சேவை மின் நடைமேடை மூலம் அளிப்பவர் ஒரு நடத்துபவர் ஆவார். அவருடைய சொந்த கணக்கில் பொருட்களோ/சேவைகளோ அளித்தல் நடத்துபவராக ஏற்றுக்கொள்ளப்படாது. உதாரணமாக, அமேசாண் மற்றும் ஃப்ளிப்கார்ட் உற்றபடியான விநியோகஸ்தர்களுக்கு அவர்களுடைய நடைமேடை மூலம் சரக்குகள் விநியோகிப்பதால் அவர்கள் மின்-வர்த்தக நடத்துநர்கள். (பிரபலமாக அறியப்படுவது சந்தை இட மாதிரி அல்லது ஈடேற்றும் மாதிரி). இருந்தபோதிலும், இந்த நிபந்தனையின்படி கடிகாரங்களும் நகைகளும் அவர்களுடைய சொந்த இணைய தளம் மூலம் விநியோகிக்கும் டைடான் மின்-வர்த்தக நடத்துநராகக் கருத முடியாது. அதேபோல் அமேசான் மற்றும் ஃப்ளிப்கார்ட் அவர்களுடைய சொந்தக் கணக்கில் விநியோகிக்கும்போது

(பிரபலமாக அறியப்படுவது சரக்கு தொகுப்பு மாதிரி) அவர்கள் மின்-வர்த்தக நடத்துநர்களாகக் கருதப்பட மாட்டார்கள்.

கே.3 மின்-வர்த்தக நடத்துநர் பதிவு செய்வது கட்டாயமா?

ப.3 ஆமாம். MGL பட்டியல்-III உடன் பிரிவு 19ல் கொடுத்துள்ளபடி மின்-வர்த்தக நடத்துநர்களுக்கு விதிவிலக்கு கிடைக்காது. அவர்களுடைய விநியோக மதிப்பு என்னவாக இருந்தாலும் அவர்கள் பதிவு செய்வது பொறுப்பாகும்.

கே.4 மின்-வர்த்தக நடத்துநர் மூலம் விநியோகஸ்தர் சரக்குகள்/சேவைகள் விநியோகித்தால் அவருக்கு விதிவிலக்கு கிடைக்குமா?

ப.4 இல்லை. MGL பட்டியல்-III உடன் பிரிவு 19ல் கொடுத்துள்ளபடி அப்படிப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு விதிவிலக்கு கிடைக்காது. அவர்களுடைய விநியோக மதிப்பு என்னவாக இருந்தாலும் அவர்கள் பதிவு செய்வது பொறுப்பாகும்.

கே.5 ஒட்டுமொத்த நடத்துநர் யார்?

ப.5 MGL பிரிவு 43B(a)ன்படி ஒட்டுமொத்த நடத்துநர் என்பவர் சொந்தமாக மின் நடைமேடையை நிர்வகித்து வருபவர். அவருடைய பிரயோகம் மற்றும் தகவல் தொடர்பு சாதனம் மூலம் ஒரு சாத்தியமிக்க வாடிக்கையாளரை ஒரு குறிப்பிட்ட விதமான குறி பெயர் அல்லது வர்த்தக சின்னத்தின் கீழ் தொடர்பு ஏற்படுத்தி சேவை அளிக்கிறார். உதாரணமாக, ஓலா கேப் ஒட்டுமொத்த நடத்துநர்.

கே.6 GSTன் கீழ் ஒட்டுமொத்த நடத்துநர் பதிவு செய்து கொள்ள வேண்டுமா?

ப.6 ஆமாம். MGL பட்டியல்-III உடன் பிரிவு 19 குறிப்பிடுவதன் படி ஒட்டுமொத்த நடத்துநர்களுக்கு விதிவிலக்கு இல்லை. அவர்களுடைய விநியோக மதிப்பு என்னவாக இருந்தாலும் அவர்கள் பதிவு செய்வது பொறுப்பாகும்.

கே.7 பதிலீடு மேல் வரி சேகரிப்பு (TCS) என்றால் என்ன?

ப.7 MGL பிரிவு 43C(1)ன் படி, மின்-வர்த்தக நடத்துநர் உள்ளபடியான சரக்குகள் அல்லது சேவைகளுக்கு அப்படிப்பட்ட மின்-வர்த்தக நடத்துநர் மூலம் செய்த சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளுக்கு விநியோகஸ்தருக்கு கிடைத்த தொகை அல்லது அவருக்குக் கிடைக்க வேண்டிய உள்ளபடியிலான தொகையிலிருந்து பரிசீலித்து வசூலிக்க (அதாவது கழிக்க) வேண்டும். அவ்வாறு கழிக்கப்பட்ட/வசூலிக்கப்பட்ட தொகைக்கு பெயர் பதிலீடு மேல் வரி சேகரிப்பு (TCS)

கே.8 மின்-வர்த்தக நடத்துநர் அவ்வாறு கழிப்பதை எந்த காலம்/இடைவெளி விட்டு பெற வேண்டும்?

ப.8 அப்படிப்பட்ட வசூலிப்பு/கழிப்புக்கான காலங்கள் கீழ்க்காணும் இரு நிகழ்வுகளுக்கு முன்பாக:

(i) சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளுக்கு உள்ளபடியான விநியோகஸ்தரின் கணக்குக்கு எந்தத் தொகையாவது பற்றுவரவு வைக்கப்பட்ட காலம்

(ii) அப்படிப்பட்ட விநியோகஸ்தருக்கு பணமாகவோ வேறு விதத்திலோ ஏதாவது தொகை கொடுக்கப்பட்ட காலம்

கே.9 மின்-வர்த்தக நடத்துநர் அரசாங்கக் கணக்கிற்கு அப்படிப்பட்ட TCSஐ எந்த காலத்திற்குள் செலுத்த வேண்டும்?

நடத்துநர் இந்த காரணத்திற்காக ஏதாவது விவரம் தாக்கல் செய்ய வேண்டுமா?

ப்.9 MGL பிரிவு 43C(3)ன் கீழ், நடத்துநரால் வசூலிக்கப்பட்ட தொகை மாதம் முடிந்து 10 நாட்களுக்குள்ளாக அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகை உரிய அரசாங்கத்திடம் பற்றுவரவு வைக்கப்பட வேண்டும். மேலும், MGL பிரிவு 43C(4)ன் கீழ் நடத்துநர் அவருடைய மூலத்திலிருந்து வெளி விநியோகத்திற்கு வசூலிக்கப்பட்ட அனைத்து தொகைகளின் விவரங்களும் கொண்ட மின்-விவரம் எந்த மாதத்துக்கானதோ அந்த மாதம் முடிந்து 10 நாட்களுக்குள்ளாக தாக்கல் செய்ய வேண்டும். அந்த விவரத்தில் உரிய விநியோகஸ்தர்கள் பெயர், அவரவர்கள் செய்த விநியோகங்களின் விவரங்கள் மற்றும் அவர்களுக்காக சேகரித்த தொகை பரிந்துரைக்கப்படும். GST விதிமுறைகளில் படிவமும் கூறப்பட்ட விவரம் தயாரிக்கும் விதமும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

கே.10 உரிய விநியோகஸ்தர்கள் இந்த TCS பற்றுவரவுக்கு எவ்வாறு உரிமை கோருவார்கள்?

ப.10 அப்படிப்பட்ட TCS அரசாங்க கணக்கில் நடத்துநரால் செலுத்தப்பட்டது உரிய பதிவு பெற்ற விநியோகஸ்தரின் ரொக்கக் கணக்குப் பேரேட்டில் யார் பெயரில் வசூலிக்கப்பட்டது என்ற விவரம் தாக்கல் செய்யப்பட்ட நடத்துநரின் விவரங்களின் அடிப்படையில் காண்பிக்கப்படும். வரிப் பொறுப்பைத் தீர்க்கும்போது உரிய விநியோகஸ்தரால் விநியோகங்களுக்கு இதையே உபயோகிக்கலாம்.

கே.11 மின்-வர்த்தக நடத்துநர் அரசாங்கத்திற்குத் தகவல் கொடுக்க வேண்டுமா?

ப.11 ஆமாம். பிரிவு 43C(10)ன் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை நடத்துநர் இணை ஆணையருக்குக் குறையாத பதவியில் உள்ள ஒரு அதிகாரிக்குக் கொடுக்க வேண்டும்.

(i) எந்த சமயத்திலும் நடத்துநரால் செயல்படுத்தப்பட்ட சரக்குகள்/சேவைகள் விநியோகங்கள்

(ii) கிடங்கு, பண்டகசாலை மற்றும் உரிய விநியோகஸ்தரால் வர்த்தகத்திற்கான பதிவு செய்யப்பட்ட கூடுதல் இடம் ஆகியவற்றில் உரிய விநியோகஸ்தர் கையிருப்பில் வைத்திருக்கும் சரக்குகளின் விவரத்தை நடத்துநர் மேற்கூறிய தகவலைக் கோரும் முன் அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 5 வேலை நாட்களுக்குள்ளாக அனுப்ப வேண்டும். அப்படிப்பட்ட தகவலைக் கொடுக்கத் தவறினால், அபராதம் ரூபாய் 25,000/- வரை நீட்டிக்கப்படும்.

கே.12 மின்-வர்த்தக நடத்துநர் ஏதாவது விவரம் சமர்ப்பிக்க வேண்டுமா? அந்த விவரத்தில் என்னென்ன விவரங்கள் பரிந்துரைக்கப்படும்?

ப.12 ஆமாம். பிரிவு 43C(4)ன் கீழ் ஒவ்வொரு நடத்துநரும் ஒரு காலண்டர் மாதத்தில் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் வெளி விநியோகங்களில் TCS ஆக வசூலித்த அனைத்து தொகைகளையும் மின்-விவரங்கள் மூலம் காலண்டர் மாதம் முடிந்து 10 நாட்களுக்குள்ளாக சமர்ப்பிக்க வேண்டும். அவ்விவரத்தில், கூறப்பட்ட காலண்டர் மாதத்தில் நடத்துநர் மூலமாக சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் ஒவ்வொரு விநியோகஸ்தருக்கும் செய்தது மற்றும் அவர்களுக்காக தொகை வசூலித்த விவரங்கள் மற்றும் அப்படிப்பட்ட விநியோகங்களின் விவரங்கள் பரிந்துரைக்கப்படும்.

கே.13 மின்-வர்த்தகத்தில் ஒப்பீடு முறையின் செயல்பாடு என்ன் மற்றும் அது எவ்வாறு செயல்படும்?

ப.13 பிரிவு 43C(6)ன்படி ஒவ்வொரு நடத்துநரும் ஒரு காலண்டர் மாதத்திற்கான விநியோகங்களும் தொகை வசூலிக்கப்பட்டதும் அவருடைய விவரத்தில் தெரிவிப்பது, அதே காலண்டர் மாதம் அல்லது அதற்கு முந்தைய மாதம் சம்பந்தப்பட்ட விநியோகஸ்தர் பிரிவு 27ன் கீழ் தாக்கல் செய்த அவருடைய

செல்லத்தக்க விவரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வெளி விநியோகங்கள் குறித்த விவரங்களில் காணும் சம்பந்தப்பட்ட விவரங்கள் ஒன்றாக இருக்கிறதா என்று ஒப்பீடு செய்து பார்க்கப்படும். எங்கு நடத்துநர் அவருடைய விவரத்தில் அறிவித்த வரி வசூலிக்கப்பட்ட வெளி விநியோக விவரங்கள் விநியோகஸ்தர் அறிவித்த அதே சம்பந்தப்பட்ட விவரங்களுடன் ஒத்துப் போகாவிட்டால் இரு நபர்களுக்கும் முரண்பாடு தெரிவிக்கப்படும்.

கே.14 விவரங்கள் முரண்பாடாக இருந்தால் என்ன ஆகும்?

ப.14 பிரிவு 43C(8)ன்படி விநியோகத்தின் மதிப்புக்கான பணம் பெறுதல் குறித்து ஏதாவது முரண்பாடு தெரிவிக்கப்பட்டு அந்த மாத செல்லத்தக்க விவரத்தில் விநியோகஸ்தர் சரி செய்யாவிட்டால், அந்த காலண்டர் மாதத்தைத் தொடர்ந்து வரும் காலண்டர் மாதத்தில் கூறப்பட்ட விநியோகஸ்தரின் அந்த முரண்பாடு அவருடைய வெளியீடு வரி பொறுப்பில் சேர்க்கப்பட்டு தெரிவிக்கப்படும். சம்பந்தப்பட்ட விநியோகஸ்தரின் முடிவான வரிப் பொறுப்பில் எந்த தொகையும் சேர்க்கப்பட்டு அது வரி செலுத்தும் பொறுப்பில் பிரிவு 36 உப-பிரிவு (1)ல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்டு அவ்வாறு சேர்க்கப்பட்ட தொகைக்கு பனம் செலுத்தும்வரை வட்டி கூட்டப்படும்.

# 9. கூலி தொழில்

கே.1 கூலி தொழில் என்றால் என்ன?

ப.1 MGL பிரிவு 2(62)ல் கொடுக்கப்பட்டுள்ளபடி “கூலி தொழில்” என்பது மற்றொரு பதிவுபெற்ற வரி செலுத்தும் நபரிடமிருந்து ஒரு நபர் சரக்குகளை முறைப்படுத்தவோ அல்லது நெறிமுறைப்படுத்தவோ எடுத்துக் கொள்ளுதல். “கூலி தொழில்” என்பதன் பொருள் இதன்படி புரிந்து கொள்ளப்படும். மேலும் இது 23 மார்ச் 1986 தேதியிட்ட அறிவிப்பு எண் 214/86-CE மற்றும் திருத்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரையறையைக் காட்டிலும் அதிகமானது. அதன் படி கூலி தொழில் என்பது விளக்கப்பட்டிருக்கும் விதத்தின்படி கூலி தொழிலின் செயல்பாடு தயாரிப்பு சம்பந்தப்பட்டது. ஆகையினால் முன்வைக்கப்பட்ட GST செயல்பாட்டின்படி கூலி தொழில் என்பதன் வரையறையில் கூலி தொழில் சம்பந்தப்பட்ட வரிவிதிப்பின் அடிப்படை திட்டத்திலேயே மாற்றம் செய்ததை காட்டுகிறது.

கே.2 ஒரு வரி செலுத்தும் நபர் ஒரு கூலி தொழில் செய்பவருக்கு அனுப்பும் சரக்குகள் வி நியோகமாகக் கருதப்படுமா மற்றும் GST வரிவிதிப்புக்கு உட்படுமா? ஏன்?

பதில்.2 இல்லை. அது விநியோகமாகக் கருதப்படாது. MGLன் பட்டியல் I பத்தி 5ல் காணும் நிபந்தனையின்படி, ஒரு பதிவு பெற்ற வரி செலுத்துபவர் (முதன்மையானவர்) கூலி தொழில் செய்பவருக்கு விநியோகம் செய்யும் சரக்குகள் பிரிவு 43Aன் படி சரக்குகள் விநியோகமாகக் கருதப்படாது. ஆகையினால், பதிவு பெற்ற முதன்மையானவர் கூலி தொழில் செய்பவருக்கு அனுப்பும் பொருட்களுக்கு GST விதிக்கப்படாது என்று உணரலாம்.

கே.3 ஒரு பதிவு பெற்ற வரி செலுத்துபவர் சரக்குகளை வரி செலுத்தாமல் அவருடைய கூலி தொழில் செய்பவருக்கு அனுப்பலாமா?

ப.3 ஆமாம். MGL பிரிவு 43Aல் ஒரு பதிவுபெற்ற வரி செலுத்துபவர் (முதன்மையானவர்) வரி விதிக்கத்தக்க சரக்குகளை ஒரு கூலி தொழில் செய்பவருக்கு கூலி தொழில் செய்வதற்காக வரி செலுத்தாமல் அனுப்பலாம். குறிப்பிட்ட நிபந்தனையின் கீழ் அவர் ஒரு கூலி தொழில் செய்பவரிடமிருந்து

மற்றொரு கூலி தொழில் செய்பவருக்கும் வேறோரு கூலி தொழில் செய்பவருக்கும் சரக்குகளை அனுப்பலாம். பிரிவு 43Aன் வரையறைகள் வரி விதிக்கப்படாத அல்லது விதிவிலக்கு அளிக்கப்பட்ட சரக்குகளை கூலி தொழிலுக்கு அனுப்ப இயலாது எனக் குறிப்பிடுகிறது.

கே.4 கூலி தொழில் செய்பவர் பதிவு செய்து கொள்ள வேண்டுமா?

ப.4 ஆமாம். ஒரு கூலி தொழில் செய்பவர் சேவை விநியோகிப்பவராகப் கருதப்படுவதால் அவருடைய ஒட்டுமொத்த விற்றுமுதல் வரையறுக்கப்பட்ட தொகையை தாண்டும் பட்சத்தில் அவர் பதிவு செய்து கொள்ள வேண்டிய அவசியம் ஆகும்.

கே.5 முதன்மையானவரின் சரக்குகள் கூலி தொழில் செய்பவரின் வளாகத்திலிருந்து நேரடியாக விநியோகிக்கப்பட்டால் அது கூலி தொழில் செய்பவரின் ஒட்டுமொத்த விற்றுமுதல் சேர்க்கப்படுமா?

ப.5 இல்லை. அது முதன்மையானவரின் ஒட்டுமொத்த விற்றுமுதலில் சேர்க்கப்படும்.

கே.6 முதன்மையானவர் கூலி தொழில் செய்பவரின் வளாகத்திலிருந்து அவருடைய சொந்த வளாகத்திற்கு எடுத்து வராமல் நேரடியாக விநியோகிக்கலாமா?

ப.6 ஆமாம். ஆனால் ஒரு நிபந்தனைக்கு உட்பட்டு அதாவது கூலி தொழில் செய்பவரின் வளாகத்தை அவருடைய வியாபாரத்திற்கான கூடுதலான இடம் என்று அறிவிக்க வேண்டும் அல்லது கூலி தொழில் செய்பவர் பதிவு பெற்றவராக இருக்க வேண்டும் அல்லது சரக்குகளாக அறிவித்திருக்க வேண்டும்.

கே.7 எந்த சந்தர்ப்பங்களில் முதன்மையானவர் நேரடியாக கூலி தொழில் செய்பவரின் வளாகத்திலிருந்து சரக்குகள் விநியோகிக்கலாம்?

ப.7 கூலி தொழில் செய்பவரின் இடத்திலிருந்து அந்த இடத்தை வியாபாரத்திற்கான கூடுதலான இடம் என்று அறிவிக்காமலே இரண்டு சந்தர்ப்பங்களில் அதாவது கூலி தொழில் செய்பவர் பதிவு பெற்ற வரி செலுத்தும் நபராக இருந்தாலோ முதன்மையானவர் அறிவிக்கப்பட்ட சரக்குகளை விநியோகிப்பதில் ஈடுபட்டிருக்கிப்பவராக இருக்க வேண்டும்.

கே.8 உள்ளீடுகள்/மூலதன பொருட்கள் ஒரு கூலி தொழில் செய்பவருக்கு அனுப்புவதற்கு ITC எடுக்க என்ன வரையறைகள் உள்ளன?

ப.8 MGLல் உள்ளீடுகள்/ மூலதன பொருட்கள் கூலித்தொழில் செய்பவருக்கு அனுப்புவதற்கு உள்ளீட்டு வரி மற்றுவரவு எடுப்பது குறித்து பிரிவு 16Aல் குறிப்பிடத்தக்க விதத்தில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அதில் உள்ளீடு அல்லது முக்கிய பொருட்களுக்கு எதிராக செலுத்தப்பட்ட வரிகள் பற்றுவரவு கீழ்கண்டவாறு எடுத்துக் கொள்ளலாம். 180 நாட்களுக்குள்ளாக ஒரு கூலி தொழில் செய்பவருக்கு அனுப்பப்பட்டு கூலி தொழில் முடிந்து உள்ளீடு திரும்பப் பெறப்பட்டால் முதன்மையானவர் உள்ளீட்டு பற்றுவரவு பெறத் தகுதி பெறுவார். கூலி தொழில் செய்பவருக்கு நேரடியாக அனுப்பப்பட்டால், கூலி தொழில் செய்பவருக்கு உள்ளீடு பெறப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படும். மேலும் அப்படிப்பட்ட உள்ளீட்டு பற்றுவரவுக்கு சம்மான தொகையைப் பெற்றுக் கொண்ட பின்னர் உள்ளீடுகள் குறிப்பிட்ட சமயத்தில் திரும்பப் பெறவில்லை என்றால் அப்படிப்பட்ட உள்ளீடுகள் வட்டியுடன் திரும்பத் தர வேண்டும். பற்றுவரவை உள்ளீடுகள் உள்ளபடி கிடைத்த பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.

கே.9 அனைத்து ரக பொருட்களுக்கும் கூலி தொழில் வரையறைகள் செல்லுபடியாகுமா?

ப.9 இல்லை. பதிவு செய்த வரி செலுத்தும் நபர் வரிக்குட்பட்ட சரக்குகளை அனுப்பத் தீர்மானித்தால் மாத்திரமே கூலி தொழில் சம்பந்தப்பட்ட வரையறைகள் செல்லுபடியாகும். அதாவது, இந்த வரையறைகள் விதிவிலக்கு அளிக்கப்பட்ட அல்லது வரி செலுத்த தேவைப்படாத பொருட்களுக்கு அல்லது அனுப்புபவர் பதிவு பெற்ற வரி செலுத்தும் நபராக இல்லாமல் இருந்தால் இது செல்லாது.

## 10. உள்ளீடு வரி வரவு வைத்தல்

கே.1 உள்ளீட்டு வரி என்றால் என்ன?

ப.1 MGL பிரிவு 2(57) மற்றும் IGST சட்டம் பிரிவு 2(1)(d)ல் “உள்ளீட்டு வரி” குறித்து விளக்கப்பட்டுள்ளது. வரி செலுத்தும் நபர் சம்பந்தமாக உள்ளீட்டு வரி என்பது ஒருவருடைய வர்த்தகத்தைப் பெருக்குவதற்காக அவர் உபயோகிக்கும் அல்லது உபயோகிக்க நினைக்கும் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் மீது விதிக்கப்பட்ட CGST மற்றும் IGST ஆகும். இதில், பிரிவு 7 உப-பிரிவு (3)ன் கீழ் வரி செலுத்தத்தப்பட்ட வரிகளும் அடங்கும். IGSI சட்டத்தின் கீழ் உள்ளீட்டு வரி என்பது சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளின் மேல் விதிக்கப்பட்ட IGST, CGST அல்லது SGST ஆகிய மூன்றும் அடங்கும்.

கே.2 “உள்ளீட்டு வரி” என்பது CGST, SGST, IGST சட்டங்களின்படி வெவ்வேறு விதமாக வரையறை செய்யப்பட்டுள்ளதின் தாக்கம் என்ன?

ப.2 உள்ளீட்டு வரி என்பது, CGST சட்டத்தின் கீழ் IGST & CGST, SGST சட்டத்தின் கீழ் IGST SGST என்று இரண்டு வெவ்வேறுவிதமாக சட்டம் உணர்த்துகிறது. IGST சட்டத்தில், உள்ளீட்டு வரி என்பது IGST, CGST மற்றும் SGST ஆகிய மூன்று வரிகளும் உள்ளடங்கும். மேலும் இந்த மூன்று வரிகளும் IGST பொறுப்பை தீர்க்க உபயோகிக்கப்படுகிறது. ஆனால் CGST சட்டத்தில் IGST & CGST மட்டுமே பற்றுவரவு வைக்க அனுமதி உண்டு. அதேபோல் SGST சட்டத்தில் IGST & SGST மட்டுமே பற்றுவரவு வைக்க அனுமதி உண்டு. மேலும் CGST & SGST பற்றுவரவு ஒன்றுக்கு பதில் வேறொன்றாக உபயோகிக்க இயலாது.

கே.3 நேர் மாறான வரி விதிப்பு முறைப்படி செலுத்தப்படும் GST வரி உள்ளீட்டு வரியாகக் கருதப்படுமா?

ப.3 ஆமாம். உள்ளீட்டு வரிக்கான விளக்கத்தின்படி பிரிவு 7 உப-பிரிவு (3)ன் கீழ் செலுத்தப்படும் வரியும் (நேர் மாறான வரி விதிப்பு முறை) அடங்கும். ஒருவர் அவருடைய வர்த்தகத்தைப் பெருக்குவதற்காக அவ்வாறாக வரி விதிக்கப்பட்ட சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளை உபயோகித்தால் அல்லது உபயோகிக்க நினைத்தால் அதன் மீது செலுத்தப்பட்ட GST வரிக்கான பற்றுவரவு பெறலாம்.

கே.4 உள்ளீட்டு வரி என்பது உள்ளீட்டு சரக்குகள், உள்ளீட்டு சேவைகள் மற்றும்/அல்லது மூலதனப் பொருட்கள் மீது செலுத்தும் வரி (CGST/IGST/SGST) சேர்ந்ததா?

ப.4 ஆமாம். MGLன் முறையே பிரிவு 2(54), 2(55) மற்றும் 2(20)ன் கீழ் ஆகும். மூலதனப் பொருட்களின் மீது செலுத்திய வரியின் பற்றுவரவை ஒரே தவணையாகப் பெற்றுக் கொள்ளலாம்.

கே.5 இந்த சட்டத்தின் கீழ் பதிவுக்கான அருகதை பெற்று பதிவுக்கு விண்ணப்பித்து முப்பது நாட்களுக்குள்ளாக பதிவு அங்கீகரிக்கப்பட்டால் அந்த நபருக்கு ITCயிலிருந்து என்ன உரிமை கிடைக்கும்?

ப.5 பிரிவு 16(2)ன் கீழான நிபந்தனைகளின்படி அவர் வரி செலுத்தும் தகுதிக்கு உள்ளாகும் முந்தைய தேதிவரை உள்ள கையிருப்பின்படியான கையிருப்பு உள்ளீடுகள், பாதி முடிவடைந்த உள்ளீடுகள், முழுதும் முடிவடைந்த உள்ளீடுகள் முதலியனவற்றுக்கு உள்ளீட்டு வரி வரவு பெறத் தகுதி உண்டு. அவர் பதிவுக்குத் தகுதி பெற்ற தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பதிவு பெறாவிட்டால் பதிவுக்கு முந்தைய கையிருப்புக்கு பற்றுவரவு கிடைக்காது.

கே.6 ஒரு நபர் 1 ஆகஸ்டு 2017 அன்று வரி கட்டும் தகுதி பெறுகிறார். பதிவு 15 ஆகஸ்டு 2017 அன்று பெறுகிறார். அப்படிப்பட்ட நபர் எந்த தேதியிலான கையிருப்புக்கு உள்ளீட்டு வரி வரவு பெறுவதற்குத் தகுதி பெறுகிறார்?

ப.6 31 ஜூலை 2017

கே.7 தாமாக முன்வந்து பதிவு செய்யும் ஒரு நபருக்கு உள்ளீட்டு கையிருபில் மாநில உள்ளீட்டு வரி வரவு பெறத் தகுதி என்ன?

ப.7 MGL பிரிவு 16(2A)ன்படி, தாமாக முன்வந்து பதிவு பெறுபவர், பதிவு தேதிக்கு உடனே முந்தைய தேதிவரை உள்ள கையிருப்பின்படியான கையிருப்பு உள்ளீடுகள், பாதி முடிவடைந்த உள்ளீடுகள், முழுதும் முடிவடைந்த உள்ளீடுகள் முதலியனவற்றுக்கு மாநில உள்ளீட்டு வரி வரவு பெறத் தகுதி உண்டு.

கே.8 ஒரு வரி செலுத்தும் நபர் அவர் பெற்ற சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளை வரி செலுத்தும் மற்றும் வரி செலுததத் தேவையில்லாத

விநியோகங்களுக்கு உபயோகித்தால் பதிவு பெற்ற வரி செலுத்துபவருக்கு மாநில உள்ளீட்டு வரி வரவு கிடைக்குமா?

ப.8 MGL பிரிவு 16(6)ன்படி, பதிவுபெற்ற வரி செலுத்துபவர் வரி செலுத்தும் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளுக்கு மாத்திரம் மாநில உள்ளீட்டு வரி வரவு பெறத் தகுதி உண்டு. MGL பிரிவு 16(7) உடன் GST ITC நெறிமுறைகள் (பிரசுரிக்கப்பட வேண்டியது) கீழ் குறிப்பிட்டுள்ளபடி தகுதியுள்ள பற்றுவரவுத் தொகை கணக்கிடப்படும். மூலதனப் பொருட்களுக்கும் பற்றுவரவு பெற விகித அடிப்படையில் அனுமதிக்கப்படுவதை குறித்துக் கொள்ள வேண்டியது முக்கியம் ஆகும்.

கே.9 ஒரு வரி செலுத்தும் நபர் பெறும் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளை வர்த்தக செயலுக்கான மற்றும் வர்த்தகம் அல்லாத செயலுக்கான விநியோகங்களுக்கு உபயோகப்படுத்தினால் பதிவு பெற்ற வரி செலுத்தும் நபருக்கு உள்ளீட்டு வரி வரவு கிடைக்குமா?

ப.9 MGL பிரிவு 16(5)ன் படி வர்த்தக செயலுக்காக உபயோகிக்கப்படும் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளுக்கு மாத்திரம் பதிவு பெற்ற வரி செலுத்தும் நபர் மாநில உள்ளீட்டு வரி வரவு எடுக்கலாம். MGL பிரிவு 16(7) உடன் GST ITC நெறிமுறைகள் (பிரசுரிக்கப்பட வேண்டியது) கீழ் குறிப்பிட்டுள்ளபடி தகுதியுள்ள பற்றுவரவுத் தொகை கணக்கிடப்படும். மூலதனப் பொருட்களுக்கும் பற்றுவரவு பெற விகித அடிப்படையில் அனுமதிக்கப்படுவதை குறித்துக் கொள்ள வேண்டியது முக்கியம் ஆகும்.

கே.10 ஒரு பதிவுபெற்ற வரி செலுத்துபவரின் நிறுவனத்தில் மாற்றம் ஏற்பட்டால் உள்ளீட்டு வரிக்கான தகுதி என்ன?

ப.10 MGL பிரிவு 16(8)ன்படி மாற்றுபவரின் கணக்குப் புத்தகங்களில் உபயோகிக்கப்படாத உள்ளீட்டு வரி வரவு மாற்றப் பொறுப்புக்கு குறிப்பிட்ட நிபந்தனை இருந்தால் மாற்றப்படும் கணக்கிற்கு மாற்ற அனுமதி உண்டு.

கே.11 ஒரு பதிவுபெற்ற வரி செலுத்தும் நபர் விநியோகிக்கும் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளுக்கு முழுவதுமாக விலக்கு அளிக்கப்பட்டால் உள்ளீட்டு வரி வரவு எவ்வளவு?

ப.11 MGL பிரிவு 16(12)ன்படி பதிவுபெற்ற வரி செலுத்தும் நபர் விநியோகிக்கும் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளுக்கு முழுவதுமாக விலக்கு அளிக்கப் பட்டால் அப்படிப்பட்ட விலக்கு அளிக்கப்பட்ட நாளுக்கு முந்தைய நாள் வரையிலான உள்ளீட்டு கையிருப்பு மற்றும் பாதி முடிந்த, முழுவதும் முடிந்த சரக்குகள் கையிருப்புக்கு சமமான உள்ளீட்டு வரி வரவுத் தொகையை செலுத்த வேண்டும். அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பது அப்படிப்பட்ட பொருட்களுக்கான தொகை செலுத்திய பின்னர் மின் பற்றுவரவு கணக்குப் புத்தகத்தில் ஏதாவது மீதம் இருந்தால் அது தள்ளுபடி ஆகிவிடும். MGL பிரிவு 16(13)ன் கீழான GAAPன்படி செலுத்த வேண்டிய தொகை கணக்கிடப்படும்.

கே.12 வரி செலுத்தும் நபர் பிரிவு 7ன் கீழ் வரி செலுத்துவதை பிரிவு 8ன் கீழான சேர்க்கைத் திட்டத்தின் கீழ் மாற்றிக் கொண்டால் அவருக்கு உள்ளீட்டு வரித் தகுதி எவ்வளவு?

ப.12 MGL பிரிவு 16(12)ன்படி, பிரிவு 7ன் கீழ் வரி செலுத்தும் பதிவு பெற்ற வரி செலுத்துபவர் பிரிவு 8ன் கீழான சேர்க்கைத் திட்டத்தின் கீழ் மாற்றிக் கொண்டால் அப்படிப்பட்ட மாற்ற தேதிக்கு உடன் முந்தைய நாள் வரையிலான உள்ளீட்டு கையிருப்பு மற்றும் பாதி முடிந்த அல்லது முழுதும் முடிந்த சரக்குகளின் கையிருப்புக்கு சமமான மாநில உள்ளீட்டு வரி வரவுத் தொகையை செலுத்த வேண்டும். அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பது அப்படிப்பட்ட பொருட்களுக்கான தொகை செலுத்திய பின்னர் மின் பற்றுவரவு கணக்குப் புத்தகத்தில் ஏதாவது மீதம் இருந்தால் அது தள்ளுபடி ஆகிவிடும். MGL பிரிவு 16(13)ன் கீழான GAAPன்படி செலுத்த வேண்டிய தொகை கணக்கிடப்படும்.

கே.13 சேர்க்க அடிப்படையில் வரி செலுத்தும் வர்த்தகர் சேர்க்கை வரையறையைக் கடந்து ஒரு நிரந்தர வரி செலுத்துபவராக ஆகிவிட்டால், அவர் ITC பெற இயலுமா அப்படியானால் எந்த தேதி முதல்?

ப.13 MGL பிரிவு 16(3)ன்படி, பிரிவு 7ன் கீழ் வரி செலுத்தும் பொறுப்பு வந்த தேதிக்கு உடன் முந்தைய நாள் வரையிலான உள்ளீட்டு கையிருப்பு, பாதி முடிந்த அல்லது முழுதும் முடிந்த சரக்குகள் கையிருப்பிற்க்கு அவர் ITC பெறலாம்.

கே.14 ஒரு பதிவு பெற்ற வரி செலுத்தும் நபரான திரு B என்பவர் 30 ஜூலை 2017 வரை சேர்க்கை வரி விகிதத்தின் கீழ் வரி செலுத்தி வந்தார். திரு B நிரந்தர திட்டத்தின் கீழ் 31 ஜூலை 2017 முதல் வரி செலுத்தும் பொறுப்பின் கீழ் வந்துவிட்டால், அவருக்கு ITC பெறத் தகுதி உண்டா?

ப.14 30 ஜூலை 2017 அன்று திரு B அவரிடம் உள்ள உள்ளீட்டு கையிருப்புக்கு மற்றும் பாதி முடிந்த அல்லது முழுதும் முடிந்த உள்ளீட்டு கையிருப்பு பொருட்களுக்கு மாநில உள்ளீட்டு வரி வரவு பெறத் தகுதி உண்டு.

கே.15 5 ஜூன் 2017 அன்று திரு A என்பவர் தாமாகவே முன்வந்து பதிவு செய்ய விண்ணப்பிக்கிறார். 22 ஜூன் 2017 அன்று அவர் பதிவு பெறுகிறார். எந்த தேதியில் உள்ள கையிருப்புக்கு அவருக்கு உள்ளீட்டு வரி வரவு பெறத் தகுதி உண்டு?

ப.15 21 ஜூன் 2017 வரையில் திரு A அவரிடம் உள்ள உள்ளீட்டு கையிருப்புக்கு மற்றும் பாதி முடிந்த அல்லது முழுதும் முடிந்த கையிருப்பு பொருட்களுக்கு உள்ளீட்டு வரி வரவு பெறத் தகுதி உண்டு.

கே.16 ஒரு வரி செலுத்தும் நபருக்கு அவருக்கு விநியோகிக்கப்படும் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளுக்கு பிரிவு 16 உப-பிரிவு (2), (2A) அல்லது உப-பிரிவு (3)ன் கீழ் எப்போது உள்ளீட்டு வரி வரவு பெறத் தகுதி இல்லை?

ப.16 MGL பிரிவு 16(4)ன்படி அப்படிப்பட்ட விநியோகத்திற்கு வரி விலைப்பட்டி கிடைத்து ஒரு வருடம் முடிவடைந்த பின்னர் அவர் ITC பெற இயலாது.

கே.17 கூலி தொழில் செய்பவருக்கு கூலி தொழிலுக்காக அனுப்பப்படும் உள்ளீட்டுக்கு முதன்மையானவர் உள்ளீட்டு வரி வரவு பெறத் தகுதி உண்டா?

ப.17 ஆமாம். MGL பிரிவு 16A(2)ன்படி கூலி தொழில் செய்பவருக்கு கூலி தொழிலுக்காக அனுப்பப்படும் உள்ளீட்டுக்கு முதன்மையானவர் மாநில உள்ளீட்டு வரி வரவு பெறத் தகுதி உண்டு.

கே.18 முதன்மையானவர் கூலி தொழிலுக்கு அனுப்பிய உள்ளீட்டை எந்த கால அவகாசத்திற்குள் திரும்பப் பெற்றிருக்க வேண்டும்?

ப.18 180 நாட்கள்

கே.19 180 நாட்களுக்குள்ளாக கூலி தொழில் செய்பவரிடமிருந்து திரும்பப் பெறாவிட்டால் முதன்மையானவர் உள்ளீட்டு வரி பற்றுவரவைத் திரும்பத் தர வேண்டுமா?

ப.19 ஆமாம். 180 நாட்களுக்குள்ளாக கூலி தொழில் செய்பவரிடமிருந்து திரும்பப் பெறாவிட்டால் முதன்மையானவர் உள்ளீட்டு வரி பற்றுவரவை வட்டியுடன் திரும்பத் தர வேண்டும். ஆனால் உள்ளீடு கிடைத்த பின்னர் பற்றுவரவை மீண்டும் திரும்ப்ப் பெற உரிமை கோரலாம்.

கே.20 பற்றுவரவு பெறுவதற்கு கீழ்கண்ட எவைகளை வரி விதிப்பு விநியோகங்களில் சேர்க்கை செய்யலாம்? (a) 0 மதிப்புள்ள விநியோகங்கள் (b) விதிவிலக்கு அளிக்கப்பட்ட விநியோகங்கள் (c) இரண்டும்?

ப.20 0 மதிப்புள்ள விநியோகங்கள்

கே.21 முதன்மையானவர் கூலி தொழிலுக்காக அனுப்பும் மூலதனப் பொருட்கள் திரும்பப் பெற கால அவகாசம் என்ன?

ப.21 இரண்டு வருடங்கள்

கே.22 கூலி தொழில் செய்பவருக்கு முதன்மையான சரக்குகள் அனுப்பிய தேதியிலிருந்து 2 வருடங்களுக்குள்ளாக திரும்பப் பெறாவிட்டால் முதன்மையானவரின் பொறுப்பு என்ன?

ப.22 அப்படிப்பட்ட மூலதனப் பொருட்களுக்கு பெற்ற பற்றுவரவுக்கு சமமான தொகையை வட்டியுடன் முதன்மையானவர் செலுத்த வேண்டும். ஆனால் மூலதனப் பொருட்கள் திரும்பப் பெற்ற பின்னர் அவர் பற்றுவரவு திரும்பப் பெறலாம்.

கே.23 ஒரு வரி செலுத்துபவர் தகவல் தொழில் நுட்ப வர்த்தகம் செய்து வருகிறார். அவருடைய நிர்வாக இயக்குநர்கள் உபயோகத்திற்காக மோட்டார் வாகனம்

வாங்குகிறார். அப்படிப்பட்ட மோட்டார் வாகனம் வாங்கியதற்கு செலுத்திய GSTக்கு அவர் ITC பெற முடியுமா?

ப.23 MGL பிரிவு 16(9)ன் படி, வரி செலுத்துபவர் மக்கள் அல்லது சரக்குகளை மோட்டார் வாகனத்தில் அனுப்பும் வர்த்தகத்தில் இருந்தாலோ அல்லது மோட்டார் வாகனங்களில் பயிற்சியளிக்கும் சேவைகளில் இருந்தாலோ தான் மோட்டார் வாகனங்களுக்கான ITC பெற முடியும்.

கே.24 வருமான வரி சட்டம், 1961ன் நிபந்தனைகளின் கீழ் மூலதனப் பொருட்களின் மதிப்புக்கு வரிக் கூறுபாடுகளில் குறைப்புக்காக பதிவு பெற்ற வரி செலுத்துபவர் உரிமை கோரினால், அப்படிப்பட்ட சமயங்களில் ITC அனுமதிக்கப்படுமா?

ப.24 MGL 16(10)ன்படி, அப்படிப்பட்ட வரிக் கூறுபாட்டுக்கு உள்ளீட்டு வரிப் பற்றுவரவு பெர அனுமதி இல்லை.

கே.25 ITC பெற அவசியமான வரையறைகள் என்ன?

ப.25 MGL பிரிவு 16(11)ன்படி கீழ்கண்ட நான்கு வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன

(a) பதிவு பெற்ற வரி செலுத்துபவர் விநியோகஸ்தரால் வழங்கப்பட்ட வரி செலுத்தும் ஆவணம் வைத்திருக்க வேண்டும்

(b) வரி செலுத்துபவர் பொருடகள் மற்றும்/அல்லது சேவைகளைப் பெற்றிருக்க வேண்டும்

(c) அப்படிப்பட்ட விநியோகத்திற்கு விதிக்கப்பட்ட வரியை அரசாங்கத்திற்கு பணமாகவோ உள்ளீட்டு வரிப் பற்றுவரவை உபயோகித்தோ செலுத்தியிருக்க வேண்டும்

(d) வரி செலுத்துபவர் பிரிவு 27ன் கீழ் விவரப்பட்டி சமர்ப்பித்திருக்க வேண்டும்

கே.26 ஒரு விலைப்பட்டிக்கு எதிராக கூறுகளிலோ தவணைகளிலோ சரக்குகள் பெற்றிருந்தால் ஒரு பதிவு பெற்ற வரி செலுத்துபவர் எப்படி ITCக்கு தகுதி பெறுவார்?

ப.26 MGL பிரிவு 16(11) நிபந்தனையின்படி, பதிவு பெற்ற வரி செலுத்துபவர் கடைசிக் கூறு அல்லது தவணை பெற்ற பின்னர் பற்றுவரவு பெறத் தகுதி பெறுவார்.

கே.27 வரி செலுத்துபவர் அல்லாது வேறு ஒருவருக்கு சரக்குகள் கொடுக்கப்பட்டால் யாருக்கு ITC கிடைக்கும் ("இன்னார்க்கு ரசீது" - "மற்றொன்னார்க்கு அனுப்பப்பட்ட்து" போன்ற நிகழ்வு)?

ப.27 MGL பிரிவு 16(11)ன் விளக்க ஷரத்தின்படி சரக்குகள் பெறுவதற்கான செயல்பாட்டிற்கு, அப்படிப்பட்ட வரி செலுத்துபவர் கூறியபடி மூன்றாம் குழுவிற்கு சரக்குகள் கொடுக்கப்பட்ட போதிலும் வரி செலுத்துபவர் சரக்குகள் பெற்றுக் கொண்டதாகவே கருதப்படும். ஆகையினால் யாருடைய உத்தரவின் பேரில் சரக்குகள் மூன்றாம் குழுவுக்கு கொடுக்கப்பட்ட்தோ அவருக்கு ITC கிடைக்கும்.

கே.28 ITC பெற கால அவகாசம் என்ன?

ப.28 MGL பிரிவு 16(15)ன்படி, ஒரு விலைப்பட்டிக்கான ITCயை அந்த விலைப்பட்டியின் தேதிப்படி அதனைத் தொடர்ந்து வரும் நிதியாண்டின் செப்டம்பர் மாதத்திற்குப் பின்னரோ அல்லது வருடாந்தர அறிக்கை தாக்கல் செய்த தேதிக்குப் பின்னரோ இவை இரண்டில் எது முன்னரோ அதற்குப் பின்னால் எடுக்க இயலாது. இந்த கட்டுப்பாட்டுக்கு ஆதாரமான காரணம் அடுத்த நிதி ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குப் பின்னர் விவரப்பட்டியில் மாற்றம் செய்ய இயலாது. வருடாந்தர விவரப்பட்டி/அறிக்கை செப்டம்பர் மாதத்திற்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்டால் வருடாந்தர விவரப்பட்டி/அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மாற்றம் செய்ய இயலாது.

கே.29 ITC அனுமதிக்காததற்கு ஏதாவது எதிர்மறை பட்டியல் உள்ளதா?

ப.2 MGL பிரிவு 16(9) ITC ஏற்றுக் கொள்வதற்கு எதிர்மறை பட்டியல் கொடுத்துள்ளது. கீழ்கண்ட பொருட்களுக்கு ITC பெற இயலாது.

(a) மோட்டார் வாகனங்கள் - அவைகள் பொதுவாக வர்த்தகச் செயலுக்கு வழங்கப்படும் போதும் மற்றும் கீழ்கண்ட வரி செலுத்தப்படும் சேவைகளுக்கு உபயோகிக்கப்படுத்தும் போதும், நீங்கலாக

(i) பயணிகள் பயணம் செய்தல்

(ii) சரக்குகளை ஏற்றிச் செல்லுதல்

(iii) மோட்டார் ஓட்டும் திறனை வளர்க்க பயிற்சி அளித்தல்

(b) உணவு மற்றும் குளிர்பானங்கள், வெளிப்புற சாப்பாடு, அழகு சிகிச்சை, ஆரோக்கிய சேவைகள், ஒப்பனைப் சரக்குகள் மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, சங்க உறுப்பினர், ஆரோக்கியம் மற்றும் உடல் தகுதி மையம், ஆயுள் காப்பீடு, மருத்துவ காப்பீடு, விடுமுறை காலங்களில் பணிபுரிபவர்களுக்கு பயண சலுகைகள் அதாவது விடுமுறை அல்லது வீடு செல்ல பயண சலுகை ஆகியவற்றில் வழங்கப்படும் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் முதன்மையாக ஊழியரின் சொந்த உபயோகத்திற்கோ அல்லது நுகர்வுக்காகவோ பயன்படும் போது.

(c) முதன்மையானவர் பெற்ற சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் பணி ஒப்பந்தம் மூலம் முதன்மையானவர் செய்யும் அப்படிப்பட்ட ஒப்பந்தம் மூலம் எந்திரம் மெஷின் அல்லாத அசையா சொத்து கட்டப்படுதல்

(d) முதன்மையானவர் பெற்ற சரக்குகள் மூலமாகக் கட்டப்பட்ட எந்திரம் மெஷின் அல்லாத அசையா சொத்து வேறு நபருக்கு (பொருட்களாகவோ வேறு விதத்திலோ) மாற்றப்படாதிருத்தல்

(e) பிரிவு 8ன் கீழ் வரி செலுத்தப்பட்ட சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள்

(f) சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் தனியார் அல்லது சொந்த உபயோகத்திற்கு அவைகள் செலவிடப்பட்ட அளவு

கே.30 MGL பிரிவு 29ல் கொடுக்கப்பட்டுள்ளபடி பெறுபவர் தாக்கல் செய்யும் வரும் சரக்குகளின் விவரங்களும் விநியோகஸ்தரால் அவருடைய செல்லத்தக்க விவரப்பட்டியில்/அறிக்கையில் அனுப்பப்பட்ட விவரங்களும் ஒத்து இருந்தால் மாத்திரமே ITC உறுதி செய்யப்படும். ஒத்து இருக்காவிட்டால் என்ன ஆகும்?

ப.30 வரும் மற்றும் போகும் விவரங்கள் ஒத்து இருக்காவிட்டால், விநியோகஸ்தர் இரண்டு மாதங்களுக்குள்ளாக அந்த வித்தியாசத்தை சரிசெய்ய வேண்டும். ஒத்து இல்லாதிருப்பது தொடர்ந்தால், பெறுபவர் ITCஐ திரும்பத் தர வேண்டும்.

கே.31 ITC எடுத்துக் கொள்ளப்பட்ட மூலதனப் பொருட்கள் வரி செலுத்துபவரால் விநியோகிக்கப்படும் பொழுது வரித்தாக்கம் எவ்வளவு?

ப.31 MGL பிரிவு 16(15)ன்படி, மூலதனப் பொருட்கள் விநியோகிக்கும் பொழுது மாநில உள்ளீட்டு வரி வரவு எடுத்துக் கொண்டால், பதிவு பெற்ற வரி

செலுத்துபவர் கூறப்பட்ட முதன்மையான பொருட்களுக்கு எதிராக எடுத்துக் கொண்ட மாநில உள்ளீட்டு வரி வரவுக்கு சம்மான தொகையிலிருந்து இது சம்பந்தமாக குறிப்பிடப்பட்ட சதவீதத்தை கழித்துக் கொண்டோ அல்லது அப்படிப்பட்ட மூலதனப் பொருட்களின் பரிமாற்ற மதிப்பின் மீதான வரியையோ இதில் எது அதிகமோ அதைச் செலுத்த வேண்டும்.

கே.32 தவறாக எடுத்துக் கொண்ட பற்றுவரவு வசூல் செய்வதற்கான வழிமுறை என்ன?

ப.32 MGL பிரிவு 16(16)ன்படி தவறாக எடுத்துக் கொண்ட பற்றுவரவு பதிவு பெற்ற வரி செலுத்துபவரிடமிருந்து MGL பிரிவு 51ன்படி திரும்ப வசூல் செய்யப்படும்.

## 11. GSTல் உள்ளீடு சேவை விநியோகஸ்தர் கருத்தாக்கம்

கே.1 உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர் (ISD) என்றால் என்ன?

ப.1 MGL பிரிவு 2(56)ன்படி, ISD என்பது உள்ளீட்டு சேவைகளை பெறுவதற்காக பிரிவு 23ன் கீழ் கொடுக்கப்பட்ட வரி விலைப்பட்டிகளை பெறும் சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் வழங்குபவரின் ஓர் அலுவசகம் ஆகும். அந்த அலுவலகமானது தனது அதே PAN உள்ள வரிவிதிக்குட்பட்ட சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் வழங்குபவர்க்கு, தான் பெற்ற உள்ளீட்டு சேவைகளுக்காக செலுத்தப்பட்ட CGST (மாநில சட்டங்களின்படி SGST) மற்றும்/அல்லது IGST வரிகளின் பற்றுவரவை விந்யோகிப்பதற்காக வரி விலைப்பட்டியோ அல்லது குறிப்பிட்ட வேறு அத்தகைய ஆவணத்தையோ அளிக்கிறது. அவ்வாறு பற்றுவரவை பகிர்ந்தளிக்கும் செயல்பாட்டுக்காக ISDயானது சேவைகள் வழங்குபவராக கருதப்படும்.

கே.2 ISD ஆக பதிவு செய்துகொள்ளத் தேவைகள் என்ன?

ப.2 பிரிவு 19 உடன் பட்டியல் IIIன் பத்தி 5(vii)ன்படி சேவைகள் விநியோகஸ்தராக செயல்பட ISD பதிவு செய்து கொள்ள வேண்டும். ISDக்கு பதிவு செய்து கொள்ள ஆரம்ப வரையறை எதுவும் இல்லை. தற்போதுள்ள வரையறையின் கீழான ISD பதிவு (அதாவது சேவை வரியின் கீழ்) GST வரைமுறைக்கு மாற்றப்படாது. இப்போதுள்ள அனைத்து ISDகளும் அவர்கள் ISD ஆக செயல்பட விரும்பினால் புதிய வரைமுறையின்படி புதிதாக பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கே.3 பற்றுவரவு பகிர்வதற்கான நிபந்தனைகள்/கட்டுப்பாடுகள் என்ன?

ப.3 கீழ்கண்ட நிபந்தனைகளின்படி பற்றுவரவு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

a) பற்றுவரவு வரி விலைப்பட்டி அல்லது பிற குறிப்பிடப்பட்ட ஆவணம் மூலம் பகிர்ந்து கொள்ள வேண்டும்

b) உள்ள பற்றுவரவுத் தொகையை விட பகிர்ந்து கொண்ட பற்றுவரவுத் தொகை அதிகமாக இருக்க்க் கூடாது

c) அப்படிப்பட்ட சேவைகள் பெறும் விநியோகஸ்தருக்கு மாத்திரமே பற்றுவரவு பகிர வேண்டும்.

d) ஒன்றுக்கும் கூடுதலான விநியோகஸ்தருக்குக் உரித்தான சேவைகள் பெறப்பட்டால் பற்றுவரவு முந்தைய நிதி ஆண்டில் சம்பந்தப்பட்ட விநியோகஸ்தரின் வருமானத்தின் அடிப்படையில் முறைப்படி பங்கிட வேண்டும்.

கே.4 ISD விவரப்பட்டி தாக்கல் செய்ய வேண்டுமா?

ப.4 ஆமாம். MGL பிரிவு 27(6)ன்படி, GSTR-6 படிவத்தில் மாதாந்தர விவரப்பட்டியை வரும் மாதத்தின் 13ம் தேதிக்கு முன்பாக தாக்கல் செய்ய வேண்டும்.

கே.5 ஒரு நிறுவனம் பல்முனை ISD வைத்திருக்கலாமா?

ப.5 ஆமாம். வெவ்வேறு அலுவலகங்கள் அதாவது விற்பனைப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு முதலியன தனி ISDக்கு விண்ணப்பிக்கலாம்.

கே.6 ISD மூலம் அதிகப்படியாக/தவறாக பகிரப்பட்ட பற்றுவரவை திரும்பப்பெற என்ன வரையறைகள் உள்ளன?

ப.6 பிரிவு 18(1) மற்றும் 18(2)ல் கொடுக்கப்பட்டுள்ளபடி அதிகப்படியாக/தவறாக பகிரப்பட்ட பற்றுவரவை திரும்பப் பெற ISDக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் அல்லது மாதிரி GST சட்டம் பிரிவு 51ன் கீழ் அவ்வாறு பகிரப்பட்ட பற்றுவரவு பெறுபவரிடமிருந்து திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

கே.7 CGST மற்றும் IGST பற்றுவரவு ISDயால் IGST பற்றுவரவாக வெவ்வேறு மாநிலங்களில் உள்ள உறுப்பு அமைப்புகளுக்கு பகிரலாமா?

ப.7 ஆமாம். CGST பற்றுவரவு IGST ஆக மற்றும் IGST பற்றுவரவு IGST ஆக ISDயால் வெவ்வேறு மாநிலங்களில் உள்ள உறுப்பு அமைப்புகளுக்கு பகிரலாம் (பிரிவு 17(1))

கே.8 SGST பற்றுவரவு IGST பற்றுவரவாக ISDயால் வெவ்வேறு மாநிலங்களில் உள்ள உறுப்பு அமைப்புகளுக்கு பகிரலாமா?

ப.8 ஆமாம். SGST பற்றுவரவை IGST ஆக ஒரு ISD வெவ்வேறு மாநிலங்களில் உள்ள உறுப்பு அமைப்புகளுக்கு பகிரலாம்.

கே.9 CGST மற்றும் IGST பற்றுவரவை CGST பற்றுவரவாக ISD பகிர முடியுமா?

ப.9 ஆமாம். CGST மற்றும் IGST பற்றுவரவை CGST பற்றுவரவாக உறுப்பு அமைப்பு ஒரே மாநிலத்தில் இருந்தால் ISD பகிர முடியும்.

கே.10 SGST மற்றும் IGST பற்றுவரவு SGST பற்றுவரவாகப் பகிர முடியுமா?

ப.10 SGST மற்றும் IGST பற்றுவரவை உறுப்பு அமைப்பு ஒரே மாநிலத்தில் இருந்தால் ISD பகிர முடியும்.

கே.11 ஒரு ISD என்னென்ன ஆவணங்கள் மூலம் பற்றுவரவைப் பகிர முடியும்?

ப.11 பற்றுவரவு பகிர்வதற்கான ஆவணம் குறித்து இனிமேல்தான் வரையறுக்க வேண்டும். பற்றுவரவு குறிப்பிட்ட ஆவணம் மூலம்தான் பகிர வேண்டும் என சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது

கே.12 பொதுவான பற்றுவரவை ஒரு ISDன் அனைத்து உறுப்பு அமைப்புகளுக்கும் பகிரவது எப்படி?

ப.12 பொது பற்றுவரவு அனைத்து உறுப்பு அமைப்புகளுக்கும் ISDயால் பாகத்தின் அடிப்படையில் பகிரலாம். அதாவது அனைத்து உறுப்பு அமைப்புகளின் விற்றுமுதலிலிருந்து பற்றுவரவு ஒவ்வொரு உறுப்பு அமைப்பின் விற்றுமுதலின் அடிப்படையில் பகிரப்படும்.

கே.13 CGST மற்றும் IGST பற்றுவரவை ISD மாநிலத்திற்கு வெளியில் உள்ள பெறுபவருக்கு_________ ஆக பகிரும்

(a) IGST (b) CGST (c) SGST

ப.13 (a) IGST

கே.14 CGST பற்றுவரவை மாநிலத்துக்குள்ளாக ISD பகிர்வது

(a) IGST (b) CGST (c) SGST (d) மேற்கூறியதில் ஏதாவது ஒன்று

ப.14 (b) CGST

கே.15 ஒன்றிற்கு மேலான விநியோகஸ்தர்கள் பயன்படுத்திய உள்ளீட்டு சேவைகளின் மீது செலுத்தப்பட்ட வரியின் பற்றுவரவானது ____

(a) அப்படிப்பட்ட உள்ளீட்டு சேவையை உபயோகிப்பவர்கள் அப்படிப்பட்ட மாநிலத்தில் அடையும் விற்றுமுதலின் அடிப்படையில் பாகத்தை விநியோகஸ்தர்கள் பகிர்ந்து கொள்ளுதல்
(b) அனைத்து விநியோகஸ்தர்கள் இடையே சமமாகப் பகிர்ந்து கொள்ளுதல்
(c) ஒரே ஒரு விநியோகஸ்தருக்கு மாத்திரம் பகிர்தல்
(d) பகிர்ந்து கொள்ள இயலாது

ப.15 (a) அப்படிப்பட்ட உள்ளீட்டு சேவையை உபயோகிப்பவர்கள் அப்படிப்பட்ட மாநிலத்தில் விற்றுமுதலின் அடிப்படையில் பாகத்தை விநியோகஸ்தர்கள் பகிர்ந்து கொள்ளுதல்

கே.16 அதிகப்படியான பற்றுவரவு பகிர்ந்து கொண்டது இலாகாவால் திரும்பப் பிடித்துக் கொள்ள இயலுமா?

ப.16 ஆமாம். அதிகப்படியான பற்றுவரவு பகிர்ந்து கொண்டதை வட்டியுடன் ஒரு ISDயிடமிருந்து இலாகாவால் திரும்பப் பிடித்துக் கொள்ள இயலும்.

கே.17 சட்ட நிபந்தனைகளுக்கு எதிராக பற்றுவரவு பகிர்ந்து கொள்ளப்பட்டால் எதிர்விளைவுகள் என்னவாக இருக்கும்?

ப.17 சட்ட நிபந்தனைகளுக்கு விரோதமாக பற்றுவரவு பகிர்ந்து கொள்ளப்பட்டால் பகிர்ந்து கொண்ட உறுப்பு அமைப்பிலிருந்து வட்டியுடன் திரும்பப் பிடித்துக் கொள்ள இயலும்.

## 12. விவரப்பட்டி ஆய்வு மற்றும் உள்ளீட்டு வரி வரவு ஒப்பீடு

கே.1 விவரப்பட்டிகளின் நோக்கம் என்ன?

ப.1 a) வரி நிர்வாகத்திற்கு தகவல் பரிமாற்ற வழி

b) வரி நிர்வாகத்தின் சரிபார்த்தல் திட்டத்தைக் கடைபிடித்தல்

c) வரி செலுத்துபவருக்கு வரிப் பொறுப்புக்களை குறிப்பிட்ட கால வரையறைக்குள் இறுதி செய்ய; குறிப்பிட்ட காலத்திற்கான வரிப் பொறுப்பை அறிவித்தல்

d) அவசியமான உள்ளீடுகளைக் கொடுத்து கொள்கை முடிவுகள் எடுத்தல்

e) தணிக்கை நிர்வாகம் மற்றும் வரி நிர்வாகத்தின் வரி ஏய்ப்புக்கு எதிரான திட்டங்கள் ஆகியவற்றை நிர்வகித்தல்.

கே.2 GST செயல்பாட்டில் யார் விவரங்கள் தாக்கல் செய்ய வேண்டும்?

ப.2 ஒவ்வொரு பதிவுபெற்ற வரி செலுத்தும் நபரும் - யார் வரிகள் செலுத்துவதற்கான வரம்பைத் தாண்டி விட்டார்களோ. ஒரு விநியோகஸ்தர் ஒட்டுமொத்த வருமானம் ரூபாய் ஒன்பது இலட்சத்தைக் கடந்தவுடன் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம் ஆனால் அவர் பத்து இலட்சத்தைக் கடந்த பின்னர்தான் வரி செலுத்துபவர் ஆகிறார். ஆகையினால் வரிகள் கட்டுவதற்கான வரம்பான ரூபாய் பத்து இலட்சத்தைத் தாண்டியவுடன் அவர் விவரப்பட்டிகள் தாக்கல் செய்ய வேண்டும். வேறு சில வகை நபர்களும் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதனால் விவரப்பட்டிகளும் தாக்கல் செய்ய வேண்டும். அவர்கள் மாநிலங்களுக்கு இடையிலான விநியோகஸ்தர்கள், TDS பிடிக்கப்படுபவர்கள், மின்-வர்த்தக நடத்துநர்கள், மின்-வர்த்தக நடத்துநர்கள் மூலமாக சரக்குகளை விநியோகிக்கும் விநியோகஸ்தர்கள் முதலானோர் (பார்வை: பட்டியல் III மற்றும் பதிவு அத்தியாயத்தின் கேள்வி 6.

கே.3 எந்த விதமான வெளி விநியோக விவரங்களை விவரப்பட்டியில் தாக்கல் செய்ய வேண்டும்?

ப.3 ஒரு சாதாரண பதிவு செய்த வரி செலுத்துபவர் GSTR-1ல் வெளி விநியோக விவரங்களை தாக்கல் செய்ய வேண்டும். அதில் ஒரு மாதத்தில் செய்யப்பட்ட பல்வேறு விநியோகங்கள், அதாவது பதிவு பெற்ற நபர்களுக்கான வெளி

விநியோகங்கள், பதிவு பெறாதவர்களுக்கான (உபயோகிப்பாளர்கள்) வெளி விநியோகங்கள், வரவு செலவுக் குறிப்புகளின் விவரங்கள், பூஜ்யவரி விகிதம், விதிவிலக்கு அளிக்கப்பட்டது மற்றும் GST அல்லாத விநியோகங்கள், ஏற்றுமதிகள், வருங்கால விநியோகத்திற்காகப் பெற்ற முன்பணம் முதலியன குறித்து விவரங்கள் நல்க வேண்டும்.

கே.4 GSTR-1 உடன் பரிசீலிக்கப்பட்ட விலைப்பட்டிகளின் நகல்கள் பதிவேற்றம் செய்ய வேண்டுமா?

ப.4 இல்லை. விலைப்பட்டிகளில் உள்ள சில குறிப்பிட்ட பகுதியிலான தகவல் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

கே.5 அனைத்து விலைப்பட்டிகளையும் பதிவேற்றம் செய்ய வேண்டுமா?

ப.5 இல்லை. அது B2B விநியோகமா அல்லது மாநிலத்துக்குள்ளான B2C விநியோகமா அல்லது மாநிலங்களுக்கு இடையிலான B2C விநியோகமா என்பதைப் பொறுத்தது.

B2B விநியோகங்களுக்கு, மாநிலத்துக்குள்ளாக அல்லது மாநிலங்களுக்கு இடையிலான விநியோகங்களாக இருந்தால் அனைத்து சலான்களும் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஏனென்றால் பெறுபவர்களால் ITC எடுக்கப்படும் விலைப்பட்டியை ஒப்பீடு செய்து பார்க்கப்பட வேண்டும்.

B2C விநியோகங்களில், வாங்குபவர் ITC எடுக்கப்போவதில்லை ஆதலால் பொதுவாக பதிவேற்றம் தேவையில்லை. இருந்தபோதிலும், சேருமிடம் அடிப்படையிலான கொள்கையை அமல்படுத்த மாநிலங்கள் தம்மில் ரூபாய் 2.5 இலட்சம் மதிப்புக்கு அதிகமான விலைப்பட்டிகள் B2C விநியோகங்களாக இருப்பினும் பதிவேற்றம் செய்ய வேண்டும். ரூபாய் 2.5 இலட்சத்துக்குக் குறைவான மாநிலத்துக்குள்ளான விலைப்பட்டிகள் மற்றும் அனைத்து மாநிலத்துக்குள்ளான விலைப்பட்டிகளுக்கும் மாநில வாரியான சுருக்கம் போதுமானது.

கே.6 விலைப்பட்டியில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளின் விவரத்தையும் பதிவேற்றம் செய்ய வேண்டுமா?

ப.6 இல்லை. அதாவது, பெயர்விவரத்தை பதிவேற்றம் செய்ய வேண்டியதில்லை. மாறாக, சரக்குகள் விநியோகத்திற்கு HSN குறியீட்டையும் சேவைகள் விநியோகத்திற்கு கணக்கீடு குறியீட்டையும் பதிவு செய்தால் போதுமானது. மேலும், அத்தகைய குறியீட்டின் எத்தனை இலக்கங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும் என்பது அவருடைய கடந்த ஆண்டின் விற்றுமுதலின் அடிப்படையின் பேரில் அமையும்.

கே.7 ஒவ்வொரு பரிமாற்றத்தின் மதிப்பையும் பதிவு செய்ய வேண்டுமா? பதிலீடு இல்லாத பரிமாற்றமாயின் நிலைப்பாடு என்ன?

ப.7 ஆமாம். மதிப்பு மாத்திரம் அல்லாமல், வரி விதிக்கப்படும் மதிப்பையும் பதிவு செய்ய வேண்டும். ஏனென்றால், சில வகை பர்மாற்றங்களில் இவை இரண்டும் வெவ்வேறாக இருக்கும். பதிலீடு இல்லாத பரிமாற்றமாக இருப்பின், அது பட்டியல் Iன்படி விநியோகம் என்பதால் வரி விதிக்கப்படும் மதிப்பை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

கே.8 விநியோகஸ்தரால் பதிவு செய்யாமல் விடப்படட்ட தகவலை அந்த விந்யோகத்தை பெறுபவர் தனது GSTR-2ல் பூர்த்தி செய்ய இயலுமா?

ப.8 ஆமாம். ஒரு விநியோகஸ்தரால் பதிவேற்றம் செய்யப்படாத விலைப்பட்டியை, அதை பெறுபவர் தாமே பதிவு செய்யலாம். அப்படிப்பட்ட விலைப்பட்டியின் பற்றுவரவையும் தற்காலிகமாகக் கொடுக்கப்படும். ஆனால் அது ஒப்பீடு பார்த்தலுக்கு உட்படுத்தப்படும். ஒப்பீடு செய்து பார்த்த பின்னர், விநியோகஸ்தரால் அந்த விலைப்பட்டி பதிவேற்றம் செய்யப்படாவிட்டால், அது இருவருக்கும் தெரிவிக்கப்படும். அதன் பிறகு அவ்வாறான ஒத்துப் போகாதது விநியோகஸ்தரால் சரிசெய்யப்பட்டு விட்டால் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட பற்றுவரவு உறுதி செய்யப்படும். ஆனால் அவ்வாறு தெரிவித்த பின்னரும் ஒத்துப்போகாமை தொடர்ந்தால், தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட பற்றுவரவு திரும்பப் பெறப்படும்.

கே.9 வரி செலுத்தும் நபர் GSTR-2ல் ஏதாவது பூர்த்தி செய்ய வேண்டுமா அல்லது GSTR-1லிருந்து அனைத்து விவரங்களும் தாமாகவே பதிவாகுமா?

ப.9 GSTR-2ல் பெரும்பாலான பகுதி தாமாகவே பதிவாகும். சில விவரங்கள் மட்டும் பெறுபவர் மாத்திரமே பூர்த்தி செய்ய கூடியது. அதாவது இறக்குமதி விவரங்கள், பதிவு செய்யப்படாத அல்லது தொகுப்பு வரி திட்டத்தின் கீழான வினியோகஸ்தர்கள் மற்றும் விலக்கு அளிக்கப்பட்டவர்கள்/GST அல்லாத/GST சைபர் வினியோகங்கள் முதலியன ஆகும்.

கே.10 விலைப்பட்டிகள் ஒத்துப் போகவில்லை என்றால், ITC கொடுக்கலாமா மறுக்கலாமா? மறுத்தால், வினியோகஸ்தருக்கு எதிராக என்ன நடவடிக்கை?

ப.10 GSTR-2விலான விலைப்பட்டிகள் எதிர்தரப்பின் GSTR-1 உடைய விலைப்பட்டிகளுடன் ஒத்துப் போகாவிட்டால், அத்தகைய பொருத்தமின்மையய் இருவருக்கும் தெரிவிக்க படும்; அதன் பின்னரும் அது சரி செய்யபடாவிட்டால் ITC திரும்பப் பெறப்படும். இதுபோன்ற பொருத்தமின்மை/ஒத்துப்போகாதலுக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அது, பெறுபவர் தரப்பிலான தவறாக இருக்கலாம். அப்படியான சமயத்தில், மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் தேவையில்லை. இரண்டாவதாக, வினியோகஸ்தர் விலைப்பட்டி கொடுத்திருப்பார். ஆனால் அதை பதிவேற்றம் செய்து வரி கட்டியிருக்க மாட்டார். அப்படியான சமயத்தில் வினியோகஸ்தர் மீது திரும்பப் பெறும் நடவடிக்கை எடுக்கப்படும். சுருக்கமாக, வினியோகஸ்தர் வினியோகித்து அதற்கு வரி செலுத்தாவிட்டால் அப்படிப்பட்ட ஒத்துப் போகாதது சட்டபூர்வ நடவடிக்கையில் முடியும்.

கே.11 வினியோகஸ்தர் பின்னர் தவறை உணர்ந்து தகவலைப் பதிவு செய்தால், திரும்பப் பெறப்பட்ட உள்ளீட்டு வரி பற்றுவரவின் சட்டபூர்வ நிலை என்ன?

ப.11 எந்த நிலையிலும், அடுத்த நிதி ஆண்டின் செப்டம்பர் மாதத்திற்கு முன்பாக வினியோகஸ்தர் பதிவேற்றம் செய்ய விட்டுப்போன விலைப்பட்டிளின் விவரத்தை பதிவேற்றம் செய்து அதன் மீதான வரி மற்றும் வட்டியை அவ்வாறு பதிவேற்றம் செய்த மாதத்தில் GSTR-3ன் கீழ் செலுத்து தருணத்தில் அந்த விலைப்பட்டிக்கான ITC தாமாகவே அமையபெறும். திரும்பப் பெறப்பட்ட சமயத்தில் பெறுபவர்

செலுத்திய வட்டியும் பெறுபவருக்கு GSTNன தானியங்கி அமைப்புமுறைப்படி திரும்பத் தரப்படும்.

கே.12 GSTR-2ன் விசேஷ அம்சம் என்ன?

ப.12 ஒரு விநியோகஸ்தர் அவருடைய GSTR-1ல் அளித்துள்ள விவரங்களின் அடிப்படையில் அதை பெறுபவரின் GSTR-2ல் அவர் பெற்ற விநியோகங்களின் விவரங்கள் தானியங்கி மூலம் பதிவு செய்யப்படுவது GSTR-2ன் விசேஷ அம்சம் ஆகும்.

கே.13 மறுக்கப்பட்ட ITC திரும்பத் தரப்படுமா?

ப.13 திரும்பப் பெற்ற பின்னர் அடுத்த நிதி ஆண்டின் செப்டம்பருக்கு முன்பாக விநியோகஸ்தர் விலைப்பட்டியை பதிவேற்றம் செய்தால், முன்பே பற்றுவரவு திரும்பப் பெற்றது திரும்பப் பெறும்போது செலுத்திய வட்டியுடன் திரும்பத் தரப்படும்.

கே.14 தொகுப்பு திட்டத்தின் கீழ் வரி செலுத்துபவர்கள் கூட GSTR-1 மற்றும் GSTR-2 தாக்கல் செய்ய வேண்டுமா?

ப.14 இல்லை. வெளிச் செல்லும் அல்லது உள்ளே வரும் விநியோகங்களுக்கு தொகுப்புத் திட்டத்தின் கீழ் வரி செலுத்துபவர்கள் எந்த விவரமும் தாக்கல் செய்ய வேண்டிய தேவை இல்லை. காலாண்டு முடிவடைந்த பின்னர் வரும் மாதத்தின் 1ஆம் தேதி GSTR-4 படிவத்தில் காலாண்டு விவரம் அவர்கள் தாக்கல் செய்ய வேண்டும். அவர்களுக்கு உள்ளீட்டு வரி வரவு பெறத் தகுதியில்லாததால் அவர்களுக்கு GSTR-2 உடன் எந்த சம்பந்தமும் இல்லை. அவர்கள் பெறுபவர்களுக்கு எந்த பற்றுவரவும் மாற்றிவிடுவதில்லை. எனவே அவர்களுக்கு GSTR-1 உடனும் எந்த சம்பந்தமும் இல்லை. அவர்களுடைய விவரத்தில், அவர்கள் சுருக்கத்திரட்டாக வெளி விநியோகங்களின் விவரங்களுடன் வரி செலுத்திய விவரங்கள் அறிவிக்க வேண்டும். அவர்களுடைய காலாண்டு விவரப்பட்டியிலேயே அவர்களுடைய வாங்குதல்கள் விவரங்கள் கொடுக்க வேண்டும். அதில் பெரும்பாலும் தானியங்கி மூலம் பதிவு செய்யப்படும்.

கே.15 உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர்கள் (ISDக்கள்) அவர்களுடைய விவரப்பட்டியுடன் வெளி மற்றும் உள் விநியோகங்கள் குறித்து தனியாக விவரம் தாக்கல் செய்ய வேண்டுமா?

ப.15 இல்லை. ISDக்கள் GSTR-6ல் மாத்திரம் விவரம் தாக்கல் செய்ய வேண்டும். அதில் சேவை அளிப்பவரிடம் பெற்ற பற்றுவரவு விவரங்கள் மற்றும் அவர்களால் அவர்களின் கிளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பற்றுவரவு பற்றிய தகவலை தரவேண்டும். அவர்களுடைய விவரப்பட்டியிலேயே இந்த அம்சங்கள் உள்ளதால், உள் மற்றும் வெளி விநியோகங்களுக்குத் தனி விவரம் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

கே.16 ஒரு வரி செலுத்துபவர் அவருடைய சார்பாக அவரின் பதிலீடு மேல் படித்தம் செய்யப்பட்ட வரிக்கு எவ்வாறு பற்றுவரவைப் பெறுவார்.

அந்த பற்றுவரவைப் பெற பிடித்தம் செய்பவரிடமிருந்து பெறும் TDS சான்றிதழை அவர் காண்பிக்க வேண்டியது அவசியமா?

ப.16 GSTன் கீழ் பிடித்தம் செய்தவர் அவர் செய்த பிடித்தங்களின் விவரங்களை பிடித்தம் செய்யப்பட்டவர்களின் விவரங்களுடன் பிடித்தம் செய்த மாதத்தின் அடுத்த மாதம் 10ம் தேதிக்குள்ளாக (படிவம் GSTR-7 விவரப்பட்டி) சமர்ப்பிக்க வேண்டும். பிடித்தம் செய்த விவரங்கள் பிடித்தம் செய்தவரால் பதிவேற்றம் செய்யப்பட்டது பிடித்தம் செய்யப்பட்டவரின் GSTR-2ல் தானியங்கி மூலம் பதிவு செய்யப்படும். வரி செலுத்துபவர் இந்த விவரங்களை அவருடைய GSTR-2ல் உறுதி செய்வதன் மூலம் அவருக்காக செய்யப்பட்ட பிடித்தங்களுக்கான பற்றுவரவு பெறுவார். இந்த பற்றுவரவைப் பெற அவர் எந்த நேரடியான சான்றிதழோ அல்லது மின் படிவமோ கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. சான்றிதழ் வரி செலுத்துபவரின் ஆவண பராமரிப்புக்கானது மற்றும் பொது மூலத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கே.17 யாரெல்லாம் வருடாந்தர விவரப்பட்டி தாக்கல் செய்ய வேண்டும்?

ப.17 முறைமைக்குட்படாத உட்படாத செலுத்துபவர்கள் மற்றும் தொகுப்பு வரி திட்டத்தின் கீழ் வரி செலுத்துபவர்கள் நீங்கலாக, GSTR-1 முதல் 3 வரையிலான விவரப்பட்டி தாக்கல் செய்யும் அனைத்து வரி செலுத்துபவர்களும் ஒரு

வருடாந்தர விவரமப்பட்டி தாக்கல் செய்ய வேண்டும். முறைமைக்கு உட்படாத வரி செலுத்துபவர்கள், சாதாரணமாக வசிக்காத வரி செலுத்துபவர்கள், ISDக்கள் மற்றும் பதிலீடு மேல் வரி பிடித்தம் செய்ய அங்கீகரிக்கப்பட்டவர்கள் வருடாந்தர விவரமப்பட்டி தாக்கல் செய்ய வேண்டாம்.

கே.18 வருடாந்தர விவரமப்பட்டி மற்றும் இறுதி விவரமப்பட்டி இரண்டும் ஒன்றா?

ப.18 இல்லை. வருடாந்தர விவரப்பட்டி என்பது ஒரு சாராரண பதிவு பெற்ற வரி செலுத்தும் நபர் அல்லது தொகுப்பு வரி திட்டத்தின் கீழான வரி செலுத்துபவர், தாக்கல் செய்ய வேண்டிய விவரப்பட்டு ஆகும். இருதி விவரப்பட்டி என்பது பதிவு பெற்ற வரி செலுத்துபவர்கள் தனது பதிவை ரத்து செய்ய விண்ணப்பித்த மாத்திரம் தாக்கல் செய்ய வேண்டிய விவரப்பட்டி ஆகும். இது ரத்து செய்த அல்லது ரத்தாணை தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக தாக்கல் செய்ய வேண்டும்.

கே.19 விவரப்பட்டி தாக்கல் செய்த பின்னர், சில மாற்றங்கள் செய்ய வேண்டியிருந்தால் எப்படி திருத்தியமைப்பது?

ப.19 GSTயில் தனிப்பட்ட பரிமாற்ற விவரங்களின் அடிப்படையில் விவரப்பட்டி தயாரிக்கப்படுவதால் திருத்தியமைக்கப்பட்ட விவரத்திற்கு தேவை இல்லை. ஒரு விவரத்தை மாற்றுவதற்கான தேவை விலைப்பட்டிகளையோ அல்லது பற்றுவரவுக் குறிப்புகளையோ தொகுதியாக மாற்றும்போதுதான் ஏற்படும். சமர்ப்பிக்கப்பட்ட விவரப்பட்டியை மாற்றுவதற்கு பதிலாக கணினி அந்த பரிமாற்ற விவரங்களை (விலைப்பட்டி அல்லது பற்றுவரவுக் குறிப்புகள்) மாற்ற அனுமதிக்கிறது. முன்பே அறிவிக்கப்பட்ட விவரங்களைத் திருத்துவதற்காக, வரும் காலத்தில் எந்த ஒரு GSTR-1/2வில் குறிப்பாக அட்டவணைகள் கொடுக்கப்பட்டுள்ளதில் அவைகளை மாற்றியமைக்கலாம்.

கே.20 வரி செலுத்துபவர்கள் அவர்களுடைய விவரப்பட்டிகளை எவ்வாறு தாக்கல் செய்ய வேண்டும்?

ப.20 வரி செலுத்துபவர்களுக்கு விவர அறிக்கைகள் மற்றும் விவரங்களை தாக்கல் செய்ய பல்விதமான வழிகள் உள்ளன. முதலில், அவர்களுடைய அறிகை மற்றும் விவரங்களை நேரடியாக இணையதளத்தில் பொது மூலத்தில் தாக்கல்

செய்யலாம். இருந்தபோதிலும், அதிகப்படியான விலைப்பட்டிகள் உள்ள அப்படிப்பட்ட வரி செலுத்துபவர்களுக்கு இது களைப்பை உண்டாக்குவது மற்றும் அதிக சமயம் எடுக்கும். அப்படிப்பட்ட வரி செலுத்துபவர்களுக்கு கணினி அல்லாது உபயோகிக்க தானாகப் பூர்த்தி செய்வதை பதிவிறக்கம் செய்து அதில் விவரங்களைப் பூர்த்தி செய்த பின்னர் பொது மூலத்தில் பதிவேற்றம் செய்து கொள்ளலாம். GSTN ஒரு மின் வழிமுறை GST வசதி செய்து கொடுப்பவர் (GSP) அபிவிருத்தி செய்திருக்கிறது. அது பொது மூலத்துடன் ஒருங்கிணைக்கும்.

கே.21 GSTன் கீழ் ஒரு பொறுப்புடன் செயல்படும் வரி செலுத்துபவர் தடங்கலில்லா கடைபிடிப்புக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்?

ப.21 GSTன் கீழ் மிக முக்கியமானது வெளியில் விநியோகிக்கப்படுபவைகளின் விவரங்களைப் படிவம் GSTR-1ல் குறித்த சமயத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். இதை எவ்வாறு சிறப்பாக உறுதி செய்வது என்பது வரி செலுத்துபவர் கொடுக்கும் B2B விலைப்பட்டிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து ஆகும். எண்ணிக்கை குறைவாக இருந்தால், வரி செலுத்துபவர் அனைத்து தகவலையும் ஒரே முறையில் பதிவேற்றம் செய்யலாம். இருந்த் போதிலும், விலைப்பட்டிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால், விலைப்பட்டிகளை (அல்லது பற்றுவரவுக் குறிப்புகள்) சீரான இடைவெளிகளில் பதிவேற்றம் செய்யலாம். GSTN உண்மையான கால அடிப்படையில் சீரான இடைவெளிகளில் பதிவேற்றத்திற்கு அனுமதிக்கிறது. விவர அறிக்கையை உண்மையாக சமர்ப்பிக்கும் வரை, கணினி வரி செலுத்துபவரை பதிவேற்றம் செய்த விலைப்பட்டிகளை திருத்தியமைக்கவும் அனுமதிக்கிறது. ஆகையினால் விலைப்பட்டிகளை சீரான இடைவெளிகளில் பதிவேற்றம் செய்வது எப்போதும் ஆதாயம் அளிக்கும். கடைசி நிமிடத்தில் அவசர அவசரமாக செய்யும்போது பதிவேற்றம் கடினமாகும். அதிகமான ஆபத்தாக நிறைவு பெறாமலும் தவறாகவும் இருக்கும். இரண்டாவதாக, வரி செலுத்துபவர்கள் அவர்களுக்கு வரும் விநியோகங்களுக்கான விலைப்பட்டிகளை அவர்களுடைய விநியோகஸ்தர்கள் சரியாக பதிவேற்றம் செய்கிறார்களா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இது எந்தக் கடினமும் தாமதமும் இல்லாமல்

உள்ளீட்டு வரி வரவு பெறுவதை உறுதி செய்து கொள்ள உதவும். பெறுபவர்கள் அவர்களுடைய விநியோகஸ்தர்களை அவர்களுடைய விலைப்பட்டிகளை முடியும் தேதியில் பதிவேற்றம் செய்யாமல் சீரான இடைவெளிகளில் பதிவேற்றம் செய்ய ஊக்குவிக்கலாம். பெறுபவர்கள் அவர்களுடைய விநியோகஸ்தர்கள் அவர்களுடைய விலைப்பட்டிகளை பதிவேற்றம் செய்ததைக் கணினியில் பார்க்க அனுமதிக்கும். GSTN அமைப்பு முறை ஒரு வரி செலுத்துபவரின் கடைபிடித்தல் நிலையை கண்காணிக்கவும் முக்கியமாக ஒரு விநியோகஸ்தர் கொடுத்த விலைப்பட்டிகளின் மூலமான தாமாகவே பிடிக்கப்பட்டவைகளின் விவரங்களை அவருடைய விநியோகங்களை குறிப்பிட்ட நேரத்தில் பதிவேற்றம் செய்ததைக் கண்காணித்தல். GSTன் பொது மூலம் பான் இந்தியா விவரங்கள் ஒரு இடத்தில் இருபதால் வரி செலுத்துபவர்களுக்கு உபயோகமான சேவைகளைச் செய்ய இயலும். விலைப்பட்டிகள் சுலபமாக நிரந்தர பதிவேற்றம் செய்ய முயற்சிகள் எடுக்கப்படுவதால், நிலைமைப்படியான முறை மூலம் மேம்படுத்தி இந்த இலக்கை அடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வரி செலுத்துபவர்கள் இந்த நிலைமைப்படியான முறையை திறம்படி உபயோகிப்பதன் மூலம் GSTஐ சுலபமாகவும் கடினம் இல்லாமலும் கடைபிடிக்கலாம்.

கே.22 வரி செலுத்துபவர் விவரப்பட்டியை அவரே தாக்கல் செய்ய வேண்டுமா?

ப.22 இல்லை. ஒரு பதிவு பெற்ற வரி செலுத்துபவர் அவருடைய விவரப்பட்டியை மத்திய அல்லது மாநில வரி நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரி விவரப்பட்டி தயாரிப்பவர் மூலமாக தாக்கல் செய்யலாம்.

கே.23 குறிப்பிடப்பட்ட தேதிக்குள் விவரம் தாக்கல் செய்யாவிட்டால் பின் விளைவு என்ன?

ப.23 ஒரு பதிவு பெற்ற வரி செலுத்துபவர் குறிப்பிடப்பட்ட தேதிக்குப் பின்னர் விவரம் தாக்கல் செய்தால் அவர் தாமதத்திற்கான கட்டணமாக ஒரு நாளைக்கு ரூபாய் நூறு என்று அதிகப்படியாக ரூபாய் ஐயாயிரம் வரை செலுத்த வேண்டும்.

## 13. மதிப்பீடும், தணிக்கையும்

கேள்வி 1. சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட வரியை செலுத்துவது எந்த நபர் பொறுப்பேற்க வேண்டும் ?

பதில்.சட்டத்தின் கீழ் பதிவு செய்த ஒவ்வொரு நபரும்வரி செலுத்த பொறுப்புள்ளவர்கள். பிறகு பிரிவு 27ன் கீழ் செலுத்தப்பட்ட வரிக்கு விவர அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும்.

கேள்வி 2. பெறுநரால் திருப்பி அனுப்பப்பட்ட பொருட்களுக்கு MGLல், ஏதேனும் வரிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதா?

பதில். ஆமாம் உள்ளது, MGL பிரிவு 44ல் இதற்கான விளக்கம் உள்ளது. சம்பந்தப்பட்ட விலைப்பட்டியிலுள்ள தேதியிலிருந்து 6 மாதத்திற்குள், ஒரு உள்நோக்கி வழங்கலாக, பெறுநரால் திருப்பி அனுப்பப்பட்ட பொருட்களுக்கு, ஏற்கனவே செலுத்தப்பட்ட உள்ளீட்டு வரி வரவுக்கு இணையாக அந்த உள்நோக்கி வழங்கல் பொருட்களுக்கும் வரி செலுத்த வேண்டும். வழங்கப்பட்ட பொருட்களின் விலைப்பட்டியிலுள்ள தேதியிலிருந்து 6 மாதத்திற்குள், பெறுநர் பொருட்களை திருப்பி அனுப்பினால், அந்த அசல் தேதியில் செலுத்தப்பட்ட அதே அளவு வரித் தொகையைத் தான் அவர் வரியாக செலுத்த வேண்டும் என்பதை அந்த விதிமுறை உறுதி செய்கிறது. அசல் தேதியிலிருந்து 6 மாதத்திற்கு பிறகு பெறுநரால் திருப்பி அனுப்பப்பட்ட பொருட்களின் விலைப்பட்டி தேதியன்று என்ன வரி விகிதம் நிலவுகிறதோ அந்த வரி விகிதமே திருப்பி அனுப்பப்பட்ட பொருட்களுக்கும் பொருந்தும்.

கேள்வி 3. ஏப்ரல் 2017ல், ‘A’ பொருட்களை ‘B’க்கு வழங்கினார். அந்தப் பொருட்களை ‘B’ ஜூன் 2017ல் ‘A’க்கு திருப்பி அனுப்பினார். அந்த பொருட்களுக்கு ‘A’ 18 % என்ற விகித அடிப்படையில் வரியாக விதித்திருந்தார். ஆனால், மே 2017ல், வரி விகிதம் 18.5% ஆக திருத்தப்பட்டது. இந்த நிலையில், உள்நோக்கி வழங்கலில் திருப்பியனுப்பப்பட்ட பொருட்களின் மீது ‘B’ யிடமிருந்து ‘A’ க்கு செலுத்த வேண்டிய வரி எவ்வளவு?

பதில். 18%

கேள்வி 4. வரி செலுத்தும் நபர் தற்காலிக அடிப்படையில் வரி செலுத்துவது எப்போது?

பதில். ஒரு வரி செலுத்தும் நபர், தன் சுய ஆய்வின் அடிப்படையில் வரி செலுத்த விரும்பினால், தற்காலிக அடிப்படையில் வரி செலுத்த விரும்புவதற்கான விண்ணப்பத்தை வரி செலுத்தும் நபர் அளிக்க வேண்டும். அந்த விண்ணப்பம்

அதற்குரிய அதிகாரியால் அனுமதிக்கப்பட வேண்டும். தற்காலிக அடிப்படையில் வரி செலுத்துவதற்கு தன்னிச்சையாக ஆணை எந்த ஒரு அதிகாரியும் வழங்க முடியாது. MGLன் சட்டப்பிரிவு 44A இதை நிர்வகிக்கிறது. ஒரு ஆணையை அதற்குரிய அதிகாரி பிறப்பித்த பின்னரே தற்காலிக அடிப்படையில் வரி செலுத்த முடியும். தற்காலிக அடிப்படையில் வரி செலுத்த விரும்பும் நபர் அதற்காக அனுமதி பெற தகுந்த காரணங்களுடன் அதற்கரிய அதிகாரியிடம் எழுத்துமூலம் விண்ணப்பிக்க வேண்டும். அதை வரி செலுத்தும் நபர் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் எங்கே அவரால் தீர்மானிக்க முடியாதென்றால்:

அ. சரக்குகளின் மதிப்பு அல்லது சேவைகள் அவரால் வழங்கப்பட்டிருந்தால், அல்லது

ஆ. அவரால் வழங்கப்பட்ட சேவைகளுக்கோ அல்லது சரக்குகளுக்கு பொருந்தக்கூடிய வரி விகிதத்தை தீர்மானித்தல்.

இம்மாதிரி நிகழ்வுகளில், அதற்குரிய அதிகாரி தீர்மானித்தபடி வரி செலுத்தும் நபர் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் பிணை அல்லது ஈட்டுத் தொகையையோ உறுதி பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்வி 5. இறுதி மதிப்பீடு தயார் செய்வதற்கு தேவையான காலக்கெடு என்ன?

பதில். தற்காலிக மதிப்பீடு செய்வதற்கு ஆணை பிறப்பித்த தேதியிலிருந்து ஆறு மாதத்திற்குள் அதற்குரிய அதிகாரி இறுதி மதிப்பீடு ஆணை நிறைவேற்ற வேண்டும். இருப்பினும், தகுந்த காரணங்களை காண்பித்து, அதை எழுத்து மூலமாக பதிவு செய்தால், மேலேக் குறிப்பிட்ட ஆறு மாதக் காலக்கெடு மேலும் நீட்டிப்பதற்கு வாய்ப்புள்ளது.

அ. இணை அல்லது கூடுதல் ஆணையரால் மேலும் ஆறு மாதத்திற்கு மிகாமல் நீட்டிப்பு செய்யலாம். மற்றும்

ஆ அந்தக் கால நீட்டிப்பு பொருத்தமானதென்று ஆணையர் கருத வேண்டும்.

கேள்வி 6. தற்காலிக மதிப்பீடை விட இறுதி மதிப்பீடு செய்யும் போது வரிக் கட்டணம் அதிகமானால், வரி செலுத்தும் நபர் கட்ட வேண்டிய மீதப் பணத்திற்கு வட்டியும் செலுத்த வேண்டுமா?

பதில். ஆமாம். காலக்கெடு தேதியிலிருந்து தற்போதைய தேதி வரை ஏற்கனவே செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையுடன், வட்டியையும் செலுத்த வேண்டும்.

கேள்வி 7. பிரிவு 45ன் கீழ் MGLன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விவர பட்டியல் முரண்பட்டவைகளாக கண்டுபிடிக்கப்பட்டு. அதற்கான சரியான விளக்கங்கள் தரப்படாவிட்டால், அதிகாரியால் என்ன நடவடிக்கைகள் எடுக்க முடியும்?

பதில். வரி செலுத்தும் நபர் தகவல் தெரிவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் திருப்திகரமான விளக்கத்தை வழங்காவிட்டாலும் (நீட்டிப்பு அதற்குரிய அதிகாரியை பொருத்தது), அல்லது முரண்பாடுகளை ஏற்றுக் கொண்டபின் அனுமதிப்பட்ட காலக்கெடுவுக்குள், அதை திருத்தம் செய்யாவிட்டால், அதற்குரிய அதிகாரி பின்வரும் ஏதேனும் விதிமுறைகளின் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம்:

அ. சட்டப்பிரிவு 49ன் கீழ் தணிக்கை நடவடிக்கைகளை நடத்த வேண்டும்.

ஆ. இந்த நோக்கத்திற்காகவே ஆணயரால் நியமிக்கப்பட்ட ஒரு சார்ட்டர்ட் அக்கௌண்டன்ட்டோ அல்லது விலை கணக்காளரோ (Cost), பிரிவு 50ன் கீழ், சிறப்பு தணிக்கை நடவடிக்கைகளை வழிகாட்டுவர்.

இ. பிரிவு 60ன் கீழ் ஆய்வு, பரிசோதனை, பறிமுதல் போன்றவற்றை செயல்படுத்துதல், அல்லது

ஈ. நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்று, சட்டப்பிரிவு 51கீழ் வரியை தீர்மானம் செய்ய வேண்டும்.

கேள்வி 8. பிரிவு 46ன் கீழ், மதிப்பீடு நிறைவு செய்வதற்கு முன் வரி செலுத்தும் நபருக்கு ஏதேனும் அறிவிப்பு தர வேண்டுமா?

பதில். இந்த “சிறந்த மதிப்பீடு தீர்ப்பு” தொடர்பாக, வரி செலுத்தும் நபருக்கு எந்தவித அறவிப்பையும் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை.

கேள்வி 9. சட்டப்படி வரி செலுத்தும் ஒரு நபர், விவர அறிக்கையை தாக்கல் செய்ய தவறினால், அதற்குரிய அதிகாரியால் பிரிவு 27 அல்லது 31ன் கீழ் அவர் மீது என்ன சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியும்?

MGLன் 46வது சட்டப்பிரிவின்படி, குறிப்பிட்டக் காலக்கெடுவுக்குள் குறைந்தபட்சமாக பதினைந்து நாட்களுக்குள் தேவையான விவர அறிக்கை தாக்கலை சமர்ப்பிக்கும்படி, தவறு செய்த வரி செலுத்தும் நபருக்கு, MGLன் 32வது சட்டப்பிரிவின்படி, அதற்குரிய அதிகாரி ஒரு நோட்டிஸை முதலில் அனுப்ப வேண்டும். வழங்கப்பட்ட காலக்கெடுவுக்குள், வரி செலுத்தும் நபர் விவர அறீக்கை தாக்கல் செய்யத் தவறினால், அதற்குரிய அதிகாரி இது தொடர்பாக அவரிடமுள்ள ஆவணங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, தவறு செய்த அந்த

நபரின் வரி பாக்கியின் மதிப்பீடுகளை பரிசீலித்து ஒரு சிறப்பு தீர்ப்பை வழங்குவார். MGLன் 46வது சட்டப்பிரிவு, இதற்கான அதிகாரத்தை வழங்கியுள்ளது.

கேள்வி 10. 46வது சட்டப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சிறப்பு மதிப்பீடு தீர்ப்பாணையை, எந்த சூழ்நிலையில் திரும்பப் பெற முடியும்?

பதில். சிறப்பு தீர்ப்பு மதிப்பீடு ஆணை கிடைத்த முப்பது நாட்களுக்குள் தவறு செய்த காலத்திற்கான சரியான விவர அறிக்கை தாக்கலை வரி செலுத்தும் நபர் சமர்ப்பித்து விட்டால் ( ), MGLன் 46வது சட்டப்பிரிவின் கீழ் அதற்குரிய அதிகாரியால் வழங்கப்பட்ட சிறப்பு தீர்ப்பு ஆணை தானாகவே திரும்பப் பெறப்பட்டு விடிம்.

கேள்வி 11. பிரிவு 46, 47ன் கீழ் ஆணை பிறப்பிப்பதற்கான காலவரம்பு என்ன?

பதில். வருடாந்திர வருமான வரி தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று அல்ரலது ஐந்து வருடம் என்று பிரிவு 46, 47ன் கீழ் ஒரு மதிப்பீடு ஆணை வழங்குவதற்கான காலவரம்பு ஆகும்.

கேள்வி 12. வரி செலுத்த வேண்டிய நபர், பதிவு செய்ய தவறினால், இது தொடர்பாக அவருக்கான சட்ட நடவடிக்கை என்ன?

பதில். இம்மாதிரி வழக்குகளில்,MGLன் 46வது சட்டப்பிரிவு, வரி பாக்கியை மதிப்பீடு செய்து, இது தொடர்பான வரிக் காலத்திற்கு அதற்கான சிறப்பு தீர்ப்பை அதற்குரிய அதிகாரி வழங்கலாம். இருப்பினும், செலுத்தப்படாத வரித் தொடர்பான நிதி ஆண்டிற்கான விவர அறிக்கை தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து, ஐந்து வருட காலக்கட்டத்திற்குள் இந்த ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.

கேள்வி 13. எந்த சூழ்நிலையில் வரி அதிகாரி சுருக்கமாக் மதிப்பீடை முன்னெடுக்க முடியும்?

பதில். MGLன் 48வது சட்டப்பிரிவின்படி, வட்டி வருவாயை பாதுகாப்பதற்காக எப்போது தொகுப்பு மதிப்பீடை முன்னெடுக்கலாம் என்றால்:

அ. சட்டப்படி வரி செலுத்த வேண்டிய நபர், வரி பாக்கி வைத்துள்ளார் என்பதற்கு அதற்குரிய அதிகாரியிடம் தகுந்த ஆதாரம் இருக்க வேண்டும், மற்றும்

ஆ தாமதமாக வழங்கப்படும் மதிப்பீடு ஆணையால் வட்டி வருவாய்க்கு மிக மோசமான பாதிப்பு ஏற்படலாம் என்று அதற்குரிய அதிகாரி நம்பும் போதும்,

இணை ஆணையிரிடமிருந்தோ அல்லது கூடுதல் ஆணையரிடமிருந்தோ அனுமதி பெற்ற பின்னரே அம்மாதிரி ஆணைகளை பிறப்பிக்க முடியும்.

கேள்வி 14. சுருக்கமான மதிப்பீடு ஆணைக்கு எதிராக, ஒரு வரி செலுத்தும் நபருக்கு மேல்முறையீடைத் தவிர வேறு ஏதாவது வழியுள்ளதா?

பதில். ஒரு வரி செலுத்த வேண்டிய நபருக்கெதிராக வழங்கப்பட்ட தொகுப்பு மதிப்பீடு ஆணையை திரும்பப் பெறக் கோரி, ஆணைக் கிடைத்த தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் சட்டவரையறைக்குட்பட்ட கூடுதல் ஆணையரிடமோ அல்லது இணை ஆணையரிடமோ அந்த நபர் விண்ணப்பிக்கலாம். அந்த அதிகாரி, ஆணை வழங்கப்பட்டது தவறு என்று கண்டறிந்தால், அதை திரும்பப் பெற முடியும். மேலும், MGLன் 51வது பிரிவின்படி, வரி பாக்கியை தீர்மானிக்கும்படி அதற்குரிய அதிகாரிக்கு வழிகாட்டலாம். சுருக்கமான் மதிப்பீடு ஆணை தவறு என்று கண்டறிந்தால், கூடுதல் ஆணையரோ அல்லது இணை ஆணையரோ தனது சொந்த தீர்மானமாக அதே மாதிரி நடவடிக்கையை பின்பற்றலாம். (MGLன் 48வது பிரிவு).

கேள்வி 15. வரி செலுத்த வேண்டிய நபருக்கு சுருக்கமான மதிப்பீடு ஆணை கட்டாயம் வழங்கப்பட வேண்டுமா?

பதில். தேவையில்லை. இம்மாதிரி குறிப்பிட்ட சில வழக்குகளில், பொருட்கள் போக்குவரத்தில் இருந்தாலோ அல்லது கிடங்கில் சேமித்து வைக்கப்பட்டிருந்தாலோ, மேலும் அவை அந்த பொருட்களைப் பொறுத்து வரி செலுத்த வேண்டிய நபர் அறுதியிட்டு குறிப்பிடாத்தால், அந்த பொருட்களுக்கு பொறுப்புள்ள நபரே வரி செலுத்த வேண்டியவராக கருதப்படுவார். வரியும் மதிப்பீடு செய்யப்படும். (MGLன் 48வது பிரிவு).

கேள்வி 16. வரி செலுத்துபவருக்கான தணிக்கையை செய்வது யார்?

பதில். MGLன் 49வது பிரிவின்படி, பொதுவான அல்லது குறிப்பிட்ட ஆணையரின் ஆணையால், அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு CGST அல்லது SGST அதிகாரியால் வரி செலுத்துபவரை தணிக்கை செய்வர். நேரமும், தணிக்கை முறைகளை உரிய காலத்தில் வகுத்துரைக்கப்படும்.

கேள்வி 17. தணிக்கை நடத்துவதற்கு முன் ஏதேனும் முன்னறிவிப்பு தேவையா?

பதில். ஆமாம். முன்னறிவிப்பு தேவை. வரி செலுத்த வேண்டிய நபருக்கு தணிக்கை நடைபெறப் போகும் தகவலை குறைந்தது 15 நாட்களுக்கு முன்பாகவே தெரிவிக்க வேண்டும்.

கேள்வி 18. தணிக்கையை எத்தனை கால அவகாசத்திற்குள் நடத்தி முடிக்க வேண்டும்?

பதில். தணிக்கை செய்ய தொடங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் தணிக்கையை முடிப்பதற்கான கால அவகாசம் தேவைப்படுகிறது அல்லது ஆணையரின் அனுமதியுடன் மேலும் அதிகபட்சமாக 6 மாதத்திற்கு மிகாத கால நீட்டிப்புக்குள் முடிக்க வேண்டும்.

கேள்வி 19. “தணிக்கையின் தொடக்கம்” என்றால் பொருள் என்ன?

பதில் “தணிக்கையின் தொடக்கம்”என்ற வார்த்தை மிகவும் முக்கியமானது, ஏனெனில், தொடக்கத் தேதியை ஆதாரமாகக் கொண்டுதான் தணிக்கை முடிப்பதற்கானநேரம் முடிவு செய்யப்படுகின்றது.

அ. தனிக்கை செய்பவர், எப்பொழுது தனிக்கை செய்வதற்கு பதிவுகளை / கணக்குகளை கேட்கின்றாரோ அல்லது எப்பொழுது அவர்கள்ச சில பதிவுகள் / கணக்குக.ள் சமர்பிக்கபடுகின்றதோ, அல்லது

ஆ. எவ்விடத்தில் தணிக்கை ஆரம்பிக்கப்படுகிறதோ அந்நாளே தணிக்கையின் தொடக்கமாகும்.

கேள்வி 20. வரி செலுத்தும் நபருக்கு தணிக்கைக்கான நோட்டீஸ் கிடைக்கப்பெறும் போது, அவர் செய்யவேண்டிய கடமைகள் என்ன?

பதில். வரி செலுத்தும் நபர் செய்ய வேண்டியது:

அ. இருக்கின்ற கணக்குகள் / பதிவேடுகளை பரிசோதித்தப்பதற்கான வசதிகளை செய்தல் அல்லது அதிகாரிகள் கேட்பனவற்றை தருதல்

ஆ. தணிக்கை செய்யும் போது அதிகாரிகளுக்குத் தேவைப்படும் அனைத்து தகவல்களையும் வழங்குதல்

இ. குறிப்பிட்ட நேரத்தில் தணிக்கையை நிறைவு செய்ய உதவி புரிதல்

கேள்வி 21. தணிக்கை செய்து முடித்தபின் அதற்குரிய அதிகாரியின் நடவடிக்கைகள் என்ன?

பதில். தணிக்கையின் போது கண்டறியப்பட்டவை,கண்டறியப்பட்டதற்கான காரணங்கள், மேலும் அம்மாதிரி கண்டறியப்பட்டவைகளின் பொருட்டு அதன்மீதான வரி செலுத்துபவருடைய உரிமை மற்றும் கடமை போன்றவைப் பற்றி அதற்குரிய அதிகாரி வரி செலுத்தும் நபரிடம் எந்த கால தாமதமும் இல்லாமல் உடனடியாக தெரிவிக்க வேண்டும்.

கேள்வி 22. எந்தச் சூழ்நிலையில் சிறப்பு தணிக்கை நடத்தப்படும்?

பதில். நுண்ணாய்வு, புலணாய்வு முதலியவைகள் நடைபெறும் சமயத்தில், அது மிகவும் சிக்கலான வழக்கு என்று தெரிய வரும் போதும், வருவாயில் அதிக தேக்க நிலை ஏற்படும் சமயத்தின் போதும், இம்மாதிரியானதொரு சிறப்பு தணிக்கை குறிப்பிட்ட சூழ்நிலையில் நடத்தப்படுகின்றது. MGLன் 50வது சட்டப்பிரிவு, இதற்கான அதிகாரத்தை வழங்கியுள்ளது.

கேள்வி 23. சிறப்பு தணிக்கைகான நோட்டீஸை யார் வழங்க முடியும்?

பதில். ஆணையரின் முன் அனுமதி பெற்ற பின், ஒரு துணை ஆணையரோ அல்லது உதவி ஆணையரோ இந்த சிறப்பு தணிக்கை நோட்டீஸை வழங்க முடியும்.

கேள்வி 24 சிறப்பு தணிக்கையை யார் நடத்துவாரகள்?

பதில் ஆணையரால் நியமிக்கப்பட்ட சார்ட்டர்ட் அக்கௌண்டன்ட்டோ அல்லது விலை கணக்காளரோ (Cost), இந்த சிறப்பு தணிக்கையை நடத்துவார்.

கேள்வி 25. தணிக்கை அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான கால வரம்பு என்ன?

பதில். 90 நாட்களுக்குள் தணிக்கை அறிக்கையை அந்த ஆடிட்டர் சமர்ப்பிக்க வேண்டும் அல்லது மேலும் நீட்டிக்கப்பட்ட கால வரம்பான 90 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்வி 26. சிறப்பு தணிக்கைக்கான செலவை யார் ஏற்றுக் கொள்வார்?

பதில். விசாரணை, தணிக்கை மற்றும் ஆடிட்டருக்கான சம்பளம் உட்பட அனைத்து செலவுகளையும் தீர்மானித்த ஆணையரே அனைத்து செலவுகளையும் எற்றுக் கொள்வார்.

கேள்வி 27 சிறப்பு தணிக்கைக்குப் பின் வரி அதிகாரிகள் என்ன நடவடிக்கைகள் எடுப்பார்கள்?

பதில். MGLன் 51வது சட்டப்பிரிவின் கீழ், சிறப்பு தணிக்கையின் கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வறிக்கையின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 14. திருப்பிக் கொடுத்தல்:

கேள்வி 1 திருப்பிக் கொடுத்தல் என்றால் என்ன?

பதில். MGLன் 38 பிரிவில் திருப்பிக் கொடுத்தல் பற்றி விவாதிக்கப்படுகிறது. பிரிவு 38 (2)ன் படி "திருப்பிக் கொடுத்தல்" என்பது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகள் மீதான வரியை திருப்பிக் கொடுத்தல் அல்லது உள்ளீடுகள் மீது அல்லது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகளில் பயன்படுத்த உள்ளீடு சேவைகள் அல்லது ஏற்றுமதி என்று கருதப்பட்ட சரக்குகள் வழங்கலின் மீதான வரியை திருப்பிக் கொடுத்தல், அல்லது பயன்படுத்தப்படாத உள்ளீட்டு வரி வரவை திருப்பிக் கொடுத்தல் போன்றவைகள் உள்ளடக்கியது

கேள்வி 2 பயன்படுத்தப்படாத உள்ளீட்டு வரி வரவை திருப்பிக் கொடுக்க அனுமதி உண்டா?

பதில். அனுமதி உண்டு. பிரிவு 38ன் துணைப் பிரிவு (2)ல் குறிப்பிட்டுள்ளபடி, பின்வரும் நிகழ்வுகளுக்கு மட்டும்:-

அ. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான ஏற்றுமதி சுங்க வரியை செலுத்தப்படவில்லையெனில்:

ஆ சேவைகள் ஏற்றுமதி

இ. வெளியீடு வரி வகிதத்தைவிட உள்ளீடு வரி விகிதம் எங்கே அதிகமாயிருக்கின்றதோ, அதன் பொருட்டு உள்ளீட்டு சேர்ந்துவிடும்.

கேள்வி 3. வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு இன்னும் ஏற்றுமதி சுங்க வரி கட்டவேண்டியிருக்கும் நிலையில், பயன்படுத்தப்படாத ITCஐ திருப்பிக் கொடுக்கப்படுமா?

பதில். இல்லை. கொடுக்கப்படமாட்டாது. (MGLன் பிரிவு 38(2) இரண்டாவதில் வழிவகையுள்ளது)

கேள்வி 4. GST அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, நிதியாண்டின் இறுதியில் கையிருப்பாக இருக்கும் பொருட்களுக்கான ITCஐ திருப்பிக் கொடுக்க இயலுமா?

பதில். கொடுக்க முடியாது. அது அடுத்த ஆண்டிற்கு முன்னெடுத்துச் செல்லப்படும்.

கேள்வி. 5. ஒரு வரி செலுத்தும் நபர் மாநிலத்திற்குள் / மாநிலத்திற்கிடையில் வழங்கப்பட்ட பொருட்களுக்கு, தவறுதலாக செலுத்தப்பட்ட IGST/CGST/SGST, பின்னர்

அவை சரிசெய்யப்பட்டு விட்டது என்று வைத்துக் கொள்வோம். IGST அல்லது மாறாக தவறுதலாக செலுத்தப்பட்டவைகளை CGST/SGSTல் சரி செய்ய முடியுமா?

பதில். முடியாது, அதற்குரிய வரியை கட்டாயமாக செலுத்த வேண்டும். மேலும், தவறுதலாக செலுத்தப்பட்ட வரியை திரும்பப் பெறுவதற்காக உரிமைக் கோரலாம்.

(IGST பிரிவு 30 மற்றும் GST பிரிவு 53)

கேள்வி 6. தூதரகங்களால் அல்லது ஐக்கிய நாடுகளால் வாங்கப்படும் பொருட்களுக்கு வரி விதிக்கப்படுமா அல்லது விலக்கப்படுமா?

பதில். அவைகளுக்கு வரி விதிக்கப்படும், பின்னர், திருப்பிக் பெறக் கோரலாம். [ஐக்கிய நாடுகள் அமைப்புகள் மற்றும் தூதரகங்கள் அல்லது தூதரகங்களுக்கு ஒரு பிரத்யேக அடையாள எண் (UIN) தேவைப்படுகின்றது. அவர்கள் கொள்முதல் செய்யும் பொருட்கள் மீண்டும் வெளியிலே வழங்கப்படும் போது வழங்குநருக்கு இந்த எண் பயன்படும் மேலும், அவர்களுக்கு வரியை திரும்பப் பெற அனுமதி கிடைக்கும். விதியில் ஒரு தனிப்பட்ட நடைமுறை இதற்கெனஅறிவிக்கப்பட்டுள்ளது. GST பிரிவு 19(6)]

கேள்வி 7. திருப்பி கொடுப்பதற்கான கால வரம்பு என்ன?

பதில் MGLன் 38வது பிரிவில் வழங்கப்பட்ட விளக்கத்தின்படி, சம்பந்தப்பட்ட தேதியிலிருந்து காலாவதியாவதற்கு 2 வருடங்களுக்கு முன்னரே அந்த நபர் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்வி 8. திருப்பிக் கொடுத்தலில், நியாயமற்ற செறிவூட்டல் கோட்பாட்டு பொருந்தமாகுமா?

பதில். பொருந்தும். ஏற்றுமதிகள் மற்றும் பயன்படுத்தப்படாத ITCஐ திருப்பிக் கொடுத்தல் தவிர மற்றவைகளுக்குப் பொருந்தும், பிரிவு 38 (2) (மேற்குறிப்பிட்ட 2 வது)

கேள்வி 9. வரியை, நுகர்வோர்க்கு மாற்றப்பட்டும் போது, திருப்பிக் கொடுப்பதற்கு அனுமதி கிடைக்குமா?

பதில் அனுமதி கிடைக்கும். இருப்பினும், தீர்மானிக்கப்பட்ட தொகை நுகர்வோர் நல நிதியின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

கேள்வி 10. திருப்பிக் கொடுப்பதற்கான கால வரம்பு ஏதாவது உள்ளது?

பதில். இருக்கிறது.சாதாரணமாக அனைத்து கோரிக்கைகளுக்கும் 90 நாட்களாகும். ஆனால், ஒரு சில நிகழ்வுகளில், பிரிவு 38ன் துணைப் பிரிவு (4A) குறிப்பிட்டுள்ளபடி, ஏற்றுமதியாளர்களில் ஒரு சில பிரிவினர்களுக்கு அவர்கள் திரும்பப் பெறக் கோரிய மொத்தத் தொகையில் 80% திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். மூன்று மாதத்திற்குள், திருப்பி கொடுக்காவிடில், வட்டியுடன், வரிதுறை தரவேண்டும்.

கேள்வி 11. திருப்பிக் கொடுப்பதை துறையால் தடுத்து நிறுத்த முடியுமா?

பதில். நிறுத்த முடியும். திருப்பிக் கொடுப்பதை பின்வரும் சூழ்நிலைகளில் தடுத்து நிறுத்த முடியும்:

- பதிவு செய்த விற்பனையாளர், அவர் விவர அறிக்கை தாக்கல் செய்யும் வரை வரி விவர அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லையெனில்;
- பதிவு செய்த ஒரு வரி செலுத்தும் நபர், செலுத்த வேண்டிய வரி, வட்டி அல்லது அபராதத்தை, கட்டவேண்டிருந்தால், மேல்முறையீடு அதிகாரி / தீரவாணையம் / நீதிமன்றத்தால் நிறுத்தி வைத்த அந்த வரி, வட்டி அல்லது அபராதத்தை, தவிர, அவர் செலுத்தும் வரை; [ஏதாவது விற்பனையாளர் திருப்பிப் பெறக்கூடிய தொகையிலிருந்து, செலுத்தப்படாத வரி உள்ளதா என்பதைஅதற்குரிய அதிகாரி கண்டறிய வேண்டும்]
- முறையீடின் கீழ் திருப்பிக் கொடுக்கும் ஆணையினால் ஆணையரோ / குழுவோ திருப்பிக் கொடுப்பதை தடுத்து நிறுத்தலாம். மேலும், அவர் அம்மாதிரியான திருப்பிக் கொடுப்பதை அனுமதிக்கும் முடிவை எடுத்தால் அது வருவாயை மிக மோசமாக பாதிக்கும் - (MGLன் பிரிவு 38(9))

கேள்வி 12. பிரிவு 38(9) கீழ் திருப்பிக் கொடுத்தல் நிறுத்தி வைக்கப்பட்டத் தொகைக்கு, மேலே கூறியவற்றை பிரிவு 11(C)ல் விவாதிப்பட்டபடி, வரி செலுத்தும் நபருக்கு வட்டி வழங்கப்படுமா?

பதில். மேல்முறையீடு அல்லது மேல் நடவடிக்கைகளின் விளைவாக, வரி செலுத்தும் நபர், பணத்தை திரும்பப் பெறுவதோடு மட்டுமல்லாமல் அதற்கான வட்டியை பெறவும் உரிமையுடையவர் ஆவார்.

கேள்வி 13. திருப்பிக் கொடுப்பதற்கு ஏதாவது குறைந்தபட்ச தொகையின் தொடக்கம் என்ன?

பதில். தொகை ரூ. 1000/-க்கும் குறைவாகயிருந்தால், திருப்பி கொடுத்தல் அனுமதிக்கப்பட மாட்டாது. - (MGLன் பிரிவு 38(11))

கேள்வி 14. முந்தைய சட்டத்தின்படி எழுந்த திருப்பிக் கொடுத்தலில் எவ்வளவு திருப்பிக் கொடுக்கப்படும்?

பதில். முந்தைய சட்டத்தின்படி திருப்பி கொடுக்கப்பட வேண்டியவைகள், முந்தைய சட்டத்தின் படியே திருப்பிக் கொடுக்கப்படும். மேலும், அவை பணமாகவே கொடுக்கப்படும் (CGSTன் கீழ்) அல்லது முந்தைய சட்ட விதிகளின் படி (SGSTன் கீழ்) வழங்கப்படும். ITCயாக வழங்கப்படமாட்டாது. (MGLன் பிரிவு 156, 157, மற்றும் 158)

கேள்வி 15. ஆவணங்களை பரிசோதிப்பதற்கு முன்பே, பணத்தை திருப்பி கொடுக்க முடியுமா?

பதில். விற்பனையாளர்களில் ஒரு சில பிரிவினருக்கு மட்டும், சூழ்நிலை மற்றும் விதிகளுக்குட்பட்டு பரிசோதனைக்கு முன்பே 80% திருப்பிக் கொடுப்பதற்கு அனுமதிக்கலாம் என்று ஏற்றுமதி திருப்பிக் கொடுத்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது, பிரிவு 38 (4A)

கேள்வி 16. ஏற்றுமதியின் கீழ் திருப்பி கொடுக்கப்படும் போது, திருப்பிக் கொடுத்தலில் BRCன் அனுமதி அவசியமா?

பதில். ஏற்றுமதியின் விற்றுமுதல் தகவல்களை சமர்ப்பிப்பதற்கு, ஏற்றுமதி செய்த தேதியிலிருந்து ஒரு வருட கால அவகாசம் இருப்பதால், திரும்பப் பெற விண்ணப்பிக்கும் நேரத்தில் BRC இருக்காது. ஆனால், ஏற்றுமதியின் விற்றுமுதல் தகவல்கள் கால அவகாசத்திற்கே முன்பே பெறப்பட்டால், BRC இருக்கும். அதிகபட்ச கால அவகாசமான ஒரு வருடத்திற்குள் அல்லது RBI யினால் நீட்டிப்பு செய்யப்பட்ட காலத்திற்குள் BRC சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், பணத்தை திருப்பிக் கொடுக்கலாம். DGFTன் e-BRC பிரிவை GST பிரிவுடன் ஒன்றிணைக்கப்பட்டு விடும். இருந்தாலும், BRC சேவைகளை ஏற்றுமதி செய்யும் பொருட்டு, கண்டிப்பாக சமர்பிக்க வேண்டும்.

கேள்வி 17. ஏற்றுமதிக்கோ அல்லது ஏற்றுமதிகள் என்று கருதப்பட்டவைக்கோ இந்த நியாயமற்ற செறிவூட்டல் கோட்பாட்டு பொருந்துமா?

பதில். ஒரு வேளை சரக்குகள் மற்றும் சேவைகளின் உண்மையான ஏற்றுமதிகளை பெறக்கூடியவர் வரி செலுத்தப்படும் பகுதிக்கு அப்பாலிருந்தால், இந்த நியாயமற்ற செறிவூட்டல் கோட்பாட்டு பொருந்தாது. இருப்பினும், ஏற்றுமதியாகக் கருதப்படுபவைகளுக்கு இது பொருந்தும்.

கேள்வி 18. அவருடைய வழக்கிற்கு, இந்த நியாயமற்ற செறிவூட்டல் கோட்பாட்டு பொருந்தாது என்பதை ஒரு வரி செலுத்தும் நபர் எப்படி நிரூபிக்க முடியும்?

பதில். வரி மற்றும் வட்டியாக செலுத்தப்பட்டதை நிரூபிக்க, அந்த நபர் விண்ணப்பத்துடன் அதற்குரிய ஆவணங்கள் அல்லது ஆதாரங்களையும் இணைக்க வேண்டும். மேலும், அம்மாதிரியான வரியோ அல்லது வேறு ஏதாவது தொகையையோ திரும்பப் பெறுவதை வேறுயாருக்கும் மாற்றிவிடவில்லை என்பதையும் நிரூபிக்க வேண்டும்.பிரிவு 38(3)(b).

மேலும், வரி செலுத்துபவருடைய வசதிக்காக, மேலேயுள்ள துணைப் பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி, .திரும்பப் பெறுவதற்காக கோரப்பட்ட தொகை ரூ. 5 லட்சத்திற்கும் குறைவாக இருந்தால், ஒரு தன்னிலை விளக்கமே போதுமானது.

கேள்வி 19. தற்போதைய VAT / CSTன் கீழ், ஏற்றுமதி வணிகர் ஒரு விளக்கப்படிவத்தைக் கொடுப்பதன் மூலம், வரி செலுத்தாமலே கொள்முதல் செய்யலாம். GSTலும் இந்த வழிமுறையுள்ளதா?

பதில். இல்லை. GSTல் இம்மாதிரியான எந்த வழிமுறையும் இல்லை. அவர்கள் வரி செலுத்தப்பட்ட பொருட்களைத்தான் கொள்முதல் செய்யமுடியும் மற்றும்பிரிவு 38(2) குறிப்பிட்டுள்ளபடி, சேரந்த ITCஐ திரும்பப் பெறக் கோரலாம்.

கேள்வி 20. தற்போது மத்திய சட்டத்தின்படி, ஏற்றுமதியாளர்கள் சுங்கவரி செலுத்தப்பட்டன உள்ளீடுகளை பெறுவதற்கு அனுமதிக்கப்படுவதோடு, அதற்கான ITCயையும் பெறமுடியும். சுங்கவரி செலுத்தப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்வதோடு மட்டுமல்லாமல், அதன்பின்னர், அதற்காக செலுத்தப்பட்ட சுங்க வரியை திரும்பப் பெறக் கோர முடியும். GSTலும் இந்த வழிமுறையுள்ளதா?

பதில். GST நடைமுறையின் கீழ், ஏற்றுமதிகளுக்கு பூஜ்ஜிய விகிதம் என்றால், ஏற்றுமதி பொருட்கள் எந்தவிதமான வரிவிதிப்புக்கும் ஆளாக வேண்டியதில்லை. இருப்பினும், ஏற்றுமதிகளின் உள்ளீடுகளுக்கு வரி செலுத்தப்பட வேண்டும். GSTன் கீழ், ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேர்ந்த உள்ளீடுகளின் மீதான பணத்தை திரும்பப் பெறுவதற்கும் அனுமதிக்கப்படுகின்றது.

## 15. கோரிக்கைகளும், மீட்டெடுப்பும்

கேள்வி 1. குறைவானவரி செலுத்தியிருந்தாலோ அல்லது செலுத்தாமலே இருந்தாலோ அல்லது தவறுதலாக பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டிருந்தாலோ அல்லது உள்ளீட்டு வரிச்சலுகையை தவறுதலாகப் பெற்றோ அல்லது பயன்படுத்தியோ இருந்தால், அவைகளை மீட்டெடுப்பதற்கு எந்தப் பிரிவுப் பொருந்தும்?

பதில்: மோசடி, செயல்பாடுகளை மறைத்தல், மற்றும் தவறான அறிக்கை போன்றவைகள் இல்லாவிடின் 51A பிரிவு பொருந்தும் மற்றும் மோசடி, செயல்பாடுகளை மறைத்தல் மற்றும் தவறான அறிக்கைகள் இருந்தால் 51B பிரிவும் பொருந்தும.

கேள்வி 2. 51A பிரிவின் கீழ் ஒருவருக்கு நோட்டீஸ் வழங்குவதற்கு முன் வட்டியுடன் கூடிய வரி அவருக்கு செலுத்தமுடியுமா?

பதில். ஆமாம். இது போன்ற வழக்குகளில் எந்த விதமான நோட்டீஸூம் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து அனுப்பபடமாட்டாது.

கேள்வி 3. 51A பிரிவின் கீழ் நோட்டீஸ் அளிக்கப்பட்ட ஒருவர், அதன் பிறகு பணத்தைக் கட்டியபின் இந்த வழக்கில் தீர்ப்பு அளிக்கப்படவேண்டிய தேவை உள்ளதா?

பதில். 51A பிரிவின் உட்பிரிவு (1)ன் கீழ் நோட்டீஸ் அனுப்பப்பட்ட ஒருவர் வட்டியுடன் வரியை 30 நாட்களுக்குள் செலுத்திவிட்டால், அபராதத் தொகைக்கட்ட அவசியமில்லை மேலும், நோட்டீஸ் மீதான நடவடிக்கை முடிவுற்றதாகக் கருதப்படும்.

கேள்வி 4. 51A/B பிரிவின் கீழ் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்புவதற்கான உரிய தேதி என்ன?

பதில். வருமான விவரத்தை தாக்கல் செய்தாலும் அல்லது தாக்கல் செய்யாவிட்டாலும், வருடாந்திர வருமான விவரம் தாக்கல் செய்யவேண்டிய கடைசி தேதியே உரிய தேதியாகும்.

கேள்வி 5. 51A/B பிரிவின் கீழ் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பவோ அல்லது தீர்ப்போ வழங்குவதற்கு ஏதேனும் காலவரைம்பு உள்ளதா?

பதில். விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்புவதற்கு எந்த விதமான காலவரம்பும் கிடையாது. ஆனால், சம்பந்தப்பட்ட தேதியிலிருந்து 51A பிரிவு வழக்குகளுக்கு 3

வருடத்திற்குள்ளாகவும், 51B பிரிவு வழக்குகளுக்கு 5 வருடத்திற்குள்ளாகவும் விளக்கம் கேட்டு நோட்டீஸோ அல்லது தீர்ப்போ வழங்கியிருக்கப்படவேண்டும்.

கேள்வி 6. 51B பிரிவின் கீழ் ஒருவருக்கு நோட்டீஸ் வழங்குவதற்கு முன் வட்டியுடன் கூடிய வரி அவர் செலுத்தலாமா?

பதில். ஆமாம். உட்பிரிவு (1)ன் கீழ் நோட்டீஸோ அல்லது உட்பிரிவு (2)ன் கீழ் ஒருவரையோ கொடுப்பதற்கு முன் ஒருவருக்கு வரி விதிக்கப்பட முடியும். ஆனால், இதுபற்றி அவரே அறிந்து கொண்டாலோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்த தகவல் கொடுக்கப்பட்டாலும், பதினைந்து சதவீத அபராதம் மற்றும் வட்டியுடன் கூடிய வரியை அவருடைய விருப்பத்திற்கேற்ப செலுத்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும். இந்த வரிக் கட்டணத்தைப் பற்றி எந்த விதமான முன்அறிவிப்பும் வழங்கப்படமாட்டாது.

கேள்வி 7. 51B பிரிவின் கீழ் நோட்டீஸ் அளிக்கப்பட்டஒருவர், அதன் பிறகு பணத்தைக் கட்டியபின் இந்த வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட வேண்டிய தேவை உள்ளதா?

பதில். அபராதத் தொகை மற்றும் வட்டியுடன் வரியும் செலுத்திவிட்டால் நடவடிக்கை தேவையில்லை. 51B பிரிவின் உட்பிரிவு (1)ன் கீழ் நோட்டீஸ் அனுப்பப்பட்ட ஒருவர் இருபத்தைந்து சதவீத அபராதத்தொகை, மற்றும் வட்டியுடன் கூடிய வரியை 30 நாட்களுக்குள், செலுத்திவிட்டால் நோட்டீஸ் மீதான நடவடிக்கைகளும் முடிவுற்றதாகக் கருதப்படும்.

கேள்வி 8. 51B பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட நோட்டீஸின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, வரி மற்றும் அபராதத் தொகையும் உறுதி செய்யப்பட்டு தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டப்பின், நடவடிக்கை எடுக்கப்பட்ட நபருக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையை குறைத்து செலுத்த ஏதாவது வழிவகை உள்ளதா?

பதில். ஆமாம். தகவல் தெரிவிக்கப்பட்ட தேதயிலிருந்து 30 நாட்களுக்குள் ஒருவர் வரி, வட்டி மற்றும் 50% அபராதத் தொகையும் செலுத்த வேண்டும். 51B பிரிவின் உட்பிரிவு (6)ன் கீழ் தீர்ப்பாணை வழங்கப்பட்ட யாரேனும் வரி, வட்டி மற்றும் வரியில் ஐம்பது சதவீதத்துக்கு சமமான அபராதத் தொகையையும் தகவல் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் செலுத்திவிட்டால், வரி மீதான அனைத்து நடவடிக்கைகளும் முடிவுற்றதாகக் கருதப்படும்.

கேள்வி 9. 51A மற்றும் 51B என்ற இருபிரிவுகளின் கீழ் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டாலும், 51A மற்றும் 51B என்ற இருபிரிவுகளுக்கும் முறையே 3

மற்றும் 5 வருடங்களுக்குள் தீர்ப்பாணை வழங்கப்படவில்லையெனில் என்ன நேரிடும்?

பதில். 51A (7) மற்றும் 51B (7) என்ற இருபிரிவுகளுக்கும் முறையே 3 மற்றும் 5 வருடங்களுக்குள் தீர்ப்பாணை வழங்கப்படவில்லையெனில், மாதிரி GST சட்டத்தில் வழக்கின் நடவடிக்கைகள் முடிவுற்றதாகவேக் கருதப்படும்.

கேள்வி 10. ஒருவர் மற்றொருவரிடமிருந்து வரிகளை வசூலித்தும், அதை அரசாங்கத்திடம் செலுத்தாவிட்டால் என்ன நேரிடும்?

பதில். ஒவ்வொரு நபரும் மற்றொருவரிடமிருந்து வசூலித்த பணம் வரி செலுத்துவதற்குட்பட்டதா, இல்லையா என்பதைப் பற்றி பொருட்படுத்தத் தேவையில்லை. அவை MGLன் 52வது பிரிவின்படி, அந்தப் பணத்தை மத்திய அல்லது மாநில அரசிடம் செலுத்தப்பட வேண்டும்.

கேள்வி 11. பிரிவு 52க்கு எதிராக, ஒருவர் தான் வசூலித்த வரிப் பணத்தை செலுத்தாவிட்டால், அவர் மீது எந்த விதமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்?

பதில். நியாயமான நீதி கோட்பாடுகளின்படி நோட்டீஸ் அனுப்பப்பட்டு, தீர்ப்பாணையும் வழங்கப்பட வேண்டும். அதுவும் நோட்டீஸ் அனுப்பப்பட்ட தேதியிலிருந்து ஒருவருடத்திற்குள் தீர்ப்பாணையும் தவறாமல் வழங்கப்படவேண்டும். எனினும், விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்புவதற்கு எந்தவித காலவரம்பும் கிடையாது. எனவே, இந்த மாதிரி வழக்குகளில் பத்து வருடத்திற்குப்பிறகு கூட வரியை வசூலிக்கமுடியும்.

கேள்வி 12. பிரிவு 52கீழ் வரி வசூலிக்கப்பட்டு செலுத்தப்படாமலிருக்கும் வழக்குகளுக்கு நோட்டீஸ் அனுப்ப ஏதேனும் கால வரம்பு உள்ளதா?

பதில். இல்லை. எந்த விதமான கால வரம்பும் இல்லை. துப்புக் கண்டறியப்பட்ட இது போன்ற வழக்குகளுக்கு எந்த விதமான கால வரம்பும் இல்லாமல் நோட்டீஸ் அனுப்பலாம். நோட்டீஸ் அனுப்பபட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட வேண்டும்.

கேள்வி 13. உரிய அதிகாரிக்கு வரியை வசூலிப்பதற்கு எந்த விதமான மீட்பு முறைகள் இருக்கின்றது?

பதில். உரிய அதிகாரிக்கு பின்வரும் மீட்புமுறைகள் உள்ளது:

அ) உரிய அதிகாரி அப்படிப்பட்ட நபருக்கு கொடுக்க வேண்டிய தொகையிலிருந்து கழித்துக் கொள்ளலாம் அல்லது வேறு குறிப்பிட்ட அதிகாரியை கழித்துக் கொள்ளச் செய்யலாம்.

ஆ) ஒரு நபரின் பொருட்களை தடுத்து வைக்கப்பட்டும், அவைகளை விற்பதின் மூலமாக அவர் செலுத்த வேண்டியப் பணத்தை உரிய துறை அதிகாரியோ அல்லது வேறு ஏதாவது குறிப்பிட்ட அதிகாரியோ மீட்க முடியும்.

இ) அந்தத் துறை அதிகாரி, எழுத்துப்பூர்வமான நோட்டீஸ் வழங்கும் பட்சத்தில், அந்த நபரிடமிருந்து பணம் நிலுவையில் இருந்தாலோ அல்லது நிலுவை ஏற்படும் நிலை இருந்தாலோ அந்த நபரோ அல்லது அந்த நபர் சார்பாக பணத்தை வைத்திருக்கும் நபரோ, வைத்திருக்கப் போகும் நபரோ, மத்திய-மாநில அரசுக்கான வரியை செலுத்தியாக வேண்டும்.

ஈ) உரிய அதிகாரி உரிய அதிகார அமைப்பின் அங்கீகாரம் பெற்று அந்த நபரின் அல்லது அவருடைய கட்டுப்பாட்டில் உள்ள அசையும் அல்லது அசையா சொத்தை வசூலிக்க வேண்டிய தொகை கிடைக்கும்வரை வைத்திருக்கலாம். அப்படிப்பட்ட செயலுக்குப் பின்னர் முப்பது நாட்களுக்கு மேல் தொகை செலுத்தப்படாவிட்டால் அந்த சொத்தை விற்று அப்படிப்பட்ட விற்பனையின் தொகையை வைத்து வசூலிக்க வேண்டிய தொகையையும் கொடுக்கப்படாத விற்பதற்கான செலவையும் எடுத்துக் கொண்டு அதிகப்படியான தொகையை அந்த நபருக்குக் கொடுக்க வேண்டும்.

உ) உரிய அதிகாரி அப்படிப்பட்ட நபரிடமிருந்து பெற வேண்டிய தொகை விவரத்தைக் குறிப்பிட்டு ஒரு சான்றிதழ் தயாரித்து கையொப்பமிட்டு மேற்படி நபர் சொத்து வைத்திருக்கும் அல்லது வசிக்கும் அல்லது அவருடைய வர்த்தகத்தை கவனிக்கும் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும். அப்படிப்பட்ட சான்றிதழ் கிடைத்தவுடன், மாவட்ட ஆட்சியர் குறிப்பிடப்பட்டுள்ள அந்தத் தொகையை அந்த நபரிடமிருந்து, நிலவரி நிலுவையாக வசூலிப்பார்.

கேள்வி 14. செலுத்த வேண்டிய வரி பாக்கியை தவணை முறையில் செலுத்துவதற்கு அனுமதிக்க உரிய அதிகாரியால் முடியுமா?

பதில். ஆம். சுயமதிப்பீட்டு வரியைத் தவிர மற்றவைகளுக்கு உண்டு. சட்டத்திற்குட்பட்டு பணத்தை செலுத்துவதற்கு காலக் கெடுவை நீட்டிக்கவோ அல்லது எந்த வித பணத்தையோ செலுத்த அனுமதிப்பதற்கு ஆணையருக்கோ அல்லது தலைமை ஆணையருக்கோ அதிகாரம் உண்டு. பிரிவு 36ன் கீழ் குறிப்பிடப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் விதிகளுக்குட்பட்டு, சுயமதிப்பீட்டு வரியைத் தவிர மற்றத் தொகைகளை இருபத்திநான்கு தவணைக்கு மிகாமல் வட்டியுடன் செலுத்த முடியும். எனினும், காலக்கெடுத் தேதியில் ஏதாவது ஒரு தவணைத் தொகை செலுத்துவதில் தவறு ஏற்பட்டாலும், செலுத்த வேண்டிய மொத்தத் தொகையும் அதேக் காலக்கெடு தேதியில் கட்ட வேண்டியபாக்கியாகக்

கருதப்பட்டு, அதை உடனே கட்ட வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். எந்த விதமான நோட்டீஸூம் அனுப்பாமலே மீட்கலாம்.

கேள்வி 15. மேல் முறையீடு / திருத்த நடவடிக்கைகளின்போது ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட வரி விதிப்பு உயர்த்தப்பட்டால் என்ன ஆகும்?

பதில். வரி விதிப்பில் உயர்த்தப்பட்ட தொகையில் செலுத்த வேண்டிய பாக்கிக்கு மட்டும் நோட்டீஸ் வழங்கப்பட வேண்டும். முறையீடு / திருத்த நடவடிக்கைகளின் நீக்கத்திற்கு முன்பே உறுதி செய்யப்பட்ட தொகை, மீட்பு நடவடிக்கைகளின் போது எந்த நிலையில் நின்று போனதோ அதே நிலையிலிருந்தே உடனடியாகத் தொடரும்.

கேள்வி 16. வரி செலுத்த வேண்டிய ஒரு நபர் வரி பாக்கி உள்ள போதே, தன்னுடைய வர்த்தகத்தை வேறொருவருக்கு மாற்றி விட்டால், செலுத்த வேண்டிய வரியின் நிலை என்னவாகும்?

பதில். வரி செலுத்த வேண்டிய நபர் தன்னுடைய வர்த்தகத்தை வேறோருவருக்கு முழுமையாக / பகுதியாக விற்றாலோ, பரிசாக கொடுத்தாலோ, உரிமத்தைக் கொடுத்தாலோ, வாடகைக்கோ கொடுத்தாலோ அல்லது வேறு ஏதாவது வழிகளிலோ மாற்றினால், சம்பந்தப்பட்ட இருவரும் இணைந்தோ அல்லது தனித்தனியாகவோ கம்பெனியை மாற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து வரி, வட்டி அல்லது அபராத பாக்கி போன்றவற்றை செலுத்த வேண்டும். இந்த வரி பாக்கி வர்த்தகத்தை மாற்றம் செய்யப்படுவதற்கு முன்பிலிருந்து கட்டப்படாமல் இருந்தாலும், அதற்குப்பிறகு தீர்மானிக்கப்பட்டாலும் அவைகளை கட்டாயமாக செலுத்த வேண்டும்.

கேள்வி 17. வரியை செலுத்துவதற்கு முன்பே தன் கம்பெனியை ஒரு நபர் மூடிவிட்டால் என்னவாகும்?

பதில். எந்த கம்பெனியும் நிரந்தரமாக மூடும்போது வரி அல்லது வேறு ஏதாவது செலுத்த வேண்டிய பாக்கியிருந்தால், கம்பெனியை மூடுவதற்கு முன்போ அல்லது பின்போ அவை செலுத்த தவறினால், அப்பொழுது இயக்குநர் பதவியில் இருப்பவர், அந்த வரிப் புறக்கணிப்பு, தவறான நடத்தை அல்லது கடமை மீறுதல் போன்ற கம்பெனியின் தொடர்புடைய எந்த விதமான செயலுக்கும், தனக்கும் எந்த்த் தொடர்பும் இல்லை என்பதை ஆணையரிடம் நிரூபிக்காதவரையில் செலுத்தப்படாத வரிக்கு கூட்டாகவோ அல்லது தனித் தனியாகவோ அந்த இயக்குநரேப் பொறுப்பாகும்.

கேள்வி 18. கூட்டு வணிகத்தில் (வரி செலுத்த வேண்டிய நபர்கள்) செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ள வரியை செலுத்த கூட்டாளிகளுக்கு எந்த விதமான பொறுப்பு உள்ளது?

ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள் இணைந்தோ அல்லது தனித் தனியாகவோ வரி, வட்டி அல்லது அபராதத்தைச் செலுத்தலாம். ஒரு நிறுவனமோ / கூட்டாளியோ ஓய்வு பெறப்போகும் ஒரு கூட்டாளி செலுத்த வேண்டிய வரி, வட்டி அல்லது அபராதம் பற்றிய விவரங்களை ஓய்வு பெறும் நாள் வரையிலா அல்லது அதன் பின்னரும் தொடருமா என்ற எழுத்து மூலமாக ஆணையரிடம் சமர்ப்பிக்க வேண்டும். கூட்டாளி ஓய்வு பெற்ற ஒரு மாதத்திற்குள் அவருடைய பொறுப்பேற்க வேண்டிய தகவல்களை தெரிவிக்கவில்லை யென்றால், ஆணையரிடம் தகவல் தெரிவிக்கப்படும் தேதி வரை அந்தப் பொறுப்புத் தொடரும்.

கேள்வி 19. வரிச் செலுத்த வேண்டிய நபரின் கம்பெனி, ஏதாவது காப்பாளர் / அறக்கட்டளை அல்லது இளவர் முகவரால் (மைனர் ஏஜென்ட்) ஏற்று நடத்தப்பட்டால், அவருடைய வரி பாக்கி என்னவாகும்?

பதில். வரி பாக்கி செலுத்த வேண்டிய கம்பெனியை காப்பாளர் / அறக்கட்டளை அல்லது இளவர் முகவரால் (மைனர் ஏஜென்ட்), அல்லது இளவர் (மைனர்) / மாற்றுத்திறனாளிகளின் நன்மைக்காக மற்ற மாற்றுத்திறனாளி என்று யாருக்காக ஏற்று நடத்தப்பட்டாலும், பொறுப்பை ஏற்றுக் கொண்ட காப்பாளர் அறக்கட்டளை முகவர் (ஏஜென்ட்) இவர்களே வரிபாக்கியை செலுத்துவதற்கும் பொறுப்பாவர்.

கேள்வி 20. வரி செலுத்துபவருடைய சொத்து நீதிமன்றக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டால் என்னவாகும்?

சொந்த நிறுவனம் வைத்திருக்கின்ற ஒரு நபரின் சொத்து நீதிமன்றகட்டுப்பாட்டில் இருந்தாலும், வரி, வட்டி, அல்லது அபராத பாக்கி இருந்தால் அதை நிரிவகிக்க பொது நிர்வாகி, அறங்காவலர், பெறுநர் அல்லது மேனேஜர் என்று யாராவது நீதிமன்றத்தால் நியமிக்கப்படுவர். அப்படி நியமிக்கப்பட்ட வரிகளின் மூலமே வரி, வட்டி அல்லது அபராத பாக்கியை செலுத்துபவரிடமிருந்து பெறப்படும்.

## 16.முறையீடுகள், மறுஆய்வு, மற்றும் GSTல் திருத்தம்

கேள்வி 1. ஒரு நபர் சட்ட ஆணையினால் பாதிக்கப்பட்டாலோ அல்லது அவருக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலோ, அவருக்கு மேல் முறையீடு செய்யும் உரிமை உள்ளதா?

பதில். ஆமாம். ஒரு நபர் சட்ட ஆணையினால் பாதிக்கப்பட்டாலோ அல்லது அவருக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலோ, அவருக்கு மேல் முறையீடு செய்யும் உரிமை உள்ளது. அது ஒரு ஆணையாகவோ அல்லது "நீதி விசாரணை செய்யும் அதிகாரியால்" வழங்கப்பட்ட தீர்மானமாகவோ இருக்க வேண்டும். எனினும், சில தீர்மானங்களில் அல்லது சில ஆணைகளில் (பிரிவு 93ன் நிபந்தனையின் படி)மேல் முறையீடு செய்ய முடியாது.

கேள்வி 2. வழங்கப்பட்ட ஆணை சட்டப்படி மற்றும் முறைப்படி இல்லை என்று CGST ஆணையர் நினைத்தால், அவரே அந்த ஆணையை திருத்தம் செய்ய முடியுமா?

பதில். இல்லை. CGST ஆணையரால் அந்த ஆணையை திருத்தம் செய்ய முடியாது. மாதிரி சட்டத்தில், CGST மற்றும் SGSTக்கு வேறுபட்ட விதிகள் இந்த விஷயத்தில் உள்ளது. CGSTக்கு பிரிவு 79(2)ன்படி CGSTன் ஆணையர் ஆணையிலோ அல்லது தீர்மானத்திலோ (நீதி விசாரணை செய்யும் அதிகாரியால் வழங்கப்பட்டது) சட்டப்படி அல்லது முறைப்படி இல்லை என்று கண்டறிந்தால், எங்கே சட்டப்படி அல்லது முறைப்படி இல்லை என்று அவர் நினைக்கிறாரோ, அதை சுட்டிக்காட்டி சரி செய்வதற்கு ஒரு ஆணையை பிறப்பித்து, இது குறித்து முதன்மை மேல்முறையீடு ஆணையத்திடம் (First Appellate Authority-FAA) ஒரு மனுவை அளிக்கும்படி தனக்கு கீழுள்ள GST அதிகாரிக்கு வழிகாட்டலாம். இதில் முறையீடு இருந்தால், இந்த மனுவை முதன்மை மேல்முறையீடு ஆணையம் (FAA) விசாரிக்கும்.

கேள்வி 3. முதன்மை மேல்முறையீடு ஆணையத்திடம் முறையீடு செய்ய காலக்கெடு என்ன?

தீர்மானமோ அல்லது ஆணையோ பிறப்பித்த தேதியிலிருந்து 3 மாத காலம் என்ற காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கேள்வி 4. CGSTன் ஆணையரின் ஆணையின்படி அனுப்பப்பட்ட மனுவிற்கும், துறை சார்ந்த மேல்முறையீட்டுக்கும் இதே காலக்கெடுப் பொருந்துமா?

பதில். ஆமாம். மனுக்களாக சமர்ப்பித்தாலும், அவைகளும் முறையீடாகவே கருதப்படும். மேல்முறையீட்டுக்கான அனைத்து விதிகளும் இந்த மனுவும் பொருந்தும்.

கேள்வி 5. முதன்மை மேல்முறையீடு ஆணையத்தினால், தாமதமாக சமர்ப்பிக்கப்பட்ட மனுவை மன்னிக்கும் அதிகாரம் உள்ளதா?

பதில். ஆமாம். விதிக்கப்பட்ட காலக்கெடுவான 3 மாதம் முடியும் நாளிலிருந்து மேலும் ஒரு மாதம் வரை (3+1) தாமதமாக சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டை மன்னிக்கும் அதிகாரம் உண்டு. இருப்பினும் பிரிவு 79(4) கீழ் அதற்கு “போதுமான காரணம்” இருக்க வேண்டும்.

கேள்வி 6. முறையீட்டு மனுவில் குறிப்பிடப்படாத கூடுதலான காரணங்களை சேர்ப்பதற்கான அதிகாரம் முதன்மை மேல்முறையீடு ஆணையத்திற்கு இருக்கிறதா?

பதில். ஆமாம். கூடுதலான காரணங்கள் நியாயமற்றதாகவும், வேண்டுமென்ற சேர்க்கப்பட்டதாகவும் இல்லாமல் மிகவும் திருப்திகரமானதாக இருந்தால் அவைகளை சேர்ப்பதற்கு முதன்மை மேல்முறையீடு ஆணையத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

கேள்வி 7. முதன்மை மேல்முறையீடு ஆணையம்ஆணையை யாருக்கு அனுப்ப வேண்டும்?

பதில். முதன்மை மேல்முறையீடு ஆணையம் ஆணையை முதலில் மேல்முறையீடு செய்தவருக்கும், நீதி விசாரணை செய்தவருக்கும் அனுப்ப வேண்டும். அதன் நகலை CGST மற்றும் SGSTன் சட்ட ஆணையர்களுக்கும் அனுப்ப வேண்டும்.

கேள்வி 8. ஒவ்வொரு முறையீட்டின் போதும் செலுத்த வேண்டிய கட்டாய முன்பணம் எவ்வளவு?

பதில். சர்ச்சைக்குரிய தொகையில் 10% ஆகும். (இருப்பினும், மாதிரி சட்டத்தில் இதற்கான கூடுதல் விதிகள் விதிக்கப்பட்ட விவரங்களுக்கு 12 மற்றும் 13ம் கேள்விகள் பார்க்கவும்).

கேள்வி 9. சர்ச்சைக்குரியத் தொகை என்றால் என்ன?

பதில். MGLன்பிரிவு 79(6)ல் விளக்கியுள்ளபடி “சர்ச்சைக்குரிய தொகை” என்று தெரிவித்தவை இதனுள் அடங்கும்-

அ) பிரிவு 46, 47, 48 அல்லது 51 கீழ் உறுதிசெய்யப்பட்ட தொகை

ஆ GST உள்ளீட்டு வரி விதியின்படி---- விதியின் கீழ் செலுத்த வேண்டியத் தொகை மற்றும்

இ) விதிக்கப்பட்ட தொகை அல்லது விதிக்கப்பட்ட அபராதம்.

கேள்வி 10. வரியின் அளவை அதிகரித்தல் / அபராதம் / தண்டனை / திருப்பித் தரப்படும் தொகையை குறைத்தல் / அசல் அதிகாரம் படைத்தவரிடமிருந்து

பிறப்பிக்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவை (ITC) குறைத்தல் போன்றவற்றை ஒரு ஆணைப் பிறப்பிப்பதின் மூலம் FAAவால் செய்யமுடியமா?

பதில். கட்டணத்தின் அளவை அதிகரித்தல் / பறிமுதலுக்கு பதிலாக அபராதம் / தண்டனை / திருப்பித் தரப்படும் தொகையை குறைத்தல் / உள்ளீட்டு வரி வரவை (ITC) குறைத்தல் போன்றவற்றை ஒரு ஆணைப் பிறப்பிப்பதின் மூலம் FAAக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், முன்மொழியப்பட்ட ஊறுவிளவிக்க கூடிய ஆணைக்கெதிராக காரணத்தை காட்டுவதற்கு நியாயமான வாய்ப்பு மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட வேண்டும்.(பிரிவு 79(10)க்கான முதல் நிபந்தனை)

வரி அதிகரிப்பு, உளளீட்டு வரி வரவின் (ITC) தவறான லாபத்தின் தீர்மானம் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு, முன்மொழியப்பட்ட ஆணைக்கெதிராக மேல்முறையீட்டாளருக்கு குறிப்பிட்ட SCN வழங்கப்பட்ட பின்னரே FAAவால் அம்மாதிரி செய்ய முடியும். மேலும் பிரிவு 51ன் படி ஆணையாகப்பட்டது வரையறுக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் வழங்கப்பட வேண்டும். (பிரிவு 79(10)க்கான இரண்டாவது நிபந்தனை)

கேள்வி 11. (SGST சட்டத்திற்கு மட்டும்) மேல்முறையீடு செய்வதற்கு முன்பாக செலுத்த வேண்டிய முன்பணம் தொடர்பாக முதன்மை மேல்முறையீட்டு ஆணையத்திடம் SGST கீழ் முறையிட வேண்டிய முறையீட்டு விதிகள் என்ன?

பதில். சர்ச்சைக்குரிய தொகையின் 10% மேல்முறையீடு செய்வதற்குமுன் செலுத்த வேண்டும். CGST, SGST இவை இரண்டுக்குமே இது பொதுவானது.ஒப்புக்கொண்டபடி, SGSTஐ பொறுத்தவரை 10% செலுத்த வேண்டிய மேல்முறையீட்டாளர் “முழுமையாக, அந்த வரித் தொகையின் பகுதி, வட்டி, அபராதம், மற்றும் அதன் பொருட்டு வழங்கப்பட்ட தண்டனை என்பதால் கூடுதலாகவும் செலுத்த வேண்டும்.”மேலும், மிகவும் “தீவிரமான வழக்கு” என்பதை ஆணையர் கண்டறிந்தால் சர்ச்சைக்குரியத் தொகையில் 50% மிகாமல் அதிகபட்ச தொகையை முன்பணமாக செலுத்த உத்தரவிடும்படி துறைசார்ந்த அதிகாரிகள் முதன்மை மேல்முறையீட்டு ஆணையத்திடம் மனு அளிக்கலாம்.

கேள்வி 12. (SGST சட்டத்திற்கு மட்டும்) “தீவிரமான வழக்கு” என்றால் என்ன பொருள்?

பதில். ஒரு வழக்கு ரூ. 25 கோடிக்கு குறையாத வரி ஏய்ப்பு சர்ச்சையின் தொடர்புடையது என்று விளக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் வரி செலுத்துபவருக்கு எதிராக துறைக்குக் கிடைத்த மிக சிறந்த வழக்கு என்று SGST ஆணையரின் கருத்தாக அமையலாம். (அக்கருத்து எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும்)

கேள்வி 13. SGST ஆணையரின் துணைநிலை அதிகாரிகளால் வழங்கப்பட்ட ஆணையை சட்டப்படி மாற்ற முடியுமா?

பதில். முடியும். தன் துணைநிலை அதிகாரிகளால் வழங்கப்பட்ட ஆணையை திரும்பப் பெற்று அதை சோதிக்கும் அதிகாரம் SGST ஆணையருக்கு உள்ளது. ஒரு

வேளை, துணைநிலை அதிகாரிகளின் அந்த ஆணை தவறாக இருப்பின், அது வருவாய்த்துறைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், சம்பந்தப்பட்டவரிடம் கருத்துக் கேட்டறிந்தபின் ஆணையை திருத்தியமைக்கலாம்.

கேள்வி 14. துணைநிலை அதிகாரிகளின் வழங்கப்பட்ட ஆணை திருத்தம் செய்வதற்காக நிலுவையில் இருப்பதால், அந்த ஆணையின்படி எடுக்கப்படும் நடவடிக்கைகளை SGST ஆணையரால் தடுத்து நிறுத்த முடியுமா?

பதில். முடியும்.,

கேள்வி 15. துணைநிலை அதிகாரிகளின் ஆணையை திருத்தியமைக்கும் ஆணையரின் ஆணையை தடுத்து நிறுத்தவதற்கு SGSTன் கீழ் ஏதாவது அதிகாரம் உள்ளதா?

பதில். ஆமாம் முடியும். ஆணையரால் சில ஆணைகளை திருத்த முடியாது. ஏனென்றால்,

அ பிரிவு 79ன் கீழ், பிரிவு 82ன் கீழ், பிரிவு 87ன் கீழ் அல்லது பிரிவு 88ன் கீழ் மேல்முறையீடு செய்யப்படவிருந்தால் அல்லது

ஆ தீர்மானம் அல்லது ஆணை பிறப்பிக்கப்ட்டு மூன்று வருடங்களுக்கு மேல் இருந்தால்.

மேலும், வேறுபிற தடைகளைப் பற்றி தெரிந்து கொள்ள MDLன் 80வது பிரிவை பார்க்கவும்.

கேள்வி 16. மேல்முறையீட்டை ஏற்க மறுப்பதற்கு தீர்ப்பாயத்திற்கு எப்போது அதிகாரம் உள்ளது?

பதில். கீழ்க்கண்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டிருக்கும் போது-

- வரித் தொகை அல்லது
- உள்ளீட்டு வரி வரவு(ITC)அல்லது
- வரியில் வித்தியாசம்அல்லது
- உள்ளீட்டு வரி வரவு(ITC) வித்தியாசம் சம்பந்தமாக அல்லது
- அபராதத் தொகை
- கட்டணத்தின் அளவு அல்லது
- உத்தரவின்படி தண்டனைத் தொகை ரூ. 100,000/-க்கும் குறைவாக இருந்தால்,

தீர்ப்பாயம் முன்னெச்சரிக்கையாக இந்த மேல்முறையீட்டை ஏற்க மறுக்க முடியும். ள்(MGLன் பிரிவு 82 (2)).

கேள்வி 17. தீர்ப்பாயத்தின் முன் மேல்முறையீட்டை எந்தக் காலக்கெடுவிற்குள் சமர்ப்பிப்பக்கவும்?

பதில். முறையீட்டுக்கெதிரான உத்தரவு கிடைத்தத் தேதியிலிருந்து 3 மாதத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்வி 18. 3 மாத காலக்கெடுவையும் தாண்டி காலத் தாமதமாக மேல்முறையீடு செய்வதை தீர்ப்பாயத்தினால் மன்னிக்க முடியுமா? அப்படியென்றால் காலவரையறை என்ன?

பதில். ஆமாம்.கால தாமத்திற்கான போதுமான காரணத்தை மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்தபின், 3 மாத காலக்கெடுவையும் தாண்டி எத்தனை நாட்கள் காலம் தாழ்த்தி மேல்முறையீடு செய்ததை தீர்ப்பாயத்தினால் மன்னிக்க முடியும்.

கேள்வி 19. தீர்ப்பாயத்தின் முன் குறுக்கு ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்கான கோரிக்கை மனுவை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு என்ன?

பதில். முறையீட்டுக் கடிதம் கிடைத்த தேதியிலிருந்து 45 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்வி 20. CGST மற்றும் SGSTக்கு கீழ் தீர்ப்பாயத்திடம்மேல்முறையீடு செய்வதில் உள்ள வேறுபாடுகள் என்ன?

பதில் அ) தனக்கு எதிராக முதன்மை மேல்முறையீட்டு ஆணையத்தினால் அளிக்கப்பட்ட உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு நபர் SGST சட்ட பிரிவு 82ன் விதியின் கீழ் அளித்த முறையீடும், CGST சட்ட பிரிவு 82 விதியும் ஒரே மாதிரியானவை என்பதால், அதில் செய்யப்பட்ட விவாதங்களே SGST சட்ட பிரிவு 82ன் விதிக்கும் பொருந்தும்.

ஆ) மேலே கூறியவற்றிற்கும் கூடுதலாக, ஆணையரால் திருத்தம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட ஆணைக்கெதிராகமேல்முறையீட்டு ஆணையத்திடம் முறையீடு செய்ய SGST சட்ட பிரிவு 82ன் விதியில் இடமுண்டு.

இ) முதன்மை மேல்முறையீட்டு ஆணையத்தினால் வழங்கப்பட்ட ஆணை சம்பந்தமாக வருவாய் துறையினரால் மேல்முறையீடு செய்ய CGSTசட்டத்தில் எந்த வழிமுறைகளும் இல்லாவிட்டாலும்SGSTல் திருத்தம் செய்யும்அதிகாரத்தை (ஆணையரின் துணைநிலை அதிகாரிகளுக்கெதிராகவழங்கப்பட்ட ஆணை) SGSTன் ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஈ) மேலும் SGST சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட ஒரு நபர், ஆணையின் பொருட்டு, முழுவதுமாக ஒற்றுக்கொண்ட, செலுத்த வேண்டிய வரி, வட்டி, அபராதம், கட்டண்ம் மற்றும் தண்டனை இவையனைத்தயும் முன்பணமாக செலுத்த வேண்டும்.

கேள்வி 21. முன்பணமாக செலுத்திய பணத்தை திருதப்பித்தரும் பட்சத்தில் அதற்கான வட்டியையும் திருப்பித் தர வேண்டுமா?

பதில். ஆமாம். முதன்மை மேல்முறையீடு ஆணையம் அல்லது மேல்முறையீடு தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்பின் விளைவாக MGLன் 85வது பிரிவின்படி செலுத்தப்பட்ட முன்பணத்தை 79 பிரிவின் துணைப்பிரிவு (6)(4) கீழ் அல்லது 82 பிரிவின் துணைப்பிரிவு (10)(7) கீழ் திருப்பித் தர வேண்டியது அவசியம். மேலும், இந்த வழக்கில் திருப்பித் தர வேண்டிய பணத்திற்கு பிரிவு 39ன் கீழ் முன்பணம் செலுத்தப்பட்ட நாளிலிருந்து வழங்கிய நாள் வரை சட்டத்தில் குறிப்பிட்ட விகிதத்தில், வட்டியையும் சேர்த்து தர வேண்டும்.

கேள்வி 22. தீர்ப்பாயத்தினால் வழங்கப்பட்ட ஆணையின் மீது எந்த மன்றத்திடம்மேல்முறையீடு செய்ய வேண்டும்?

பதில் உயர்நீதிமன்றம், (பிரிவு 87(1))முறையீடு வலிமையான சட்ட கேள்வியை உள்ளடக்கியது என்று உயர்நீதிமன்றம் திருப்தியடைய வேண்டும்.இருப்பினும், தீர்ப்பாயத்தால் வழங்கப்பட்ட ஆணையாக இருந்தாலும், இரண்டு அல்லது அதற்கு மேலுள்ள மாநிலங்கள் அல்லது மத்திய,மாநிலம்சம்பந்தப்பட்ட விஷயத்தில் பரிமாற்றிக் கொள்ளப்படும் விதம் மாநிலங்களுக்குள்ளும், மாநிலங்களுக்கிடையிலும் வேறுபட்ட கருத்துக்கள் இருந்தால்; அல்லது இரண்டு அல்லது அதற்கு மேலுள்ள மாநிலங்கள் அல்லது மத்திய,மாநிலத்திற்கிடையே விநியோகிக்கும் இடம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் வேறுபட்ட கருத்துக்கள் இருந்தால்; ஆணைக்கெதிராக மேல்முறையீட்டைஉச்சநீதிமன்றத்திடம் செய்ய வேண்டும். உயர்நீதிமன்றத்தில் அல்ல.

கேள்வி 23. உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கான காலக்கெடு என்ன?

பதில். ஆணைக் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 180 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும். இருப்பினும், காலதாமத்திற்கான சரியான காரணங்கள் தெரிவிக்கப்பட்டால், உயர்நீதிமன்றத்திற்கு மன்னிக்கும் அதிகாரம் உள்ளது.

# 17. முன்கூட்டியத் தீர்ப்பு

கேள்வி 1. முன்கூட்டியத் தீர்ப்பு என்றால் என்ன அர்த்தம்?

பதில் . CGST/SGST சட்டம் பிரிவு 94ன் படி, 'முன்கூட்டியத் தீர்ப்பு' என்றால் மனுதாரருக்கு தேவையான விஷயங்களுக்கு மற்றும் கேள்விகளுக்கு எழுத்துபூர்வமாக தீர்மானங்களை ஒரு அதிகாரி பிரிவு 97லும் அதன் மேல்முறையீடுகள் பற்றியும் (பிரிவு 99) தெரியப்படுத்துவதாகும்.

கேள்வி 2. பிரிவு 97ல் வரிசைப்படுத்தப்பட்ட விஷயங்களில் எதை முன்கூட்டியத் தீர்ப்பை கேட்கலாம்?

பதில். முன்கூட்டியத் தீர்ப்பில் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் பின்வருமாறு:

அ) சட்டத்தின் கீழ் வரும் பொருட்கள் அல்லது சேவைகளின் வகைப்பாடு

ஆ) சட்ட விதிகளின் கீழ் வழங்கப்பட்ட பொருந்தக்கூடிய அறிக்கையின்படி ஏற்றுக்கொள்ளக் கூடிய வரி விகிதம்.

இ) பொருட்கள் அல்லது சேவைகளின் மதிப்பை நிர்ணயிக்கும் போது சட்ட படி கடைபிடிக்கபடவேண்டிய விதிமுறைகள்

ஈ) செலுத்தப்பட்ட வரி அல்லது செலுத்தப்பட்டதாக கருதப்பட்ட வரியின் உள்ளீட்டு வரி வரவை ஏற்றுக்கொள்ளும் தன்மை.

உ) சட்டப்படி எந்தப் பொருட்கள் அல்லது சேவைகளின் மீதான வரியை செலுத்துவது பற்றி நிர்ணயிக்கப்படுபவை.

ஊ) விண்ணப்பதாரர் சட்டப்படி பதிவு செய்ய வேண்டுமா என்பதை அறிதல்.

எ) பொருட்கள் அல்லது சேவைகளின் அளவில் மற்றும் பொருட்கள் அல்லது செவைகளின் விநியோகத்தில் எந்த ஒரு குறிப்பிட்ட விஷயத்தை மனுதாரர் செய்வதாயிருந்தாலும், அவை விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

கேள்வி 3. முன்கூட்டியத் தீர்ப்பிலுள்ள நுட்பத்தின் மிக முக்கியமான நோக்கம் என்ன?

பதில். இம்மாதிரி அதிகாரத்தை அமைப்பதின் பரந்த நோக்கம் என்னவென்றால்

அ) மனுதாரர் ஒரு திட்டமிட்ட செயலை செயல்படுத்துவதற்கு முன்பே, அதற்கான வரி செலுத்துவதற்கான பொறுப்பை முன்கூட்டியே உறுதிசெய்து வழங்கப்படுதல்.

ஆ) வெளிநாட்டு நேரடி முதலீட்டை(FDI) ஈர்த்தல்.

இ) வழக்காடலை குறைத்தல்.

ஈ) வெளிப்படையாகவும், மலிவாகவும் வழங்கப்படும் துரிதமாக தீர்ப்பு

கேள்வி 4. GST கீழுள்ள முன்கூட்டியத் தீர்ப்பாணையத்தின் (AAR) கூட்டமைப்பு என்ன?

முன்கூட்டியத் தீர்ப்பாணையத்தின் (AAR) கூட்டமைப்பில் மத்திய, மாநில அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட CGSTயிலிருந்து ஒருவரும் SGSTயிலிருந்து ஒருவரும் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுடைய கல்வித் தகுதி மற்றும் நியமனத்திற்கானத் தகுதியைப் பற்றி மாதிரி GST விதிகளில் விவரிக்கப்பட்டுள்ளது.

கேள்வி 5. மேல்முறையீட்டு ஆணையத்தின் முன்கூட்டியத் தீர்ப்பாணையத்தின் **(AAAR) பணி** என்ன? அதன் கூட்டமைப்பு என்ன?

பதில். முன்கூட்டியத் தீர்ப்பாணையத்தினால் (AAR) **வழங்கப்பட்ட** முன்கூட்டியத் தீர்ப்பிற்கெதிராக மேல்முறையீடு செய்யப்பட்ட மனுவை விசாரிப்பது மேல்முறையீட்டு ஆணையத்தின் முன்கூட்டியத் தீர்ப்பாணையம் (AAAR). இதில் மனுதாரரை விசாரிக்கும் அதிகாரம் உள்ள இரு உறுப்பினர்களில் ஒருவர் மத்திய கலால் மற்றும் சுங்கத் துறையால் நியமிக்கப்பட்ட CGSTயின் முதன்மை ஆணையர், மற்றவர் SGSTயின் ஆணையர் ஆவர். (பிரிவு 96)

கேள்வி 6. GSTன் கீழ் எத்தனை AAR மற்றும் AAAR அமைக்கப்பட்டுள்ளது?

பதில். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு AAR மற்றும் ஒரு AAAR அமைக்கப்பட்டுள்ளது (பிரிவு 95 மற்றும் 96).

கேள்வி 7. முன்கூட்டியத் தீர்ப்பு யாருக்கு பொருந்தும்?

பதில். பிரிவு 102, AAR மற்றும் AAAR ஆல் வழங்கப்பட்ட தீர்ப்பு மனுதாரரை மட்டுமல்லாமல் அவர் மீது சட்டப்படி அதிகாரம் செலுத்தும் வரித்துறை அதிகாரியையும் கட்டுப்படுத்தும். வரி செலுத்துபவர்களுக்கு இந்த முன்கூட்டியத் தீர்ப்பு பொருந்தாது என்பது மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. முன்கூட்டியத் தீர்ப்புக்காக மனு செய்த நபர்களுக்கு மட்டும் தான் வரையறுக்கப்பட்டுள்ளது.

கேள்வி 8. முன்கூட்டியத் தீர்ப்பு எந்த காலக்கெடு வரைக்கும் அது பொருந்தும்?

பதில். சட்டம் அதற்கான எந்த நிலையான காலவரையறையையும் நிர்ணயிக்கவில்லை. அதற்கு பதில் பிரிவு 102ல், சட்டம், நிகழ்வுகள், மற்றும்

உண்மைக்கு சாதகமான சூழ்நிலையில் மாற்றம் ஏற்படும்வரை முன்கூட்டியத் தீர்ப்பு கட்டுப்படுத்தும்

கேள்வி 9. முன்கூட்டியத் தீர்ப்பால் வழங்கப்பட்ட தீர்ப்பை ரத்து செய்யமுடியுமா?

பதில். ஒரு மனுதாரர் மோசடி, உண்மைகளை மறைத்தல், தவறாக உண்மைகளை கூறியோ முன்கூட்டியத் தீர்ப்பைப் பெற்றிருக்கிறார் என்பதை AAR மற்றும் AAAR கண்டறிந்தால் அந்தத் தீர்ப்பு செல்லுபடியாகாது. முன்கூட்டியத் தீர்ப்பு எப்போதும் கிடைக்காது என்ற சூழ்நிலையில் CGST/SGST சட்டத்தின் அனைத்து விதிகளும் மனுதாரருக்குப் பொருந்தும், ((முன்கூட்டியத் தீர்ப்பு வழங்கப்பட்ட காலத்தை தவிர அது செல்லாது என்று தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை). மனுதாரரை விசாரணை செய்யப்பட்ட பின்பே முன்கூட்டியத் தீர்ப்பு செல்லாது என்ற ஆணையை அறிவிக்க முடியும்.

கேள்வி 10. முன்கூட்டியத் தீர்ப்பை பெறுவதற்கான வழிமுறைகள் யாவை?

பதில். முன்கூட்டியத் தீர்ப்பை பெறுவதற்கான வழிமுறைகளைப் பற்றி பிரிவு 97, 98ல் விளக்கப்படுகிறது. பிரிவு 97ன் படி ஒரு மனுதாரர் முன்கூட்டியத் தீர்ப்பைப் பெற வேண்டுமென்றால், பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் ஒரு மனுவாக AARக்கு முறையாக விண்ணப்பிக்க வேண்டும். படிவத்தின் வடிவமைப்பு மற்றும் செய்யும் வழிமுறைகளின் விவரங்கள் போன்றவை மாதிரி GST விதிகளில் விளக்கப்பட்டிருக்கின்றது.

பிரிவு 98ல் முன்கூட்டியத் தீர்ப்பிற்கான விதிமுறைகள் விளக்கப்பட்டிருக்கின்றது. மனுதாரர் சம்பந்தப்பட்ட அனைத்து தஸ்தாவேஜுகளையும் தரும்படி கேட்டு, மனுவின் ஒரு நகலை AAR இந்த மனுதாரரை ஏற்கனவே விசாரித்த அதிகாரிக்கு அனுப்பி வைக்கும். AAR மனுவையும், பதிவேடுகளையும் சோதித்து பார்த்தப் பின், மனுதாரரையும் விசாரிக்கும். அதற்குப்பிறகு, அந்த மனுவை ஏற்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ ஒரு ஆணையை பிறப்பிப்பார்.

கேள்வி 11. முன்கூட்டியத் தீர்ப்பின் மனு எந்தச் சூழ்நிலையின் அடிப்படையில் கட்டாயமாக தள்ளுபடி செய்யப்படுகின்றது?

கீழே வரிசைப்படுத்தியுள்ளபடி, குறிப்பிட்ட சூழ்நிலையில் தவிர்க்க முடியாமல் மனு தள்ளுபடி செய்யப்படுகின்றது.

அ) முன்கூட்டிய தீர்பை கொண்டும் கேள்வி சம்மந்தமாக, மனுதாரரின் வழக்கு, ஏதாவது முதன்மை மேல்முறையீட்டு ஆணையம், மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அல்லது ஏதாவது நீதிமன்றத்தின் முன்போ ஏற்கனவே நிலுவையிலிருந்தால்,

ஆ) மனுவில் எழுப்பப்பட்ட கேள்விக்கான ஒரே மாதிரி விஷயத்தில் ஏற்கனவே முதன்மை மேல்முறையீட்டு ஆணையத்தினாலோ, மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தினாலோ அல்லது நீதிமன்றத்தினாலோ தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால்,

இ) மனுவில் எழுப்பப்பட்ட கேள்விக்கான ஒரே மாதிரி விஷயத்தில் ஏற்கனவே வேறு ஏதாவது நடைமுறைகளுக்காக ஏதாவது விதிகளின் கீழ் மனுதாரரின் வழக்கு நிலுவையிலிருந்தால்,

ஈ) மனுவில் எழுப்பப்பட்ட கேள்விக்கானஒரே மாதிரி விஷயத்தில் ஏற்கனவே மனுதாரரின் வழக்கில் நீதிவிசாரணை அதிகாரியால் அல்லது வரிவிதிப்பு அதிகாரியால் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால், எதுவாக இருந்தாலும்.

மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டால், அதை வாய்மொழி ஆணையாக பிறப்பித்து தள்ளுபடிக்கானக் காரணங்களை தெரிவிக்க வேண்டும்.

கேள்வி 12. மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டால், AARயால் எந்த வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்?

பதில். மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டால். மனு கிடைத்த தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் AAR தன்னுடைய தீர்ப்பை வழங்க வேண்டும். தீர்ப்பை வழங்குவதற்கு முன் மனுவை நன்றாக சோதிக்க வேண்டும். வேறு ஏதாவது ஆவணங்களை மனுதாரரோ அல்லது சம்பந்தப்பட்ட துறை அதிகாரியோ இணைத்திருக்கிறார்களா என்றும் பரிசோதிக்க வேண்டும். தீர்ப்பை வழங்குவதற்கு முன் மனுதாரரையோ அல்லது அவருடைய பிரதிநிதியையோ, அதே போன்று CGST/SGSTன் நீதி விசாரணை அதிகாரிகளையும் AAR தகவல் கேட்டறிய வேண்டும்.

கேள்வி 13. AAR உறுப்பினர்களுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

AARன் இரு உறுப்பினர்களுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டால், அவர்களுடைய கருத்துக்கள் அல்லது எந்த இடத்தில் கருத்து வேறுபடுகிறார்கள் ஏற்படுகிறது என்பதை குறிப்பிட்டு பிரச்சினை குறித்து விசாரிக்க AAARக்கு அனுப்பி வைக்கப்படும். AARஆல் குறிப்பிட்டு அனுப்பப்பட்ட கேள்விகளுக்கு AAAR உறுப்பினர்களாலும் ஒரு பொதுவான கருத்தை எட்டமுடியாவிட்டால், AAARன் அளவிலும் கேள்வித் தொடர்பான வேறுபாடு தொடர்ந்தால், முன்மொழியப்பட்டத் தீர்ப்பு வழங்கப்பட இயலாது நிலையில் வழக்கு முடிவுற்றதாகவேக் கருதப்படும்.

கேள்வி 14. AARன் ஆணைக்கெதிராக மேல்முறையீடு செய்வதற்கான விதிமுறைகள் யாது?

பதில். AAARல் மேல்முறையீடு செய்வதற்கான விதிமுறைகள் மாதிரி GST சட்டம்பிரிவு 99, 100ல் விவரிக்கப்படுகிறது.

AARஆல் தீர்ப்பால் பாதிக்கப்பட்டதால், மனுதாரர் AAARல் மேல்முறையீடு செய்யலாம். அதேபோல் AARஆல் தீர்ப்பை CGST/SGSTன் நீதிவிசாரணை அதிகாரிகளால் ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவர்களும் AAARல் மேல்முறையீடு செய்யலாம். CGST/SGST அதிகாரிகளால் பரிந்துரைக்கப்பட்ட வார்த்தை என்றால் முன்கூட்டியத் தீர்ப்புக்காக மனு செய்வதற்காக CGST/SGST நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரி. சாதாரணமான சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட அதிகாரியே, மனுதாரர் சட்ட வரம்புக்கும் அதிகாரியாவார். இந்த மாதிரி வழக்குகளில், சம்பந்தப்பட்ட அதிகாரியே CGST/SGSTன் நீதி விசாரணை அதிகாரியும் ஆவார்.

எந்த மேல்முறையீடானாலும், முன்கூட்டியத் தீர்ப்பு கிடைத்த முப்பது நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். முறையீடு பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில், பரிந்துரைக்கப்பட்ட முறையில் சரிபார்க்கப்பட்டு பின் மேல்முறையீடு செய்யப்பட வேண்டும். இதைப் பற்றி மாதிரி GST சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இருதரப்புக் கருத்துக்களையும் கேட்டபின், முறையீடு செய்த 90 நாட்களுக்குள் ஒரு தீர்ப்பாணையைப் பிறப்பிக்க வேண்டும்.முறையீட்டிலிருந்த கருத்திலிருந்து *AAARன்* உறுப்பினர்கள் கருத்து வேறுபட்டால், முறையீட்டின் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு முன்கூட்டியத் தீர்ப்பு வழங்க இயலாத நிலையில் வழக்கு முடிவுற்றதாகவே கருதப்படும்.

கேள்வி 15. தீர்ப்பிலுள்ள தவறுகளை சரிசெய்வதற்கான ஆணையை AAR மற்றும் AAARஆல் பிறப்பிக்க முடியுமா?

பதில் முடியும். ஆணைக் கிடைத்த தேதியிலிருந்து ஆறு மாதத்திற்குள் தீர்ப்பில் வெளிப்படையாகத் தெரியக்கூடிய தவறுகளைத் திருத்தும் அதிகாரத்தை சட்டப்பிரிவு 101 AAR மற்றும் AAARக்கு அளிக்கின்றது. இம்மாதிரியான தவறுகளை அதிகாரிகள் தன் சுய ஆர்வத்தினால் கண்டுப்பிடைக்கலாம். அதை மனுதாரரிடமோ, அல்லது பரிந்துரைக்கப்பட்டவரிடமோ. அல்லது CGST/SGSTன் நீதி விசாரணை அதிகாரியிடமோ தெரிவிக்கலாம். இம்மாதிரி தவறுகளைத் திருத்தும்போது வரி பொறுப்பு அதிகரித்தாலோ, அல்லது உள்ளீட்டு வரி வரவின் அளவுக் குறைந்தாலோ, ஆணைப் பிறப்பிப்பதற்கு முன் மனுதாரருக்கு கண்டிப்பாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

# 18. தீர்வாணைக்குழு

கேள்வி 1. தீர்வாணைக்குழுவின் அடிப்படை நோக்கம் என்ன?

பதில். தீர்வாணைக்குழு அமைப்பதின் அடிப்படை நோக்கம்

அ. வரி செலுத்துபவரின் சர்ச்சைக்குரிய தீர்மானங்களுக்கான ஒரு மாற்று வழியை ஏற்படுத்துதல்

ஆ. பெருஞ்செலவாகிற மற்றும் நேரத்தை விரயமாக்குகிற வழக்காடல் நடவடிக்கைகளை தவிர்ப்பதன் மூலம் சர்ச்சை சம்பந்தப்பட்ட GSTக்கு செலுத்த வேண்டியதை துரிதப்படுத்தலாம்.

இ. வரி ஏய்ப்பு செய்து கொண்டிருந்தவர் தன் வரி பாக்கியை செலுத்தி அப்பழுக்கற்றவராக மாறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துதல்.

ஈ. உண்மையாகவும், முழுமையாகவும், தன் வரிப் பொறுப்பை வெளிப்படுத்துவதன் அடிப்படையில், வரி செலுத்துபவர் அவர்களின் வழக்கிலிருந்து விடுபடுவதற்காக விண்ணப்பிதற்கு ஒரு குழுவாக சேவை செய்தல்.

உ சர்ச்சைகளில் துரிதமான தீர்வு கிடைப்பதற்கு ஊக்கமளித்தல். மேலும் சில சந்தர்ப்பங்களில் வழக்கினால் ஏற்படும் துன்பங்களிலிருந்து வியாபாரத்தை பாதுகாத்தல்.

கேள்வி 2. மாநிலங்களுக்குள்ளும், மாநிலங்களிடையேயும் நடைபெறும் கருத்து பரிமாற்றத்தினால் ஏற்படும் வரிதொடர்பான பிரச்னைகளுக்கு MGLல் தீர்வு கிடைக்குமா?

பதில் மாதிரி GST சட்டத்தில், IGST சட்டத்தின் கீழ் தான் தீர்வாணைக் குழுசேர்க்கப்பட்டுள்ளது (section 11-26). வரி பொறுப்பு தொடர்பாக மாநிலங்களுக்குள் ஏற்படும் பரிவர்த்தனைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு தீர்வு காண முடியாது என்பதை இது குறிக்கிறது. இருப்பினும், தீர்ப்பாணைக் குழுவை நியமிக்க அந்த மாநிலத்தின் வரி நிர்வாகம் தீர்மானித்தால், அதை IGST சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு முன்வடிவு அடிப்படையில் அமைக்க முடியும். மேலும், IGST சட்ட வரைவிலிருந்து, அதை மாநிலத்தில் செயல்படுத்த CGST சட்டத்தில் ஏற்பாடு உள்ளது.

கேள்வி 3. MGL தீர்வு ஏற்பாட்டின் கீழுள்ள வழக்கு என்றால் என்ன?

பதில். பிரிவு 11ன் படி, வழக்கு என்றால் தீர்வைக்கான விண்ணப்பம் செய்யப்பபடும் நாளன்றும் நிலுவையில் இருக்கும் வரி வசூல், வரி மதிப்பீடு அல்லது IGSTன் வசூலின் தொடர்பாக IGST அதிகாரியின் முன் அல்லது முதன்மை மேல்முறையீடு ஆணையத்தின் முன் வரி வசூல், வரி மதிப்பீடு அல்லது IGSTன் வசூலுக்காக IGST சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கை என்று பொருள். மேல்முறையீடு செய்வதற்கான காலக்கெடு முடியவில்லை என்று நீதி விசாரணை அதிகாரியால் ஒரு ஆணை பிறப்பிக்கப்படுவதும் வழக்கு என்றே பொருள்படும். இது வரையறையில் தெளிவாக்கப்படுவது என்னவென்றால் ஒரு மேல்முறையீடு செய்வதற்கான காலக்கெடு முடிந்தபின் மேல்முறையீடு செய்யப்படுவதும் அல்லது ஒரு வழக்கை உயர்நீதிமன்ற ஆணையத்தினால் கீழ்நிலை நீதிமன்றத்தில் ஒப்படைப்பது என்பது நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதாகாது. எனவே, இம்மாதிரி வழக்குகளில் தீர்வைக்கான விண்ணப்பம் செய்ய முடியாது.

கேள்வி 4. தீர்வை விண்ணபத்தை பரிசீலிக்கும் / விசாரிக்கும் உறுப்பினர்களின் கூட்டமைப்பு என்ன?

பதில். ஒவ்வொரு தீர்வை விண்ணபத்தையும் ஒரு நீதிமன்ற அமர்வை தலைமை தாங்கும் மாநில தலைவர் மற்றும் இரண்டு மற்ற உறுப்பினர்களால் விசாரிக்கப்படும். மாநில தலைவர் என்பவர் தற்போதைய அல்லது ஓய்வு பெற்ற நீதிபதியாவார். மற்ற இரு உறுப்பினர்கள் CSGT நிர்வாகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட தொழில்நுட்ப உறுப்பினர்கள்.

கேள்வி 5. தீர்வை விண்ணப்பதை விசாரிக்கும் உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டால் என்ன நடக்கும்?

பதில். IGST சட்டம் பிரிவு 14ல், தீர்வாணைக் குழு அமர்வின் உறுப்பினர்களிடையே ஏதாவது விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், பெரும்பான்மைக் கருத்துக்களின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும். அமர்வில் மூன்று உறுப்பினர்களில் ஒரு உறுப்பினர் வராமல், உடல்நல குறைவு அல்லது பதவி இடம் காலியாக இருத்தல் போன்ற நிலையில் இரு உறுப்பினர்கள் மட்டுமே முடிவு எடுக்கக்கூடிய வழிவகை உள்ளது. அப்பொழுதும் இரு உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டால், விஷயம் மூன்றாம் நபரின் ஆலோசனைக்கு அனுப்பப்படும். பிறகு பெரும்பான்மை கருத்துகளின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும்.

கேள்வி 6. தீர்வையை யார் விண்ணப்பிக்க முடியும்?

பதில். IGST சட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு ஒன்று அல்லது அதற்கு அதிகமாகவும் காரணம் கேட்டு குறிப்பாணை அனுப்பப்பட்டு, அது நீதி விசாரணை அதிகாரியிடமோ அல்லது முதன்மை மேல்முறையீடு ஆணையத்திடமோ நிலுவையில் இருந்தாலும், இது சம்பந்தமாக, IGST சட்டப் பிரிவு 15ன் படி தீர்வைக்காக விண்ணப்பிக்கலாம்.

கேள்வி 7 தீர்வை விண்ணப்பதின் பொருளடக்கம் என்ன?

பதில். தீர்வை விண்ணப்பத்தில் முழுமையாகவும், உண்மையை வெளிப்பாடாகவும் இருக்க வேண்டியது:-

அ) வரிப் பொறுப்புகள், அதற்குரிய IGST அதிகாரியிடம் வெளிப்படையாக தெரிவிக்காதது;

ஆ) வரிப் பொறுப்புகளை பெறுகின்ற முறை;

இ)அவரால் ஒப்புக்கொள்ளப்பட்ட கூடுதலான வரித் தொகை;

ஈ) தவறான வகைப்படுத்தல் போன்ற மற்ற விவரங்களால் நோட்டீஸிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டு, குறைந்த கட்டணம் கட்டுவதற்கு அனுமதியும் பெற்றது.

கேள்வி 8. தீர்வை விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வதற்குமுன் என்ன மாதிரியான படிநிலைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

பதில். IGST சட்டப் பிரிவு 15ன் படி, தீர்வை விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வதற்குமுன் கீழ்கண்ட படிநிலைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

அ) விண்ணப்பதாரர் தன்னுடைய வருமான வரிகள் விவரத்தை அவர் தாக்கல் செய்ய உள்ள அல்லது தாக்கல் செய்ததை, IGST சட்டத்தின்படி செய்ய வேண்டியது அவசியம் அல்லது பதிவு செய்யப்பட்ட காரணங்கள் செல்லுபடியாகும் வலுவான சூழ்நிலைகள் இருப்பதால், வருமான வரி தாக்கல் செய்ய வேண்டிய அவசிமில்லை என்று தீர்வாணைக் குழுவால் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆ) விண்ணப்பரதாரருக்குக் கிடைக்கப்பெற்ற வரி செலுத்தும்படி, விளக்கம் கேட்டு நோட்டீஸ் அல்லது IGST அதிகாரியால் வரி செலுத்துவதை உறுதிசெய்து பிறப்பிக்கப்பட்ட ஆணை கிடைக்கப்பெற்றதும், அதுவை முதன்மை மேல்முறையீடு ஆணையத்திடம் நிலுவையில் இருக்கின்றது,

இ) தன்னுடைய விண்ணப்பத்தில ஒப்புக்கொண்டபடி 5 லட்சத்துக்கு மேலான கூடுதல் வரித் தொகை.

ஈ) CGST சட்டப்பிரிவு 36ன் கீழ், விண்ணப்பதாரர் ஒப்புக் கொண்டபடி கூடுதல் வரித்தொகையை வட்டியுடன் செலுத்தினார்.

கேள்வி 9. தீர்வை விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலைகள் என்ன?

பதில். IGST சட்டப் பிரிவு 15ன் படி, கீழ்கண்ட சூழ்நிலைகளில் தீர்வை விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

அ) ஒரு வழக்கு மேல்முறையீடு ஆணையத்திலோ அல்லது ஏதாவது நீதிமன்றத்திலோ நிலுவையில் இருந்தால்;

ஆ) ஏற்றுக் கொண்ட வரிவிகிதத்தின் மீதான ஒரு திடமான கேள்வி அல்லது பொருட்கள் அல்லது சேவைகள் மீதான உறுதிசெய்யப்பட்ட வரியை செலுத்துதல் போன்றவற்றில் தொடர்புடைய விண்ணப்பமாக இருந்தால்;

இ) பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தாமல் இருந்தால்;

கேள்வி 10. சமர்ப்பித்த தீர்வை விண்ணப்பத்தை விண்ணப்பதாரரால் திரும்பப் பெற இயலுமா?

பதில். முடியாது. IGST சட்டப் பிரிவு 15ன் படி, ஒரு முறை சமர்ப்பித்த விண்ணப்பத்தை திரும்பப் பெற விண்ணப்பதாரருக்கு அனுமதி கிடையாது.

கேள்வி 11. தீர்வாணைக் குழுவால் என்ன ஆணைகளை பிறப்பிக்கமுடியும்?

பதில். தீர்வாணைக் குழுவால் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் உள்ளடங்கிய தீர்வை விதிமுறைகள்:

அ) வரித் தொகை, வட்டி, அபராதம் அல்லது தண்டனை போன்றவை விண்ணப்பதாரரால் செலுத்தப்பட வேண்டியது (இந்தத் தொகையை முப்பது நாட்களுக்குள்ளாகவோ அல்லது மேலும் 3 மாதம் நீட்டிக்கப் பெற்ற காலக்கெடுவுக்குள்ளும் செலுத்தப்படாமலிருந்தால், இந்த் தொகையை வட்டியுடன் சேர்த்து CGST சட்டப்பிரிவு 54ன் படி மத்திய அரசாங்கம் வரி பாக்கித் தொகையை வசூலிக்கும்); (பிரிவு 16)

ஆ) தீர்வையின் கீழ் வரி பாக்கி தொகையை செலுத்தப்பட வேண்டிய முறை; (பிரிவு 16)

இ) விண்ணப்பம் பெறப்பட்ட தேதியில் எந்தவிதமான குற்ற நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், விண்ணப்பதாரர் அளித்த முழுமையான, வெளிப்படையான வரிப் பொறுப்புப் பற்றிய தகவல்கள் தீர்வாணைக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டால், IGST சட்டத்தின் கீழ் எந்தக் குற்ற வழக்குகளிலிருந்தும்விலக்கு அளிக்கலாம்;(பிரிவு 20)

ஈ) IGST சட்டத்தின் கீழ், வழங்கப்பட்ட தண்டனையிலிருந்து முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விலக்கு அளிக்க முடியும்; (பிரிவு 20)

உ) ஏதாவது வழக்குகள் நிலுவையிலிருந்தால், விண்ணப்பதாரரின் சொத்தை பறிமுதல் செய்வதற்கான ஆணையை பிறப்பிக்க வழியுண்டு. மத்திய அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தி விட்டு, அதற்கான அத்தாட்சியை தீர்வாணைக் குழுவிடம் சமர்ப்பித்தால், பறிமுதல் செய்வதற்கான ஆணை ரத்தாகி விடும்; (பிரிவு 17)

ஊ) விண்ணப்பதாரர் தீர்வாணைக் குழுவுடன் ஒத்துழைக்க மறுக்கிறார் என்று வழக்கை IGSTன் நீதி விசாரணை அதிகாரிக்கோ அல்லது முதன்மை மேல்முறையீடு ஆணையத்திற்கோ மீண்டும் திருப்பி அனுப்பப்படும். இம்மாதிரி வழக்குகளில், வரி செலுத்துபவரால் தீர்வாணைக் குழுவின் முன்பு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆதாரங்கள் மற்றும் விவரங்களை அல்லது தீர்வாணைக் குழுவின் விசாரணை முடிவையோ சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு முழு உரிமை உள்ளது; (பிரிவு 21)

எ) ஏற்கனவே முடிக்கப்பட்டு, அதற்கான ஆணையையும் பிறப்பித்த வழக்கில், அது தொடர்பான எந்த நடவடிக்கைகளையும் மீண்டும் துவங்கமுடியும். இதில் விண்ணப்பதாரரின் ஒப்புதலும்,. தீர்வை விண்ணப்ப தேதியிலிருந்து கணக்கிட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டு ஐந்து வருடம் முடியாத போதுதான் இந்த வழக்கை மீண்டும் நடத்த முடியும்.

கேள்வி 12. தீர்வாணைக் குழுவின் தீர்ப்பை ரத்து செய்வதற்கான காரணங்கள் என்ன?

பதில். அ) மோசடி மற்றும் தவறான தகவல்கள் அளித்ததன் மூலம் கிடைத்த தீர்ப்பு என்று பிறகு கண்டறியப்பட்டால், தீர்வாணைக் குழுவின் தீர்ப்பை ரத்து செய்ய முடியும். அதற்குப் பிறகு தீர்வை சம்பந்தமான இந்த வழக்கை, தீர்வாணைக் குழுவால் தொடர்ந்து செயல்பட அனுமதிப்பட்ட பின்னர் மீண்டும் புத்துயிர் பெறும். மேலும் தீர்வாணைக் குழுவிடமிருந்து இது தொடர்பான தகவல் பெறப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வருடங்களுக்குள்ளாக, இது சம்பந்தப்பட்ட

அசல் அதிகாரியாலோ அல்லது மேல்முறையீடு ஆணையத்தாலோ இந்த வழக்கு முடித்து வைக்கப்பட வேண்டும்.(பிரிவு 16)

ஆ) விண்ணப்பதாரர் ஏதாவது உண்மைகளை மூடி மறைத்ததாக பிறகு கண்டறிந்தாலோ அல்லது தவறான ஆதாரங்களை தந்திருந்தாலோ அல்லது தீர்ப்பாணையில் குறிப்பிட்டுள்ளபடி பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்குள் தொகையை கட்ட தவறியிருந்தாலோ தீர்ப்பாணையால் வழக்குகளிலிருந்தும் அல்லது தண்டனைத் தொகையிலிருந்தும் விலக்கு அளித்த தீர்ப்பை திரும்பப் பெற்று கொள்ள முடியும்.

கேள்வி 13. தீர்வாணைக் குழுவை யாரால் பயன்படுத்த முடியாது?

பதில். பின்குறிப்பிடப்படும் நபர்கள் தீர்வாணைக் குழுவின் வசதிகளை பயன்படுத்த முடியாது.

அ) இரண்டு முறைகளுக்கு மேல் தீர்வையின் வசதிகளை யாராலும் பெற முடியாது.

ஆ) தீர்ப்பாணைப் பெற்ற ஒரு நபர் வேறு ஒரு விஷயத்திற்காக, தீர்வைக்காக விண்ணப்பம் செய்ய முடியாது, ஒரு வழக்கு தொடர்பாக குற்றவாளி என்று IGST சட்டத்தின் கீழ் உறுதிசெய்யப்பட்ட ஒரு நபர் அல்லது விண்ணப்பதாரர் ஒத்துழைப்பு தர மறுப்பதாகக் கூறி தீர்வாணைக் குழு, வழக்கை மீண்டும் சம்பந்தப்பட்ட நீதி வசாரணை அதிகாரிக்கு திருப்பி அனுப்பபடும். (பிரிவு 23)

கேள்வி 14. தீர்வாணைக் குழுவின் அதிகாரங்கள் யாவை?

பதில் தீர்வாணைக் குழுவின் அதிகாரம் மற்றும் நடைமுறைகள் குறித்து IGST சட்டப்பிரிவு 25, 26ல் கொடுக்கப்பட்டுள்ளது. சிவில் நடைமுறை குறியீடு 1908ன் கீழ் சிவில் நீதி மன்றத்திற்கு கண்டறிதல் மற்றும் மேற்பார்வையிடுதல், ஒரு நபரின் வருகையை உறுதிபடுத்துதல், உறுதிமொழியின் மீது அவரை பரிசோதித்தல், கணக்கு புத்தகங்கள், மற்ற ஆவணங்களை கட்டாயமாக சமர்ப்பிக்க செய்தல் போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. குற்றவியல் நடைமுறை குறியீடு 1973ன் பிரிவு 195ன் நோக்களுக்காக தீர்வாணைக் குழு ஒரு சிவில் நீதி மன்றமாகவே கருதப்படும். அதன் முன் வரும் எந்த நடைமுறைகளும், இந்திய தண்டனைச் சட்டம் 1860 (IPC) பிரிவு 196ன் நோக்கங்களுக்காகவும், பிரிவு 193, 228ன் கீழ் நீதிமன்ற நடவடிக்கைகளாகவே கருதப்படும். தனக்கான நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் தீர்வானைக் குழுவுக்கு உண்டு.

நடவடிக்கைகளின் போது கொடுக்கப்படும் தவறான ஆதாரங்களும் IPC 1860 சட்டப்பிரிவு 193ன் படி தண்டனைக்குரியது. தீர்வை நடவடிக்கைப் பொறுப்பில் இருக்கும் அதிகாரியை திட்டமிட்டே அவமதிப்பதும் அல்லது தொந்தரவு செய்வதும் IPC 1860 சட்டப்பிரிவு 228ன் படி தண்டனைக்குரியது. ஒரு நபர் தவறான ஆதாரங்களை கொடுத்தாலோ அல்லது நடவடிக்கைகளில் தொந்தரவு செய்தாலோ IPCல் வழங்கப்படும் அதே தண்டனையை தீர்வாணைக் குழுவும் வழங்கலாம்.

பதிவுகளில் வெளிப்படையாக தெரியும் எந்த தவறுகளையும் ஆணைப் பிறப்பித்த தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் திருத்தம் செய்யும் அதிகாரத்தை IGST சட்டம் 24வது பிரிவு தீர்வாணையக் குழுவிற்கு வழங்குகிறது, இம்மாதிரியான தவறுகளை தீர்வாணையக் குழு சுயமாக கண்டுப்பிடித்தாலோ அல்லது அதை மனுதாரரிடமோ, அல்லது IGST அதிகாரியிடமோ தெரிவிக்கலாம். இம்மாதிரி தவறுகளைத் திருத்தும்போது வரி பொறுப்பு அதிகரித்தாலோ, அல்லது உள்ளீட்டு வரி வரவின் அளவுக் குறைந்தாலோ, ஆணைப் பிறப்பிப்பதற்கு முன் மனுதாரருக்கு கண்டிப்பாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

## 19. பரிசோதனை, சோதனை, பறிமுதல் மற்றும் கைது.

கேள்வி 1 "சோதனை" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?

பதில். சட்ட அகராதியிலும், மற்றும் வேறு பல்வேறு சட்டப் பிரகடனத்திலும், "சோதனை" என்றவார்த்தைக்கு சுலபமான மொழியில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இடம், பகுதி, நபர், சரக்குகள் முதலியன ஏதேனும் மறைக்கப்பட்டுள்ளதா என்பதை சென்று, கவனமாக கண்காணித்து கண்டறிவதற்கு அல்லது ஒரு குற்றத்திற்கான ஆவணங்களை தேடும் நோக்கத்தில் அரசு இயந்திரத்தின் செயல்பாடுகளே "சோதனை" ஆகும். ஒரு நபர், வண்டி அல்லது வீடு முதலியவற்றை முறையான மற்றும் பொருத்தமான சட்ட அதிகாரத்தினால் கீழ் தான் சோதனை நடத்த முடியும்.

கேள்வி2. "பரிசோதனை" என்ற வார்த்தையின் பொருள் என்ன?

பதில். MGL விதிகளின் கீழ் "பரிசோதனை" என்பது புதிய விதியாகும். இது சோதனையை விட மிகவும் மென்மையான வழியாகும் இது, வரி செலுத்துபவரின் எந்த ஒரு வியாபார இடத்தையும் மற்றும் சரக்குகளை போக்குவரத்து தொழிலை செய்யும் ஒரு நபரின் இடத்தையோ, அல்லது ஒரு உரிமையாளராய் அல்லது நடத்துனராய் இருக்கின்ற ஒரு கிடங்குக்குள் அல்லது பண்டகசாலையிலுக்குள்ளோ நுழைவதற்கான அதிகாரத்தை அதிகாரிகளுக்கு வழங்குகிறது.

கேள்வி 3. "பரிசோதனை" மேற்கொள்ளும் ஆணையை பிறப்பிக்கும் அதிகாரம் யாருக்கு, எந்த சந்தர்ப்பத்தில் உள்ளது?

பதில். MGL பிரிவு 60ன் படி, இணை ஆணையர் அல்லது அவருக்கும் மேல் அதிகாரியால் எழுத்துப் பூர்வமாக கொடுக்கும் ஆணையின்படி, CGST/SGST அதிகாரியால் பரிசோதனை மேற்கொள்ள முடியும். பின்வரும் ஏதாவது ஒரு காரணங்களில் அந்த நபர் சம்பந்தப்பட்டிருப்பதாக இணை ஆணையர் அல்லது அவருக்கும் மேல் அதிகாரிகள் நம்புவதற்கான காரணம் என்று கருதினால் மட்டுமே இம்மாதிரி ஆணையை பிறப்பிக்க முடியும்:

அ) வழங்கல் சம்பந்தப்பட்ட பரிவர்த்தனைகளை மறைத்தல்;

ஆ) சரக்குகள் கையிருப்பை மறைத்தல்

இ) உள்ளீட்டு வரி வரவை அதிகமாக கோரியிருந்தால்.

உ) வரியை தவிர்க்க CGST/SGST சட்டத்தை மீறுதல்

ஊ) போக்குவரத்து நடத்துபவர் அல்லது கிடங்கு உரிமையாளர் வரி ஏய்ப்பு செய்து வைத்திருந்த சரக்குகள் அல்லது வரி ஏய்ப்பு செய்வதற்காக வைத்திருந்த கணக்குகள் அல்லது சரக்குகள்.

கேள்வி 4. இந்த சட்டத்தின் கீழ் எந்த சொத்தையோ / வளாகத்தையோ பரிசோதனை செய்ய அதற்குரிய அதிகாரிக்கு அதிகாரம் வழங்க முடியுமா?

பதில் . முடியாது. பின்வரும் ஏதாவது ஒன்றிற்காக மட்டுமே CGST/SGST அதிகாரிக்கு பரிசோதனை செய்யும் அதிகாரம் வழங்கப்படும்:

அ) வரி செலுத்தும் ஒரு நபரின் எந்த ஒரு வியாபார இடம்

ஆ) ஒரு நபர் பதிவு செய்யப்பட்ட வருமான வரி செலுத்தபவராயிருந்தாலும், இல்லாவிட்டாலும், அந்த நபர் சரக்குகளை போக்குவரத்து செய்யும் தொழிலைச் செய்யும் இடம்.

இ) கிடங்கு அல்லது பண்டகசாலையின் உரிமையாளர் அல்லது நடத்துனர் வியாபாரம் செய்யும் இடம்.

கேள்வி 5. MGL விதிகளின் கீழ் சோதனையிடவோ பறிமுதல் செய்யவோ ஆணையிடும் அதிகாரம் யாருக்குள்ளது?

பதில்., சோதனையே மேற்கொள்ளவும், சரக்குகள், ஆவணங்கள், புத்தகங்கள் அல்லது சரக்குகளை பறிமுதல் செய்யும் அதிகாரத்தை ஒரு அதிகாரிக்கு எழுத்துபூர்வமாக வழங்கும் அதிகாரம் இணை ஆணையர் நிலையிலுள்ள அதிகாரி அல்லது அதற்கும் மேல் அதிகாரிக்கு தான் உள்ளது. பறிமுதல் செய்யப்பட வேண்டிய சரக்குகள் அல்லது அந்த நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட ஏதேனும் ஆவணங்கள் அல்லது புத்தகங்கள் அல்லது மற்றவைகளை ஏதாவது இடத்தில் மறைத்து வைத்திருத்தல் போன்ற நம்புவதற்கான காரணம் என்று கருதினால் மட்டுமே இணை ஆணையர் இம்மாதிரி ஆணையை பிறப்பிக்க முடியும்:

கேள்வி 6. “நம்புவதற்கான காரணம்” என்றால் என்ன?

பதில். நம்புவதற்கான காரணம் என்பது உண்மை பற்றி அறிந்திருத்தல் வேண்டும். ஒரு நடுநிலையாளனுக்கு, உண்மைகளைப் பற்றி அதிகளவு நேரடியாக அறிந்திராவிட்டாலும், அந்த உண்மைகளை தெரிந்து கொண்டு, அதற்கான நியாயமான முடிவையும் எடுக்க வேண்டும். IPC 1860 சட்டப்பிரிவு 26ன் படி, “ஒரு நபருக்கு ஒரு விஷயத்தில் ‘நம்புவதற்கான காரணம்’ என்பது, அவர் நம்புவதற்கு போதுமான காரணம் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்.” நுண்ணறிவு சார்ந்த மற்றும் மதிப்பீடு அடிப்படையில் ஒரு உறுதியான புறநிலையை சிந்திக்கும்

'நம்புவதற்கான காரணம்', உள்ளுணர்வு சார்ந்த கருத்தின் நிலைபாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் ஒரு நபர் நேர்மையாகவும், நியாயமாகவும் இருக்க வேண்டும்.

கேள்வி 7. பரிசோதனை அல்லது சோதனை மற்றும் பறிமுதலுக்கான ஆணையை பிறப்பிப்பதற்கு முன் 'நம்புவதற்கான காரணம்' பற்றி அதற்குரிய அதிகாரி எழுத்துபூர்வமாக பதிவு செய்ய வேண்டியது கட்டாயமா?

பதில். அதிகாரத்தை வழங்குவதற்கு முன் இந்த மாதிரி நம்பிக்கையை தெரிவிக்க வேண்டிய அவசியம் அந்த அதிகாரிக்கு இல்லையென்றாலும், அவர் எந்த நம்பிக்கையில் இதை வழங்கினார் என்பதற்கான ஆவணத்தை வெளிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு வழக்கிலும் நம்புவதற்கான காரணத்தை பதிவு செய்வதென்பது இயலாதகாரணம். இருப்பினும், சோதனை ஆணை பிறப்பிப்பதற்கு முன்போ அல்லது சோதனை செய்வதற்கு முன்போ, ஆவணங்கள் தகவல்களை முதலியவற்றை பதிவு செய்வது மிகவும் உகந்த செயலாகும்..

கேள்வி 8. சோதனை ஆணை என்றால் என்ன? அதன் உள்ளடக்கம் யாவை?

பதில். சாதாரணமாக, எழுத்தாணை பெற்ற அதிகாரியால் சோதனை நடத்தப்படுவதுதான் சோதனை ஆணை என்பதாகும். இணை ஆணையர் அல்லது அதற்கும் மேல் அதிகாரியால் மட்டுமே சோதனை ஆணை பிறப்பிக்கும் ஒப்புதல் அளிக்கும் அதிகாரிகளாவர். நம்பும்படியான காரணம் இருப்பதாலேயே சோதனை நடத்தப்படுகிறது என்பதை சோதனை ஆணை குறிப்பிட வேண்டும். சோதனை ஆணை பின்வரும் விவரங்கள் அடங்கும்:

அ) சட்டத்தை மீறுதல்;

ஆ) சோதனை செய்யப்பட வேண்டிய வளாகம்;

இ) சோதனை செய்பவரின் பெயர் மற்றும் பதவி;

ஈ) ஆணைப் பிறப்பிக்கும் அதிகாரியின் வட்ட முத்திரையுடன், அவரது முழுப் பெயர் மற்றும் பதவி ;

உ) ஆணைப் பிறப்பிக்கும் நாள் மற்றும் இடம்,

ஊ) சோதனை ஆணையின் வரிசை எண்,

எ) செல்லுபடியாகும் காலப்பகுதி அதாவது ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள், இன்ன பிற

கேள்வி 9. MGL விதிகளின்படி சரக்குகள் பறிமுதல் செய்யப்படுவதற்கான சூழ்நிலை எப்போது ஏற்படுகிறது?

பதில். மாதிரி GST சட்டத்தில், பிரிவு 70யின்படி பின் குறிப்பிடப்படும் ஏதாவது ஒன்றில் அந்த நபர் ஈடுபடும் போது, சரக்குகள் பறிமுதல் செய்யப்படும் நிலை ஏற்படுகிறது:

அ) சட்ட விதிகளுக்கு விரோதமாக விநியோகிக்கப்படும் அல்லது வரி ஏய்ப்பு செய்த எந்த சரக்குகள்

ஆ) சட்டப்படி வரி செலுத்த வேண்டிய சரக்குகளை. கணக்கில் காட்டாமல் இருத்தல்

இ) சட்டப்படி வரி செலுத்த வேண்டிய சரக்குகளை, பதிவு செய்யப்படாமலே விநியோகிப்பது

ஈ) CGST/SGSTன் எந்த ஒரு விதியையும் மீறுவதும் அல்லது ஏற்படுத்தப்பட்ட சட்டத்தை முரணாக தெரிந்தே வரி ஏய்ப்பு செய்வதும்

கேள்வி 10 முறையான சோதனையின் போது. ஒரு அதிகாரி கையாள வேண்டிய அதிகாரம் என்ன?

சோதனையில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிக்கு சரக்குகளை சோதனையிடவோ அல்லது பறிமுதல் செய்யவோ (பறிமுதல் செய்யப்பட வேண்டியவையாக இருந்தால்) அதிகாரம் உள்ளது. மேலும், ஆவணங்கள், புத்தகங்கள், அல்லது சரக்குகள் (MGLன் நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட) போன்றவற்றை வளாகத்திலிருந்து பறிமுதல் செய்யலாம். வளாகத்தினுள் நுழைய சோதனையிட வரும் அதிகாரிக்கு அனுமதி மறுக்கப்பட்டால், அவர் கதவை உடைத்து திறந்து கொண்டு வளாகத்திற்குள் செல்ல அதிகாரம் உண்டு. அதேபோல், சோதனையின்போது, சந்தேகிக்கும் படியாக, சரக்குகள், கணக்குள், பதிவேடுகள், அல்லது ஆவணங்களை வளாகத்திலுள்ள அலமாரிகள் அல்லது பெட்டிகளில் மறைத்து வைத்திருப்பதாக தெரிந்தால், அவைகளை திறக்க அனுமதிக்காவிட்டாலும், அவற்றை உடைத்து திறந்து பார்க்கும் அதிகாரம் அவருக்கு உள்ளது. உள்ளே நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டால், அந்த வளாகத்தை சீல் வைக்கவும் அவருக்கு அதிகாரம் இருக்கிறது.

கேள்வி 11. சோதனை நடத்துவதற்கான விதிமுறைகள் என்ன?

MGL சட்டப்பிரிவு 60(8)ன் பரிந்துரையில், சோதனைகள் குற்றவியல் நடைமுறை குறியீடு 1973 விதிகளுக்கேற்ப நடத்தப்பட வேண்டும். குற்றவியல் நடைமுறைகள் குறியீடு 100வது பிரிவில் சோதனைகளுக்கான விதிமுறைகள் விளக்கப்படுகின்றன.

கேள்வி 12. சோதனை நடவடிக்கைகளின் போது, கடைபிடிக்க வேண்டிய அடிப்படை தேவைகள் என்ன?

பதில். சோதனையின் போது பின் குறிப்பிடப்படும் கொள்கைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்:

- உரிய அதிகாரியிடமிருந்து சோதனை ஆணை பெறாமல் எந்த வளாகத்திலும் சோதனை நடத்த முடியாது.
- வீடுகளுக்கு சோதனையிடச் செல்லும் குழுவுடன் ஒரு பெண் அதிகாரியும் செல்ல வேண்டும்.
- சோதனை நடத்த வரும் அதிகாரி, சோதனை நடத்துவதற்கு முன் அந்த வளாகத்தின் பொறுப்பாளரிடம் தன்னுடைய அடையாள அட்டையை காண்பிக்க வேண்டும்.
- சோதனை நடத்த ஆரம்பிப்பதற்கு முன் சோதனை ஆணையை பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டும், மேலும், அந்த ஆணையை வளாகத்தின் பொறுப்பாளிரிடம் காண்பிக்க வேண்டும். அந்த ஆணையை அவர் பார்த்ததற்கான அத்தாட்சி கையெழுத்தை ஆணையின் நடுவே பெற வேண்டும். மேலும் இரண்டு பொது சாட்சிகளிடம் ஆணையின் நடுவே கையொப்பங்கலை பெற வேண்டும்.
- சார்பற்ற இரண்டு உள்ளூர் சாட்சிகளின் முன்னிலையில் தான் இந்த சோதனை நடைபெற வேண்டும். உள்ளூர்வாசிகள் சாட்சிகளாக இருக்க விரும்பவில்லை என்றால், வெளியூரிலுள்ள எவரையேனும் சோதனையின் சாட்சிகளாக அழைக்கலாம். சாட்சிகளுக்கு சோதனையின் சாராம்சத்தை விளக்க வேண்டும்.
- சோதனை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன், சோதனை செய்யும் அதிகாரிகளின் குழு மற்றும் அவரகளுடன் சென்ற சாட்சிகளும், சோதனை செய்யப்பட வேண்டிய வளாகத்தின் பொறுப்பாளரிடம் தங்களைச் சோதனை செய்யச் சொல்ல வேண்டும். சோதனை செய்யும் அதிகாரிகளின் குழு மற்றும் அவரகளுடன் சென்ற சாட்சிகளின் சோதனை முடிந்தபின், மீண்டும் தங்களை தாங்களே சோதனைக்குள்ளாக்கிக் கொள்ள வேண்டும்.
- சோதனையின் நடவடிக்கைகளின் பஞ்சநாமா மகஜரை சோதனை செய்யும் இடத்திலேயே தயாரிக்க வேண்டியது அவசியம். காவலில் வைக்கப்பட்ட /

பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகள், ஆவணங்கள் பற்றிய பட்டியல் தயாரிக்கப்பட்டு, பஞ்சநாமா / மகஜருடன் இணைக்கப்பட வேண்டும். பஞ்சநாமா / மகஜர் மற்றும் காவலில் வைக்கப்ட்ட / பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகள், ஆவணங்கள் பற்றிய பட்டியலில், சோதனை செய்யம் போதிருந்த சாட்சிகளிடமும், வளாகத்தின் பொறுப்பாளர் / உரிமையாளரிடமும் கையெழுத்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும், சோதனை செய்யும் அதிகாரம் பெற்று, சோதனை செய்த அதிகாரிகளும் கையெழுத்திட வேண்டும்.

- சோதனை முடிந்தபின், அசல் சோதனை ஆணையுடன், சோதனை தொடர்பான தகவலறிக்கையையும் இணைத்து, ஆணைப் பிறப்பித்த அதிகாரியிடம் மீண்டும் அதை ஒப்படைக்க வேண்டும். சோதனையில் ஈடுபட்ட அதிகாரிகளின் பெயர்களை சோதனை பின் பக்கத்தில் எழுதபட வேண்டும்.
- ஆணை பிறப்பிக்கும் அதிகாரி சோதனை ஆணை பிறப்பித்ததை பதிவு செய்த பதிவேட்டு. மற்றும் திரும்ப பெற்றதை, மற்றும் உபயோகித்த சோதனை ஆணை போனறவற்றை பராமரிக்க வேண்டும்.
- இணைப்புடன் கூடிய பஞ்சநாமா / மகஜரின் நகலை சோதனை நடத்தப்பட்ட வளாகத்தின் பொறுப்பாளரிடமும் உரிமையாளரிடமும் கொடுக்கப்பட வேண்டும். நகல் கிடைத்ததற்கான அத்தாட்சியையும் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

கேள்வி 13. வேறு ஏதாவது சூழ்நிலையில் வியாபார வளாகத்திற்குள் CGST/SGST அதிகாரிகள் நுழைய முடியுமா?

பதில். முடியும். MGL 64வது பிரிவின் அடிப்படையில் நுழைவதற்கு அதிகாரம் உண்டு. தணிக்கை, நுண்ணாய்வு, சரிபார்த்தல் மற்றும் பரிசோதித்தல் என்று வருவாயை பாதுகாக்கும் அக்கறையில், அதன் அவசியத்தின் பொருட்டு, எந்த வணிக வளாகத்திற்குள்ளும், எந்த சோதனை ஆணையுமில்லாமல் நுழைவதற்கு சட்டத்தில் இடமிருப்பதால், CGST/SGSTன் தணிக்கைப் பிரிவு அல்லது C&AG அல்லது செலவு கணக்காளர் அல்லது பட்டயக் கணக்காளர் என்று யாரேனும் ஒருவரை CGST/SGST சட்டபிரிவு 50ன் படி நியமிக்கலாம். இருப்பினும், எழுத்துப்பூர்வமாக ஆணையை CGST/SGSTன் உயர் அதிகார பதிவியிலிருக்கும் கூடுதல் இணை ஆணையரால் வழங்கப்பட வேண்டும். வரி செலுத்துபவர் பதிவு செய்யாமல் நடத்தும், முதன்மை அல்லது கூடுதல் வணிக வளாகத்திற்குள் நுழைவதற்கும், அதன் கணக்குப் புத்தகங்கள், ஆவணங்கள், கணிணிகள், மற்றும் பலவற்றை தணிக்கைகாகவும்,

அவருடைய கணக்குகளை சரிபார்ப்பதற்கான வசதி இந்த விதிகளில் அளிக்கப்படுகின்றது.

கேள்வி 14. சட்டவிரோதமான சோதனை என்று எப்போது கருதப்படும்? சட்ட விரோதமாக நடத்தப்படும் சோதனையின் போது கைப்பற்றபட்ட ஆவணங்கள் சட்ட நடவடிக்கைகளில் ஏற்றுக் கொள்ள முடியுமா?

முறையான சோதனை ஆணை இல்லாமல் செய்யப்படும் சோதனை (அதாவது அதிகாரமற்றவரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது ஆணை பெறாமல்) சட்ட அதிகாரமற்ற சட்ட விரோதமான சோதனையாகும். இருப்பினும். இந்த காரணங்களுக்காக குற்றசாட்டப்பட்டவர் லாபம் அடைய முடியாது. சட்ட விரோதமான சோதனயின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் பறிமுதல் போன்றவை விசாரணயிலும், வழக்கு நடவடிக்கைகளிலும் ஏற்றக் கொள்ளப்படும்.

கேள்வி 15. 'பறிமுதல்' என்ற வார்த்தையின் பொருள் என்ன?

பதில். 'பறிமுதல்' என்ற வார்த்தைக்கு மாதிரி GST சட்டத்தில் குறிப்பிட்ட விளக்கம் இல்லை. லெக்ஸிகன் அகராதியில், 'பறிமுதல்' என்றால் ஒரு அதிகாரி சட்ட நடவடிக்கைகளின் படி சொத்து உரிமையை பறிக்கும் செயலாகும். இதை சாதாரணமாக குறிப்பிடும்போது, உரிமையாளரின் விருப்பத்திற்கெதிராக, கட்டாயமாக உரிமையை பறிப்பதாகும் அல்லது யாருக்கு உரிமை உள்ளது அல்லது யார் உரிமையிலிருந்து விலக மறுப்பவர் யார்

கேள்வி 16. சரக்குகள் மற்றும் அதன் வாகனத்தையும் தடுத்து நிறுத்தும் அதிகாரம் MGLக்கு இருக்கிறதா?

பதில். ஆமாம். MGL69 வது பிரிவின் கீழ், ஒரு அதிகாரிக்கு சரக்குகளையும் அதை கடத்திச் செல்லும் வாகனங்களையும் (ட்ரக் மற்றும் இதர வண்டிகள்) தடுத்து நிறுத்த முடியும். MGLன் போக்குவரத்து விதிகளுக்கெதிராக கடத்தும் அல்லது பதுக்கப்படும் சரக்குகளின் மீது இம்மாதிரி நடவடிக்கை எடுக்கப்படும். கணக்கில் காட்டாமல் பதுக்கப்பட்ட அல்லது சேமித்து வைக்கப்பட்ட சரக்குகளையும் தடுக்க முடியும். உரிய வரியை செலுத்திய பிறகு அல்லது அந்த பணத்திற்கு இணையான பாதுகாப்பு பத்திரத்தை இணைத்தப் பின்பு தான் சரக்குகளையும், வாகனங்களையும் விடுவிக்கப்படும்.

கேள்வி 17. 'பறிமுதல்' மற்றும் 'தடுத்தல் நிறுத்தல்' இவை இரண்டிற்கும் இடையே உள்ள சட்டரீதியான வேறுபாடுகள் என்ன?

ஒரு சட்ட ஆணை / நோட்டீஸ் மூலம் ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரை ஒருவர் சொத்தின் உரிமையை மறுப்பது அல்லது சொத்து படைத்தவனின் உரிமையை மறுப்பது தான் 'தடுத்தல் நிறுத்தல்' ஆகும். 'பறிமுதல்' என்பது துறை சொத்து உடைமைகளை கைப்பற்றுவது ஆகும். சரக்குகளை பறிமுதல் செய்யப்பட வேண்டியது கட்டாயம் என்று சந்தேகிக்கும் போது 'தடுத்தல் நிறுத்தல்' ஆணை பிறப்பிக்கப்படும். விசாரணை / புலனாய்வின் மூலம் நம்புவதற்கான காரணம் எட்டப்படும் போதுதான் 'பறிமுதல்' ஆணைப் பிறப்பிக்கப்படும்.

கேள்வி 18 சோதனை மற்றும் பறிமுதலுக்கு என்ன விதமான பாதுகாப்பு MGLல் வழங்கப்படுகிறது?

பதில். மாதிரி CGST/SGST சட்டப்பிரிவு 60ல் சோதனை அல்லது பறிமுதலுக்கான அதிகாரத்திற்கு சில பாதுகாப்புகளை வழங்கியுள்ளது. அவைகள் பின்வருமாறு:

அ) பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகளையோ அல்லது ஆவணங்களையோ விசாரணைக்கு தேவையான காலத்தை தாண்டி வைத்திருக்க முடியாது

ஆ) எந்த நபரிடமிருநது ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டதோ, அந்த நபர் ஆவணங்களை போட்டோ பிரதி எடுத்துக் கொள்ளலாம்.

இ) பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகளுக்கு 60 நாட்களுக்குள் நோட்டீஸ் அனுப்பப்படவில்லையென்றால், பறிமுதல் சரக்குகளை அதன் உடைமையாளரிடம் திருப்பிக்கொடுக்க வேண்டும். 60 நாட்கள் என்ற காலவரையறையை அதன் நியாய அடிப்படையில் மேலும் அதிகளவான 6 மாதத்திற்கு நீட்டிப்பு செய்யலாம்.

ஈ) பறிமுதல் செய்யப்பட்ட சரக்கிருப்பை பறிமுதல் செய்யும் அதிகாரி தயாரிப்பார்.

உ) பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகளில் குறிப்பிட்ட சிலப் பொருட்களை (அழுகும் பொருட்கள், அபாயமான பொருட்கள் போன்றவை) மாதிரி GST விதிகளின் கீழ் உடனேத் திருப்பித் தர வேண்டும்.

ஊ) குற்றவியல் நடைமுறை குறியீடு 1973 விதியில் சோதனை மற்றும் பறிமுதல சம்பந்தப்பட்டவைகள் பொருந்தும். எனினும், குற்றவியல் நடைமுறை குறியீடு பிரிவு 165ன் துணைப் பிரிவு 5வது விதியில் இருக்கும்,

இது தொடர்பான மிக முக்கியமான மாற்றம் என்னவென்றால், சோதனையின் போது பதிவு செய்யப்பட்டவைகளின் பிரதிகளை குற்றம் குறித்து அறிந்து கொள்ளும் அதிகாரம் படைத்த அருகிலுள்ள நீதிபதிக்கு அனுப்புவதற்கு பதிலாக, முதன்மை ஆணையருக்கோ / CGST ஆணையருக்கோ / SGST ஆணையருக்கோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கேள்வி 19. வரி செலுத்தக்கூடிய சரக்குகளை எடுத்துக் கொண்டுச் செல்லும்போது, பிரத்யேகமான ஆவணங்கள் ஏதேனும் கொண்டு செல்ல வேண்டுமா?

பதில். MGL சட்டப்பிரிவு 61ன்கீழ் போக்குவரத்து வாகனத்தின் பொறுப்பாளர் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சரக்குகளை எடுத்துக் கொண்டு செல்லும்போது அதற்கான பரிந்துரைக்கப்பட்ட ஆவணங்களை வைத்திருக்க வேண்டும்.

கேள்வி 20. ‘கைது’ என்பதன் பொருள் என்ன?

பதில் . மாதிரி GST சட்டத்தில் இதற்கான விளக்கம் இல்லை. இருப்பினும், “ சட்டத்தின் கட்டளை அல்லது அதிகாரத்தின் கீழ் ஒரு நபரை காவலில் வைக்கலாம்” என்று சட்டம் விளக்கம் அளிக்கிறது. இதை வேறு விதமாக கூறும்போது, ஒரு நபர் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படும்போது, அந்த நபருடைய சுதந்திரமாகப்பட்டது அதிகாரத்தினாலோ அல்லது சட்ட பூர்வமான ஆணையினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

கேள்வி 21. MGLன் கீழ் எந்த நபரையும் கைது செய்வதற்கு, உரிய அதிகாரிக்கு எப்போது அதிகாரம் வழங்கப்படுகின்றது?

பதில். CGST / SGSTன் சட்டப் பிரிவு73(1)(i), பிரிவு73(1)(ii) மற்றும் பிரிவு 73(2)கீழ் ஒரு நபர் தண்டனை பெறும் அளவிற்கு குற்றம் செய்திருக்கிறார் என்பதில் நம்புவதற்கான காரணம் இருப்பதாக CGST/SGST ஆணையர் கருதினால், அந்த கைது செய்வதற்கான அதிகாரத்தை CGST/SGST அதிகாரிக்கு வழங்க முடியும். ஒரு நபர் ஐம்பது லட்சத்திற்கு மேல் வரி ஏய்ப்பு செய்திருந்தாலோ அல்லது மாதிரி CGST/SGST சட்டப் பிரிவு 73ன் கீழ், குற்றத்திறக்காக முன்பே தண்டனை பெற்றிருந்தாலோ கைது செய்யலாம் என்று பொருள் கொள்வது அவசியம்.

கேள்வி 22. MGLன் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு என்ன விதமான பாதுகாப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன?

பதில். MGLன் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு சில பாதுகாப்புகளை பிரிவு 62ன் கீழ் வழங்கப்பட்டிருக்கின்றன. அவை

அ) ஒரு நபர் அறிவுசார்ந்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டால். கைதுக்கான அடிப்படை காரணத்தை அந்த நபருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். மேலும், கைது செய்யப்பட்டவரை 24 மணி நேரத்திற்குள் நீதபதியிடம் ஆஜர்படுத்த வேண்டும்.

ஆ) ஒரு நபர் அறிவு சார்பற்ற குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு, மற்றும் ஜாமீன் பெறக் கூடிய குற்றமாயிருந்தால், CGST/SGSTன் துணை ஆணையரோ / உதவி ஆணையரோ அந்த நபரை ஜாமீனில் விடுவிக்கலாம் மேலும், அந்த நபரை ஒரு காவல் நிலைய அதிக ஒப்படைப்பதன் மூலம், குற்றவியல் நடைமுறை குறியீடு 1973ன் பிரிவு 436 கீழ் உள்ள அனைத்து விதிகளுக்கும் அவர் கட்டுப்பட்டவர்.

இ) குற்றவியல் நடைமுறை குறியீடு 1973ல் கைது சம்பந்தமாக சொல்லப்பட்டவைகளுக்கேற்ப அனைத்து கைதுகளும் இருக்க வேண்டும்.

கேள்வி 23. கைது செய்யும் போது என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பதில். கைது மற்றும் அதன்பிறகு எடுக்கப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் குற்றவியல் நடைமுறைக் குறியீடு வழிமுறைகள், 1973 (2 of 1974)ல் உள்ள விதிகளை கடைபிடிக்க வேண்டும். எனவே, CGST/SGSTன் அனைத்து கள அதிகாரிகளுக்கும், குற்றவியல் நடைமுறைக் குறியீடு வழிமுறைகள், 1973 விதிகளைத்தும் அத்துப்படியாக இருக்க வேண்டியது அவசியம். Cr.P.C.,1973 பிரிவு 57ல் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விதி என்னவென்றால், பிடி ஆணையின்றி கைது செய்யப்படும் நபர் காரணமின்றி நெடு நேரத்திற்கு காவலில் வைக்கமுடியாது. அந்த நபரை காவலில் வைக்க ஒரு நியாயமான காரணம் இந்த வழக்கில் இருக்கின்ற சூழ்நிலையிலும், 24 மணி நேரத்தை கடக்கக் கூடாது (ஒரு இடத்திலிருந்து மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படும் பயண நேரம் நீங்கலாக). அந்த இடைப்பட்ட நேரத்தில், பிடி ஆணையின்றி கைது செய்யப்படும் நபர், Cr.P.C.,1973 பிரிவு 57ன், இந்த வழக்கின் சட்டவரம்பிற்குட்பட்ட நீதிபதியின் முன்பு ஆஜர்படுத்தப்பட வேண்டும்.

D.K.பாசுவுக்கும், மேற்கு வங்க மாநிலத்திற்கும் இடையே நடைபெற்ற வழக்கில் 1977 (1) SCC 416ல் வழங்கப்பட்ட ஒரு மைல் கல்லான தீர்ப்பில், மரியாதைக்குரிய உச்சநீதிமன்றம், கைது செய்யும் போது குறிப்பிட்ட வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதை பதிய வைத்துள்ளது. இது காவல் துறை சம்பந்தப்பட்டவையாக இருந்தாலும், கைது செய்யும் அதிகாரம் இருக்கும் அனைத்து துறைகளும் இதை பின்பற்ற வேண்டியது அவசியம்.

அ) கைது நடவடிக்கைகளை மேற்க்கொள்ளும் காவல்துறையினர் மற்றும் அவரை விசாரிப்பவர்களிடமும் மிகவும் துல்லியமான வெளிப்படையான மற்றும் தெளிவான அடையாளங்களுடன், பெயர் மற்றும் பதவியை தாங்கிய அடையாள அட்டையையும் வைத்திருக்க வேண்டும். கைதி செய்யப்பட்டவரை விசாரிக்கும் போது அனைத்து காவல் துறையினரின் விவரங்களும் ஒரு பதிவேட்டில் பதிய வேண்டும்.

ஆ) கைது நடவடிக்கைகளை மேற்க்கொள்ளும் காவல்துறை அதிகாரி, கைது செய்யும் போது ஒரு குறிப்பாணையை தயாரிக்க வேண்டும். அந்த குறிப்பாணையில் கைது செய்யப்பட்டவரின் குடும்பத்தில் உள்ள ஒருவரிடமோ அல்லது அந்தப் பகுதியிலுள்ள மரியாதைக்குரிய நபர் ஒருவரிடமோ கைது செய்யும் போதுப் பெற்ற சாட்சி கையெழுத்திட வேண்டும். அதில் கைது செய்யப்பட்டவரும் நேரம், தேதி இவற்றுடன் சேர்த்து கையெழுத்திட வேண்டும்.

இ) கைது செய்யும் போது சாட்சி கையெழுத்திட்டவர்கள், கைது செய்யப்பட்டவருக்கு நண்பராகவோ அல்லது உறவினராகவோ இல்லாதிருக்கும் பட்சத்தில், அந்த நபர் கைது செய்யப்பட்டு அல்லது காவலில் வைக்கப்பட்டப் பின், எந்த காவல் நிலையம் அல்லது விசாரணைக் கூடம் அல்லது வேறு ஏதாவது சிறைக் கூடத்தில் வைக்கப்பட்டிருக்கிறார் என்ற விவரத்தை கைது செய்யப்பட்டவரின் நண்பர் அல்லது உறவினர் அல்லது அவருக்கு தெரிந்த வேறு நபர் அல்லது அவருடைய நலனில் அக்கறையுள்ள நபர் போன்ற யாராவது ஒருவரிடம் உடனே தெரிவிப்பதற்கு கைது செய்யப்பட்டவருக்கு உரிமையுள்ளது.

ஈ) கைது செய்யப்பட்ட நேரம், இடம் மற்றும் சிறை வைக்கப்பட்ட இடம் போன்ற விவரங்களை காவல்துறை, நகரம் அல்லது மாவட்டத்திற்கு வெளியே வசிக்கும் கைது செய்யப்பட்டவரின் நண்பரிடமோ அல்லது உறவினரிடமோ, அந்த மாவட்டத்திலிருக்கும் சட்ட உதவி மையத்தின் மூலமோ அல்லது அந்தப் பகுதி காவல் நிலையத்தின் மூலமோ கைது செய்யப்பட்ட 8 - 12 மணி நேரத்திற்குள் தெரிவிக்க வேண்டும்.

உ) கைது செய்யப்பட்ட விவரத்தை நாட்க்குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும். கைதைப் பற்றி தகவல் தெரிவிக்கப்பட்ட இவரது நணபரின் பெயரையும் குறிப்பிட வேண்டும். மேலும், கைது செய்யப்பட்டவரை காவலில் வைத்திருக்கும் காவல் துறை அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் விவரங்களையும் வெளியிடவேணடும்.

ஊ) கைது செய்யப்பட்டவர் தன்னை எங்கே வைத்து விசாரணை செய்ய வேண்டும் என்று தான் கைது செய்யப்படும் போது வேண்டுகோள் வைக்கலாம். கைது செய்யப்படும் போது உடலில் சிறிய மற்றும் பெரிய காயங்கள் ஏதேனும் உள்ளதா என்பதை அந்த நேரத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். “பரிசோதனை குறிப்பாணை”யில் கைது செய்யப்பட்டவரும், கைதை மேற்க்கொண்ட காவல்துறை அதிகாரிகள் என்ற இருவருமே கையெழுத்திட வேண்டும், அதன் பிரதியை கைது செய்யப்பட்டவருக்கும் கொடுக்க வேண்டும்.

எ) கைது செய்யப்பட்டவர் ஒவ்வொரு 48 மணி நேரத்திற்கு ஒரு முறையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். மாநிலத்திலுள்ள அல்லது யூனியன் பிரதேசத்திலுள்ள மருத்துவ சேவைகளின் இயக்குநரால் நியமிக்கப்பட்ட ஒரு மருத்துவக் குழுவின் ஒரு மருத்துவர் இந்த பரிசோதனையை மேற்க் கொள்ளும். மருத்துவ சேவைகளின் இயக்குநர் இம்மாதிரி குழுவை ஒவ்வொரு வட்டம் மற்றும் மாவட்டத்திலும் ஏற்படுத்தும்.

ஏ) கைதுக்கான குறிப்பாணை உட்பட அனைத்து ஆவணங்கள், மேலே குறிப்பிட்டவைகளை மாஜிஸ்ட்ரேட்டின் பதிவிற்காக அனுப்பப்பட வேண்டும்.

ஐ) கைது செய்யப்பட்டவர் விசாரணையின் போது தன்னுடைய வழக்கறிஞரை சந்திக்க முடிந்தாலும், முழு விசாரணையிலும் அனுமதிக்க மாட்டார்கள்.

ஒ இந்த கைது மற்றும் சிறை வைக்கப்பட்ட இடம் போன்ற விவரங்களை காவல்துறை கட்டுப்பாட்டு அறையில் மூலமாக அனைத்து மாவட்டம் மற்றும் மாநிலத்தின் தலைமை அலுவலகங்களுக்கும் 12 மணி நேரத்திற்குள் கைது நடவடிக்கைகளை மேற்கொண்ட அதிகாரி தெரிவிக்க வேண்டும். அதை காவல்துறை கட்டுப்பாட்டு அறையின் அறிவிப்பு பலகையில் அனைவருக்கும் தெரியும்படி காட்சிப்படுத்த வேண்டும்.

கேள்வி 24. கைது செய்யவதற்கு, CBEC யால் பின்பற்றப்படும் பரந்த வழிமுறைகள் என்ன?

பதில். கைது முடிவு எடுப்பதற்கு தேவையான அந்த வழக்குக்கு ஏற்றார் போல் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் பல்வேறு அம்சங்கள், குற்றத்தின் தன்மை மற்றும் அதன் தீவிரம், கடமை தவறியதின் அளவு அல்லது சலுகைகளை தவறுதலாக பயன்படுத்துதல், ஆதாரங்களின் தன்மை மற்றும் தரம், ஆதாரங்களை கலைப்பதற்கான சாத்தியம், சாட்சிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுதல், புலன் விசாரணைக்கு ஒத்துழைப்புத் தருதல், இன்னும்

பிற வழக்கின் உண்மைகளை கவனமாக பரிசீலித்தப் பிறகு கைதுக்கான அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும். அவற்றில் உள்ளடங்கியவை

அ. குற்றத்தை முறையாக புலனாய்வு செய்வதை உறுதிப்படுத்துதல்;

ஆ. அந்த நபர் தலைமறைவாகாமல் பார்த்துக் கொள்ளுதல்;

இ. ஒருங்கிணைக்கப்பட்ட கடத்தல் அல்லது மறைப்பதன் மூலமாக சுங்க வரியை தவிர்த்தல் போன்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவை;

ஈ. போலியான பெயரிலோ அல்லது இல்லாத நபரின் பெயரிலோ / IECs, முதலியனவற்றின் மூலமாக ஏற்றுமதி / இறக்குமதியை பதிலாள் / பினாமியை ஏற்பாடு செய்வதில் முக்கிய செயலியாக அல்லது மூளையாக இருத்தல்;

உ. வரி ஏய்ப்பு செய்ய போவது தெளிவாக தெரிந்தாலும், அது குற்றம் மனமறிய தெரிந்தே செய்வது;

எ. ஆதாரத்தை அழிக்கும் சாத்தியத்தை தடுத்தல்;

ஏ. சாட்சிகளை பயமுறுத்தல் அல்லது தனது செல்வாக்கை பயன்படுத்துதல்; மேலும்

ஐ. ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகமாக வருமான வரி அல்லது சேவை வரி கட்டாமல் தப்பித்தல்.

கேள்வி 25. அறிவுசார்ந்த குற்றம் என்றால் என்ன ?

பதில். அறிவுசார்ந்த குற்றம் என்றால் குற்றத்தின் தீவிரத் தன்மை காரணமாக காவல்துறை அதிகாரி பிடியாணை இல்லாமல் கைது செய்யலாம் மற்றும் நீதிமன்றத்தின் அனுமதி இருந்தாலும், இல்லாவிட்டாலும் புலன் விசாரணையை தொடங்கலாம்.

கேள்வி 26. அறிவு சார்பற்ற குற்றம் என்றால் என்ன?

பதில். அறிவு சார்பற்ற குற்றம் என்றால் குற்றத்தில் தீவிரத்தன்மை குறைவாக இருந்தால், காவல்துறை அதிகாரி பிடியாணை இல்லாமல் கைது செய்ய முடியாது. மேலும், நீதிமன்ற ஆணையில்லாமல் விசாரணையை துவங்கவும் முடியாது.

கேள்வி 27. MGLன் கீழ் அறிவுசார்ந்த குற்றம் மற்றும் அறிவுசார்பற்ற குற்றம் என்றால் என்ன?

பதில். MGLன் பிரிவு 73(4)ல், சரக்குகள் சேவைகளுக்கான செலுத்த வேண்டிய தொகையில் ரூபாய் 2.5 கோடிக்கும் மேலாக வரி ஏய்ப்பு செய்திருந்தால் அது ஜாமீனில் வெளிவர முடியாத அறிவுசார்ந்த குற்றமாகும். மற்ற குற்றங்கள் சட்டத்தின் கீழ் அறிவுசார்பற்ற குற்றமாகும். இதற்கு ஜாமீன் கிடைக்கும்.

கேள்வி 28. உரிய அதிகாரி MGLன் கீழ் சம்மன் வழங்குவது எப்போது?

பதில். MGLன் 63வது பிரிவு, அங்கீகரிக்கப்பட்ட CGST/SGST அதிகாரி ஒரு நபரை தனக்கு முன்னால் ஆஜராகும்படி சம்மன் வழங்குவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அப்படி சம்மன் வழங்கப்பட்டவர், விசாரணைக்காக தேவைப்படும் ஆதாரம் அல்லது ஆவணம் அல்லது வேறு ஏதாவது ஒன்றை அதிகாரி கேட்பதை சமர்ப்பிக்க வேண்டும். சம்மன் வழங்கப்பட்டவரின் வசம் உள்ள அல்லது கட்டுப்பாட்டில் உள்ளவற்றைப் பற்றி விளக்கம் கேட்பதற்காக சம்மனில் குறிப்பிட்ட சில ஆவணங்கள் அல்லது பொருட்களை அல்லது அனைத்து ஆவணங்கள் அல்லது பொருட்கள் சமர்ப்பிப்பதற்காக சம்மன் வழங்கப்படுகிறது.

கேள்வி 29 சம்மன் வழங்கப்பட்டவரின் பொறுப்பு என்ன?

பதில். சம்மன் வழங்கப்பட்ட ஒரு நபர் சட்டப்படி நேரிலோ அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட தனது பிரதிநிதியையோ, சம்மன் வழங்கிய அதிகாரியின் முன் ஆஜராக வேண்டும். அந்த அதிகாரியிடம், சம்மன் வழங்கப்பட்டதற்கான விவகாரத்தின் விசாரணையில் உண்மை கூற வேண்டும். மேலும், தேவைப்படும் ஆவணங்கள் அல்லது பொருட்களை சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்வி 30. சம்மனுக்கு ஆஜராகவிட்டால் சந்திக்கப் போகும் விளைவுகள் என்ன?

பதில். நடவடிக்கைகளுக்கு முன்பாக அதிகாரியால் சம்மன் வழங்கப்படுவது என்பது நீதிமன்ற நடவடிக்கையாகவே கருதப்படும். சம்மன் வழங்கப்பட்ட நபர் சட்டரீதியான எந்த காரணமும் இல்லாமல் ஆஜராகவில்லையெனில், இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு (IPC) 174 கீழ் அவர் மீது வழக்குத் தொடர முடியும். சம்மனிலிருந்து தப்பிப்பதற்காக தலைமறைவாகி விட்டால், IPC சட்டப்பிரிவு 172 கீழ் அவர் மீது வழக்குத் தொடர முடியும். தேவையான ஆவணங்கள் அல்லது மின்னணுப் பதிவு சமர்ப்பிக்கவில்லையெனில், IPC சட்டப்பிரிவு 175 கீழ் அவர் மீது வழக்குத் தொடர முடியும். அவர் தப்பான ஆதாரங்களை கொடுத்தால், IPC சட்டப்பிரிவு 193 கீழ் அவர் மீது வழக்குத் தொடர முடியும்.

சம்மன் வழங்கப்பட்ட நபர் CGST/SGST முன்பு ஆஜராகவில்லையெனில், MGL பிரிவு 66(3)(d) கீழ் தண்டனையாக இருபத்தைந்தாயிரும் ரூபாய் அபராதமாக செலுத்த வேண்டும்.

கேள்வி 31. சம்மன் வழங்குவதற்கான வழிமுறைகள் என்ன?

பதில். சம்மன்கள் தவறான வழியில் பயன்படுத்தப்படாமலிருக்க, மத்திய நிதியமைச்சகத்தின் வருவாய் துறையின் ஒரு மத்திய கலால் மற்றும் சுங்க வரி ஆணையம், அவ்வப்போது வழிமுறைகளை வெளியிட்டுக் கொண்டு இருக்கின்றது. அந்த வழிமுறைகளில் முக்கியமான சில சிறப்பம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அ. நபர்கள் ஒத்துழைப்பு கொடுக்காத நிலையில், கடைசி அணுகுமுறையாக சம்மன் வழங்கப்பட வேண்டும் மேலும், இந்தப் பிரிவை மேல் நிர்வாகத்திற்கு பயன்படுத்தக் கூடாது.

ஆ. சம்மனில் பயன்படுத்தப்படும் சொல்லாடல்கள் கடுமையானதாக இருக்கக் கூடாது. பெறுபவர்க்கு எந்த மன உளைச்சலும், சங்கடமும் ஏற்படுவதற்கு சட்டம் காரணமாகக் கூடாது.

இ. சம்மன்களை சூப்பரிண்டென்டென்ட் வழங்க வேண்டும். இது முறையாக துணை ஆணையர் தகுதிக்கு குறையாத அதிகாரியிடமிருந்து, சம்மன் வழங்குவதற்கான காரணத்தை எழுத்துப்பூர்வமாக பதிவு செய்து, சம்மன் வழங்கும் முன் அனுமதி பெற வேண்டும்.

ஈ. நடைமுறை சிக்கல் காரணமாக, முன் அனுமதி பெற முடியாத பட்சத்தில், வாய்மொழி / தொலைபேசி மூலமாகவோ அத்தகைய அனுமதியை பெற வேண்டும். எழுத்துப்பூர்வமான வரையரைப்பட்டு அதிகாரியிடம் தெரிவிக்கப்பட்டபடி அத்தகைய அனுமதியை விரைவாக பெற வேண்டும்.

உ. சம்மன் வழங்கப்படும் அனைத்து வழக்குகளுக்கும், சம்மன் வழங்கும் அதிகாரி, ஒரு அறிக்கை அல்லது நடவடிக்கையின் சுருக்கத்தை வழக்குக் கோப்புடன் சமர்ப்பித்து, அதை சம்மன் வழங்க அனுமதியளித்த அதிகாரியிடம் அதை சமர்ப்பிக்க வேண்டும்.

ஊ. பெரிய கம்பெனி அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொது நிறுவனத்தின் CEO, CFO, பொது மேலாளர் போன்ற மேல் நிர்வாக அதிகாரிகளுக்கு சாதாரணமாக முதல் முறையிலேயே சம்மன் வழங்கப்படுவதில்லை. முடிவு எடுக்கும் நடவடிக்கையில் ஏற்பட்ட வருவாய் இழப்பில் சம்பந்தம் இருப்பதாக புலன்

விசாரணையில் அறிகுறிகள் தென்பட்டால் மட்டும் சம்மன் வழங்கப்பட வேண்டும்.

கேள்வி 32. சம்மன் வழங்கப்படும்போது பின்பற்றப்பட வேண்டிய முன்னெச்சரிக்கைகள் என்ன?

பதில். ஒரு நபருக்கு சம்மன் வழங்குவதற்கு முன் பின்பற்றப்பட வேண்டிய முன்னெச்சரிக்கைகள் பின்வருமாறு

அ. நியாயப்படுத்த முடியாத நிலையில், ஆஜராவதற்கு சம்மன் வழங்கக் கூடாது. விசாரணை செய்வதற்கான அவசியம் ஏற்படும்போதும், அந்த நபரின் வருகை அவசியப்படும்போது மட்டுமே சம்மன் வழங்குவதற்கு அதிகாரம் இருக்கிறது.

ஆ. சாதாரணமாக, சம்மன் அடிக்கடி வழங்கப்படக் கூடாது. குறைந்தபட்ச வருகையிலேயே குற்றஞ்சாட்டப்பட்டவர், சாட்சிகளின் வாக்குமூலத்தை பதிவு செய்யப்பட வேண்டும்.

இ. சம்மனில் குறிப்பிட்டபடி ஆஜராவதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மரியாதை அளிக்க வேண்டும். ஒரு வியூகத்தின்படி தெளிவாக தீர்மானிக்கப்படும் தருணம் நீங்கலாக, மற்ற தருணத்தில் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு முன்பாக எந்த நபரையும் வெகு நேரம் காத்திருக்கச் செய்யக்கூடாது.

ஈ. வாக்குமூலத்தை அலுவலக நேரத்திலே பதிவு செய்வதற்குதான் முன்னுரிமை அளிக்கப்படும். எனினும், சில விதிவிலக்கான வழக்கின் உண்மைகள் குறித்து வாக்குமூலத்தை பதிவு செய்வதற்கான நேரம் மற்றும் இடம் முடிவு செய்யப்படும்

கேள்வி 33. CGST / SGST உதவுவதற்கு ஏதாவது அதிகாரிகளின் பிரிவு உள்ளதா?

பதில். MGLன் நடவடிக்கையின்போது, CGST / SGST அதிகாரிகளுக்கு தேவைப்படும்போது உதவுவதற்கு, MGLன் 65வது பிரிவின் கீழ், பின்குறிப்பிடப்படும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. MGLன் குறிப்பிட்ட வகைகள் பின்வருமாறு.

அ. காவல்துறை

ஆ. சுங்கத் துறை

இ. GST வசூலில் ஈடுபடும் மத்திய / மாநில அதிகாரிகள்

ஈ. நிலவரி வசூலில் ஈடுபடும் மத்திய / மாநில அதிகாரிகள்

உ. அனைத்து கிராம அதிகாரிகள்

ஊ. மத்திய / மாநில அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட வேறு எந்த பிரிவின் அதிகாரிகள்.

## 20. குற்றங்கள் மற்றும் அபராதம், குற்றவழக்கு மற்றும் சட்டப்படி சமரசம் செய்யக்கூடிய வழக்கு

கேள்வி 1. MGL கீழ் பரிந்துரைக்கப்பட்ட குற்றங்கள் என்ன?

பதில். மாதிரி GST சட்டம் குற்றங்களையும், தண்டனைகளையும் 16வது அத்தியாயத்தில் தொகுத்துள்ளது. தகுதியில்லாமல், வரி செலுத்தும் நபர் தொடர் குற்றங்களுக்காக பிரிவு 8ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட அபராதத்தை தவிர, பிரிவு 66ன் கீழ் 21 குற்றங்களை சட்டம் பட்டியலிடுகிறது. குற்றப்பட்டியல் பின் வருமாறு.

அ) விலைப்பட்டி இல்லாமல் அல்லது பொய்யான / தவறான விலைப்பட்டி மூலம் வழங்கல் செய்தல்

ஆ) வழங்கல் செய்யப்படாமலே விலைப்பட்டி வெளியிடுதல்

இ) மூன்று மாதங்கள் கடந்தபின் வசூலிக்கப்பட்ட வரியை செலுத்தாமை.

ஈ) MGLக்கு முரணாக வசூலிக்கப்பட்ட வரியை மூன்று மாதங்கள் கடந்தபின் செலுத்தாமை.

உ) வரி பிடித்தம் செய்யாமை அல்லது குறைவான வரி பிடித்தம் செய்து அல்லது வசூலீத்த வரியை கட்டாமல் பிரிவு 37ன் படி கட்டாமல் இருப்பது.

ஊ) பிரிவு 43Cன் கீழ் ஆதார வரி வசூலிப்பை செலுத்தாதிருத்தல் அல்லது வசூலிக்காமலிருத்தல் அல்லது குறைவான வரி வசூலித்தல்

எ) சரக்குகள் மற்றும் / அல்லது சேவைகள் பெறப்பெறாமல், உள்ளீட்டு வரி வரவை பெறுதல்/ உபயோகித்தல்

ஏ) முறைகேடான வழியில் பணத்தைத் திரும்பப் பெறுதல்

ஐ) ஒரு உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர் மூலமாக பிரிவு 17ஐ மீறி உள்ளீட்டு வரி வரவை பெறுதல் / விநியோகித்தல்.

ஒ) பொய்யான தகவல்களை இணைப்பது அல்லது பித்தலாட்டமான நிதி பதிவேடுகள் செய்து வரி ஏய்ப்பு செய்ய வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு பொய்யான கணக்குகள் / ஆவணங்களை இணைத்தல்.

ஓ) வரி செலுத்தும் பொறுப்பு இருந்த போதிலும் பதிவு செய்யாமல் இருத்தல்.

ஔ) பதிவு செய்யும் கட்டாயமாக தெரிவிக்க வேண்டிய தகவல்களை தவறாக இணைப்பது.

க) ஒரு அதிகாரியை அவரது கடமையை செய்யவிடாமல் தடுப்பது / குறுக்கீடு செய்வது.

ங) பரிந்துரைக்கப்பட்ட ஆவணங்களில்லாமல் சரக்குகளை போக்குவரத்து செய்வது

ச) வரி ஏய்ப்பு செய்வதற்காக தன் வருடாந்திர வருமானத்தை மறைத்தல்

ஞ) சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி கணக்குகளையும் ஆவணங்களையும் பராமரிக்காமல் இருப்பது அல்லது சட்டத்தில் குறிப்பிட்டுள்ள காலவரையறை வரைக்கும் கணக்குகளையும் / ஆவணங்களையும் வைத்திருக்காமல் இருப்பது.

ட) சட்டம் / விதிகளின்படி ஒரு அதிகாரிக்குத் தேவையான தகவல்கள் / ஆவணங்களை இணைக்காமல் இருப்பது அல்லது நடவடிக்கைகளின்போது தவறான தகவல்கள் / ஆவணங்களை இணைப்பது.

ண) பறிமுதல் செய்யப்பட வேண்டிய சரக்குகளை வழங்குதல் / போக்குவரத்து செய்தல் / பதுக்குதல்

த) வேறொருவரின் GSTIN பயன்படுத்தி விலைப்பட்டி / ஆவணங்களை வெளியிடுதல்

ந) முக்கிய சாட்சிகளை குறுக்கீடு செய்தல் / அழித்தல்.

ப) சட்டப்படி தடுப்பு காவல் / பறிமுதல் / பிணைக்கப்பட்ட சரக்குகளை, அழிக்க அல்லது அகற்ற முயர்சிப்பது.

கேள்வி 2 அபராதம் என்பதற்கு பொருள் என்ன?

பதில். அபராதம் என்பதற்கு MGLல் எந்த விளக்கமும் இல்லையென்றாலும், சட்ட விளக்கம் மற்றும் சட்டவியலின் கொள்கைகளும் அபராத்தின் தன்மைப் பற்றி கூறியவை.

- தற்காலிக தண்டனை அல்லது குறிப்பிட்டத் தொகையை சட்டப்படி விதித்து, ஒரு சில குற்றத்திற்கான தண்டனைத் தொகையாக செலுத்த வேண்டும்.
- சட்டப்படி தண்டனை அல்லது செய்வதை / செய்ய வேண்டியதை ஒப்புக்கொண்டபடி நிறைவேற்றத் தவறினாலும், தண்டனை நிறைவேற்ற வேண்டும்.

கேள்வி 3. அபராதம் விதிக்கப்படும்போது கடைபிடிக்க வேண்டிய பொதுவான ஒழுங்குமுறைகள் யாவை?

பதில். சட்டவியல், இயற்கை நீதிக் கொள்கைகள், உலக வர்த்தக மற்றும் ஒப்பந்தங்களின் நிர்வாகக் கொள்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் அபராதத்தை வசூல் செய்யும்போது, சில ஒழுங்குமுறைகள் கடைபிடிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட பொதுவான ஒழுங்குமுறைகளை 68வது சட்டப்பிரிவில் கூறப்பட்டுள்ளது. அதன்படி

- விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பாமலும், இந்த விஷயத்தை முறையாக விசாரிக்காமலும் எந்தவிதமான அபராதமும் விதிக்கக்கூடாது. மேலும், ஒரு நபர் தன் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டிற்கு எதிராக தன் தரப்பைக் கூற அவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.
- வழக்கிலுள்ள மொத்த உண்மைகள் மற்றும் சூழ்நிலையைப் பொருத்தே அபராதம் விதிக்கப்பட வேண்டும்.
- சட்டவிதிகள் அல்லது கூறப்பட்ட விதிகள் எந்த அளவுக்கு மீறப்பட்டுள்ளதோ அந்தளவுக்கு அபராதமும் விதிக்கப்பட வேண்டும்.
- அபராதத்தை விதிப்பதற்கு முன் விதிமீறலின் தன்மையை மிகத் தெளிவாக ஆணையில் குறிப்பிட வேண்டும்.
- எந்த சட்டவிதியின் கீழ் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட வேண்டும்.
- பிரிவு 68ல் மேலும் குறிப்பிடுவது என்னவென்றால், கணிசமான அபராதத்தை கீழ் கண்ட விதிமீறலுக்கு விதிக்கக்கூடாது.
- சிறிய விதிமீறல்கள் (அதாவது ரூ.5000க்கு குறைவான வரி சம்பந்தப்பட்ட விதிமீறல்கள் நடைபெற்றிருந்தால்) அல்லது
- சட்ட நடைமுறைகளை மீறல்கள் அல்லது
- தவறான நோக்கமோ அல்லது மொத்த அலட்சியமோ இல்லாமல் மிகவும் எளிதாக திருத்தம் செய்யப்பட்ட தவறுகள் / விடுபட்டவைகள். (வெளிப்படையாக தெரியும் தவறுகள் என்று சட்டம் விளக்கியபடி).

மேலும், எங்கெல்லாம் நிர்ணயிக்கப்பட்ட தொகை அல்லது நிர்ணயிக்க சதவீதம் அபராதம் என்று MGL விதிக்கப்பட்டுள்ளதோ, அங்கெல்லாம் அது பொருந்தும்.

கேள்வி 4. MGL விதித்துள்ள அபராதத் தொகையின் அளவு என்ன?

பதில். வரி செலுத்தும் நபர் பிரிவு 66ல் குறிப்பிட்டுள்ளபடி ஏதேனும் குற்றங்களை செய்திருந்தால், பின்குறிப்பிட்டுள்ள தொகையைவிட அதிகமான அபராதத்துடன் கூடிய தண்டனை பெறக்கூடும் என்று பிரிவு 66(1)ல் வழங்கப்பட்டுள்ளது.

- வரி ஏய்ப்பு செய்த தொகை, மோசடி செய்து திரும்பப் பெற்றத் தொகை, மோசடி செய்து ITC பெற்றது, அல்லது பிடித்தம் செய்யவில்லை அல்லது வசூலிக்கப்பட்டது அல்லது குறைவாக பிடித்தம் செய்யப்பட்டது அல்லது குறைவாக வசூலிக்கப்பட்டது அல்லது
- ரூபாய். 10,000/=

மேலும், பதிவு செய்யப்பட்ட வரி செலுத்தபவர் அடிக்கடி குறைவான வரித் தொகையை செலுத்தும்போது, அபராதத்துக்கு ஆளாகக்கூடிய அவர் பிரிவு 66(2) ன் படி. அதிக தொகையாக.

- குறைவாக செலுத்திய வரியில் 10% அல்லது
- ரூ. 10,000/=

கேள்வி 5. அபராதத்தை வசூலிக்கும் பொருட்டு, ‘அடிக்கடி குறைவாக செலுத்துதல்’ என்பது எப்படிக் கருதப்படும்?

பதில். பிரிவு 66(2)ன் படி, ஆறு தொடர்ச்சியான வரிக் காலத்தில், வரி செலுத்தும் பொருட்டு மூன்று முறை குறைவான வரி செலுத்தினால், அபராதத்தை வசூலிக்கும் பொருட்டு ‘அடிக்கடி குறைவாக செலுத்ததுதல்’ என்ற கருதப்படும்.

கேள்வி 6. வரி செலுத்தபவரைத் தவிர வேறு நபர்களுக்கு ஏதாவது அபராதம் பரிந்துரைக்கப்பட்டுள்ளதா?

பதில் ஆமாம். பிரிவு 66(3) ன் படி. வரி செலுத்துபவரைத் தவிர வேறு நபர்கள், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களை செய்தால், ரூ. 25,000/- வரை அபராதம் விதிக்கப்படும் மேற்குறிப்பிட்ட

- 21 குற்றங்கள், செய்ய தூண்டுவதும், அதற்கு துணைபோவதும்,
- பறிமுதல் செய்யப்பட வேண்டிய சரக்குகளுக்குடன் எந்த வழியிலாவது சம்பந்தப்படுதல் (பெற்றாலோ, வழங்கினாலோ, பதுக்கினாலோ அல்லது போக்குவரத்து செய்தாலோ)
- சட்டத்தை மீறி வழங்கல் சேவையில் பெற்றாலோ அல்லது சம்பந்தப்பட்டாலோ
- சம்மன் வழங்கிய அதிகாரியின் முன் ஆஜராகாமல் இருத்தல்
- சட்டப்படி, வழங்கலுக்கான விலைப்பட்டியை வெளியிடாமல் அல்லது விலைப்பட்டிக்கான கணக்கை வெளியிடாமல் இருத்தல்

கேள்வி 7. MGLன் பிரிவு 67படி விதிமீறலுக்கென்று தனிப்பட்ட அபராதம் பரிந்துரைக்கப் படாததால், அதற்கான அபராதம் என்ன?

பதில் MGLன் பிரிவு 67படி விதிமீறல் செய்யும் எந்த நபருக்கும், தனிப்பட்ட அபராதமும் பரிந்துரைக்கப்படவில்லையென்றாலும், சட்டப்படி அந்த நபருக்கு தண்டனையுடன் கூடிய 25,000/- ரூபாய் வரையிலான அபராதமும் விதிக்கப்படும்.

கேள்வி 8 செல்லத்தகுந்த ஆவணங்கள் இல்லாமல் சரக்குகளை போக்குவரத்து செய்வதும் அல்லது புத்தகங்களில் முறையான பதிவு இல்லாமல் அகற்ற முயற்சித்தது போன்றவைகளின் மீது எடுக்கப்படும் நடவடிக்கை என்ன?

ஒரு நபர் சட்டம் சொல்லுகின்ற எந்த ஆவணங்களும் இல்லாமல், ஏதாவது சரக்குகளை போக்குவரத்து செய்தாலோ அல்லது போக்குவரத்தில் இருக்கும் சரக்குகள ஆவணங்களில்லாமல் பதுக்கப்பட்டாலோ (விலைப்பட்டி மற்றும் ஒரு அறிக்கை) அல்லது வழங்குதல் அல்லது சேமிக்கப்படும் சரக்குகளை புத்தகங்களை பதிவாக்காமல் அல்லது கணக்கு காட்டாமல் இருக்கும் அம்மாதிரி சரக்குகளுடன், அநத வண்டியையும் தடுப்பு காவலில் வைக்க முடியும். அதற்குரிய வரி வட்டி, மற்றும் அபராதம் செலுத்தியவுடன் அல்லது அதற்கு இணையான பாதுகாப்பு பத்திரம் கொடுத்தவுடன் அந்த சரக்குகள் விடுவிக்கப்படும்.

கேள்வி 9. தொகுப்பு திட்டத்தை தேர்வு செய்வதற்கு தகுதியில்லாத ஒரு நபருக்கு என்ன அபராதம் பரிந்தரைக்கப்படுகிறது?

பதில். பிரிவு 8(3) விதியில்தன்னுடைய வரி பொறுப்பை தொகுப்புத் திட்டத்தில் தெர்வு செய்த ஒரு நபர், கூட்டுவதற்கான எந்த தகுதியும் அவருக்கில்லை என்று கண்டுபிடிக்கப்படும் போது, சட்டவிதிகளின் கீழ் அந்த நபர் அபராதத்திற்குரியவர். எவ்வளவு வரி செலுத்த வேண்டுமோ அதற்கிணையான தொகையை அபராதமாக செலுத்த வேண்டும் அதாவது சாதாரணமாக வரி செலுத்துபவர் போல அவர் செலுத்த வேண்டிய வரி தொகைக்கும் கூடுதலாக அபராதத் தொகையும் செலுத்தவேண்டும்.

கேள்வி 10. 'பறிமுதல்' என்பதன் பொருள் என்ன?

பதில். 'பறிமுதல்' என்ற வார்த்தைக்கு எந்த விதமான சட்ட விளக்கமும் இல்லை. இந்த கருத்து ரோமன் சட்டத்திலிருந்து வருவியது. இதன் பொருள் பறிமுதல் அல்லது சக்கரவர்த்தியின் கைகளுக்கு சேர்க்கப்பட்டு, பின்னர் 'ஏகாதிபத்திய வரி' அல்லது கருவூலத்திற்கு அனுப்பப்படும். அய்யருடைய சட்ட அகராதியில் 'பறிமுதல்' என்ற வார்த்தைக்கான விளக்கம், அபராதம் மூலமாக கைப்பற்றப்பட்டவைகள் (தனியார் சொத்துக்கள்) பொது கருவூலத்தில் செலுத்துதல்; கைப்பற்றப்பட்ட சொத்து என்பது அரசு பறிமுதல் செய்யப்பட்டது.

கேள்வி 11. எந்த சூழ்நிலையில் MGLன் கீழ் சரக்குகள் பறிமுதல் செய்யப்படும்?

பதில். MGLன் பிரிவு 70ன் கீழ் ஏதாவது நபரின் சரக்குகளை பறிமுதல் செய்வது,

- சட்ட விதிகளுக்கு முரணாக சரக்குகளை வழங்கலும், அதன் விளைவாக சட்டத்தின் கீழ் வரி செலுத்துவதிலிருந்து ஏய்ப்பதற்காக அல்லது
- சட்டப்படி, அனைத்து சரக்குகளும்கணக்கில் கொண்டுவராமல் இருப்பது.
- பதிவு செய்யப்படாமல் சட்டப்படி சரக்கு மற்றும் சேவைகளை, வழங்குதல்
- வரி ஏய்ப்பு செய்ய வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் சட்டம் விதிகளை மீறுதல்.

கேள்வி 12. உரிய அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகள் என்னவாகும்?

பதில். பறிமுதல் செய்யப்பட்டப் பொருட்கள் மீது, அரசுடைமையாக்கப்பட்ட பறிமுதல் சரக்குகள் என்ற தலைப்புடன், உரிய அதிகாரியின் வேண்டுகோளுக்குகிணங்க காவல் துறை அதிகாரி சரக்குகளை அரசுடைமையாக்குவதற்கு உதவவேண்டும்.

கேள்வி 13. பறிமுதல் செய்யப்பட்டப் பிறகு, அந்த நபருக்கு சரக்குகளை மீட்பதற்கான வாய்ப்பு கொடுக்க வேண்டியது அவசியமா?

பதில். ஆமாம். பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகளை மீட்பதற்கு அதன் உரிமையாளர் அல்லது பொறுப்பாளருக்கு ஒரு வாய்ப்பு வழங்குவதற்கு, அந்த நபர் அதற்குரிய அபராதம் (பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் சந்தை விலைக்கு மிகாமல்) செலுத்த வேண்டும். அந்தப் பொருட்களுக்கான வரி மற்றும் பிற கட்டணங்கள் தவிர கூடுதலாக இந்த அபராதம் செலுத்த வேண்டும்.

கேள்வி 14. பரிந்துரைக்கப்பட்ட செல்லத்தக்க ஆவணங்கள் இல்லாமல் சரக்குகளை ஏற்றிச் செல்லும் வாகனத்தை பறிமுதல் செய்ய முடியுமா?

பதில். முடியும். சட்டப்படி பரிந்துரைக்கப்பட்ட செல்லத்தக்க ஆவணங்கள் அல்லது உறுதி ஆவணம் இல்லாமல் சரக்குகளை ஏற்றிச் செல்லும் வாகனத்தை பிரிவி 71ன் படி பறிமுதல் செய்ய முடியும். இருப்பினும், தேவைப்படுகின்ற செல்லத்தக்க ஆவணங்கள் அல்லது உறுதி ஆவணம் இல்லாமல் சரக்குகள் வாகனத்தில் ஏற்றப்பட்டுள்ளது என்பது அவர்களுக்கு தெரியாது அல்லது இதற்கு அவருடைய தரகரும் உடந்தை என்பது அவர்களுக்கு தெரியாது என்பதை

நிரூபித்தால் மேற்க்கூறப்பட்ட பறிமுதல் செய்யப்பட மாட்டாது. வாகனம் சரக்குகள் அல்லது பயணிகளை வாடகைக்கு ஏற்றிச் செல்வதற்க்காக பயன்படுத்தப்பட்டால், அந்த வாகன உரிமையாளர் ஒரு வாய்ப்பு வழங்குவதற்கு, அந்த நபர் பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகளுக்கான வரி தொகைக்கு சமமான தொகையை பறிமுதல் செய்யப்பட்டதற்கு இணையாக அபராதத்தை செலுத்தவதற்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறதுபிரிவு 70 அல்லது 71ன் கீழ் ஆவணங்கள் அல்லது உறுதி ஆணையமில்லாமல் சரக்குகளை ஏற்றிச் செல்வதற்காக தண்டனை நடவடிக்கையோ எந்த பாரபட்சமும் இல்லாமல் எடுப்பதற்கான வழியை பிரிவு 72 வழங்கியுள்ளது.

கேள்வி 15. குற்ற வழக்கு என்றால் என்ன?

பதில். குற்ற வழக்கு என்பது அமைப்பு அல்லது குற்றவாளிக்கு எதிராக முறையான குற்றஞ்சாட்டிற்கான சான்று ஆவணங்களை நடைமுறைப்படுத்தும் சட்ட நடவடிக்கையாகும்.குற்றவியல் நடைமுறை குறியீட்டின் 198வது பிரிவு 'குற்ற வழக்கு' என்பதற்கு ஒரு நபருக்கு எதிராக எடுக்கப்படும் சட்டரீதியான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் அமைப்பாகும்.

கேள்வி 16. என்னென்ன குற்றங்களுக்கு MGLன் கீழ் பிடியாணை பிறப்பிக்கப்படும்?

பதில். MGLன் 73வது பிரிவின் கீழ், குற்ற நடவடிக்கைக்கள் மற்றும் வழக்குக்கள் அமைப்பால் பெரும் குற்றங்களுக்கான பிடியாணை முறைப்படுத்தப்பட்டுள்ளன. 12 முக்கிய குற்றங்களின் பட்டியல்கள் பின்வருமாறு.

அ. விலைப்பட்டி இல்லாமல் வழங்கீடு அல்லது தவறான / பொய்யான விலைப்பட்டியை வெளியிடுதல்.

ஆ. வழங்கீடு இல்லாமலே விலைப்பட்டியை வெளியிடுதல்

இ. மூன்று மாதங்களுக்கு மேலாகியும் வசூலிக்கப்பட்ட வரியை செலுத்தாமல் இருப்பது

ஈ. மூன்று மாதங்களுக்கு மேலாகியும் விதியை மீறி வசூலிக்கப்பட்ட வரியை செலுத்தாமல் இருப்பது.

உ. சரக்குகள் மற்றும் / அல்லது சேவைகளுக்கான உள்ளீட்டு வரி வரவை, சரக்கோ அல்லது சேவையோ அசல் ரசீது இல்லாமல் பெறாமல் உள்ளீட்டு வரி எடுப்பது.

ஊ. மோசடி செய்து பணத்தைத் திரும்ப் பெறுதல்.

எ. பொய்யான தகவல்களை இணைப்பது அல்லது பித்தலாட்டமான நிதி பதிவேடுகள் அல்லது வரி ஏய்ப்பு செய்ய வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு பொய்யான கணக்குகள் / ஆவணங்களை இணைத்தல்.

ஏ. ஒரு அதிகாரியை அவரது கடமையை செய்யவிடாமல் தடுப்பது / குறுக்கீடு செய்வது

ஐ. பறிமுதல் செய்யப்பட வேண்டிய சரக்குகளில் சம்பந்தப்பட்டிருப்பது அதாவது பெறுவது/ வழங்கவது/பதுக்குவது அல்லது பறிமுதல் செய்யப்பட வேண்டிய சரக்குகளை போக்குவரத்து செய்வது.

ஒ. விதிகளைமீறி வழங்குதல் சேவையில் சம்பந்தப்படுதல்/ பெறுதல்.

ஓ. சட்டம் / விதிகளின்படி தேவையான தகவல்களை வழங்காதிருப்பது அல்லது தவறான தகவல்களை வழங்குவது.

ஔ. மேலே குறிப்பிட்ட 11 குற்றங்களில் ஏதேனும் ஒன்றை செய்ய தூண்டினால் அல்லது செய்ய முயற்சித்தால்.

கேள்வி 17. MGLன் கீழ் நிரூபிக்கப்பட்ட குற்றத்திற்கு பரிந்துரைக்கப்படும் தண்டனைகள் என்ன?

பதில். பிரிவு 73(1) விதியிலுள்ளதண்டனைப் பட்டியல் பின்வருமாறு

| சம்பந்தப்பட்ட குற்றங்கள் | தண்டன(சிறைவரை நீட்டிப்பது) |
|---|---|
| ரூ .250 லட்சத்திற்குமேல் வரி ஏய்ப்பு செய்தல் | வருடம் மற்றும் அபராதம் 5 |
| ரூ.50 லட்சத்திற்கும் ரூ.250 லட்சத்திற்கும் இடையில் வரி ஏய்ப்பு செய்தல் | வருடம் மற்றும் அபராதம் 3 |
| ரூ.25 லட்சத்திற்கும் ரூ.50 லட்சத்திற்கும் இடையில் வரி ஏய்ப்பு செய்தல் | வருடம் 1மற்றும் அபராதம் |

ஒருவர் இரண்டாவது அல்லது தொடர்ந்து ஏதேனும் குற்றம் நிரூபிக்கப்பட்டால், இதற்காக பிரிவு 73 (2)ன் கீழ் 5 வருடத்திற்கும் மேலாக அபராதத்துடன் கூடிய சிறை தண்டனை கிடைக்கும். இருப்பினும், எந்த குற்றங்களுக்கும் 6 மாதத்திற்கு குறைவான சிறை தண்டனை கிடையாது.

கேள்வி 18. MGL சட்டத்தில், பிடியியல் அல்லது பிடியியலற்ற குற்றங்கள் எவை?

பதில். MGLன் பிரிவு 73 (3) மற்றும் பிரிவு 73 (4)களின் அடிப்படையில்

- ரூ.250 லட்சத்திற்குள் வரி ஏய்ப்பு செய்திருந்தால் அது பிடியிலற்ற குற்றம் மற்றும் இதற்கு ஜாமீன் உண்டு.

- ரூ.250 லட்சத்திற்கும் மேல் வரி ஏய்ப்பு செய்திருந்தால் அது பிடியியல் குற்றம் மற்றும் இதற்கு ஜாமீன் கிடையாது.

கேள்வி 19. குற்ற வழக்கை தொடங்குவதற்கு, அதற்குரிய அதிகாரி முன்அனுமதிபெற வேண்டியது அவசியமா?

பதில். ஆமாம். முன்அனுமதியில்லாமல் எந்த ஒரு நபர் மீதும் குற்ற வழக்கு தொடர முடியாது.

கேள்வி 20. MGLன் கீழ் குற்ற வழக்கு தொடர, குற்றமனமும் அல்லது குற்றம் செய்யும் மனநிலையும், அவசியமா இருக்க வேண்டுமா?

பதில். ஆமாம். குற்றம் செய்ய வேண்டும் என்று மனநிலையில்லாமல், குற்றம் செய்வதற்கு தேவையான மனநிலை இருப்பதாகவே 75வது பிரிவின்படி ஊகிக்கப்படும்.

கேள்வி 21. குற்றம் செய்யும் மனநிலை என்றால் என்ன?

பதில். ஒரு செயலை செய்யும் போது, அதற்கு உடந்தையாக இருக்கும் மனநிலை 'குற்றம் செய்யும் மனநிலை' என கருதுவதற்கு.
அ. உள்நோக்கத்தோடு செயல்படுதல்
ஆ. செயலும், அதை புரிந்துகொண்டும், கட்டுபாடுடனும் செயல்படுத்தம் விதம்.
இ. அந்த நபர் எந்த வற்புறுத்தலும் இல்லாமலும், அதற்காக பல தடைகளை தாண்டி வந்து செயல்படுதல் தான் செய்யும் செயல், சட்டத்திற்கு முரணானது என அறிந்து செயல்படுதல்
ஈ. அந்த நபர் நம்புவதிம் அல்லது நம்புவதற்கான காரணங்களும் சட்டத்திற்கு முரணானவை.

கேள்வி 22. MGLன் கீழ் எந்த குற்றத்திற்காக ஒரு கம்பெனிக்கெதிராக நடவடிக்கையோ அல்லது வழக்கோ தொடர முடியுமா?

பதில். முடியும். MGL சட்டம் பிரிவு 77ன் படி, பொறுப்பிலுள்ள ஒவ்வொரு நபரோ அல்லது அந்த கம்பெனியின் வியாபாரத்தை நடத்தும் பொறுப்புள்ளவரோ, கம்பெனியுடன் ---------- அந்த நபர் பொறுப்பிலிருக்கும் போது, கம்பெனி செய்த

ஒரு குற்றத்திற்க்காக தண்டனைக்கும் அவரே பொறுப்பேற்க வேண்டும். கம்பெனி செய்த ஏதேனும் குற்றம்.

- தெரிந்தோ / உடந்தையாக இருந்தோ செயல்படுதல்
- கவனக்குறைவு காரணமாக-
  ஒரு கம்பெனியினுடைய கூறபட்ட குற்றத்திற்கான குற்றவாளியாக அப்போதைய அதிகாரி என்று கருதப்பட்டால், அதற்கு எதிரான நடவடிக்கைகளுக்கும், தண்டனைக்கும் அவரே பொறுப்பாவார்.

கேள்வி 23. சட்டத்திற்குட்பட்டு சமரசம் என்றால் என்ன பொருள்?

பதில். குற்றவியல் நடைமுறைக் குறியீடு பிரிவு 320ல் சட்டத்திற்குட்பட்டு சமரசம் என்றால், ஒரு மறுப்பயனுக்காக அல்லது வேறு தனிப்பட்ட உள்நோக்கத்திற்காக, குற்ற வழக்கை தவிர்பதாகும்.

கேள்வி 24. MGLன் கீழ் குற்றங்களை சட்டப்படி சமரசம் செய்து கொள்ள முடியுமா?

பதில். ஆமாம். MGLன் 78வது பிரிவின் படி, கீழ் குறிப்பிட்டுள்ள குற்றங்களை தவிர, குறிப்பிட்ட தொகை செலுத்தியபின், குற்ற சமரசம் செய்து கொள்ளளாம். குற்ற வழக்கு தொடர்வதற்கு முன்பு அல்லது பிறகு, குற்ற சமரசம் செய்து கொள்ளளாம் அனுமதியுண்டு.

- மேலேக் கூறப்பட்ட 12 பெரும் குற்றங்களில், 1லிருந்து 7வரைக்கும் உள்ள (கேள்வி 16ன் அடிக்கோடிட்ட) ஏதாவது குற்றங்களுக்கு அந்த நபர் மீது வழக்கு தொடரப்பட்டு, குற்ற சமரசம் செய்யப்பட்டிருந்தால்,

- 12 முக்கிய குற்றங்களில் 1லிருந்து 7 வரைக்கும் உள்ள குற்றங்களை செய்ய உதவியதாக / துண்டியதாக அந்த நபர் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டு அந்த நபர் குற்ற சமரசம் செய்திருக்கலாம்.

- SGST/ IGST சட்டத்தின் கீழ் ஏதாவது குற்றம் (மேலேக் குறிப்பிட்ட குற்றங்களைத் தவிர), 1 கோடிக்கு மேல் மதிப்புள்ள வழங்கலில், அந்த நபர் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டு அதன் பொருட்டு குற்ற சமரசம் முன்பே செய்யப்பட்டிருந்தால்.

- CGST/SGST தவிர NDPSA அல்லது FEMA அல்லதுவேறு ஏதாவது சட்டத்தின் கீழ் செய்த குற்றங்களானாலும் அதுவும் குற்றமே.

- இதன் சார்பில் பரிந்துரைக்கப்பட்ட எந்த வகையான குற்றங்களும் அல்லது நபர்களும்.

உரிய வரி, வட்டி மற்றும் அபராதம் கட்டிய பின்பே, குற்ற சமரசம் செய்யலாம், மேலும், குற்ற சமரசம் செய்தலை, வேறு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது என்று இல்லை.

கேள்வி 25.. சட்டப்படி சமரசம் செய்யப்படும் குற்ற வழக்குகளுக்கு நிதி எல்லை ஏதேனும் பரிந்துரைக்கப்பட்டுள்ளதா?

பதில். ஆமாம். சமரசம் செய்து கொள்வதற்கான குறைந்த பட்சத் தொகையானது பின்குறிப்பிடப்படும் தொகையைவிட அதிகமாக இருக்க வேண்டும்.

- சம்பந்தப்பட்ட வரியில் 50%அல்லது
- ரூ. 10,000

சமரசம் செய்து கொள்வதற்கான அதிகப் பட்சத் தொகையானது பின்குறிப்பிடப்படும் தொகையைவிட அதிகமாக இருக்க வேண்டும்.

- சம்பந்தப்பட்ட வரியில் 150%அல்லது
- ரூ. 30,000

கேள்வி 26. MGLன் கீழ் சட்டப்படி சமரசம் செய்யப்படும் ஒரு குற்ற வழக்குக்கு எந்தவிதமான பிரச்னைகள் வரும்?

பிரிவு 77ன் துணை பிரிவு(3) விதியின் படி சட்டப்படி சமரசம் செய்யப்பட்ட ஒரு குற்ற வழக்கில், இந்த பிரிவின் கீழ் எந்த மேல் நடவடிக்கைகளும் தொடங்கப்படமாட்டாது மேலும், குற்ற நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்ட நிலையிலேயே முடிவுக்கு வந்து விடும்.

## 21. ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி (IGST) சட்டம் பற்றிய கண்ணோட்டம்:

கேள்வி 1. IGST என்றால் என்ன?

பதில். "ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி" (IGST) என்றால் மாநிலங்களுக்கிடையே ஏற்படும் வர்த்தக மற்றும் வணிகத்தின் பொருட்டு ஏதேனும் சரக்குகள் வழங்கீடு மற்றும் / அல்லது சேவைகளின் மீது விதிக்கப்படும் வரியாகும்.

கேள்வி 2 மாநிலங்களுக்கிடையே வழங்கீட்டுப் பொருட்கள் என்றால் என்ன?

பதில். மாநிலங்களுக்கிடையே ஏற்படும் வர்த்தக மற்றும் வணிகத்தின் பொருட்டு, சரக்குகள் வழங்கீடு மற்றும் / அல்லது சேவைகள் என்றால் பொருட்களை வழங்கும் இடம் மற்றும் அது பெறப்படும் இடம் இரண்டும் வெவ்வேறு மாநிலங்களில் இருப்பதாகும். (IGST சட்டத்தின் பிரிவு 3(1) மற்றும்(2)).

கேள்வி 3. GSTன் கீழ் மாநிலங்களுக்கிடையே நடக்கும் சரக்குகள் வழங்குதல் மற்றும் / அல்லது சேவைகளுக்கு எப்படி வரி விதிக்கப்படுகிறது?

பதில். மாநிலங்களுக்கிடையிலான வழங்கீட்டுப் பொருட்கள் மீது விதிக்கப்படும் IGST வரியை, மத்திய அரசால் வசூலிக்கப்படும். IGST என்பது CGST மற்றும் SGSTன் உள்ளடக்கமாக இருக்கும் பரந்து விரிந்துள்ளதால், அவ்வரி மாநிலங்களுக்கிடையே நடக்கும் சரக்குகள் வழங்கீடு மற்றும் சேவைகள் அனைத்திற்கும் வரி விதிக்கபடுகிறது. மாநிலங்களுக்கிடைய விற்பனை செய்பவர், IGST, CGST, SGST ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் உள்ளீட்டு வரவை சரிக்கட்டியபிறகு IGSTன் மதிப்புக் கூட்டிற்கு வரி செலுத்துவார். IGSTல் செலுத்தப் பயன்படுத்தப்பட்ட SGST வரவை ஏற்றுமதி செய்யும் மாநிலம் மத்திய அரசுக்கு மாற்றிவிடும். IGSTல் வரவை, இறக்குமதி செய்பவர் வெளியீட்டு வரி பொறுப்பை தன்னுடைய சொந்த மாநிலத்தில் செலுத்தும் போது பெற்றுக் கொள்ளமுடியும். SGST செலுத்தப் பயன்படுத்தப்பட்ட IGST வரவை இறக்குமதி செய்யும் மாநிலத்திற்கு மத்திய அரசு மாற்றிவிடும். சம்பந்தப்பட்ட தகவல்களனைத்தும் சமர்ப்பிக்கப்படும் அந்த மத்திய நிறுவனம், சமர்ப்பிக்கப்பட்டவைகளை சரிபார்த்து, நிதிகளை மாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அரசாங்களுக்கு தகவல் தெரிவிக்கும் அரசு இயந்திரமாகவும் செயல்படும்.

கேள்வி 4. IGST சட்ட வரைவின் முக்கிய சாரம்சம் என்ன?

பதில். மாதிரி IGST சட்ட வரைவு, 33 பிரிவுகளைக் உள்ளடக்கிய, 11 அத்தியாயங்களைக் கொண்டது.மற்றவற்றிற்கிடையில், இந்த வரைவு, சரக்குகளை வழங்கும் இடத்தை நிரந்திர விதிகளை வகுத்துள்ளது. வழங்கல் இடத்திலிருந்து,

சரக்குகளை ஏற்றிக்கொண்டு நகர ஆரம்பித்து, இந்த நேரத்தில் எந்த இடத்தில் பெறுநரிடம் கொண்டுப்போய் சேர்க்கப்பட வேண்டுமோ, அந்த இடத்தில் தான் முற்றுபெறும் அவ்விடமே வழங்கல் இடமாக கருதப்படும். சரக்குகள் வழங்கலில், சரக்கு பரிமாற்றம் இல்லையென்றால், எவ்விடத்தில் சரக்குகள் விநியோகம் செய்வதாக கருதப்படுகிறதோ அவ்விடமே வழங்கல் இடமாகும். சரக்குகள் குவிக்கப்பட்ட அல்லது ஒன்றுகூட்டப்பட்ட இந்த வழக்கில், இம்மாதிரி குவிக்கப்பட்ட அல்லது ஒன்றுகூட்டப்பட்ட இடமே வழங்கலின் இடமுமாகும். இறுதியாக, சரக்குகளை வழங்குவதற்காக வண்டிகளில் ஏற்றப்பட்டு. சரக்குகளை எந்த இடத்திற்கு சரக்குகள் செல்ல வேண்டுமோ அந்த இடத்திற்கு சரக்குகளை எடுத்துக் சேர்க்கப்பட்ட இடமே, வழங்கல் இடமாகும்.

கேள்வி 5 IGST மாதிரியின் முக்கியமான நன்மைகள் என்ன?

பதில். IGST மாதிரியின் முக்கியமான நன்மைகள்.
அ, மாநிலங்களுக்கிடையேயான பரிவர்த்தனைகளில் தடையில்லாத ITCன் சங்கிலி பராமரிப்பு

ஆ. மாநிலங்களுக்கிடையே வாங்குபவர்களுக்கு அல்லது விற்பவர்களுக்கு எந்தவிதமான வெளிப்படையான வரிக் கட்டணமோ அல்லது கணிசமான நிதி தடை இல்லை.

இ. வரி செலுத்தப்படும் போதே ITC பயன்படுத்தப்படுவதால், ஏற்றுமதி செய்யப்படுகின்ற மாநிலத்திற்கு திரும்பப் பெறும் உரிமை கிடையாது.

ஈ. சுய கண்காணிப்பு மாதிரி

உ. மிக எளிமையான வரி நடைமுறை இருக்கும்போது, நடுநிலைமையான வரிக்கான உத்தரவாதம்

ஊ. வரி செலுத்துபவருக்கு எந்த கூடுதல் இணக்க சுமையுமில்லாத மிக எளிமையான கணக்கியல்

எ உயர்மட்ட இணக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்க உறுதிபடுத்தல், அதனால வசூல் திறனும் அதிகரிக்கும்

வணிகத்திலிருந்து வணிகம், வணிகத்திலிருந்து நுகர்வோர் பரிவர்த்தனைகள் என்று அனைத்தையும், மாதிரியால் கையாள முடியும்.

கேள்வி 6. MGLன் கீழ் ஏற்றுமதி / இறக்குமதி வரி எப்படி விதிக்கப்படுகிறது?

பதில். எல்லா ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள், மாநிலங்களுக்கிடையே நடைபெறும் பரிவர்தனையாக கருதப்பட்டு, GST (IGST) விதிக்கப்படவேண்டும்.

வரியின் நிலைப்பாடு, எவ்விடத்தில் நிறைவு பெருகிறதோ, அந்த நிறைவு பெரும் மாநிலத்திற்கு, SGST வரி சென்றடையும். இறக்குமதி பொருட்கள் மற்றும் சேவைகள் மீது செலுத்தப்படும் IGST யை, உள்ளீட்டு வரியாக (ITC) எடுத்துக்கொண்டு, GST வரிகளை செலுத்த உபயோகித்து கொள்ளளாம். (பிரிவு 2 (c) IGST Act.)

கேள்வி 7 IGST சட்டம் என்பது மிகச் சிறிய வரையறைக்குட்பட்டது, பெரும்பகுதி தீர்ப்பாணையரிடம் உள்ளது. இப்படி இருக்கையில் CGST மற்றும் SGSTன் விதிகள் IGST சட்டத்திற்குப் பொருந்துமா?

பதில். பொருந்தும். IGST சட்டத்தின் கீழ் உள்ள பல்வேறு விதிகள் CGST விதியின் கீழுள்ள வரி சம்பந்தப்பட்டவைகளுக்கும் பொருந்தும் என்று IGST சட்டத்தில் குறிப்பிட்டுள்ளது.

கேள்வி 8. IGST எப்படி செலுத்த வேண்டும்?

பதில். ITC பயன்படுத்தியோ அல்லது பணமாகவோ IGSTஐ செலுத்தலாம். இருப்பினும், ITCஐ பயன்படுத்தி IGSTஐ பின்குறிப்பிடும் வரிசையில் செலுத்தப்படும்

அ. முதலில் இருப்பவைகளை IGSTன் ITC பயன்படுத்தப்பட்டு IGST செலுத்தப்படும்.
ஆ. IGSTன் ITC முடிவடைந்தவுடன், CGSTன் ITC பயன்படுத்தப்பட்டு IGST செலுத்தப்படும்.

இ. CGSTன் ITC, IGSTன் ITC இந்த முடிவடைந்த பிறகுதான், விற்பனையாளருக்கு SGSTன் ITC பயன்படுத்தி IGST செலுத்த அனுமதிக்கப்படும்.

IGST வரி ஏதாவது மீதமிருந்தால், பணமாக செலுத்தி முடித்துவிடலாம். வரவை பயன்படுத்தி IGST செலுத்தவேண்டிய வரிசையை GST அமைப்பு உறுதி செய்ய வேண்டும்.

கேள்வி 9. மத்திய மற்றும் ஏற்றுமதி செய்யும் மாநிலம் மற்றும் இறக்குமதி செய்யும் மாநிலங்களுக்கிடையே எப்படி திர்வை நடைபெறுகின்றது?

பதில். மத்திய மாநிலங்களுக்கிடையேயான கணக்குகள் இரண்டு விதமாக தீர்க்கப்படுகின்றன, அவைகள் பின்வருமாறு-

- மத்திய மற்றும் ஏற்றுமதிசெய்யும் மாநிலங்களுக்கிடையில்:
  ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை பயன்படுத்தி SGSTன் ITCக்கு இணையானத் தொகையை ஏற்றுமதி செய்யும் மாநிலம் மத்திய அரசுக்கு செலுத்த வேண்டும்.

- மத்திய மற்றும் இறக்குமதி செய்யும் மாநிலங்களுக்கிடையில்: மாநிலத்திற்குள்ளாக வழங்குப் பொருட்களின் மீதான, விற்பனையாளர்களால் SGSTக்கு செலுத்தப்படும் தொகையை பயன்படுத்தி IGSTன் ITCக்கு இணையானத் தொகையை மத்திய அரசு செலுத்தும்.

தீர்வை காலத்திற்குள் விற்பனையாளர்களால், இணைக்கப்படும் அனைத்து விவரங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒட்டுமொத்தமாக அடிப்படையில் மாநிலத்திற்கான தீர்வு காணப்படும். CGST மற்றும் IGST கணக்குகளிலும் தீர்வின் அளவு இதே மாதிரியாகத்தான் இருக்கும்

## 22. சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கும் இடம்:

கேள்வி 1. MGLன் கீழ் சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கும் இடத்திற்கான அவசியம் என்ன?

பதில்GSTன் அடிப்படை கொள்கையே பொருட்கள் வழங்கப்படும் அதே இடத்திலோஅல்லது நுகரப்படும் இடத்திலோ திரும்பட வரி விதித்தல். எனவே, வழங்கல் இடம் விதி இடத்தை நிர்ணயிக்கும்அதாவது, வரி சென்றடைய வேண்டியது அதன் அதிகார எல்லைக்குட்ப்பட்டிருக்க வேண்டும். பரிவர்த்தனைகள் மாநிலத்திற்குள்ளோ, மாநிலத்திற்கிடையிலோ நடந்தாலும் வழங்கல் இடம் மூலமாக உறுதி செய்யப்பட வேண்டும். வேறு ஒரு வர்த்தகம் மாநிலத்திற்குள் விதிக்கப்படும் SGST CGST விதிக்க வேண்டுமா அல்லது மாநிலத்திற்கிடையே விதிக்கப்படும் IGST விதிக்க வேண்டுமா என்பதை நிர்னயிக்க வழங்கலுக்கான இடத்தை உறுதி செய்யப்படவது அவசியமாகும்.

கேள்வி 2. வழங்கல் இடங்களின் விதிகள் சரக்குகள் மற்றும் சேவைகள் பொருட்டு ஏன் வேறுபடுகின்றன?

பதில். பொருட்கள் தெரியக்கூடியதாக இருக்கும்போது வாங்கப்போகும் இடத்தை தீர்மானிப்பதில் குறிப்பிடதக்க எந்தவித பிரச்னைகளும் இருக்காது. சேவைகள் கண்களுக்கு புலப்படாதபோது வழங்கல் இடத்தை தீர்மானிப்பது குறித்து பின்வரும் சில முக்கியமான அம்சங்கள்

(அ) விநியோக முறையின் சேவையை எளிதாக மாற்ற முடியும். உதாரணமாக, தொலைதொடர்பு சேவையில் அதிகமாக போஸ்ட்-பெய்டிலிருந்து அதிகமாக ப்ரீ-பெய்டிற்கு மாறுவது; பில் அனுப்பப்படும் விலாச மாற்றப்படுவது; பில் அனுப்புபவரது விலாசம் மாற்றப்படுவது; மென்பொருள் பழுது பார்ப்பதற்காக அல்லது பராமரிப்புக்காக தளத்திலிருந்து ஆன்லைனிற்கு மாற்றுவது; வங்கிகளின் சேவைக்காக வாடிக்கையாளர்கள் முன்பு வங்கிக்கு செல்ல வேண்டியிருந்தது, இப்போது வாடிக்கையாளர்கள் எங்கிருந்து வேண்டுமானாலும் தேவையான தங்களுக்கான சேவையை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

(ஆ) சேவை வழங்குபவர், சேவை பெறுபவர் மற்றும் வழங்கப்படும் சேவை விசாரித்தறிய முடியாததாகும் அல்லது தெளிவாக தெரியாத மறைக்கப்பட்ட நடவடிக்கைகளாகவே இருப்பதால், பாதை மிகவும் கடினமாகவே இருக்கும்;

(இ) ஒரு சேவை வழங்குவதற்கு, சேவை வழங்குபவர்க்கு நிலையான இடம் இருக்க வேண்டிய அவசியமில்லை. சேவை பெறுபவர் அவர் நகர்ந்து

கொண்டிருக்கும்போதே சேவையை பெறலாம். பில்லிங் இடம் ஒரு இரவுக்குள் மாற்றிவிட முடியும்.

(ஈ) இதே விஷயம் சில சமயங்களில் ஒரிடத்திற்கும் மேலாக நகரக் கூடும். உதாரணமாக, கட்டுமானப் பணி, அல்லது இருப்புப் பாதை, தேசிய நெடுஞ்சாலை அல்லது ஆற்றின் மீதான பாலம் போன்றவைகளில் ஒரு மாநிலத்தில் துவங்கி மற்றொரு மாநிலத்தில் முடிவடையும். விநியோகம் மற்றும் பட காட்சி உரிமைகளை பல மாநிலங்களுக்கு ஒரே பரிவர்த்தனையில் ஒதுக்கீடு செய்ய முடியும். ஒரு விளம்பரம் அல்லது ஒரு நிகழ்ச்சியை ஒரே சமயத்தில் நாடு முழுவதும் ஒளிபரப்ப முடியும். ஒரு விமான நிறுவனம் வெளியிட்ட 10 லீஃப் அடங்கிய, மாதாந்திர பயணச்சீட்டை பயன்படுத்தி இரு நாடுகளுக்கிடையே பயணம் செய்ய முடியும். நொய்டா அல்லது டில்லி அல்லது ஃபரீதாபாதிலோ வசிக்கும் ஒருவர் பயன்படுத்துவதற்க்காக அட்டை வழங்கப்பட்ட டில்லி மெட்ரோவால் பணம் பெறும் போதும் இடம் அல்லது பயணத்தை மாற்றித் தர முடியும். உதாரணமாக, 15-20 வருடங்களுக்கு முன்பு, DTH, ஆன்லைன் தகவல்கள், ஆன்லைன் வங்கி சேவை, ஆன்லைன் பயணச்சீட்டு பதிவு, வலைபின்னல், தொலைதொடர்பு அலைபேசி, இன்னும் பிற பற்றி யோசித்தே இருந்திருக்க மாட்டார்கள்.

கேள்வி 3 எந்த பதிலாள் அல்லது ஊகங்களாள் ஒரு பரிவர்தனையில் வழங்கல் இடத்தை தீர்மானிக்க பயன்படுத்த முடியும்?

பதில். பல்வேறு விஷயங்கள் சம்பந்தப்பட்டிருக்கும் ஒரு பரிவர்த்தனை, சேவையில், அவ்விஷயங்களை வழங்கல் இடத்தை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தலாம். மற்றவர்களைவிட பதிலாள் அல்லது ஊகங்களை வழங்கல் இடத்தில் தீரமானிக்கும்போது, நல்ல முடிவு எட்டமுடியும் எனும்போது வழங்கல் இடத்தில் தீர்மானிப்பதற்காக பயன்படுத்த முடியும். அதையே தான் கீழேயும் விவாதிக்கப்படுகின்றன:-

(அ) சேவை வழங்குபவரின் இடம்

(ஆ) சேவை பெறுபவரின் இடம்

(இ) செயல்பாடுகள் நடைபெறப் போகும் இடம் /செயலாக்கம் பெறும் இடம்.

(ஈ) எங்கேயிருந்து பெறப்பட்டது மற்றும்

(உ) உண்மையாகவே பலனடையப் போகிற நபர் / இடம்

கேள்வி 4. வழங்கலுக்கு பதிவு செய்த நபர்கள் (B2B), வழங்கலுக்கு பதிவு செய்யாத நபர்களுக்கு (B2C) என்று வழங்கல் இடத்தில் தனித்தனியான விதிகள் இருக்க வேண்டியதன் அவசியம் என்ன?

பதில். B2B பரிவர்த்தனைகள் வெறுமனே கடந்து செல்வதால், செலுத்தப்பட்ட வரிப்பணத்தை பெறுநர் கடனைப் போல எடுத்துச் சென்று விடுகிறார். பொருட்கள் மீது GST வசூலித்தவை அரசாங்கத்திற்கு பெரும் சுமை ஏற்படுத்தும். பெறுபவர்களுக்கு இந்த பொருட்கள் ஒரு சொத்தாகிவிடும், மேலும் எதிர்காலத்தில் வரி செலுத்தப்படும் போது பெறுநர் இதை உள்ளீட்டு வரி வரவாக பெற்றுக் கொள்ளலாம். B2B பரிவர்த்தனைகளின் போது, பெறுநர் பலனை எடுத்து கொள்வதால், கிட்டதட்ட அனைத்து சூழ்நிலைகளிலும், பெறுநரின் இடம் கவனத்தில் கொள்ளப்படும். சாதாரணமாக, பெறுநர் பொருட்களை வேறொரு வாடிக்கையாளருக்கு வழங்குவார். B2B பரிவர்த்தனைகள் மேலும், B2C பரிவர்த்தையாக மாறும்போதுதான் நுகர்வு செய்யப்படும். B2C பரிவர்த்தனைகளில், வழஙகல் இறுதியாக நுகர்வு செய்யப்பட்டு, அதற்கான உண்மையாக செலுத்தப்பட்ட வரி அரசாங்கத்தை வந்தடைகிறது.

கேள்வி 5 சரக்குகள் அகற்றியபின் வழங்கல் இடம் என்னவாக இருக்கும்?

பதில். சரக்குகளின் இடமாக இருக்கும் வழங்கல் இடம் பட்டுவாடா செய்யப்படுவதற்காக பொருட்களை எடுத்து நகரும் அந்த நேரத்தில் நின்றுவிடும். IGST சட்டப்பிரிவு 5(2).

கேள்வி 6. மூன்றாவது நபரின் வழிகாட்டுதலின் பேரில் பொருட்களை வழங்குபவர் ஒரு நபருக்கு பட்டுவாடா செய்யும் போது வழங்கல் இடம் என்னவாகும்?

பதில். மூன்றாவது நபர் சரக்குகளை பெற்றுக்கொண்ட இடம், அம்மாதிரி வியாபாரம் செய்யும் நபரின் தலைமை இடத்தையே அம்மாதிரி சரக்குகளின் வழங்கல் இடமாகக் கருதப்படும். (IGST சட்டப்பிரிவு 5(2A)).

கேள்வி 7. கப்பல், விமானம், ரயில், அல்லது மோட்டார் வண்டி போன்ற போக்குவரத்தின் மூலமாக சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கப்படும்போது வழங்கல் இடம் என்னவாகும்?.

பதில். இம்மாதிரி சரக்குகளை பொருத்தமட்டில், சரக்குகள் எங்கு எடுத்துச் சென்று ஏற்றப்படுகிறதோ, அந்த இடமே வழங்கல் இடமாகும். (IGST சட்டப்பிரிவு 5(5)). இருப்பினும், சேவைகள் பொருத்தமட்டில், வாகனம் பயணத்தை துவங்குவதற்காக, முதல் அட்டவணையில் குறிப்பிட்ட இடமே, வழங்கல் இடமாகும்.

கேள்வி. 8. B2B சேவை வழங்கலின் பொருட்டு, வழங்கல் இடத்தில் இயல்பான அனுமானிப்பு என்ன?

பதில். பதிவு செய்த வரி செலுத்துபவர், பதிவு செய்யாத வரி செலுத்துபவர்களுக்கான IGST சட்டத்தில் இந்த சொல்லாடல் பயன்படுத்தப்படுகிறது. இந்த வழக்கில், பதிவு செய்த நபர்களுக்கான வழங்கல் இடத்தில் அனுமானிப்பு அந்த நபரின் இடமேயாகும். பதிவு செய்திருக்கும் பெறுநரின் விலாசம் இருப்பதால், அதையே மாற்று / பதிலான இடமாக எடுத்துக் கொள்ள முடியும்.

கேள்வி 9. பதிவு செய்யாத பெறுநருக்கான வழங்கல் இடத்தில் இயல்பான அனுமானிப்பு என்ன?

பதில். பதிவு செய்யாத பெறுநர்களுக்கு, சாதாரணமாக, பெறுநரின் இடமே வழங்கலின் இடமாகும். இருப்பினும், பல சந்தர்ப்பங்களில் பெறுநரின் விலாசம் இருப்பதில்லை. அம்மாதிரி சந்தர்ப்பங்களில் வழங்குபவரின் சேவை தரும் செய்யும் இடமே, மாற்று / பதிலான வழங்கல் இடமாக எடுத்துக் கொள்ளப்படும்.

கேள்வி 10. அசையா சொத்து சம்பந்தமாக, அசையா சொத்தே வழங்கல் இடமாக உள்ளது. பல மாநிலங்களை இணைத்து, டில்லியிலிருந்து மும்பைக்கு ஒரு சாலை கட்டப்பட்டு வருகிறுது என்று வைத்துக் கொள்வோம். வழங்கல் இடத்தில் என்னவாக இருக்கும்?

பதில். ஒரு மாநிலத்திற்கு அதிகமான இடங்களில் அசையா சொத்து இருக்கமேயானால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் செய்யப்பட வேண்டிய சேவையின் மதிப்பீட்டு விகிதத்தில் தனித்தனியாக சேகரிக்கப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்டவுடன், இதனடிப்படையில், ஒரு உடன்படிக்கையோ அல்லது ஒப்பந்தமோ செய்து கொள்ள வேண்டும். அல்லது இம்மாதிரியான ஒப்பந்தமோ அல்லது உடன்படிக்கையோ ஏற்படாதபோது, மற்ற நியாயமான அடிப்படையில் இதன் சார்பாகவும் பரிந்துரைக்கப்படலாம். (Explanation clause to Section 6(5) of the IGST Act)

கேள்வி 11 ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வழங்கப்படும் சேவையின் இடம் என்னவாக இருக்கும்? பல மாநிலங்களில் நடக்கும் IPL கிரிக்கெட் தொடரை சொல்லலாம்.

பதில். ஒரு நிகழ்ச்சி பொறுத்தமட்டில், சேவை பெறக்கூடியவர் பதிவு செய்திருந்தால், வழங்கப்படும் சேவையின் இடம் அந்த நபரின் இடமேயாகும். இருப்பினும், பெறுநர் பதிவு செய்யவில்லையென்றால், வழங்கப்படும் சேவையின் இடம் எங்கு நிகழ்ச்சி நடக்கிறதோ அந்த இடமாகும். பல மாநிலங்களில்

நடத்தப்படுகின்ற நிகழ்ச்சியாகும் பட்சத்தில், ஒவ்வொரு மாநிலத்தில் செய்யப்பட வேண்டிய சேவையைப் பொறுத்து ஒரு குறிப்பிட்டத் தொகையை கட்டணமாக பெற்றுக் கொள்ளப்படும். (IGSTன் சட்டப்பிரிவு 6(8) உட்பிரிவில் விளக்கமுள்ளது)

கேள்வி 12. குரியரில் அனுப்பி வைக்கப்படும் பொருட்களின் வழங்கல் இடம் என்னவாக இருக்கும்?

பதில். பெறுநர் பதிவு செய்திருந்தால், அந்த நபரின் இடமே வழங்கல் இடமாகும்.

இருப்பினும், பெறுநர் பதிவு செய்யாதிருந்தால், சரக்குகள் போக்குவரத்துக்காக எங்கே ஒப்படைக்கப்படுகின்றதோ அது வழங்கலின் இடமாகும்.

கேள்வி 13. மும்பையிலிருந்து டில்லிக்கு சென்று மீண்டும் மும்பைக்குத் திரும்பும் ஒரு நபரின், வழங்கல் இடம் என்னவாகும்?

பதில். பதிவு செய்த நபராயிருந்தால், வழங்கல் இடம் பெறுநரின் இடமாகும்.

ஒரு நபர் பதிவு செய்யாதிருந்தால், மும்பையிலிருந்து டில்லிக்கு முன்னோக்கிச் செல்லும் பயணத்தில் அவர் ஏறும் மும்பைதான், வழங்கலின் இடமாகும்.

இருப்பினும், மறுமார்க்கம் தனியான பயணமாக கருதப்பட வேண்டும் என்பதால், மறுமார்க்கமான டில்லிதான் வழங்கலின் இடமாகும். (IGSTன் சட்டப்பிரிவு 6(10)(b) உட்பிரிவில் விளக்கமுள்ளது)

கேள்வி 14. ஒரு நபர் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும், பயணம் செய்யக்கூடிய ஒரு பயணச்சீட்டையோ / அனுமதிச் சீட்டையோ ஏர் இந்திய நிறுவனம் வெளியிட்டது. வழங்கல் இடம் என்னவாகும்?

பதில். மேலே குறிப்பிட்ட விஷயத்தில், விலைப்பட்டி வெளியிடும் நேரத்தில், எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக, ஏறுமிடம் குறிப்பிடப்பட மாட்டாது. அதன்படி, ஏறுமிடம் வழங்கலின் இடமாகாது. இம்மாதிரி சமயத்தில், நிலையான விதிகள் பொருந்தும். (IGSTன் சட்டப்பிரிவு 6(10)(b) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ளது).

கேள்வி 15. கைபேசி இணைப்பில் வழங்கல் இடம் என்னவாகும்? அது வழங்குபவரின் இடமாக இருக்க முடியுமா?

பதில். கைப்பேசி சேவைகள் வழங்குபவரின் இடம் வழங்கல் இடமாக முடியாது. ஏனெனில், கைப்பேசி கம்பெனிகள் பல மாநிலங்களில் சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது அது தவிர பல சேவைகள் மாநிலங்கிடையே வழங்கப்படுகின்றது. வழங்குபவர்களின் இடம் வழங்கல் இடமாக எடுத்துக்

கொண்டால், நுகர்வின் கொள்கைகளே முறிக்கப்பட்டு விடும். மேலும், எங்கே வழங்குபவர் இருக்கின்றாரோ, அந்த ஒரு சில மாநிலங்களுக்கு மட்டுமே அனைத்து வரி வருவாய்களும் போய் சேரும்.

போஸ்ட்பெய்ட் அல்லது ப்ரீபெய்ட் அடிப்படையில் வழங்கல் இடம் கைப்பேசிகளின் இணைப்பைப் பொறுத்ததேயாகும்.

போஸ்ட்பெய்ட் இணைப்புகளை பொறுத்தவரை, பெறுநரின் பில்லிங் விலாசமே வழங்கலின் இடமாகும். ப்ரீபெய்ட் இணைப்பானால், அதற்கான கட்டணம் எங்கு செலுத்தப்படுகின்றதோ அதுவே வழங்கல் இடமாகும் அல்லது ப்ரீபெய்ட் செலவுச்சீட்டு விற்கப்படும் இடம். இருப்பினும், இணையதளம் / மின்னணு கட்டணம் மூலமாகவோ ரீ-சார்ஜ் செய்யப்பட்டால், பெறுநரின் சேவைகள் பதிவேட்டிலுள்ள இடத்தையே வழங்கல் இடமாக எடுத்துக் கொள்ளலாம்.

கேள்வி 16. கோவாவிலிருக்கும் ஒரு நபர் டில்லியிலுள்ள தரகரிடம் மும்பையிலிருக்கும் தேசிய பங்குச் சந்தையில் (NSE) பங்குகள் வாங்குகிறார். வழங்கலின் இடம் என்னவாகும்?

பதில். வழங்குபவரின் சேவைகளைப் பெறும், பெறுநரின் சேவைகள் பதிவேட்டிலுள்ள இடமே வழங்கலின் இடமாகும். எனவே, கோவா தான் வழங்கலின் இடமாகும்.

கேள்வி 17. ஒரு நபர் மும்பையிலிருந்து குளு மனாலிக்கு சென்று, மனாலியிலுள்ள ஐசிஐசிஐ வங்கியில் சில சேவைகளை பெறுகிறார். வழங்கலின் இடம் என்னவாகும்?

பதில். ஒரு நபரின் கணக்குடன் வங்கி சேவைகள் இணைக்கப்படாவிடின், வழங்கலின் இடம் குளு. அதாவது, சேவை வழங்குபவரின் இடம். இருப்பினும், ஒரு நபரின் கணக்குடன் வங்கி சேவைகள் இணைக்கப்பட்டிருந்தால், பெறுநரின் சேவைகள் பதிவேட்டிலுள்ள இடமான மும்பையே வழங்கலின் இடம் மும்பை ஆகும்.

கேள்வி 18. கூர்கானைச் சேர்ந்த ஒரு நபர் ஏர் இந்தியா விமானம் மூலம் மும்பையிலிருந்து டில்லிக்குச் செல்கிறார். அவர் தன்னுடைய பயணக் காப்பீடை மும்பையில் எடுக்கிறார். வழங்கலின் இடம் என்னவாகும்?

காப்பீடு சேவை வழங்குபவரிடம் பதிவேட்டில் உள்ள பெறுநரின் இடமே வழங்கலின் இடமாகும். எனவே, கூர்கான்தான் வழங்கலின் இடமாகும். (IGSTன் சட்டப்பிரிவு 6(14)(b) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ளது).

**23. GST** வலைவாசலின் முன்தள வணிக செயல்முறை:

கேள்வி. 1 GSTN என்றால் என்ன?

பதில் . சரக்கு மற்றும் சேவை வரி வலைபின்னல் ஒரு லாப நோக்கமற்ற மற்றும் அரசு சார்பற்ற நிறுவனமாகும். வரி செலுத்துபவர்கள் மற்றும் மற்ற பங்குதாரர்கள் உட்பட, மத்திய, மாநில இரு அரசுக்கு தொழில்தகவலுக்கு உள்ள அடிப்படைவசதியும், சேவையும் அளிக்கும் IT தொழில்நுட்பம். முன்தள சேவைகளாக பதிவு செய்தல், வரிவிவர படிவம் மற்றும் வரி செலுத்துபவர்களுக்கு தர வேண்டிய பணம், போன்றவற்றை GSTN வழங்குகின்ற, அரசாங்கத்துக்கும், வரிசெலுத்துபவர்களுக்கும் இடையே இடைமுகமாக செயல்படுகிறது.

கேள்வி 2. GSTNன் துவக்குவதற்கு மூலகாரணம் என்ன?

பதில். GST கொள்கை திட்டம் என்பது ஒரு சிறப்பான மற்றும் சிக்கலான தகவல் தொழிநுட்ப முயற்சியாகும். மத்திய, மாநில அரசுகளுக்கிடையே ஒரு பொதுவான மற்றும் பகிர்ந்த தகவல் தொழிநுட்ப சேவையை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, வரி செலுத்துபவர்களுக்காக சீரான இடைமுகத்தை தோற்றுவிப்பதற்காக ஒரு சிறப்பான முதல் முயற்சி. தற்போது, மத்திய, மாநில அரசுகளின் மறைமுக வரி நிர்வாகங்கள், வேறுபட்ட சட்டங்கள், விதிகள், வழிமுறைகள் மற்றும் வடிவமைப்புகளின் கீழ் பணி செய்து கொண்டிருக்கின்றன. அதன் விளைவாக, தொழில் தகவல் வருமான வரி அமைப்பும் தனிப்பட்ட தளத்தில் பணி செய்கின்றது. மறைமுக வரிச் சூழலில் முழுவதும் ஒன்றிணைய வேண்டியிருப்பதால். GSTஐ நடைமுறைப்படுத்த அவர்களை ஒருங்கிணைப்பது மிகவும் சிக்கலாக இருக்கின்றது. எனவே, மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றின் வரி நிர்வாகங்கள் மற்றும் வரி செலுத்துபவர்கள் மற்றும் மற்ற வெளிப்பங்குதாரர்களின் இடைமுகங்கள் போன்ற அனைத்தையும் ஒரே மாதிரியான தகவல் தொழிநுட்ப முதிர்ச்சியுடன் சீரான வடிவமைப்புக்கு கீழ் கொண்டு வர வேண்டும். தவிர, மாநிலங்கிடையேயான சரக்கு மற்றும் சேவை வணிகத்துக்கு (IGST) மத்திய, மாநில அரசுகளுக்கு மத்தியில் ஒரு வலுவான தீர்வு எந்திரமாக ஒரு இலக்கு சார்ந்த வரியாக இந்த GST இருக்க வேண்டும். ஒரு வலுவான IT உள்கட்டமைப்பு மற்றும் முதுகெலும்பான சேவைகளையும் செயல்படுத்தும்போதுதான், கைப்பற்றுதல், மற்றும் பங்குதாரர், வரி செலுத்துபவரகள், மத்திய மாநில அரசுகள், வங்கிகள், மத்திய ரிசர்வ் வங்கி ஆகியவற்றுக்கிடேயேயான தகவல் பரிமாற்றங்கள் போன்றவற்றினால் தான் மட்டுமே இது சாத்தியமாகும்.

மாநில நிதி அமைச்சர்களின் அதிகாரக் குழு, 21-07-2010 தேதியன்று நடந்த 2010ம் ஆண்டின் 4வது கூட்டத்தில், இந்த விஷயங்கள் விவாதிக்கப்பட்டன, சரக்கு மற்றும் சேவை வரிக்கான IT உள்கட்டமைப்பு மீதான அதிகாரக் குழுவை (Empowered Group on IT infrastructure for GST - EG என்று சுருக்கமாகப் குறிப்பிடப்படுகிறது) அமைக்க இந்தக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. Dr.நந்தன் நீலகேனி தலைமையிலான குழுவில், கூடுதல் செயலாளர் (வருவாய்),

மத்திய கலால் மற்றும் சுங்க வாரியத்தின் (B&C) உறுப்பினர் CBEC, பொது இயக்குநர், (Systems), நிதியமைச்சகத்தின் நிதி விவகாரம், CBEC, நிர்வாகக் குழுவின் உறுப்பு செயலர். மற்றும் ஐந்து மாநிலங்களின் வணிக வரி ஆணையர்கள் (மஹாராஷ்டிரா, அசாம், கர்நாடகா, மேற்கு வங்கம், மற்றும் குஜராத்) ஆகியோர் அடங்குவர். சரக்கு மற்றும் சேவை வரி வலைபின்னல் (GSTN) என்று அழைக்கப்பட போகின்ற ஒரு பொது வலைவாசலை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய தகவல் பயனீட்டு (NIU / SPV) அமைப்பதற்கு மாதிரிகளை வகுத்து, பரிந்துரைக்க வேண்டியது இந்தக் குழுவிற்கு அவசியமாகும். இந்த அமைப்புக்கு பரிந்துரை செய்தது மட்டுமல்லாமல், NIU/SPVக்கான விதிமுறை குறிப்புகள், நடைமுறைப்படுத்துவதற்கான விரிவான வியூகத்தையும், அதை உருவாக்குவதற்கான பாதை மற்றும் கூடுதலாக பயிற்சி, (out reach) வெளிகொணர்ந்து சேர்த்தல் பரிந்துரை செய்கின்றது.

GST போன்ற பெரிய சிக்கலான அரசாங்கத்தின் IT செயற்திட்டங்களை மக்களின் நலனுக்காக தனிப்பட்ட நிறுவனம் போன்ற அமைப்பான தேசிய தகவல் பயனீட்டு (NIU) அமைப்பை, நிதியமைச்சகத்தால் அமைக்கப்பட்ட பிரத்யேக செயற்திட்டங்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (Technical Advisory Group for Unique Projects -TAGUP) மார்ச் 2010ல் பரிந்துரை செய்யப்பட்டது. TAGUP செய்ய வேண்டிய அவசியமானப் பணி என்னவென்றால், GST, TIN, NPS, முதலிய பலவகையான IT செயற்திட்டங்களின் தொழில்நுட்ப மற்றும் கணிணி சம்பந்தப்பட்ட பிரச்னைகளை பரிசோதிப்பது ஆகும்.

ஆகஸ்ட் மாதம் 2ம் தேதியிலிருந்து 8ம் தேதி வரை வழிமுறைகளை விவாதிப்பதற்காக நிர்வாகக் குழு ஏழு முறை கூடியுள்ளது. வாதப்பிரதிவாதங்களுக்குப் பிறகு, GST கொள்கையின் செயல்திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கான சிறப்பு செயல் நோக்க பரப்புரை சாதனத்தை உருவாக்குவதற்கு நிர்வாகக் குழு பரிந்துரை செய்தது. நிர்வாகச் சுதந்திரம், அரசாங்கத்தின் கொள்கைக் கட்டுப்பாடு, நிறுவனக் கட்டமைப்பில் நெகிழ்வு தன்மை, விரைவாக முடிவெடுக்கும் திறன், மற்றும் திறமையானவர்கள் நியமித்து, தகுதிவாய்ந்தவர்களை தக்க வைத்துக் கொள்ளவது போன்ற முக்கியமான அளவீடுகள் பரிசீலித்தப் பிறகு திறமையாகவும், நம்பகத்தன்மை வாய்ந்த சேவைகளை வழங்கும் சூழலையும் உருவாக்க வேண்டுமென்றால், GSTN SPVல் 49% அரசின்பங்கு கொண்ட (24.5% மத்திய அரசு, 24.5% மாநில அரசு) அரசு சார்பற்ற அமைப்பாக இருக்க வேண்டும் என்று நிர்வாகக் குழு பரிந்துரை செய்கிறது. GSTNன் பங்கு மற்றும் அதனிடமுள்ள தகவல்களின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, GSTNன் மீதான அரசாங்கத்தின் கொள்கைக் கட்டுப்பாட்டு விஷயத்தை நிர்வாகக் குழு பரிசீலித்தது. SPVன் மீதான அரசாங்கத்தின் கொள்கைக் கட்டுப்பாடு, குழு அமைப்பு, சிறப்பு தீர்மானத்தின் வழிமுறைகள், மற்றும் பங்குதாரர்களின் ஒப்பந்தம், தூதுக் குழுவாக வரும் அரசு அதிகாரிகள், மேலும், GSTN SPV, அரசாங்கத்திற்கிடையேயான உடன்படிக்கைகள் போன்ற அளவீடுகளின் மூலமாக உறுதிசெய்ய வேண்டும் என்பதை நிர்வாகக் குழு பரிந்துரை செய்தது. தனித்தனியாக 24.5% அதிக பங்குகளை வைத்துள்ள மத்திய

அரசாங்கமும் தனித்தும், மாநில அரசுகள் கூட்டாகவும், தங்களுடைய பங்குமுறைகளை உறுதிசெய்ய வேண்டும். 49% பங்கு வைத்துள்ள அரசாங்கத்துக்கு இணையாக எந்த ஒரு தனியார் அமைப்பும் கடந்து செல்லவில்லை. 100 சதவீத IT உட்படுவதால், இந்த நிறுவனத்தை நடத்த தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் தேவை என்பதை நிர்வாகக் குழு வெளியிட்டு இருக்கின்றது. வர்த்தக தகவல்கள் மத்திய மாநில அரசு அதிகாரிகளிடம் இருக்கும். எனவே, நவீன தொழில்நுட்ப திறனுள்ள வல்லுநர்கள் இந்த அமைப்பை தனியாக நடத்த தெரிய வேண்டும். மாதிரி நிபுணத்துவமும், சுதந்திரமாகவும் செயல்படும் NSDL போன்ற நிறுவனம் இதற்கு ஒரு சிறந்த உதாரணம். செயல்பாட்டு சுதந்திரம் பெற்றிருக்கும் அரசு சார்பற்ற நிறுவனத்தையே நிர்வாகக் குழு பரிந்துரை செய்கின்றது. ஆகஸ்ட் 19ம் தேதியன்று நடந்த மாநில நிதி அமைச்சர்களின் அதிகாரக் குழுவின் (EG)2011ன் 3வது கூட்டத்தின் முன்பாகவும், அக்டோபர் 14ம் தேதியன்று நடந்த நிர்வாகக் குழுவின் (EC) 2011ன் 4வது கூட்டத்தின் முன்பாகவும் இந்தப் பரிந்துரைகள் வழங்கப்பட்டது. GSTக்கான IT உள்கட்டமைப்பு GSTN சம்பந்தமான அதிகாரக்குழுவின் (EG) திட்ட அறிக்கையும், பிரிவு 25ன் படி அரசாங்கத்தின் கொள்கைக் கட்டுப்பாட்டுடன் லாப நோக்கமற்ற நிறுவன உருவாக்கம் போன்றவற்றை 14.10.2011 அன்று நடந்த மாநில நிதி அமைச்சர்களின் அதிகாரக் குழுவின் (EG) கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. சரக்கு மற்றும் சேவை வரி என அழைக்கப்படப் போகின்ற சிறப்பு செயல் நோக்க பரப்புரை சாதனத்தை அமையப் போவதற்கான வருவாயத் துறையின் குறிப்பை, 2012 ஏப்ரல் மாதம் 12ம் தேதியன்று, மத்திய அமைச்சரைவயால் பரிசீலக்கப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டது. மத்திய அமைச்சரைவயால் ஒப்புதல் அளிக்கப்பட்டவைகள் பின்வருமாறு.

அ. பொருத்தமான மற்றும் இசைவான லாப நோக்கமற்ற அமைப்புகள் கண்டறியப்பட்டு, மத்திய நிதியமைச்சகத்தால் கூட்டாக இணைக்கப்படுவதற்கு முன் GSTN-SPV முதலீடு செய்யப்பட வேண்டும்.

ஆ. SPVன் மீதான அரசாங்கத்தின் கொள்கைக் கட்டுப்பாடு, குழு அமைப்பு, சிறப்பு தீர்மானத்தின் வழிமுறைகள், மற்றும் பங்குதாரர்களின் ஒப்பந்தம், தூதுக் குழுவாக வரும் அரசு அதிகாரிகள், மேலும், GSTN SPV, அரசாங்கத்திற்கிடையேயான உடன்படிக்கைகள் போன்ற அளவீடுகளின் மூலமாக உறுதிசெய்ய வேண்டும்.

இ. GSTN-SPVன் இயக்குநர்கள் குழு 14 இயக்குநர்களைக் கொண்டது. இதில் மத்திய அரசிலிருந்து 3 இயக்குநர்களும், மாநில அரசிலிருந்து 3 இயக்குநர்களும், விதிமுறைகளின்படி மத்திய மாநில அரசுகள் இணைந்து ஒப்புதல் அளித்து நியமிக்கப்பட்ட இயக்குநர்கள் குழுவின் தலைவர், தனியார் பங்குதாரர்களிலிருந்து 3 இயக்குநர்களும், பிரபலமான 3 தனிப்பட்ட இயக்குநர்கள் மற்றும் திறந்த தேர்வு நடைமுறை மூலமாக GSTN-SPVஆல் முதன்னை நிர்வாக அதிகாரியாக (CEO) தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஈ. சம்பந்தப்பட்ட சில விதிகளை தளர்த்துவதன்மூலம் GSTN-SPVக்கு அரசின் பிரதிநிதியாக வரும் அதிகாரிகளுக்கு, அரசாங்கத்தின் கொள்கைக் கட்டுப்பாட்டை செயல்படுத்தவும், அதை தேவையான திறன் வாய்ந்த களத்திற்கு எடுத்துச் செல்லவும் முடியும்..

உ. வரி செலுத்துபவர்கள் மீது, வரி அதிகாரிகளின் சேவையை பெறுபவர்கள் மீது பயன்பாட்டு கட்டணத்தை வசூலிப்பதன் மூலம், GSTN SPV சுய-சார்புடன் வருமானத்தை ஈட்ட முடியும்.

ஊ பல்வேறு வரி அதிகாரிகள் ஈடுபட்டுள்ள ஒருங்கிணைந்த மறைமுக வரி சம்பந்தமான சேவைகளை வழங்குவதற்காக பொறுப்புள்ள தேசிய நிறுவனமாகும். அதன்படி, ஏதாவது சேவை வழங்கும் நிறுவனம் இம்மாதிரி ஒருங்கிணைந்த சேவைகளை வழங்குவதற்கு GSTN SPVகூடிய ஒரு முறையான ஏற்பாடுகள் தேவைப்படுகின்றது.

எ. துவக்கநிலை அமைப்புக்கான 248 செலவினங்களுக்காவும், இணைந்த பின் மூன்று வருட செயல்பாட்டிற்காகவும் தொடர்ந்து பெறமுடியாத ஒரு முறை வழங்கும் மானியத் தொகை 315 கோடி ரூபாய பணத்தை மத்திய அரசிடமிருந்து பெறப்படுகின்றது.

மத்திய அமைச்சரவையின் தீர்மானத்தின் படி, கம்பெனிச் சட்டம் 1956. பிரிவு 25 கீழ், லாப நோக்கமில்லாத, தனியார் நிறுவனம் என்று பதிவு செய்யப்பட்ட GST நெட்வொர்க் மற்றும் பின்வரும் பங்கு அமைப்புடன்.

| | | |
|---|---|---|
| அ. | மத்திய அரசு | 24.5% |
| ஆ | மாநில அரசு | 24.5% |
| இ | ஹெச்.டி. எ.ஃப். சி | 10% |
| ஈ. | ஹெச்.டி.எ.ஃப். சி வங்கி | 10% |
| உ. | ஐசிஐசிஐவங்கி | 10% |
| ஊ. | NSE ஸ்ட்ரேடஜிக் இன்வெஸ்ட்மெண்ட் கம்பெனி | 10% |
| எ. | LIC ஹௌஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட் | 11% |

நெடுநாட்கள் கலந்து ஆலோசித்தப் பிறகு மாநில நிதி அமைச்சர்களின் அதிகாரக் குழு மற்றும் மத்திய அரசின் ஒப்புதலுக்குப் பிறகு GSTNன் தற்போதைய வடிவத்திலேயே எடுத்து உருவாக்கப் பட்டுள்ளது.

கேள்வி 3. GSTN வழங்கும் சேவைகள் என்ன?

பதில். GSTன் பொது வலைவாசல் வழியாக கீழேக் குறிப்பிடும் சேவைகளை GSTN வழங்குகிறது.

அ. பதிவு (தற்போதைய வரி செலுத்துபவரின் முதல் இடம் பெயர்வு மற்றும் PAN பதிவு எண் அடிப்படையில் புது பதிவு வழங்குதல்).

ஆ. பணம் செலுத்துவதில் கையாளும் முறையில் பணம் செலுத்தும் வழி மற்றும் வங்கிதிட்டங்களுடன் ஒருங்கிணைப்பு உட்பட.

இ. விவர படிவம் சமர்ப்பித்தல் மற்றும் செயலாக்கம்.

ஈ. வரி செலுத்துபவர் கையாளும் கணக்கை கையாளுதல், அறிவிக்கை, தகவல் மற்றும் நிலையை கண்காணித்தல் உட்பட

உ. வரி அதிகார கணக்கு மற்றும் கணக்கு பேரேடை கையாளுதல்.

ஊ. மத்திய மற்றும் மாநிலத்திற்கிடையேயான தீர்வு கண்காணிப்பு (IGST தீர்வாணை உட்பட)

எ. IGSTக்கான காசோலை தீர்வகம்.

ஏ. நடைமுறைகள் மற்றும் இறக்குமதியில் GSTன் இணக்கம். மேலும், சுங்கத் துறையுடன் மின்னணு தரவு பரிமாற்றம் (EDI).

ஐ. அடிப்படை தகவல் அமைப்பு மற்றும் வர்த்தக திறமை அடங்கிய நிர்வாக தகவல் அமைப்பு (MIS)

ஒ. GSTன் பொது வலைவாசலுக்கும், வரி நிர்வாக அமைப்புக்குமிடையில் இடைமுகங்களின் பராமரிப்பு.

ஓ. பங்குதாரர்களுக்கு பயிற்சி வழங்குதல்.

ஔ. வரித்துறை அதிகாரிகள் பகுத்தாய்கிற மற்றும் வர்த்தக திறமைகளை வழங்குதல். மற்றும்

க. ஆராய்ச்சிகளை நடத்துதல், சிறந்த நடைமுறைகளை ஆராய்ந்து, பங்குதாரர்களுக்கு பயிற்சி வழங்குதல்.

கேள்வி 4. GSTN மாநிலம் / CBEC இவற்றுக்கிடையேயான இடைமுகம் முறை என்ன?

பதில். GST விதிமுறைகளின்படி, பதிவுக்காக விண்ணப்பித்தல், விலைப்பட்டிகளை பதிவேற்றல், வருமான வரி தாக்கல், வரி செலுத்துதல் போன்ற வரி செலுத்துபவர் எதிர்கொள்ளும் முக்கிய சேவைகளை GST திட்டத்தில் தொகுத்தளிக்கப்பட்டாலும்,

பதிவுகளுக்கு ஒப்புதல் வழங்கல், IT மதிப்பீடு, ஆய்வு நடத்தல் மற்றும் தணிக்கை செய்தல் போன்ற சட்டரீதியான செயல்பாடுகளுகளை மாநிலங்கள் மற்றும் மத்திய அரசுகளின் வரித் துறை நடத்தும்.

ஆகையால், முன்பகுதியை GSTNன் வழங்கினாலும், அதன் பின்புலத்தை மத்திய, மாநில அரசுகள் அவர்களாகவே வளரச் செய்ய வேண்டும். இருப்பினும், 24 மாநிலங்களும் (இரு மாதிரி மாநிலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன) பின்புலத்தையும் சேர்த்து வளரச் செய்ய வேண்டும் GSTNஐக் கேட்டு கொண்டுள்ளன. CBEC மற்றும் மாதிரி 1ல் உள்ள மற்ற மாநிலங்கள் பின்பகுதி வளர்ப்பதாக முடிவெடுத்து, பின்பகுதியை அவர்களாகவே தொகுத்துக் கொள்வர்

கேள்வி. 5. பதிவில் GSTNன் முக்கியப் பங்கு என்ன?

பதில். இணையதளத்தின் மூலமாக GST வலைவாசலில் பதிவிற்காக விண்ணப்பிக்கலாம். குறைந்தபட்ச ஆவணங்களை உறுதி செய்யும் பொருட்டு, மத்திய நேரடி வரி வாரியம் (CBDT), பிரத்யேக அங்க அடையாளம் (UID), கார்ப்பரேட் விவகாரத்துறை அமைச்சகம் (MCA) போன்ற அமைப்புகள் சில முக்கிய தரவுகளான PAN, வர்த்தக அமைப்பு, ஆதார், CIN/DIN (பொருத்தமானவைகள் மட்டும்) முதலியவற்றை மதிப்பிடு செய்யும்.

விண்ணப்பத் தகவல், ஸ்கேன் செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஆகியவை மத்திய மாநிலங்களுக்கும் GSTN அனுப்பப்படும், ஒப்புதல் அல்லது நிராகரிப்பு தகவல் சம்பந்தப்பட்ட ஏதாவது கேள்வி இருந்தால், திருப்பி அனுப்பலாம். மேலும், வரி செலுத்துபவர் இறுதியில் பதிவிறக்கம் செய்வதற்காக, மின்னணு கையெழுத்துடன் பதிவை GSTNக்கு அனுப்பப்படுகின்றது.

கேள்வி 6. GSTNல் இன்ஃபோஸிஸின் பங்கு என்ன?

ஒற்றையாக நிர்வகிக்கப்படும் சேவை வழங்குநராக (MSP) இன்போஸிஸ்ஸை GSTN பணிக்கும், அது வடிவமைப்பு, வளர்ச்சி. GSTஐ பயன்படுத்தும் முறை, போன்றவற்றுடன் அப்ளிகேஷன் சாஃப்ட்வேர், சாதனங்கள், உளகட்டமைப்பு, செயலாக்கம் மற்றும் பராமரிப்பு போன்றவற்றின் தன் சேவைகளை 5 வருடகாலத்திற்கு தொடர்ந்து செய்யும்.

கேள்வி 7. GST பொது வலைவாசலின் அடிப்படைத் தன்மைகள் யாது?

பதில். GST பொது வலைவாசல் என்பது இணையதளத்தின் மூலமாக வரி செலுத்துபவர்கள் மற்றும் அவர்களின் CAS/வரி விதிப்பாளர்கள் முதலியவர்கள் அணுக கூடியது, வரி அதிகாரிகளுக்கான இணைய தளமும் இது தான், இந்த வலைவாசல் GST சம்பந்தமான அனைத்து சேவைகளுக்கான ஒரே வலைவாசல் ஆகும். உதாரணத்திற்கு.

அ, வரி செலுத்துபுவர் பதிவு (புதியது, சரணடைத்தல், ரத்து செய்தல் முதலியன)

ஆ. விலைப்பட்டி பதிவேற்றம், கால வரையறைக்குள் வருமான வரி தாக்கல் செய்யும் கொள்முதல் செய்பவரின் சுய-வரைவு கொள்முதல் பதிவேடு

இ. வங்கி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்த வரி கட்டணம் உட்பட

ஈ ITC மற்றும் பணப் பேரேடு மற்றும் கடன் பொறுப்புகள் பதிவேடு

உ வரி செலுத்துபவர்கள் அதிகாரிகளுக்கான, வரி அதிகாரிகள், மற்றும் மற்ற பங்குதாரர்களுக்கு MIS அறிவிக்கும்.

ஊ வரி வர்த்தகத் திறன்/பகுப்பாய்வு,

கேள்வி 8. GST சூழலமைப்பின் நோக்கம் என்ன?

பதில். ஒரு பொது GST அமைப்பு தன்னுடைய இணையத்தொடர்பை, மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களினுடைய வணிக வரி துறைகள், மத்திய வரி அதிகாரிகள், வரி செலுத்துபவர்கள், வங்கிகள், மற்றும் பங்குதாரர்கள் என்று அனைவருக்கும் வழங்கியுள்ளது. வரிசெலுத்துபவரிலிருந்து துவங்கி, தொழில்முறை வரி, வரி அதிகாரிகள், GST வலைவாசல், வங்கி, கணக்கு அதிகாரிகள் என்று அனைத்துப் பங்குதாரர்களையும் சூழலமைப்பை உள்ளடக்கியது. கீழேக் கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் மொத்த GSTன் சூழலமைப்பையும் சித்தரிக்கின்றது.

கேள்வி 9. GSPஎன்றால் என்ன? (GSTசுவிதா வழங்குநர்)

பதில். நிர்வகிக்கப்படும் சேவை வழங்குநரான (MSP) இன்போஸிஸ்ஸால், இந்த GST அமைப்பு வளர்க்கப்படுகிறது. GSTன் முக்கிய கொள்கைகளை வளரச் செய்தல், GST கொள்கைகளை தொகுப்பதற்கு தேவையான IT உள்கட்டமைப்பை வழங்குதல் போன்ற வேலை உள்ளடக்கியது, மேலும் ஐந்த வருடங்களுக்கு இந்த திட்டத்தை செயல்படுத்தப் பட வேண்டும்.
GSTன் நெடுநோக்குத் திட்டமே வரி செலுத்துபவர்கள் அனைத்து தாக்கல்களையும் மின்னணு மூலமாக செய்ய வேண்டும் என்பதே. இது சாதிக்க வேண்டுமானால், வரி செலுத்துபவர்களுக்கு, விலைப்பட்டி தகவல் பதிவேற்றுவதற்கான சாதனமா, உள்ளீட்டு வரி வரை(ITC) பெறுவதற்கான பொருத்தம். நபர் வாரியாக பேரேடுகளை உருவாக்குதல், வரி விவரம் தாக்கலைபதிவேற்றுதல், வரிகளை செலுத்துதல், மின்னணு கையெழுத்தினால் அம்மாதிரி ஆவணங்களில் ஒப்பமிடுதல் முதலியவைகள் வரி செலுத்துபவர்களுக்கு தேவை.

GST திட்டத்தில் வரிசெலுத்துபவர்கள் G2B வலைவாசல் வழியாக GSTக்குள் நுழைய முடியும் என்றாலும், GSTயுடன் கருத்து பரிமாற்றம் செய்து கொள்வதற்கு அது ஒன்று மட்டுமே வழியல்ல. வரி செலுத்துபவர் அவருடைய

விருப்பத்திற்கேற்ப மூன்றாம் நபர் அப்ளிகேஷன் மூலம் அனைத்து பயன்பாட்டாளர்களின் இடைமுகங்கள் வழங்கப்படும். மேலும், மேசை கணிணி, கைபேசி, மற்ற இடைமுகங்கள் மூலமாகவும் GSTயுடன் கருத்துப் பரிமாற்றம் செய்யமுடியும். மூன்றாம் நபர் அப்ளிகேஷன் பாதுகாப்பான GST திட்ட அப்ளிகேஷன் (APIs) மூலம் GST திட்டத்துடன் இணைக்கப்படும். அனைத்து அப்ளிகேஷன்களும் மூன்றாம நபர் சேவை வழங்குபவரால் வளர்க்க முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டு. GST சுவித வழங்குநர் அல்லது GSP என்று அதற்கு பொதுவான பெயரும் வழங்கப்பட்டுள்ளது.

வரிசெலுத்துபவர் GST திட்டத்துடன் இடைமுகம் செய்வதற்கு, GST திட்டத்தின் வலைவாசல் பயன்படுத்தலாம் அல்லது பதிவு, வரி செலுத்துதல், வரி விவரம் தாக்கல், மற்றும் GSTன் முக்கிய திட்டத்துடன் மற்ற தகவல் பரிமாற்றம் போன்றவற்றை அப்ளிகேஷன் வழியாக GSP சூழல் அமைப்பு வழங்கியது. GST திட்ட APIன் பயன்பாட்டாளர் நிறுவனமாக GSP மாறிவிடும். அப்ளிகேஷன்களை வளரச் செய்யும் மற்றும் வரி செலுத்துபவர்களுக்காக இடைமுகங்கள் வலை இணையதளங்களுக்கு மாற்றாகும்.

கேள்வி 10. GST சுவித வழங்குநரின் பங்கு என்ன?

பதில். GSPல் உருவாக்கப்பட்ட அப்ளிகேஷன், பாதுகாப்பான GST திட்ட அப்ளிகேஷன் (APIs) மூலம் GST திட்டத்துடன் இணைக்கப்படும். GSPன் சில செயல்பாடுகள்.

- பலவகையான அப்ளிகேஷன் வளர்ச்சி / வரிசெலுத்துபவருக்கான இடைமுகம், GST திட்ட TRPக்கள்.
- வரி செலுத்துபவர்களுக்காக மற்ற மதிப்பு கூட்டு சேவைகளை வழங்குதல்

GST சுவித வழங்குநர்கள் (GSP) நெடுநோக்கான புதுமைகளை வழங்குதல், வரி செலுத்துபவர்களுக்கு வசதியான வழிமுறைகள் மற்றும் GST திட்டத்திலிருந்து வருமான வரி தாக்கலுக்கான விலைப்பட்டி தகவல்களை பதிவேற்றம் செய்வதற்கு நிறுவனத்தை பதிவு செய்வதற்கு மற்ற பங்குதார்ர்களுடன் பேச வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்று App பயன்பாட்டாளர் மற்றும் GSPக்குமிடையானக் கருத்துப் பரிமாற்றம், இரண்டாவது GSPக்கும் GSTக்குமிடையானக் கருத்துப் பரிமாற்றம் என்று கருத்துப் பரிமாற்றங்கள் இருவகைப்படும்.

கேள்வி 11 GSP உபயோகிப்பதால் வரிசெலுத்துபவர்களுக்கு என்னென்ன பலன்கள்?

பதில். ஏற்கனவே வரிசெலுத்துபவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நன்மைகளுடன் மேலும் மிகப்பெரிய வரி விதிப்பு செயல்பாடுக்களுக்கான வரிக் கணக்கு சாஃப்ட்வேரை GSP வழங்குகிறது. இறுதி நடைமுறைகளான விலைப்பட்டி பதிவேற்றம் / வரி விவரம் தாக்கல் மற்றும் அதனுடன் சமரசம் போன்றவைகள் GSPஆல் வழங்கப்பட்டிருந்தால் வரிசெலுத்துபவர்களுக்கு மிகவும் உதவியாய்

இருக்கும். அதே சமயம் GST வலைவாசல் விஷயத்தில், மற்றொரு விதமான கைமுறை நடைமுறை அல்லது மற்றபடி விலைப்பட்டி தரவை அல்லது வருமான வரித் தாக்கலை பதிவேற்றம் செய்ய வேண்டும். GST வலைவாசல் வழியாக வெளிப்படும் இடைமுகம் மற்றும் தன்மைகள் அனைத்து வரிசெலுத்துபவர்களுக்கும் ஒரே சீராக அமையும். மேலும், படிவம் மற்றும் வடிவமைப்புகள் மிகவும் அடிப்படையாக இருக்கும். இதன் மறுபக்கம், GSP மிகவும் ஆடம்பரமான இடைமுகங்கள் மற்றும் தன்மைகளும் GSPக்கு இருக்க வேண்டும் வரி செலுத்துபவர்களில் ஒரு குறிப்பிட்ட சாரார் எதிர்பார்க்கிறார்கள், அவர்கள் அனைவரும் அதிக வரி செலுத்தக் கூடிய தானியங்கி பொருளாதார வழிமுறைகளை உடையவர்கள், SMEஉடன் அரை தானியங்கி வழிமுறை மற்றும் வழிமுறையற்ற சிறிய அளவில் வரி செலுத்துபவர்கள். GSP வழங்குவதை விட கலப்பற்ற GST வலைவாசலால் விரைவாக வழங்க முடியாது. தற்போதைய சா◌ஃப்ட்வேரினாலே, GSTல் தாக்கல் வசதியை வழங்க ஒரு அப்ளிகேஷனை GSP கொண்டு வர வேண்டும். அல்லது SME, சிறு வரிசெலுத்துபவர்கள் கொள்முதல் செய்யும் போதோ அல்லது வழங்கும் போது இறுதியான தீர்வுக்கான முடிவை உருவாக்க வேண்டும். அதாவது, ஆ◌ஃப் லைன் சேவையான விரித்தாளில் வரிசெலுத்துபவர் விலைப்பட்டி விவரங்களை பூர்த்தி செய்து, அதன்பிறகு GST வலைவாசல் வழியாக நடைமுறைப்படுத்துவதற்காக பதிவேற்றம் செய்ய வேண்டும். அதே போல், வரி ஆலோசகர்களுக்கு, ஒரு முகப்பு பெட்டியில் அவன் / அவளுடைய வாடிக்கையாளர்களின் பட்டியலை காட்சிப்படுத்தவும், அவர்களுடைய பெயரின் மீது க்ளிக் செய்தவுடன் அவர்களுடைய செயல்பாடுகள் / நிலுவையிலிருக்கும் செயல்கள் போன்றவைகளின் ஸ்நாப்ஷாட் கிடைக்கும்படியான வசதியை GSP வழங்க வேண்டும். GSP வழங்கும் புதுமையான /மதிப்பு சேர்க்கும் தன்மைகள் போன்றவைகள் சந்தையிலிருக்கும் மற்ற GSPயிலிருந்து வேறுபடுத்தி காட்ட வேண்டும்.

ஆதாரம்: http://www.gstn.org/ecosystem/faq_question.php

கேள்வி 12 GSTNஆல் கண்காணிக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட GSTன் பொது வலைவாசல் பொறுத்தமட்டில் வரி செலுத்துபவர்களின் பங்கு என்ன?

பதில். GSTN மூலமாக வரி செலுத்துபவர்களால் செய்யப்படும் சில செயல்பாடுகள்

- வரிசெலுத்துபவர் என்ற முறையில் பதிவுக்கான அப்ளிகேஷன் மற்றும் சுயவிவர மேலாண்மை
- வட்டி மற்றும் அபராதம் உட்பட, வரி கட்டணம் செலுத்துதல்.
- விலைப்பட்டி தரவு பதிவேற்றம் மற்றும் வரி விவரம் தாக்கல் / வருடாந்திர அறிக்கை
- வரி விவரம் தாக்கலின் மறுஆய்வின் தற்போதைய நிலை / வரி பேரேடு / பணப் பேரேடு.

கேள்வி 13. GSTNஆல் வளர்க்கப்பட்ட GST திட்டத்தைப் பொறுத்து, மத்திய மாநில அரசுகளின் வரி அதிகாரிகளுடைய பங்கு என்ன?

பதில். GSTN தகவலகளின் பின்வரும் செயல்பாடுகளில், பின்தளத்தில் பயன்படுத்துவதற்காக அதிகாரிகள் தேவைப்படுவார்கள்.

- வரி செலுத்துவோரின் சேர்க்கை / பதிவுக்கான ஒப்புதல் / நிராகரிப்பு.

- மாநில வரியின் வரி நிர்வாகம் (பகுப்பாய்வு / தணிக்கை / திரும்பப் பெறுதல் / மேல் முறையீடு / விசாரணை
- MIS மற்றும் மற்ற செயல்பாடுகள்

கேள்வி 14. GSTN திட்டத்தில், ஒவ்வொரு விலைப்பட்டி வரிசைக்கும், ஒரு பிரத்யேக அடையாளத்தை GSTN தர முடியுமா?

பதில் இல்லை. GSTN எந்தவிதமான புதிய அடையாளத்தை தராது. வழங்குபவர்களின், GSTNனின் கூட்டு, விலைப்பட்டி எண், மற்றும் நிதியாண்டுடன் HSN/SAC Code இவையனைத்தும் ஒவ்வொரு வரிசையையும் பிரத்யேகமாக்கும்.

கேள்வி 15. விலைப்பட்டி தரவை ஒவ்வொரு நாளும் பதிவேற்றம் செய்ய முடியுமா?

பதில். ஆமாம். GST வலைவாசல் விலைப்பட்டி தரவை எந்த நேரத்தினடிப்படையிலும் எடுத்துக் கொள்ள செயல்பாட்டை உடையது. முன்பே நன்றாக பதிவேற்றம் செய்தது, பெறுநரிடமும் எதிரொலிக்கும். அவரும் அதையே அவன் / அவளுடைய கொள்முதல் பதிவேட்டில் காண முடியும்

கேள்வி 16. GSTN வலைவாசல் விலைப்பட்டியை பதிவேற்றம் செய்வதற்காக சாதனங்களை வழங்குமா?

பதில் ஆமாம். விலைப்பட்டியை அதேபோல் தொகுப்பதற்கும், விலைப்பட்டியை ஒரு முறையில் பதிவேற்றம் செய்வதற்கும், வரி செலுத்துபவர்களுக்கு ஏதுவாக விரித் தாளை (Microsoft Excel போன்ற) விலையில்லா சாதனமாக GSTN வழங்குகிறது. இது ஒரு ஆஃப்லைன் சாதனமாகும். உள்ளீட்டு விலைப்பட்டி தரவை ஆன்லைன் இல்லாமல் பயன்படுத்தமுடியும். மேலும், ஒரு நூறு விலைப்பட்டியை ஒரே சமயத்தில் விலைப்பட்டித் தரவை பதிவேற்றம் செய்யலாம்.

கேள்வி 17. பேரேடுகள் மற்றும் மற்ற கணக்குகளை பார்ப்பதற்கு கைபேசி Apps ஏதாது GSTN வழங்கியுள்ளதா?

பதில். ஆமாம். ஸ்மார்ட் ஃபோனில் பார்க்கும்படியாகத்தான் GST வலைவாசல் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, பணப் பேரேடு, கடன் பொறுப்பு பேரேடு, ITC பேரேடு முதலியவற்றை ஸ்மார்ட் ஃபோனில் பார்க்க முடியும்.

கேள்வி 18. இப்போது நடப்பது போலவே, வரிசெலுத்துபவர்கள் பயன்பாட்டு அடையாளம் மற்றும் கடவுச் சொல் இல்லாமலே, வாடிக்கையாளருக்கு பதிலாக அவர்களுடைய பணிகளுக்காக, வரி நிபுணர்களுக்கென்று தனிப்பட்ட பயன்பாட்டு அடையாளம் மற்றும் கடவுச் சொல் GSTN வழங்குமா?

பதில். ஆமாம். வரிசெலுத்துபவர்கள் பயன்பாட்டு அடையாளம் மற்றும் கடவுச் சொல் இல்லாமலே வாடிக்கையாளருக்கு பதிலாக அவர்களுடைய பணிகளுக்காக, வரி நிபுணர்களுக்கென்று தனிப்பட்ட பயன்பாட்டு அடையாளம் மற்றும் கடவுச் சொல் GSTN வழங்குகிறது. GST சட்டத்தின் கீழ் இறுதி தாக்கலைத் தவிர, வரி நிபுணர்கள் தங்களுடைய வாடிக்கையாளர்களின் பணியை அவர்களுக்கு பதிலாக செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இறுதி தாக்கல், வரி செலுத்துபவர்கள் மின்னணு கையொப்பத்தையோ(OTP) அல்லதும் மின்னணு கையெழுத்து சான்றிதழை பயன்படுத்திதான் செய்ய முடியும்.

கேள்வி 19. மேலே குறிப்பிட்ட வசதிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வரி நிபுணரை, வரி செலுத்துபவரால் மாற்ற முடியுமா?

பதில். ஆமாம். வேறொரு வரி நிபுணரை தேர்ந்தெடுப்பதற்கு, GSTNன் வலைவாசலில் எளிதாக புதிய வரி நிபுணருக்கு மாற்றி விடலாம்.

கேள்வி 20. மத்திய கலால் அல்லது சேவை வரி அல்லது மாநில மதிப்பு கூட்டு வரி போன்றவற்றிற்கு GSTன் கீழ் வரி செலுத்துபவர்கள் புதிதாக பதிவு செய்ய வேண்டுமா?

பதில். வேண்டாம். தற்போதுவரி செலுத்துபவரின் PAN எண் CBDT தரவுதளத்தில் மதிப்பீடு செய்யப்பட்டதால், புதிதாக பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. GST பதிவுப் படிவத்தின் படி தேவையான தகவல்களை வழங்குவதற்கு, GST வலைவாசல் வழியாக ஆறு மாதம் செல்லுபடியாகும் தற்காலிகமாக GSTIN வழங்கப்படுகிறது. தற்காலிக பதிவுகளில் தரவுகளை தாக்கல் செய்து முடித்தவுடன், வழக்கமான பதிவுகளுக்கு மாற்றப்பட்டு விடும். மேலும், அறிக்கையின் மூலம், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், காலக்கெடுவை வழங்குவார்கள்.

கேள்வி 21. வரி செலுத்துபவர்களின் வசதிக்காக, பணிகளின் பல அம்சங்களைப் பற்றிய பயிற்சி காணொளிகளை GSTன் வலைவாசலில் GSTN வெளியிடுமா?

பதில், ஆமாம். இதற்காக கணிணி அடிப்படையிலான பயிற்சி தகவல்களை GSTN தயாரித்துக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொன்றின் செயல்பாட்டையும் ஒரு காணொளியில் பதிவு செய்து, GSTன் வலைவாசலில் வெளியிடும். இதை GST

வலைவாசலில் வெளியிடுவது மட்டுமல்லாமல் வரி அதிகாரிகளின் அனைத்து வலைதளங்களிலும் வெளியிடப்படும்.

கேள்வி 22. GSTன் பொது வலைவாசலில் பதியப்படும் வரி விவரம் தாக்கல் மற்றும் தரவுப் பதிவுகள் ரகசியமாக வைக்கப்படுமா?

பதில். ஆமாம். GSTன் பொது வலைவாசலில் பதியப்படும் வரி செலுத்துபவர்களின் தனிப்பட்ட மற்றும் வர்த்தக தகவல்களை ரகசியமாக வைப்பதை உறுதிசெய்யும் வகையில் GSTNஆல் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். பங்கு சார்ந்த அணுகும் கட்டுப்பாட்டினால் (RBAC) உறுதிசெய்யப்படுகின்றது. வரி செலுத்துபவர்களின் முக்கிய தரவுகளை குறியீடாக அனுப்பவோ அல்லது பாதுகாத்தோ வைக்க முடியும். அங்கீகாரம் பெற்ற அரசு அதிகாரிகளால் மட்டுமே தரவுகளை பார்க்கவோ, படிக்கவோ முடியும்.

கேள்வி 23. GST திட்டத்தின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு GSTNல் எடுக்கப்பட்டு வரும் பாதுகாப்பு அளவுகள் யாது?

பதில். தரவு மற்றும் சேவை பாதுகாப்புக்கான அரசின் பாதுகாப்பு கட்டமைப்பு வலையத்துடன், GST செயல் திட்டமும் இணைக்கப்படுகின்றது. தவிர,உயர்முனை தடுப்பு தீச்சுவர், ஊடுருவலைக் கண்டறிதல், இயக்கத்திலிருக்கும் போதும், ஒய்வாக இருக்கும் போதும் தரவுகுறியீடாகவே இருத்தல். முழுமையான தணிக்கை சோதனை, தொடர்ச்சியான தற்சார்பு நெறிமுறைகாதளால் குறுக்கீடுகளை தடுத்தல், OS, பாதுகாப்பை பலப்படுத்துதல் முதலியன. முதன்மை மற்றும் இரண்டாம் கட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தையும் நிறுவுகிறது. அது துடிப்பாக கண்காணித்து சரியான நேரத்தில் தீங்கிழைக்கும் தாக்குதலை தடுக்கிறது. GSTN பாதுகாப்பு குறியீட்டை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வது மட்டுமல்லாமல், குறியீட்டை தொடர்ச்சியாக கண்காணிப்பதன் மூலம் பொதுவாக அறியப்பட்ட மற்றும் அறியப்படாத பயமுறத்தலைகளிலிருந்து பாதுகாப்பளிக்கிறது.

## 24. இடைக்கால விதிமுறைகள் அல்லது தற்காலிகமான ஏற்பாடுகள்

கேள்வி 1. GST வருவதற்கு முன், முந்தைய சட்டப்படி CENVAT/ITC உள்ளீட்டு வரிகள், கடைசியாக பதிவு செய்த ரிட்டணில் இருக்கும் பட்சத்தில் அவ்உள்ளீட்டு வரிகளை ITCGSTன் கீழ் எடுத்துக்கொள்ளலாமா?

பதில். ஆமாம். பதிவு செய்த வரி செலுத்தும் நபர், அந்த வரவை பெற உரிமையுண்டு. அது மின்னணு வரவு பேரேட்டில் அது வரவு வைக்கப்படும். - பிரிவு 143.

கேள்வி 2. பதிவு செய்த வரி செலுத்தும் நபர், 2016-17ன் கடைசி மூன்று மாதத்திற்குள் மூலதனப் பொருட்களை கொள்முதல் செய்ததாக கூறினார். 31 மார்ச்சுக்குள் பெறப்பட்டதாக விலைப்பட்டியிலிருந்தாலும் மூலதனப் பொருட்கள் 5 ஏப்ரல் 2017 அன்றுதான் பெறப்பட்டது.(அதாவது GSTன் விதிமுறையில்) 2017-18ல் CENVATன் முழு வரவும் அந்த நபருக்குக் கிடைக்குமா?

பதில். ஆமாம். பிரிவு 144 (1) விளக்கியுள்ளபடி, 2017-18ல் முழு வரவையும் பெற அவருக்கு உரிமையுண்டு.

கேள்வி 3. முந்தைய சட்டப்படி 'X' & 'Y' பொருட்களுக்கு, மூலதனப் பொருட்களாக, VAT வரவு கிடைக்காதபட்சத்தில் அவைகள் GSTக்குள் அடக்கப்பட்டதால், பதிவு செய்த நபர் அதை இப்போது பெற உரிமையுள்ளதா?

பதில். அம்மாதிரிப் பொருட்களுக்கு ITC பெற முந்தைய சட்டத்தின் கீழ் அனுமதி இருந்தால். GSTயிலும் அனுமதி வழங்கப்பட்டிருந்தால், அவருக்கு வரவை பெற உரிமையுள்ளது. முந்தைய சட்டத்தின் கீழ், இரண்டு பொருட்களுக்கு வரவு இல்லையெனில், அந்த நபர் GSTயிலும் பெறுவதற்கு உரிமை கோரமுடியாது - பிரிவு 144 (1) விதி.

கேள்வி 4. ஒரு நபர் தவறுதலாக வரவை அனுபவித்தார் என்று வைத்துக் கொள்வோம், அதை மீட்பதற்கும் GSTயிலோ அல்லது முந்தைய சட்டத்திலோ வழியுள்ளதா?

பதில். தவறுதலாக ITCஐ அனுபவித்ததை மீட்பது சம்பந்தப்பட்டவைகளை GST மட்டுமே செய்யும் - பிரிவு 143லிருந்து 146 வரை.

கேள்வி 5. முந்தைய சட்டத்தின்படி, பதிவு செய்ய அவசியமில்லாத அவர் GSTன் கீழ் பதிவு அவசியமான பதிவு செய்த வரி செலுத்தும் நபர்களில் இருவரை உதாரணமாக் கூறவும்?

பதில். மொத்த பணப் பரிமாற்றம் 60 லட்சம் ரூபாய் செய்த ஒரு உற்பத்தியாளருக்கு சிறுதொழில் வர்த்தகத்திற்காக, முந்தைய சட்டத்தின்படி விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், மொத்தப் பணப்பரிமாற்ற அடிப்படைத் தொடக்க அளவான 10 லட்சம் ரூபாய்க்கு மேல் மிகுதியாகும்போது, GSTகீழ் பதிவு செய்யப்பட வேண்டும். - பிரிவு 9.

மின்னணு வர்த்தகம் இயக்குபவர் மூலமாக விற்பனை செய்யும் வர்த்தகர் ஒருவருடைய மொத்தப் பணப்பரிமாற்றம் தொடக்க VATன் கீழ் குறைவாக இருந்தாலும், GSTன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். அம்மாதிரி வர்த்தகர்களுக்கு தொடக்க அளவு என்ற ஒன்று இல்லை. - பிரிவு 145 உடன் பிரிவு 9 மற்றும் அட்டவணை III யும் சேர்த்து படிக்கவும்.

கேள்வி 6. VAT செலுத்தப்பட்ட தீர்மானிக்கப்பட்ட தேதியன்று கையிருப்பாக இருந்த உள்ளீட்க்கான ITCஐ பெற சேவை வழங்குபவருக்கு அனுமதி உண்டா?

பதில். இல்லை. சேவைகள் VATக்குள் அடங்காது, VATக்குள் சரக்குகள் மட்டுமே அதன் கீழ் வரும்,

கேள்வி 7. முந்தைய சட்டத்தின் கீழ், இறுதியான வரி தாக்கல் செய்யப்பட்டதலிருந்து, பதிவு செய்த ஒரு நபருக்கு, 1000 ரூபாய் மின்னணு வரவு பேரேட்டில் வரவு வைக்கப்பட்டிருந்தால். தற்போது, GSTன் தொகுப்புத் திட்டத்திற்கு மாறும்போது, உள்ளீட்டு வரி வரவை அவர் திரும்பப் பெற முடியுமா?

பதில். இல்லை. தொகுப்புத் திட்டத்திற்கு மாறிய தேதியில் அவரிடம் கையிருப்பாக இருந்த உள்ளீடுக்கு அன்றைய தினத்திலிருந்து அதற்கு இணையான ITC தொகையை உடனடியாக செலுத்த வேண்டும். அந்தத் தொகையை மின்னணு வரவு பேரேட்டின் மூலமோ அல்லது மின்னணு பணப் பேரேட்டின் மூலமோ செலுத்தலாம். மின்னணு வரவு பேரேட்டின் மூலம் பணம் செலுத்தப்படும்போது, அங்கு ITCல் நிலுவையில் ஏதாவது இருந்தால், அதுவும் காலாவதியாகும். இது சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவு 147 ஆகும்.

கேள்வி 8. திரும்பப்பெற்ற விற்பனையை மத்திய விற்பனை வரி சட்டத்தின் கீழ், 6 மாதத்திற்குள், மொத்தப் பண பரிமாற்றத்திலிருந்து குறைக்க அனுமதியுண்டா? விற்பனை செய்யப்பட்ட பொருட்களை 6 மாதத்திற்கு பின் GSTல் வாங்கியவரால் திருப்பி அனுப்பப்பட்டால், CST அல்லது GSTல் அதற்கு வரி விதிக்கப்படுமா?

பதில். முதலில் அந்த பொருட்கள் GSTல் வரி விதிக்க முடியுமா அல்லது முடியாதா என்பதை கண்டறிய வேண்டும். இரண்டாவதாக, தீர்மானிக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்கு பிறகு, சரக்குகள் திருப்பி அனுப்பப்பட்டதா என்று சோதிக்க வேண்டும். இந்த இரண்டு கேள்விகளுக்குமே பதில் ஆமாம் என்றால், அந்த பொருட்களை திருப்பி அனுப்பிய நபர் GSTல் வரி செலுத்த வேண்டும்.

இருப்பினும், தீர்மானிக்கப்பட்ட தேதியிலிருந்து, 6 மாதத்திற்குள், பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டால், பொருட்கள் வாங்கியவர் எந்த வரியையும் செலுத்த தேவையில்லை. மேலும், விற்பனை தேதியிலிருந்து, 6 மாதத்திற்கு முன்பைவிட, விற்பனை செய்யும்போது வரி செலுத்தப்பட்டிருந்தாலும் வரி செலுத்தப்படத் தேவையில்லை.

இது சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவு 149 ஆகும்.

கேள்வி 9. உள்ளீடு அல்லது அரைகுறை சரக்குகள் முந்தைய சட்டத்தின் கீழ் பணி எடுத்து செய்பவருக்கு அனுப்பிய பொருட்கள் தீர்மானிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு நிறைவடைந்த பணியை திருப்பி அனுப்பும் உற்பத்தியாளரோ அல்லது பணி எடுத்து செய்பவரோ வரி செலுத்த வேண்டுமா?

பதில். உற்பத்தியாளரோ அல்லது பணி எடுத்து செய்பவரோ பின்வரும் சந்தர்ப்பங்களில் வரி செலுத்த தேவையில்லை.

- முந்தைய, சட்டவிதிகளின்படி, தீர்மானிக்கப்பட்ட தேதிக்கு முன்பே உள்ளீடு / அரைகுறை சரக்குகள் பணி எடுத்து செய்பவருக்கு அனுப்பலாம்

- பணி எடுத்து செய்பவர் தீர்மானிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதத்திற்குள் அதை திருப்பி அனுப்ப வேண்டும். (அல்லது நீட்டிக்கப்பட்ட 2 மாதங்களுக்குள்)

- உற்பத்தியாளர் மற்றும் பணி எடுத்து செய்பவர் இருவருமே, தீர்மானிக்கப்பட்ட தேதியில் அவர்களிடமுள்ள உள்ளீடு கையிருப்புப் பற்றிய விவரங்களை பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் வெளியிட வேண்டும்.

இது சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவு 150 அல்லது 151 ஆகும்.

கேள்வி 10. குறிப்பிட்ட நேரத்திற்குள் பணி எடுத்து செய்பவர் பொருட்களை திருப்பி தரவில்லையென்றால் என்ன நடக்கும்?

பதில். பணி எடுத்து செய்பவர் வரியை செலுத்த வேண்டும். மேலும், குறிப்பிட்ட கால வரம்பை மீறியதற்காக உற்பத்தியாளரும் வரியை செலுத்து வேண்டும். - பிரிவு 150(1) மற்றும் பிரிவு 151 (1) ஆகும்.

கேள்வி 11. பணி நிறைவடைந்த பொருட்களை உற்பத்தியாளர் பரிசோதனைக்காக வேறொரு வரி செலுத்துபவருடைய இருப்பிடத்திற்கு மாற்ற முடியுமா?

பதில். ஆமாம். பணி நிறைவடைந்த பொருட்களை, ஒரு உற்பத்தியாளர் சட்டவிதிகளின்படி வரி செலுத்தும் வேறொரு நபருக்கு, வரி செலுத்தப்பட்டோ அல்லது வரி செலுத்தப்படாமலோ 6 மாத்ததிற்குள் அல்லது தீர்மானிக்கப்பட்ட தினத்திலிருந்து நீட்டிக்கப்பட்ட கால வரையறைக்குள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். - பிரிவு 152.

கேள்வி 12. முந்தைய சட்டப்படி, சில செயல்பாட்டிற்காக பணி நிறைவடைந்த பொருட்களை தொழிற்சாலையிலிருந்து அகற்றி, நியமிக்கப்பட்ட தேதியன்றோ, அதற்குள்ளாகவோ திருப்பி அனுப்பப்பட்ட பொருட்களுக்கு, GST செலுத்த வேண்டுமா?

பதில். முந்தைய சட்டப்படி, சில செயல்பாட்டிற்காக பணி நிறைவடைந்த பொருட்களை உற்பத்தியாளரோ அல்லது பணி எடுத்து செய்பவராலோ நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்பே தொழிற்சாலையிலிருந்து அகற்றி, நியமிக்கப்பட்ட

தேதிக்குள் (நீட்டிக்கப்பட்ட 2 மாத காலம்) திருப்பி அனுப்பப்பட்ட பொருட்களுக்கு, உற்பத்தியாளரோ GST செலுத்த தேவையில்லை. பிரிவு 152.

கேள்வி 13. முந்தைய சட்டத்தின்படி, பணி எடுத்து செய்பவருக்கு அனுப்பப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மீதுஎப்போது GST வரி விதிக்கப்படும்?

எவர் ஒருவர், சரக்குகளை, திரும்ப அனுப்புகின்றாறோ, அவரே GSTன் படி வரி செலுத்த வேண்டியவர். மேலும், தீர்மானிக்கப்பட்டதேதியிலிருந்து 6 மாதத்திற்குப் பிறகு அனுப்பப்பட்ட பொருட்களுக்கு அவரே GST வரி செலுத்தவேண்டும். - பிரிவு 152.

கேள்வி 14. பிரிவு 150, பிரிவு 151, பிரிவு 152ல் விவாதிக்கப்பட்ட இந்த 2 மாத நீட்டிப்பு என்பது தானே இயங்குமா?

பதில். இல்லை, இது தானியங்கி கிடையாது. தகுந்த காரணங்கள் இருந்தாலோ அல்லது தகுதியுடைய அதிகாரிகளாலோ நீட்டிப்பு செய்யப்படும்.

கேள்வி 15. திருத்தியமைக்கப்பட்ட விலைக்கு பற்று / வரவுக் குறிப்புகள் கொடுப்பதற்கான கால வரம்பு என்ன?

பதில். வரி செலுத்தும் நபர் திருத்தியமைக்கப்பட்ட விலைக்கு பற்று / வரவுக் குறிப்புகள் அல்லது துணை விலைப்பட்டியையோ 30 நாட்களுக்குள் வெளியிட வேண்டும்.

பெறுநரின் விலைப்பட்டி அல்லது வரவு குறிப்பில் வரி குறைப்புக்கு ஏற்றபடி ITCயும் குறைக்கப்பட்டிருந்தால், திருத்தியமைக்கப்பட்ட விலை சரிவின் போது வரிசெலுத்துபவருக்கும் வரி விதிப்பு குறைக்கப்படும். - பிரிவு 153.

கேள்வி 16. முந்தைய சட்டத்தின் படி, நிலுவையிலிருக்கும் திரும்ப கொடுக்கும் வரி / வட்டியின் நிலை என்ன?

பதில். முந்தைய சட்டவிதிகளின்படி, நிலுவையிலிருக்கும் திரும்பப் பெறும் உரிமைகள் அகற்றப்பட்டு விடும். - பிரிவு 154.

கேள்வி 17. முந்தைய சட்டத்தின்படி, நிலுவையிலிருக்கும் CENVAT/ITC திரும்பப் பெறும் உரிமைக் கோருதல் சம்பந்தப்பட்ட மேல்முறையீடு/திருத்தம் இவற்றின் நிலை என்ன? அவை வெளியீட்டு பொறுப்பு சம்பந்தப்பட்டதெனில், என்னவாகும்?

பதில். மேற்குறிப்பிட்ட இரு நிலையிலும், முந்தைய சட்டவிதிகளுக்கேற்றபடி தீர்வு காணவேண்டும்.

கேள்வி 18. மேல்முறையீடு தீர்ப்பு அல்லது திருத்ததம் மீதான தீர்ப்பாணை, வரி செலுத்துபவருக்கு சாதமாக சென்றால், GSTல் பணம் திருப்பி பெற முடியுமா? தீர்ப்பாணை வரி செலுத்துபவருக்கு எதிராக சென்றால் என்னவாகும்?

பதில். முந்தைய சட்டத்தில் மட்டுமே விதிகளுக்கேற்றபடி, பணம் திருப்பித் தரப்படும். ஏதாவது, மீட்பு செய்யப்பட வேண்டியிருந்தால், GSTன் கீழ் நிலுவை வரியாக மாற்றப்படும்.

கேள்வி 19. முந்தைய சட்டப்படி, ரிட்டன் திருத்தத்தில், எழும் திரும்ப பெறும் உரிமை பிரச்னை GSTல் தீர்க்கப்படும்?

பதில் முந்தைய சட்டத்தில் மட்டுமே விதிகளுக்கேற்றபடி, பணம் திருப்பித் தரப்படும். - பிரிவு 158

கேள்வி 20. முந்தைய சட்டத்தின் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தை பின்பற்றி, சரக்குகளோ அல்லது சேவைகளோ வழங்கப்பட்டால், GSTல் வரி செலுத்தப்பட வேண்டும்?

பதில். அம்மாதிரி வழங்கலுக்கு, GSTல் வரி செலுத்தப்பட வேண்டும் - பிரிவு 159.

கேள்வி 21. முந்தைய சட்டத்தின்படி, ஒரு குறிப்பிட்ட சேவை வழங்கலில் மறுபயன் பெற்றுவிட்டு சலுகை வழங்கப்பட்டு, அதற்கான வரி செலுத்தியபின்பு, அந்த சேவை GSTன் செயல்திட்டத்தில் வழங்கல் செய்யப்பட்டால், GSTலும் வரி செலுத்தப்பட வேண்டுமா?

பதில். முந்தைய சட்டத்தின்படி வரியை ஏற்கனவே செலுத்திவிட்டபடியால், தீர்மானிக்கப்பட்ட தேதிக்கு முன்பாகவே மறுபயன் பெறப்பட்டிருந்தால்கூட சரக்குகள் / சேவைகள் வழங்கல் மீது தீர்மானிக்கப்பட்ட தேதிக்கு முன்பும் / பிறகும் வரி செலுத்தப்பட தேவையில்லை.

கேள்வி 22. முந்தைய சட்டத்தின் கீழ் சரக்குகள் / சேவைகள் பெறப்பட்ட பின், சலுகையின் ஒரு பகுதி (பிடித்து வைக்கப்பட்டிருந்த பணம்) GSTன் விதிமுறையில் பெறப்பட்டால், அதற்கும் வரி செலுத்தப்பட வேண்டுமா?

பதில். இல்லை. ஆனால், முந்தைய சட்டத்தின் கீழ் அந்த வழங்கலுக்கு, வரியை ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

கேள்வி 23. முந்தைய சட்டத்தின் கீழ், சேவைகளுக்கு ISD வழங்கப்பட்டிருந்தால், அதற்குரிய ITCஐ GST விதிமுறையில் பகிர்ந்தளிக்க முடியுமா?

பதில். ஆமாம், விலைப்பட்டி சம்பந்தமாக அம்மாதிரி சேவைகள் பெறப்பட்டவை, அல்லது தீர்மானிக்கப்பட்ட தேதிக்கு பிறகு பெறப்பட்டவை என்று எதுவாக இருநதாலும், வழங்கப்படும்.

கேள்வி 24. முதன்மையானவருக்கு சொந்தமான பொருட்கள், தீர்மானிக்கப்பட்ட தேதியில் தரகர்களிடம் இருக்கும் பட்சத்தில்,அந்த தரகர் பொருட்களின் மீதான ITCஐ எடுத்தக் கொள்ள முடியுமா?

பதில். பின்வரும் கட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்தால், அந்த வரவை தரகர் எடுத்துக் கொள்ள முடியும்.

- அந்தத் தரகர் GSTல் பதிவு செய்த வரி செலுத்தும் நபராய் இருக்க வேண்டும்.
- தீர்மானிக்கப்பட்ட தேதியில் செயல் தொடங்கப்படும் போது, கையிருப்பில் இருக்கும் பொருட்களின் விவரங்களை முதன்மையானவர் மற்றும் தரகர் இருவருமே வெளியிட வேண்டும்.
- தீர்மானிக்கப்பட்ட தேதியில் உடனடியாக துவங்கியதிலிருந்து முந்தைய 12 மாதங்களுக்கு மிகாமல், அம்மாதிரி பொருட்களுக்கு விலைப்பட்டி வெளியிடப்பட்டிருக்க வேண்டும்
- முதன்மையானவருக்கு, தான் எடுத்த ITC வரவை திரும்பி செலுத்தியிருக்க வேண்டும் அல்லது அம்மாதிரியான பொருட்களுக்கு ITCஜ பெறாமல் இருந்திருக்க வேண்டும்.

இந்த விதிகள் SGSTசட்டத்திற்கு மட்டுமே பொருந்தும் - பிரிவு 162A & 162B

கேள்வி 25. பொருட்கள ஒப்புதலுக்காக தீர்மானிக்கப்பட்ட தேதிக்கு முன்பே அனுப்பபட்டு விட்டன ஆனால், தீர்மானிக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்கு பிறகுதான் பொருட்கள் மீண்டும் விற்பனையாளருக்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்கும் போது GSTல் வரி செலுத்த வேண்டுமா?

பதில். ஆமாம். பொருட்களை நிராகரிக்கும் அந்த நபர் அல்லது ஒப்புதல் வழங்காமல் தீர்மானிக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்கு (2 மாதம் நீட்டிக்கப்படலாம்) பிறகு திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட அம்மாதிரி பொருட்களுக்கு GSTல் வரி செலுத்த வேண்டும்.

இந்த விதிகள் SGST சட்டத்திற்கு மட்டுமே பொருந்தும் - பிரிவு 162D